தமிழ்நாடு அரசு

# தமிழ்

## பத்தாம் வகுப்பு

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

## பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது.

(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல்பதிப்பு : திபி 2042; (2011)
திருத்திய பதிப்பு: திபி 2043; (2012)
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல்

குழுத்தலைவர்

**முனைவர் பெ. மாதையன்,**
தமிழ்த்துறைத் தலைவர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636 011.

மேலாய்வாளர்கள்

**முனைவர் இரா. காமராசு,** தமிழ்ப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005.
**முனைவர் தி. மகாலட்சுமி,** இணைப் பேராசிரியர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,தரமணி, சென்னை – 600 113.
**புலவர் சு. நஞ்சப்பன்,** மேனாள் தலைமையாசிரியர், வெள்ளக் கிணறு, கோவை மாவட்டம்.
**புலவர் துரை. தில்லான்** மேனாள் தமிழாசிரியர், சின்னாளப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

வல்லுநர்கள்

**எ. முத்துக்கிருஷ்ணன்,**
(மேனாள் கல்விப் பேரவைக்குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம்)
முதுநிலை விரிவுரையாளர், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம், திருவூர் – 602 025, திருவள்ளூர் மாவட்டம்.
**த. தனுஷ்கோடி,** முதுநிலை விரிவுரையாளர், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார்கோவில்.

நூலாசிரியர்கள்

**முனைவர் க. வீ. வேதநாயகம்,**
மேனாள் தலைமையாசிரியர்,
அரசு மேனிலைப் பள்ளி,
கள்ளிப்பட்டி – 638 505. ஈரோடு.

**மி.த. கந்தசாமி,**
மேனாள் முதுகலைத் தமிழாசிரியர்,
இந்து மேனிலைப் பள்ளி,
வாணியம்பாடி, வேலூர் மாவட்டம்.

**தி. அசோக்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசினர் பெண்கள் மேனிலைப்பள்ளி,
ஆயக்காரன்புலம், நாகை மாவட்டம்.

**சபா சிலம்பரசன்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசு மேனிலைப் பள்ளி,
வல்லம், தஞ்சாவூர் மாவட்டம்.

**அ. அலெக்ஸாண்டர்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
புனித ஜோசப் மேனிலைப்பள்ளி,
ஆசாரிப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்–629201.

**கு. சம்பந்தம்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேனிலைப் பள்ளி,
திருவள்ளூர் – 602 001.

**கு. சிவக்குமார்,**
தமிழாசிரியர், அரசு மேனிலைப் பள்ளி,
எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம்,
சென்னை–600 106.

**எ.பாரதிராஜா,**
தமிழாசிரியர்,
ஆர்.எம்.ஜெ.அரசினர் பெண்கள் மேனிலைப்பள்ளி
திருவள்ளூர் – 602 001.

இலக்கணம்

**முனைவர் ஞா. பழனிவேலு,** உதவிப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005.
**கெ. சம்பத்து,** தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கூனிப்பாளையம், திருவள்ளூர் மாவட்டம்.

கணினி அச்சு : பாமா

வடிவமைப்பு : எஸ். மாரீஸ்

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

விலை : ரூ.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன்சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

- மனோன்மணியம் பெ. சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று நான் உளமார உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், 'சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதிநெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக் காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்துவிளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

## நாட்டுப் பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

- மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும் சிந்துவையும் கூர்ச்சரத்தையும் மராட்டியத்தையும் திராவிடத்தையும் ஒரிசாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்த்து | 1 |
| | திருக்குறள் | 3 |
| | ஏலாதி | 11 |
| | உயர்தனிச் செம்மொழி | 13 |
| | பரிதிமாற்கலைஞர் | 19 |
| | எழுத்து | 22 |
| 2. | சிலப்பதிகாரம் | 32 |
| | தமிழ் வளர்ச்சி | 39 |
| | பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் | 41 |
| | மெல்ல மெல்ல மற! | 45 |
| | சொல் | 48 |
| 3. | கம்பராமாயணம் | 57 |
| | அண்ணல் அம்பேத்கர் | 68 |
| | அன்றாட வாழ்வில் சட்டம் | 74 |
| | பொது | 79 |
| 4. | நற்றிணை | 86 |
| | புறநானூறு | 88 |
| | பேச்சுக்கலை | 90 |
| | அண்ணாவின் கடிதம் | 94 |
| | வினாவகை, விடைவகை, ஒருபொருட்பன்மொழி | 96 |
| 5. | பெரியபுராணம் | 104 |
| | திரைப்படக்கலை உருவான கதை | 113 |
| | பாரதரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் | 118 |
| | உவம உருபுகள் | 120 |

| இயல் | | பக்கம் |
| --- | --- | --- |
| 6. | தமிழ்விடுதூது | 127 |
| | தொன்மைத் தமிழகம் | 129 |
| | தற்காலத் தொல்லியல் ஆய்வுகள் | 133 |
| | புணர்ச்சி | 138 |
| 7. | திருக்குறள் | 148 |
| | தேவாரம் | 155 |
| | தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள் | 157 |
| | குறட்டைஒலி | 162 |
| | பொருள் இலக்கணம் – அகப்பொருள் | 166 |
| 8. | சீறாப்புராணம் | 173 |
| | காந்தியம் | 181 |
| | அடித்தளம் | 187 |
| | புறப்பொருள் | 190 |
| 9. | கலித்தொகை | 202 |
| | நந்திக் கலம்பகம் | 204 |
| | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | 205 |
| | திருவருட் பிரகாச வள்ளலார் | 207 |
| | அயோத்திதாசப் பண்டிதர் | 213 |
| | பா வகைகள் | 216 |
| 10. | நிற்க நேரமில்லை | 230 |
| | பல்துறை வேலைவாய்ப்புகள் | 232 |
| | நூலகம் | 237 |
| | அணி | 241 |
| | வினாத்தாள் திட்ட வரைவு | 247 |

## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
| --- | --- | --- |
| 1 | வாழ்த்து | 04 |
| | ஒழுக்கமுடைமை (1, 5, 7, 8, 10) | 10 |
| | காலமறிதல் (1, 3, 4, 5, 9) | 10 |
| 2 | சிலப்பதிகாரம் (அடி 23 முதல் 32 வரை) | 10 |
| | தமிழ் வளர்ச்சி | 04 |
| 3 | கம்பராமாயணம் – 12, 14 | 08 |
| 5 | பெரியபுராணம் – 6, 10 | 08 |
| 7 | பெரியாரைத் துணைக்கோடல் (1, 3, 8, 9, 10) | 10 |
| | பொருள்செயல்வகை (1, 4, 5, 8, 9) | 10 |
| 8 | சீறாப்புராணம் – 10 | 04 |
| 9 | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | 04 |
| 10 | நிற்க நேரமில்லை (அடி 7 முதல் 10 வரை) | 04 |
| | மொத்த அடிகள் | 86 |

(பாடநூலுள் * உடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதியாகும்)

# வாழ்த்து

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே. *

– மாணிக்கவாசகர்

**பொருள் :** எல்லாம் உடைய பெருமானே! நான் உன்பால் பேரன்பு கொண்டதன் காரணமாக உடல் சிலிர்த்தேன்; உள்ளம் நடுங்கினேன்; நறுமணம் கமழும் உன் திருவடிகளைக் கருத்திற்கொண்டு, தலைமேல் கைகுவித்து வணங்கினேன்; கண்களில் நீர் பெருகுமாறு உள்ளம் வருந்த உருகினேன்; பொய்ப்பொருளை விலக்கி மெய்ப்பொருளாகிய உன்னையே நினைந்து துதித்தேன்; வெல்க வெல்க என உன் அரும்பெரும் செயல்களைப் போற்றிப் புகழ்ந்தேன். இத்தகைய ஒழுக்கத்தை நான் என்றும் கைவிடேன். எனவே, உன் அடியவர்களுள் ஒருவனாக என்னையும் ஏற்று அருள்புரிவாயாக!

**சொற்பொருள் :** மெய் – உடல்; விதிர்விதிர்த்து – உடல் சிலிர்த்து; விரை – மணம்; நெகிழ – தளர; ததும்பி – பெருகி; கழல் – ஆண்கள் காலில் அணியும் அணிகலன் (இங்கு ஆகுபெயராய் இறைவனின் திருவடியைக் குறித்தது); சயசய – வெல்க வெல்க.

**இலக்கணக்குறிப்பு :** விடேன் – தன்மை ஒருமை வினைமுற்று.

**பகுபத உறுப்பிலக்கணம் :** போற்றி – போற்று + இ. போற்று – பகுதி, இ – வினையெச்ச விகுதி.



**ஆசிரியர் குறிப்பு :** சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர். இவர், திருவாதவூரில் பிறந்தவர். இவ்வூர், மதுரைக்கு அருகில் உள்ளது. மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்; பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்றபோது, திருப்பெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர். அவ்விறைவனை, மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்க அழுது தொழுதவர். இதனால் மாணிக்கவாசகரை, 'அழுது அடியடைந்த அன்பர்' என்பர். திருவாசகமும் திருக்கோவையாரும் இவர் அருளியன. இவர் எழுப்பிய கோவில், தற்பொழுது ஆவுடையார்கோவில் என வழங்கப்படும் திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளது. இவர்தம் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

**நூற்குறிப்பு :** சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் உள்ளன. திருவாசகத்தில் அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருவாசகம் கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்யுமாதலால், 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் தொடர் வழங்கலாயிற்று. திருவாசகத்தின் சிறப்பை உணர்ந்த ஜி. யு. போப், இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

திருவாசகத்திலுள்ள திருச்சதகத்தின் முதற்பாடல் நம் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. திரு என்பது, நூலின் சிறப்பை உணர்த்த வந்த அடைமொழி; சதகம் என்பது, நூறு பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) மாணிக்கவாசகர் பிறந்த ஊர் ____________.

ஆ) மாணிக்கவாசகர் பாடல்கள் ____________ திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

இ) மாணிக்கவாசகர் கட்டிய கோவில் ____________ உள்ளது.

ஈ) மாணிக்கவாசகர் ____________ மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர்.

உ) ஜி.யு.போப் திருவாசகத்தை ____________ மொழியில் மொழிபெயர்த்தார்.

ஊ) திருவாசகத்திற்கு உருகார் ____________ உருகார்.

**2. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

1. மெய்தான் ____________ (அறும்பி/அரும்பி) விதிர்விதிர்த்துன் ____________ (விரையார்/விறையார்) கழற்கு.

2. கைதான் நெகிழ விடேன். இதில், 'நெகிழ' என்பது ____________ (துலர/தளர) என்னும் பொருளில் வந்துள்ளது.

**3. பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. விரை | – | உடல் |
| 2. கழல் | – | பெருகி |
| 3. ததும்பி | – | மணம் |
| 4. மெய் | – | அணிகலன் |

### ஆ) சிறுவினா

மாணிக்கவாசகர், இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார் ?

உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை. – ஜி.யு. போப்



# திருக்குறள்

## ஒழுக்கமுடைமை

( நல்ல நடத்தை உடையவராதல் )

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். *

பொருள் : ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே; ஆதலால், அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல்வேண்டும்.

சொற்பொருள் : விழுப்பம் – சிறப்பு; ஓம்பப்படும் – காத்தல்வேண்டும்.

இலக்கணக்குறிப்பு : ஒழுக்கம் – தொழிற்பெயர்; படும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

பொருள் : எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை ஆகும். ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது, அதனை விரும்பிக் காத்தல்வேண்டும்.

சொற்பொருள் : பரிந்து – விரும்பி; தேரினும் – ஆராய்ந்து பார்த்தாலும்.

இலக்கணக்குறிப்பு : காக்க – வியங்கோள் வினைமுற்று; பரிந்து, தெரிந்து – வினையெச்சங்கள்.

பிரித்தறிதல் : பரிந்தோம்பி – பரிந்து + ஓம்பி; தெரிந்தோம்பி – தெரிந்து + ஓம்பி.

(இவ்விரு பாடலும் ஒழுக்கத்தின் உயர்வைக் கூறுகின்றன.)

3. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

பொருள் : ஒழுக்கம் உள்ளவரே உயர்குடியினர். அவ்வொழுக்கம் இல்லாதவர் இழிகுடியினர்.

சொற்பொருள் : குடிமை – உயர்குடி; இழுக்கம் – ஒழுக்கம் இல்லாதவர்.

இலக்கணக்குறிப்பு : இழிந்த பிறப்பு – பெயரெச்சம்.

4. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பொருள் : ஒருவன், தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக்கொள்ள இயலும். ஆனால், ஒழுக்கம் குறைந்தால், அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்துபோகும்.

இலக்கணக்குறிப்பு : கெடும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; கொளல் – அல் ஈற்றுத் தொழிற்பெயர்.

5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை,
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. *

பொருள் : பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது; அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.

சொற்பொருள் : அழுக்காறு – பொறாமை; ஆக்கம் – செல்வம்.

இலக்கணக்குறிப்பு : உடையான் – வினையாலணையும் பெயர்.

அணி : உவமையணி.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

பொருள் : ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை நன்குணர்ந்த மனவலிமை மிக்கோர், அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலகமாட்டார்.

சொற்பொருள் : ஒல்கார் – விலகமாட்டார்; உரவோர் – மனவலிமையுடையோர்; ஏதம் – குற்றம்.

இலக்கணக்குறிப்பு : உரவோர் – வினையாலணையும் பெயர்.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. *

பொருள் : ஒழுக்கமுடையோர் மேன்மை அடைவர்; ஒழுக்கம் இல்லாதவர் அடையக் கூடாத பழியை அடைவர்.

சொற்பொருள் : எய்துவர் – அடைவர்.

இலக்கணக்குறிப்பு : எய்தாப் பழி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; எய்துவர் – பலர்பால் வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம் : எய்துவர் – எய்து + வ் + அர். எய்து – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

(இவ்வைந்து பாடலும் ஒழுக்கத்தின் குணமும், ஒழுக்கம் இன்மையால் ஏற்படும் குற்றமும் கூறுகின்றன.)

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். *

பொருள் : நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவைப் பெறுவதற்கான விதையாகும். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே விளைவாகத் தரும்.

சொற்பொருள் : இடும்பை – துன்பம்; வித்து – விதை.

இலக்கணக்குறிப்பு : நல்லொழுக்கம், தீயொழுக்கம் – பண்புத்தொகைகள்.

(இப்பாடல் ஒழுக்கத்தின் விளைவைக் கூறுகின்றது.)

9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

பொருள் : நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமைதரும் சொற்களைச் சொல்ல இயலாது.

சொற்பொருள் : ஒல்லாவே – இயலாவே.

இலக்கணக்குறிப்பு : சொலல் – தொழிற்பெயர்.

10. உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். *

பொருள் : உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

சொற்பொருள் : உலகம் – உயர்ந்தோர்; ஒட்ட – பொருந்த; ஒழுகல் – நடத்தல், வாழ்தல்.

(இவ்விரு பாடலும் சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களைக் கூறுகின்றன.)

## காலமறிதல்

(செயலை நிறைவேற்றுவதற்கு ஏற்ற காலத்தை அறிதல்)

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. *

பொருள் : பகற்பொழுதில் தன்னிலும் வலிய கோட்டானைக் காக்கை வென்றுவிடும். அதுபோலப் பகையை வெல்லக் கருதும் வேந்தர், ஏற்ற காலம் அறிந்து செயற்படுதல்வேண்டும்.

சொற்பொருள் : கூகை – கோட்டான்; இகல் – பகை.

( இப்பாடல் காலமறிதலின் சிறப்பைக் கூறுகின்றது. )

2. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

பொருள் : காலத்திற்குப் பொருந்திய செயலை மேற்கொள்வதே செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

சொற்பொருள் : திரு – செல்வம்; தீராமை – நீங்காமை.

3. அருவினை என்ப உளவோ, கருவியாற்
காலம் அறிந்து செயின். *

பொருள் : தகுந்த கருவிகளோடு ஏற்ற காலமறிந்து செயல்பட்டால், செய்தற்கரிய செயல்கள் எவையுமில்லை.

சொற்பொருள் : அருவினை – செய்தற்கரிய செயல்.

இலக்கணக்குறிப்பு : அருவினை – பண்புத்தொகை; அறிந்து – வினையெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிந்து – அறி + த் ( ந் ) + த் + உ. அறி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

4. ஞாலம் கருதினுங் கைகூடும், காலம்
கருதி இடத்தாற் செயின். *

பொருள் : காலமறிந்து, இடத்தோடு பொருந்தச் செயல்பட்டால், உலகத்தையே அடைய விரும்பினும் கைகூடும்.

சொற்பொருள் : ஞாலம் – உலகம்.

(இம்மூன்று பாடலும் காலமறிந்து செயல்படுதலால் ஏற்படும் பயனைக் கூறுகின்றன.)

5. காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர். *

பொருள் : உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர், அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் கலங்காமல் காத்திருப்பர்.

இலக்கணக்குறிப்பு : கலங்காது – எதிர்மறை வினையெச்சம்.

6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

பொருள் : ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பதானது, ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

சொற்பொருள் : ஒடுக்கம் – அடங்கியிருப்பது; பொருதகர் – ஆட்டுக்கடா; பேருந்தகைத்து – பின் வாங்கும் தன்மையது.

அணி : உவமையணி

( இவ்விரு பாடலும் உரிய காலத்திற்காகக் காத்திருத்தலின் சிறப்பைக் கூறுகின்றன. )

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

பொருள் : அறிவுடையார், பகைவர் தீங்கு செய்த உடனே சினத்தை வெளிப்படுத்தமாட்டார்; அவரை வெல்லுதற்கான காலம் வரும்வரை, அச்சினத்தை மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்.

சொற்பொருள் : பொள்ளென – உடனே; புறம்வேரார் – வெளிப்படுத்தமாட்டார்; உள்வேர்ப்பர் – மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்; ஒள்ளியவர் – அறிவுடையார்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

பொருள் : பகைவரைக் காணும்போது பணிவாக இருத்தல்வேண்டும். அப்பகைவர்க்கு முடிவுக்காலம் வரும்போது, அவர்தம் நிலைமை தலைகீழாய் மாறிவிடும்.

சொற்பொருள் : செறுநர் – பகைவர்; சுமக்க – பணிக; இறுவரை – முடிவுக்காலம்; கிழக்காந்தலை – தலைகீழ் (மாற்றம்).

(இவ்விரு பாடலும் பகைவரை எதிர்கொள்ளும் முறையைக் கூறுகின்றன.)

9. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல். *

பொருள் : கிடைத்தற்கு அரிய வாய்ப்புக் கிடைத்தபொழுது, அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்பொழுதே செய்தற்கரிய செயல்களைச் செய்தல்வேண்டும்.

சொற்பொருள் : எய்தற்கு – கிடைத்தற்கு; இயைந்தக்கால் – கிடைத்தபொழுது.

(இப்பாடல் காலம் வரும்போது விரைந்து செயலைச் செய்க என்பதைக் கூறுகின்றது.)

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

பொருள் : வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப்போல் அமைதியாகக் காத்திருத்தல்வேண்டும். உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப்போல் விரைந்து செயலைச் செய்து முடித்தல்வேண்டும்.

சொற்பொருள் : கூம்பும் – வாய்ப்பற்ற; சீர்த்த இடம் – உரிய காலம்.

அணி : உவமையணி.

(இப்பாடல் காத்திருத்தலையும் செயல்படுதலையும் உவமைவழி கூறுகின்றது.)



ஆசிரியர் குறிப்பு : திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர் திருவள்ளுவர். இவர் கி.மு. 31இல் பிறந்தவர் என அறிஞரால் உறுதி செய்யப்பட்டுத் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது. தமிழக அரசு, தைத் திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது.

நூற்குறிப்பு : திரு + குறள் = திருக்குறள். மேன்மையான கருத்துகளைக் குறள் வெண்பாக்களால் கூறும் நூலாதலின், திருக்குறள் எனப் பெயர் பெற்றது. இஃது ஈரடிகளில் இயற்றப்பட்டிருப்பினும் விரிவான பொருளைத் தருகின்றது. இந்நூல் நாடு, மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கிறது; உலகப் பொதுமறை எனப் போற்றப்பெறுகிறது. திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இஃது அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது; ஒன்பது இயல்களையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது. ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். தமிழ்ச் சான்றோர் பலரால் இயற்றப்பட்ட திருவள்ளுவமாலை, திருக்குறளின் பெருமைகளைப் போற்றிப் புகழ்கிறது.

'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' என்றும்,

'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' என்றும்,


பாவேந்தர் பாரதிதாசன் திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்த வற்றுள்,
பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வினிலே அழைத்துச்
செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்
இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே.

– பாவேந்தர் பாரதிதாசன்

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**

நாலடி, நான்மணி, நானாற்பது, ஐந்திணை,முப்
பால், கடுகம், கோவை, பழமொழி, – மாமூலம்,
இன்னிலைய, காஞ்சியுடன், ஏலாதி என்பவே,
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.


மூலபாடம்
1812

மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812இல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) திருக்குறளில் _______ அதிகாரங்களும் _______ குறட்பாக்களும் உள்ளன.

ஆ) திருக்குறள் _______ முதலான உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இ) ஒழுக்கத்தின் எய்துவர் _______ இழுக்கத்தின்
எய்துவர் _______ பழி.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் _________.

1. நால்வர் நான்மணிமாலை 2. திருவள்ளுவமாலை 3. இரட்டைமணிமாலை

ஆ) திருக்குறள் _________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.

1. சிந்தியல் 2. குறள் 3. நேரிசை

இ) 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் _________.

1. பாரதியார் 2. சுரதா 3. பாரதிதாசன்

**3. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

அ) இறுவரை காணின் _______ ( கிழக்காம் / கிளக்காம் ) தலை.

ஆ) மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும்சொல் _______. ( உரவோர்/உறவோர் )

**4. அடி எதுகையை எடுத்தெழுதுக.**

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

**5. சீர் மோனையை அடிக்கோடிடுக.**

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

**6. விடுபட்ட சீர்களை எழுதுக.**

அ) பரிந்தோம்பிக் _________ ஒழுக்கம் _________
தேரினும் _________ துணை.

ஆ) ஊக்கம் உடையான் _________ பொருதகர்
தாக்கற்குப் _________ தகைத்து.

**7. உவமையைப் பொருளோடு பொருத்தி எழுதுக.**

அ) அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று

ஆ) கொக்கொக்க கூம்பும் பருவத்து

8. சீர் பிரித்து எழுதுக.

1. ஒழுக்கமுடைமைகுடிமைஇழுக்கம்இழிந்தபிறப்பாய்விடும்.
2. காலங்கருதியிருப்பர்கலங்காதுஞாலங்கருதுபவர்.

## ஆ) குறுவினாக்கள்

1. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?
2. ஒழுக்கத்தால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?
3. நன்றிக்கு வித்தாவது எது?
4. என்றும் இடும்பை தருவது எது?
5. பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுபவர் யார்?
6. கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?
7. ஞாலம் கருதினும் கைகூடும். எப்போது?
8. ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர்?
9. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?
10. செய்தற்கரிய செயல் செய்வது எப்போது?
11. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?
12. காலமறிந்து செயல்படுவது எவ்வாறு?
13. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
14. பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

## இ) சிறுவினாக்கள்

1. ஒழுக்கத்தின் உயர்வினை எழுதுக.
2. ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மையையும் கடைப்பிடிக்காதவழி ஏற்படும் தீமையையும் எழுதுக.
3. காலமறிதலின் தேவையை எழுதுக.
4. காலமறிந்து செயல்படுதலால் வரும் பயன் யாது?

## ஈ) நெடுவினாக்கள்

1. ஒழுக்கமுடைமைபற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
2. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

## ஏலாதி

வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு
நுணங்கிநூல் நோக்கி நுழையா – இணங்கிய
பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
நூல்நோக்கி வாழ்வான் நுனித்து.

– கணிமேதாவியார்

பொருள் : பிறர்க்குப் பணிந்தும், நல்வழியில் நடந்தும், மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றியும், நுண்ணறிவு நூல்களை ஆராய்ந்தும், அவை நவிலும்வண்ணம் வாழும் பழியிலா மன்னன் நூல்களெல்லாம் போற்றும்படி வாழ்வான்.

சொற்பொருள் : வணங்கி – பணிந்து; மாண்டார் – மாண்புடைய சான்றோர்; நுணங்கிய நூல் – நுண்ணறிவு நூல்கள்; நோக்கி – ஆராய்ந்து.

இலக்கணக்குறிப்பு : நூல்நோக்கி – இரண்டாம் வேற்றுமைத்தொகை; பழியில்லா மன்னன் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : நோக்கி – நோக்கு + இ. நோக்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி; வாழ்வான் – வாழ் + வ் + ஆன். வாழ் – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; நுனித்து – நுனி + த் + த் + உ. நுனி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

பிரித்தறிதல் : வழியொழுகி – வழி + ஒழுகி.

ஆசிரியர் குறிப்பு : ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார். இவருக்குக் கணிமேதையர் என்னும் மற்றொரு பெயருமுண்டு. இவர், சமண சமயத்தவர் என்பர். இவர், சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை ஏலாதியில் வலியுறுத்திக் கூறுகிறார். இவர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு. இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

நூற்குறிப்பு : பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஏலாதியும் ஒன்று. இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது. இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது. ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக்கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர். இம்மருந்து, உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும். அதுபோல, இந்நூலின் நற்கருத்துகள், கற்போரின் அறியாமையை அகற்றும். இந்நூலின் ஐம்பத்தொன்பதாவது பாடல், நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) ஏலாதி __________ நூல்களுள் ஒன்று.

1. பதினெண்மேற்கணக்கு 2. பதினெண்கீழ்க்கணக்கு 3. காப்பியம்

ஆ) கணிமேதாவியாரின் காலம் __________

1. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு 2. கி.பி. நான்காம் நூற்றாண்டு
3. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

இ) மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் __________, __________.

1. திருக்குறள், நன்னூல் 2. திரிகடுகம், ஏலாதி 3. நற்றிணை, அகநானூறு

**2. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.**

நூ _____ (ல் / ள்) நோக்கி வா _____ (ழ் / ல்) வான் நு _____ த்து (னி / ணி)

### ஆ) குறுவினாக்கள்

1. ஏலாதி – நூற்குறிப்பு எழுதுக.
2. கணிமேதாவியார் – குறிப்பு எழுதுக.
3. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

#### அறிந்துகொள்வோம்

**எட்டுத்தொகை நூல்கள்**

நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூ(று),
ஒத்த பதிற்றுப்பத்(து,) ஓங்கு பரிபாடல்,
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ(டு), அகம்,புறம்என்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.

**பத்துப்பாட்டு நூல்கள்**

முருகு, பொருநாறு, பாணிரண்டு, முல்லை,
பெருகு வளமதுரைக் காஞ்சி, – மருவினிய
கோலநெடு நல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும் பத்து.

# உயர்தனிச் செம்மொழி

"வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி"

என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றுவார் பாவலரேறு பெருஞ்சித்திரனார். தமிழ், மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் பழைமை வாய்ந்த இலக்கிய வளம்மிக்க மொழி. காலத்தால் மூத்த தமிழ்மொழி, தனித்தன்மையால் மிடுக்குற்றுச் செம்மொழியாய்த் திகழ்கிறது. 'திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்' என்று பரிதிமாற்கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். "தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் பதினாறு செவ்வியல் தன்மைகளைக்கொண்டது செம்மொழி; அதுவே நம்மொழி" என்பார் பாவாணர்.

## நிலைத்த மொழி

உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன என்பர் மொழிநூலார். இவற்றுள் இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் மூவாயிரம். இவற்றுள்ளும் ஈராயிரமாண்டுகட்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே. அவை தமிழ், சீனம், சமற்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகியன. இவற்றுள் இலத்தீனும் ஈப்ருவும் வழக்கிழந்து போயின. இன்றும் நிலைத்து நிற்கும் மொழிகளுள் நம் தமிழ்மொழியும் ஒன்று.

ஒரு மொழி நிலைத்து நிற்பதற்கு, அதன் பழைமையும் வளமையும் மட்டும் போதா. அம்மொழி பேச்சுமொழியாக, எழுத்துமொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, பயிற்றுமொழியாக நிலைபெற்றிடல்வேண்டும். இலக்கிய வளம், இலக்கண அரண், மிகுந்த சொல்வளம், வரலாற்றுப் பின்னணி, தனித்தியங்கும் மாண்பு, காலத்திற்கேற்ற புதுமை எனப் பலவகைகளிலும் சிறப்புப் பெற்றிருத்தல்வேண்டும். தமிழ்மொழிக்கு இவை அனைத்தும் பொருந்தும்.

## செம்மொழித் தகுதிப்பாடுகள்

1. தொன்மை 2. பிறமொழித் தாக்கமின்மை 3. தாய்மை 4. தனித்தன்மை 5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு 6. பொதுமைப் பண்பு 7. நடுவுநிலைமை 8. பண்பாடு, கலை




கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம். (இலெமூரியாக் கண்டம்)

பட்டறிவு வெளிப்பாடு 9. உயர்சிந்தனை 10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு 11. மொழிக் கோட்பாடு எனப் பதினொரு தகுதிக் கோட்பாடுகளை அறிவியல் தமிழறிஞர் முஸ்தபாவும், மொழிவல்லுநர்களும் வரையறுத்துள்ளார்கள்.

### 1. தொன்மை

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக் கண்டம். அவன் பேசிய மொழி தமிழ்மொழியே என்கின்றனர் ஆய்வாளர். அக் குமரிக்கண்டத்தில் முதல், இடைத்தமிழ்ச்சங்கங்கள் அமைத்துத் தமிழர் மொழியை வளர்த்தனர் . இந்நிலப்பகுதி கடற்கோளால் கொள்ளப்பட்டதால், தமிழ்ச்சான்றோரால் மூன்றாவது தமிழ்ச்சங்கம் இன்றைய மதுரையில் தோற்றுவிக்கப்பட்டது. இது மூவாயிரம் ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தது என்பர். உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை, அதன் தொன்மையைக் கருதி 'என்றுமுள தென்தமிழ்' என்பார் கம்பர்.

### 2. பிறமொழித் தாக்கமின்மை

காலச்சூழலே மொழிக் கலப்பினை ஏற்படுத்துகிறது. ஆங்கிலத்தில் எண்ணற்ற பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. வடமொழியிலும் தமிழ், பிராகிருதம், பாலிமொழிச் சொற்கள் கலந்துள்ளன. இவ்வாறே தமிழிலும் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. பிறமொழிச் சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்கா. ஆனால், தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது. மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி, தமிழ். அவ்வேர்ச்சொற்களைக் கொண்டே புத்தம் புதுக் கலைச்சொற்களைத் தமிழ்மொழியால் உருவாக்கிக்கொள்ள இயலும்.

### 3. தாய்மை

தமிழ்மொழியானது திராவிடமொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது. அது பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்பார் கால்டுவெல். ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது தமிழ். ஆதலால், உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ் என்பது பெருமைக்குரிய ஒன்று.

### 4. தனித்தன்மை

இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ். தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர். திருக்குறள், மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தளித்தது. உலகில் பேசப்படும் மொழிகளுள் தமிழின் பழைமையையோ அதன் பெருமையையோ எம்மொழியும் நெருங்கவியலாது. தமிழ்மொழி இறவா இலக்கிய, இலக்கண வளங்கொண்டு தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் கொண்டுள்ளது. இவையாவும் தமிழ்மொழியின் தனித்தன்மைகளே.

### 5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு

உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் 26,350. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிபு.

மாக்சுமுல்லர் என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார். உலக இலக்கியங்கள் எவற்றிற்கும் இல்லாத் தனிச்சிறப்பு, சங்க இலக்கியங்களுக்கு உண்டு. அவை தொன்மக் கருத்துகளின் அடிப்படையில் எழுதாமல், மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்தின. ஆதலால், சங்க இலக்கியங்களை மக்கள் இலக்கியம் எனலாம்.

தமிழ்மொழியின் இலக்கண அமைப்பானது, தனிச் சிறப்புடையது; நுண்ணிய அறிவை உண்டாக்கவல்லது. தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட். நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது தொல்காப்பியம். இஃது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது. தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு அகத்தியம் என்பது பெயர். அறிவியல்முறையில் அமைந்த இத்தகைய இலக்கண நூல்கள் தோன்றவேண்டுமென்றால், குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாவது தமிழ்மொழி தோன்றிச் செம்மைநிலை பெற்றிருத்தல்வேண்டும். அத்தகைய இலக்கிய இலக்கண வளமுடையது, தமிழ்மொழி.

### 6. பொதுமைப் பண்பு

தமிழர், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தனர்; ஒன்றே குலம் எனப் போற்றினர்; தீதும் நன்றும் விளைவது அவரவர் செயலால் என்றுணர்ந்தனர்; செம்புலப் பெயல்நீர்போல அன்புள்ளம் கொண்டனர். இவ்வாறான பொதுமை அறங்களைத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவை உலகத்தால் போற்றப்படுகின்றன.

### 7. நடுவுநிலைமை

சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை; இயற்கையோடு இயைந்தவை; உலகத்தார் ஏற்கும் பொதுக் கருத்துகள் உடையவை; மக்கள் சிறப்புடன் வாழ ஏற்ற கருத்துகளை மொழிபவை.

### 8. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு

சங்கப் படைப்புகள் வெறுங்கற்பனைப் படைப்புகளல்ல. அவை மனிதப் பட்டறிவின் முழு வெளிப்பாடுகள்; அறிவுடன் பொருந்தி வருவன; அறத்தொடு நிலையாய் நிற்பன. அவை பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், பிறன்மனை நோக்காப் பேராண்மை முதலிய பண்பாட்டு நெறிமுறைகளையும் வெளிப்படுத்துகின்றன.

### 9. உயர் சிந்தனை

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என உலக மக்களை ஒன்றிணைத்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது புறநானூறு. அஃது உரிமைக்கு உறவுகோல் ஊன்றுவது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனத் திருக்குறள் உலகுக்கு எடுத்துரைக்கிறது. அது மக்கட் பண்பில்லாதாரை மரம் எனப் பழிக்கிறது. இவையெல்லாம் தமிழ்மொழிக்கே உரிய விழுமிய சிந்தனைகள்.

### 10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு

தமிழ்ச்சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளமடையச் செய்தனர்; மேலும், எளிய குடிமகனையும் குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது. இந்நூல் கூறும் கலைநுட்பச் செய்திகள், சங்ககாலத் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித்தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

### 11. மொழிக் கோட்பாடு

தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்புமுறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துகின்றன. 'இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது' என்பார் முனைவர் எமினோ. எக்காலத்திற்கும் பொருந்தும் மொழியியல் கோட்பாடுகளை வகுத்த தமிழர்தம் மொழித்திறம் ஆராயத்தக்கது.

ஒருமொழிக்கு முப்பத்துமூன்று ஒலிகள் இருந்தாலே போதும் என்பர். ஆனால், தமிழோ ஐந்நூறு ஒலிகளைக் கொண்டுள்ளது. இதுவே மனித உணர்வுகள்

அனைத்தையும் எண்ணியவாறு வெளிப்படுத்தப் போதுமானது என்பர் மொழிநூலார். தமிழ்மொழி காலப் புதுமையைப் பெறத்தக்க வல்லது; கணினிப் பயன்பாட்டிற்கும் ஏற்றது.

இவ்வாறு, செம்மொழிக்கான பதினொரு கோட்பாடுகளும் முற்றிலும் பொருந்துமாறு அமைந்த ஒரே மொழி தமிழ்மொழி.

இவ்வருஞ்சிறப்புமிக்க தமிழைச் செம்மொழி என அறிவித்தல்வேண்டும் என்ற முயற்சி 1901இல் தொடங்கி 2004வரை தொடர்ந்தது. நடுவணரசு 2004ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக ஏற்பளித்தது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) தமிழர் மனித வாழ்வை ____ , ____ எனப் பிரித்தனர்.

ஆ) குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசியமொழி ____ .

இ) 2004ஆம் ஆண்டு ____ திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.

ஈ) தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ____ ஆவார்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) பதினாறு செவ்வியல் தன்மைகளைக்கொண்டது செம்மொழி எனக் கூறியவர் ____.

1. திரு.வி.க  2. உ.வே.சா.  3. பாவாணர்

ஆ) இன்றைய மதுரையில் ____ தமிழ்ச்சங்கம் இருந்தது.

1. மூன்றாம்  2. இரண்டாம்  3. முதலாம்

### ஆ) குறுவினாக்கள்

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?
2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?
3. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
4. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?
5. ஒருமொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளாக மொழியியலார் கூறுவன யாவை?
2. தமிழ்மொழியின் இலக்கிய வளம் குறித்து எழுதுக.
3. தமிழ்மொழியின் இலக்கணச் சிறப்பை எழுதுக.

### ஈ) நெடுவினா

செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

### அறிந்துகொள்வோம்

#### செம்மொழிக் காலக்கோடு

1901 – மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.

1918 – மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி, அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது.

1918 – சைவ சித்தாந்த மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1919 – கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது.

1966 – உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.

2004 – நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

# பரிதிமாற்கலைஞர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பரிதிமாற்கலைஞர். இவர், சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் தம் பெயரைப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழாக்கிக் கொண்டவர். இவர், மதுரையை அடுத்த விளாச்சேரி என்னும் சிற்றூரில் கோவிந்தசிவனார், இலட்சுமிஅம்மாள் இணையரின் மூன்றாவது மகனாக, 1870ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் நாள் பிறந்தார்.

## பரிதிமாற்கலைஞரின் பணிகள்



பரிதிமாற்கலைஞர், தந்தை கோவிந்தசிவனாரிடம் வடமொழியும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இளங்கலை (பி.ஏ.) பயின்றார். இளங்கலைத் தேர்வில், தமிழிலும் தத்துவத்திலும் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். தாம் பயின்ற கல்லூரியில் தத்துவத்துறை ஆசிரியர் பணி வழங்கப்பட்டதை ஏற்காது, தமிழ்த்துறைப் பணியை விரும்பிக்கேட்டு ஏற்றார். தாம் கற்பிக்கும் பாடங்களைச் செந்தமிழ் நடையில் சுவைபட விவரிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். பிற துறை மாணவர்களும் அவருடைய வகுப்புக்கு வந்து ஆர்வத்துடன் பாடங்கேட்டார்கள். அவருக்கு ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம், பேராசிரியர் பணி வழங்க முன்வந்தது; ஆனால், அதனை அவர் ஏற்கவில்லை. தமிழ் பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குத் தம்முடைய இல்லத்திலேயே தமிழ் கற்பித்ததுடன், அவர்களை இயற்றமிழ் மாணவர் எனவும் பெயரிட்டு அழைத்தார். மேலும் அவர், மாணவர்களுக்குத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைச் சுவைபடக் கற்பித்ததோடு தமிழைச் சுவைக்கவும் கற்பித்தார்.

## மதுரைத் தமிழ்ச்சங்கம்

பரிதிமாற்கலைஞரின் ஒவ்வொரு செயலும் தமிழ் வளர்ச்சியை நோக்கியே அமைந்திருந்தது. மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் இவரும் ஒருவர். பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித்துரை மேற்பார்வையில் பரிதிமாற்கலைஞர், உ. வே. சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்கள் துணையுடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

## தமிழ்ப்புலமையும் தனித்தமிழ்ப்பற்றும்

பரிதிமாற்கலைஞர், தமிழின் மேன்மையைத் தாம் உணர்ந்ததோடு, உலகிற்கு உணர்த்துவதிலும் தலைசிறந்து விளங்கினார். யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமையையும் கவிபாடும் திறனையும் கண்டு, திராவிட சாஸ்திரி என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார். பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய தனிப்பாசுரத்தொகை என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொண்டார். இந்நூலினை, ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

பரிதிமாற்கலைஞர், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்தபோது கல்லூரி முதல்வராக இருந்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் மில்லர். ஆங்கிலப் பேராசிரியரான அவர் ஒருநாள், டென்னிசன் இயற்றிய ஆர்தரின் இறுதி என்னும் நூலில் உள்ள ஒரு பாடலை நடத்தினார். அதில், துடுப்புகளை அசைத்துச் செலுத்தப்பட்ட படகானது அழகிய அன்னப்பறவைக்கு உவமையாக்கப்பட்டிருந்தது. அதனை வியந்து பாராட்டிய மில்லர், "இங்கிலீஷ், இங்கிலீஷ்தான்; படகை நகர்த்தும் துடுப்புகளுக்கு உவமையாகப் பறவைகளின் சிறகைக் கூறியது வெள்ளையர்களின் அபூர்வக் கண்டுபிடிப்பு" என்று பெருமையாகக் கூறினார். அதுமட்டுமன்றித், "தமிழில் இதுபோன்ற உவமை ஏதேனும் உண்டோ?" என்று மாணவர்களிடம் வினவினார். அதற்குப் பரிதிமாற்கலைஞர், "பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே கம்பராமாயணக் குகப்படலத்தில் இத்தகைய உவமை உள்ளது" என்று கூறி, 'விடுநனி கடிது' என்னும் அப்பாடலைப் பாடியும் காட்டினார். அதனைக் கேட்ட ஆங்கிலப் பேராசிரியர் வியந்து, அவரைப் பாராட்டினார்.

## தமிழின் சிறப்பை உணர்த்தல்

தமிழ்ச்சொற்களோடு வடமொழிச்சொற்களைக் கலந்து எழுதுதல், மணியும் பவளமும் கலந்து கோத்த மாலைபோலாகும் எனத் தமிழின் அருமை உணராதோர் கூறினர். ஆனால், அது தமிழ்மணியோடு பவளத்தைப்போலச் செந்நிறம் உடையதான மிளகாய்ப் பழம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது பரிதிமாற்கலைஞரின் கருத்து. மணியோடு மிளகாய்ப் பழத்தையும் கோத்து மாலையாக அணிந்தால், சிறுபொழுது செல்லும் முன்னரே மிளகாய்ப்பழத்தின் தோல் காய்ந்து, காம்பொடிந்து, விதை உடம்பிலேபட்டு, வியர்வையோடு கலந்து பொறுக்கமுடியாத எரிச்சலைத்தான் தரும்; தோல் தடித்து உணர்ச்சி கெடாத எவரும், அந்த எரிச்சலை உணர்வர். அதனைப்போன்றே தமிழ்த்தாயின் எழில் மிகுந்த உடம்பிற்கு, மணிப்பிரவாள நடை எரிச்சலைத்தான் தரும் என்பதனை உணர்ந்த பரிதிமாற்கலைஞர், வடசொற்கலப்பைக் கண்டிக்கத் தயங்கவில்லை.

## தமிழ்த்தொண்டு

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில், பட்டவகுப்புகளில் தமிழை விலக்கி, வடமொழியைக் கொண்டுவரப் பல்கலைக்கழகத்தாரால் முடிவெடுக்கப்பட்டது. ஆனால், 1902ஆம் ஆண்டில் பரிதிமாற்கலைஞரின் உறுதியான எதிர்ப்பால், அம்முடிவைப் பல்கலைக்கழகம் கைவிட்டது. அவரது முனைப்பான முயற்சி இல்லையென்றால், பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலிருந்து தமிழ் அறவே நீக்கப்பட்டிருக்கும். பரிதிமாற்கலைஞர், ரூபாவதி, கலாவதி முதலிய நற்றமிழ் நாடகங்களை இயற்றினார்.

அவர் ரூபாவதி, கலாவதி என்னும் பெண்பால் வேடங்களும் புனைந்து நடித்து நாடகக்கலை வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார்; சித்திரக்கவி எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்ததால், சித்திரக்கவி என்னும் நூலை எழுதினார். குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் ஐம்பத்தொரு பாடல்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்.

மு.சி. பூர்ணலிங்கம் தொடங்கி வைத்த ஞானபோதினி என்னும் இதழைப் பரிதிமாற்கலைஞர் நடத்தினார். பரிதிமாற்கலைஞர் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். மாணவப் பருவத்திலேயே ஆங்கிலப்பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பிற்காலத்தில் வடமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் செந்தமிழ் இதழில் உயர்தனிச் செம்மொழி என்னும் தலைப்பில், தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரைவரைந்தார். தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி என முதன்முதலாக நிலைநாட்டினார்.

தமிழ் உள்ளங்கொண்டு அயராது தமிழ்த் தொண்டாற்றிய பரிதிமாற்கலைஞர், தமது முப்பத்து மூன்றாம் அகவையில் (02.11.1903) இயற்கை எய்தினார். நடுவணரசு பரிதிமாற்கலைஞருக்கு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்துள்ளது. நற்றமிழில் பெயர் சூட்டவும், நற்றமிழின் தனிப்பெருமையைக் காக்கவும் உறுதி கொள்வதே பரிதிமாற்கலைஞர் தொண்டுக்கு நாம் காட்டும் நன்றிக்கடனாகும்.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்றினை விளக்குக.
2. பரிதிமாற்கலைஞரின் தமிழ்த்தொண்டினை விவரிக்க.

**செயல் திட்டம் :** உங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களின் பெயர்களைத் தொகுக்க. அவற்றைத் தனித்தமிழ்ப் பெயர்களாகவும் பிறமொழிப்பெயர்களாகவும் வகைப்படுத்துக. பிறமொழிப் பெயர்களுக்கு இணையான தமிழ்ப்பெயர்களையும் எழுதுக.

### பரிதிமாற்கலைஞரின் சொல்லாக்கங்கள்

| | | |
|---|---|---|
| Aesthetic | – | இயற்கை வனப்பு |
| Biology | – | உயிர்நூல் |
| Classical Language | – | உயர்தனிச் செம்மொழி |
| Green Rooms | – | பாசறை |
| Instinct | – | இயற்கை அறிவு |
| Order of Nature | – | இயற்கை ஒழுங்கு |
| Snacks | – | சிற்றுணா |

# எழுத்து

( சார்பெழுத்துகள் : ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள் )

உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளை முதலெழுத்துகள் எனவும், அவற்றைச் சார்ந்து வரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் எனவும் முன் வகுப்புகளில் கற்றறிந்தோம். இனி ஐகார, ஔகார, ஆய்த, மகரக் குறுக்கங்கள் பற்றிக் காண்போம்.

## 1. ஐகாரக்குறுக்கம்

'ஐ' என்னும் நெட்டெழுத்தைத் தனியாக ஒலித்துப் பாருங்கள். அது, தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கும். ஆனால், இவ்வெழுத்தைச் (ஐ) சொல்லின் முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வருமாறு எழுதி ஒலித்துப் பாருங்கள். அஃது, ஒலி குறைந்து ஒலிப்பதனை உணர்வீர்.

ஐம்பது – சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது

தலைவன் – சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

கடலை – சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

இவ்வாறு சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

## 2. ஔகாரக்குறுக்கம்

'ஔ' என்னும் நெடில் எழுத்தும், 'ஐ' என்னும் நெட்டெழுத்தைப்போலவே தனியாக ஒலிக்கும்போது, இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதில்லை. ஆனால், சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ஒன்றரை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும்.

(எ–டு) ஔவை, வௌவால் – ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது.

சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும், ஔவும் முதலற் றாகும் – நன்னூல், 95

### 3. மகரக்குறுக்கம்

'ம்' என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். அதாவது, 'ம்' என்னும் மெய்யெழுத்து, செய்யுளில் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து, கால் மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

(எ–டு) போலும் – போல்ம் – போன்ம்

மருளும் – மருள்ம் – மருண்ம்

அ) செய்யுளில் இடம்பெறும் போலும், மருளும் ஆகிய மகர ஈற்றுச் சொற்கள், ஈற்றயல் உகரங் கெட்டு, போல்ம், மருள்ம் என்றாகிப் பின் போன்ம், மருண்ம் எனத் திரியும். இவ்வாறு திரியும் னகர, ணகரங்களின் முன்னுள்ள மகரம், தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஆ) மகர ஈற்றுச்சொல் முன் வகர (வ்) முதல்மொழி வந்து சேரும்போது, நிலைமொழி மகரம் குறைந்து ஒலிக்கும்.

(எ–டு) வரும் + வண்டி = வரும் வண்டி. 'ம்' தன் அரை மாத்திரையிலிருந்து குறைந்து, கால் மாத்திரையாக ஒலிக்கும். (வரும் – இது மகர ஈற்று நிலைமொழி. வண்டி இது 'வ்' என்னும் வகர முதல் மொழி.)

இவ்விரண்டு இடங்களிலும் குறைந்து ஒலிக்கும் மகரமே மகரக்குறுக்கம் எனப்படும்.

### 4. ஆய்தக்குறுக்கம்

ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம். ('ஃ' என்னும் எழுத்து குறைந்து ஒலிப்பது.) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவாக ஒலிக்கும். அதுவே ஆய்தக்குறுக்கம் எனப்படும். பிறகு, வருமொழியிலுள்ள தகரம் (த்) நிலைமொழிக்கேற்ப றகரமாக (ற்) வும், டகரமாகவும் (ட்) மாறிப் புணரும்.

(எ–டு) கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) வளையல் – இச்சொல்லில் ஐகாரம் ________ மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

ஆ) ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ________ ஆகும்.
1. திண்ணை 2. வளையல் 3. ஐந்து

இ) பல் + தீது என்பது ________ எனப் புணரும்.
1. பல்தீது 2. பஃறீது 3. பலதீது

ஈ) குறுக்கங்கள் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ________ ஆய்தக்குறுக்கம் என நால்வகைப்படும்.

**2. பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. ஐகாரக்குறுக்கம் | – | முஃடீது |
| 2. ஔகாரக்குறுக்கம் | – | தலைவன் |
| 3. ஆய்தக்குறுக்கம் | – | போன்ம் |
| 4. மகரக்குறுக்கம் | – | வௌவால் |

### ஆ) சிறுவினாக்கள்

1. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. ஔகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. மகரம் எவ்வெவ்விடங்களில் குறுகும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. ஆய்தக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## மொழித்திறன் பயிற்சி

### சொற்றொடர் வகைகள்

### 1. செய்தித்தொடர்

அ) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார்.

ஆ) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

இவ்விரு தொடர்களும் செய்திகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு, ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது செய்தித்தொடர் எனப்படும்.

### 2. வினாத்தொடர்

அ) எழில், என்ன சாப்பிட்டாய்?

ஆ) அன்பரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

இ) எங்கே செல்கிறாய்?

இவ்வாறு வினாப்பொருளைத் தரும் தொடர், வினாத்தொடர் எனப்படும். என்ன? ஏன்? எங்கே? எப்படி? முதலிய வினாச்சொற்கள் வினாத்தொடரில் அமையும்.

### 3. உணர்ச்சித்தொடர்

நீங்கள் சென்னைக்கு அருகிலுள்ள பூண்டி ஏரியைப் பார்த்ததுண்டா? அதனைப் பார்த்ததும் உங்களுக்குத் தோன்றியது என்ன?

'அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி!'

கண்ணகியும் கயல்விழியும் பாதையில் நடந்துகொண்டே பேசிச் செல்கின்றனர். கயல்விழியின் காலில் முள் ஆழமாகக் குத்திவிட்டது. உடனே, அவள் எவ்வாறு அலறியிருப்பாள்?

"ஐயோ, முள் குத்திவிட்டதே!"

இவ்வாறு நாம் பேசும் செய்திகள் உணர்ச்சியை வெளிப்படுத்தும் தொடர்களாக அமைந்தால், அவற்றை உணர்ச்சித் தொடர்கள் என்கிறோம்.

மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமைவது, உணர்ச்சித் தொடர்.

என்னே என்னும் சொல்லை வியப்புக் குறித்தும், அந்தோ என்னும் சொல்லைத் துன்பம் குறித்தும் சொற்றொடர்களில் அமைத்துக் காட்டலாம்.

(எ–டு) என்னே, இமயமலையின் உயரம்!

அந்தோ, நாய் வண்டியில் அடிபட்டுவிட்டதே!

### 4. கட்டளைத்தொடர்

நீ பள்ளிக்குப் புறப்படும்போது, உன்னிடம் அம்மா கூறுவது என்ன?

பார்த்துப் போ, கவனமாகப் படி என்றுதானே.

இவ்வாறு, ஒரு செயல் அல்லது சில செயல்களைப் பின்பற்றும்படி ஆணையிட்டுக் கூறுவது, கட்டளைத்தொடர்.

### 5. தனிநிலைத்தொடர்

1. அழகன் பாடம் எழுதுகிறான்.
2. மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள்.

இத்தொடர்களில் முதல் தொடரில் அழகன் என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் மா, பலா, வாழை என்பன எழுவாய்கள்.

இவ்வாறாக, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.

### 6. தொடர்நிலைத்தொடர்

கார்மேகம் கடுமையாக உழைத்தார்; அதனால், வாழ்வில் உயர்ந்தார்.

நேற்று மழை பெய்தது; அதனால், ஏரி குளங்கள் நிரம்பின.

இவ்வாறு, ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது தொடர்நிலைத்தொடர். தொடர்நிலைத்தொடர்கள் அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.

### 7. கலவைத்தொடர்

1. நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை.
2. முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான்.

இவ்வாறு, ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது, கலவைத்தொடர்.

8. செய்வினைத்தொடர்

"குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்." இத்தொடரில்,

| | | |
|---|---|---|
| குடியரசுத் தலைவர் | – | எழுவாய் |
| உலகத் தமிழ் மாநாடு | – | செயப்படுபொருள் |
| தொடங்கிவைத்தார் | – | பயனிலை |

இவ்வாறாக எழுவாய், செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர் எனப்படும். செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்பட்டு வரும். சில தொடர்களில் மறைந்தும் வரும்.

(எ–டு) மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.

9. செயப்பாட்டு வினைத்தொடர் (செயப்படுபொருள் வினைச்சொல்லைக்கொண்டு முடிவது)

உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப்பெற்றது.

இத்தொடரில் சொற்கள் செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்னும் வரிசையில் அமைந்துள்ளன. எழுவாயோடு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் உள்ளது. இவ்வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.

10. தன்வினைத்தொடர் (எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது)

பாத்திமா திருக்குறள் கற்றாள்.

இத்தொடரிலுள்ள பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதனால், இது தன்வினைத்தொடராகும்.

11. பிறவினைத்தொடர் (எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது)

பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்.

இது பிறவினைத்தொடர். பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத்தொடராகும்.

12. நேர்கூற்றுத்தொடர் (ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது)

ஆசிரியர், "மாணவர்களே, நாளை ஒழுக்கமுடைமையில் குறள்கள் ஐந்தனைப் படித்து வருக", என்றார். இவ்வாறு ஆசிரியர், மாணவர்களிடம் கூறிய இத்தொடர் நேர்கூற்றுத் தொடராகும்.

இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும்; தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும்; இங்கு, இப்போது, இவை எனச் சுட்டுப்பெயர்கள் வரும்; நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும்.

(எ–டு) தேன்மொழி பொன்னியிடம், "நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள்.

### 13. அயற்கூற்றுத்தொடர்

ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது, அயற்கூற்றுத்தொடர். பொன்னியிடம் தேன்மொழி, தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.

அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா; இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும்; சுட்டுப்பெயர்கள் அது, அவை, அங்கே என மாறும்; காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும்; என்று, ஆக என்னும் இணைப்புச்சொற்களும் இடம்பெறும்.

### 14. உடன்பாட்டுத்தொடர்

செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத் தொடர்.

கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.

### 15. எதிர்மறைத்தொடர்

கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்.

இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது எதிர்மறைத்தொடர்.

### 16. பொருள்மாறா எதிர்மறைத்தொடர்

கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்.

கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்னும் தொடர் உடன்பாட்டுத்தொடர். கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை என்பது இதற்கான எதிர்மறைத்தொடர்.

மேலே உள்ள உடன்பாட்டுத்தொடரை பொருள்மாறா எதிர்மறைத்தொடராக மாற்ற வேண்டுமானால், அதனை இரண்டு எதிர்மறைகளைக்கொண்ட தொடராகக், கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் என மாற்றுதல்வேண்டும். இதற்குக் கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்பதே பொருள் என்பதனால், இது பொருள்மாறா எதிர்மறைத்தொடர் எனப்படுகிறது.

இரண்டு எதிர்மறைச்சொற்கள் சேர்ந்து வந்தால், அஃது உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, பொம்மை ________ செய்யப் ________ என வரும்.

ஆ) அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்ததால் ________ தொடர் ஆகும்.

இ) அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளை ________ என வரும்.

ஆ) தொடரை மாற்றி அமைக்க.

1. திருக்குறளை அனைவரும் அறிவர். – வினாத்தொடராக அமைக்க.
2. இமயமலை மிகவும் உயரமானது . – உணர்ச்சித்தொடராக மாற்றுக.
3. கிளி கல்லால் அடிபட்டது – உணர்ச்சித்தொடராக மாற்றுக.
4. வாரியார், “குழந்தாய் ! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்” என்றார். – அயற்கூற்றாக மாற்றுக.
5. நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன. – கலவைத்தொடராக மாற்றுக.

இ) சந்திப்பிழையற்ற தொடர் எது ?

1. கயிறுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
2. கயிற்றுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
3. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

ஈ) ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது ?

1. அவன் கவிஞன் அல்ல.
2. அவன் கவிஞன் அன்று.
3. அவன் கவிஞன் அல்லன்.

உ) பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது ?

1. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.
2. அவர்களிருவர்க்கும் இடையே உரையாடல் நடந்தது.
3. அவர்களிருவர்க்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது.

ஊ) வழூஉச் சொல்லற்ற தொடர் எது ?

1. வலதுபக்கம் சுவறில் எழுதாதே.
2. வலப்பக்கச் சுவரில் எழுதாதே.
3. வலப்பக்கச் சுவற்றில் எழுதாதே.

எ) தொடர்கள் எவ்வகையானவை ?

1. பிசிராந்தையார், நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். (உணர்ச்சி, வினா, செய்தி).
2. குழந்தையை அடித்தது யார் ? (உணர்ச்சி, வினா, கட்டளை).
3. நம்நாட்டுக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது. (தன்வினை, செய்வினை, செயப்பாட்டுவினை)
4. வயலில் ஆடுகள் மேய்ந்தில. (உடன்பாடு, எதிர்மறை, தன்வினை)
5. காந்தியடிகள் உண்மை பேசாமல் இரார். (எதிர்மறை, பொருள்மாறா எதிர்மறை, பிறவினை)

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்த தமிழறிஞர் மறைமலையடிகளாரைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்க.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

– வள்ளலார்

### இ) எழுதுதல் திறன்

திருக்குறளின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

### ஈ) கட்டுரைப் பயிற்சி

தமிழ்மொழியின் சிறப்புகள்

### உ) கடிதம் எழுதுதல்

பள்ளி இலக்கிய மன்றத் தொடக்கவிழாவிற்கு வரவிருக்கின்ற இலக்கியச் சொற்பொழிவாளரை வரவேற்க வரவேற்பு மடல்.

## தமிழெண்களை அறிவோம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | 1 | க க | 11 | உ க | 21 | ங க | 31 | ச க | 41 |
| உ | 2 | க உ | 12 | உ உ | 22 | ங உ | 32 | ச உ | 42 |
| ங | 3 | க ங | 13 | உ ங | 23 | ங ங | 33 | ச ங | 43 |
| ச | 4 | க ச | 14 | உ ச | 24 | ங ச | 34 | ச ச | 44 |
| ரு | 5 | க ரு | 15 | உ ரு | 25 | ங ரு | 35 | ச ரு | 45 |
| சா | 6 | க சா | 16 | உ சா | 26 | ங சா | 36 | ச சா | 46 |
| எ | 7 | க எ | 17 | உ எ | 27 | ங எ | 37 | ச எ | 47 |
| அ | 8 | க அ | 18 | உ அ | 28 | ங அ | 38 | ச அ | 48 |
| கூ | 9 | க கூ | 19 | உ கூ | 29 | ங கூ | 39 | ச கூ | 49 |
| க ० | 10 | உ ० | 20 | ங ० | 30 | ச ० | 40 | ரு ० | 50 |

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

"யாழினி! நீ ஏன் பெயர் கொடுக்கவில்லை?" என ஆசிரியர் கேட்ட வினாவுக்கு, விடை என்ன கூறுவது என்று தெரியாமல் நின்றாள். 'நாளை ஒருநாள்தான் இருக்கிறது, எண்ணி முடிவு சொல்', என்று கூறியவாறே ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளியே சென்றார்.

"யாழினி, உன்மீது நாங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம். உன் அழகான கையெழுத்தும், செறிவான கருத்தும் கட்டுரைப் போட்டியில் உனக்குப் பரிசு பெற்றுத் தருமல்லவா? ஆனால், நீயோ போட்டியில் கலந்துகொள்ள மறுக்கிறாய். என்ன காரணம்?" என்று அவளுடைய தோழியர் வினவினர்.

"எனக்குப் போட்டிகளில் கலந்துகொள்வது என்றாலே மிகவும் அச்சமாக உள்ளது. நீங்கள் நினைப்பதுபோல் என்னால் சிறப்பாகச் செய்ய முடியுமா? என்று தெரியவில்லை. என் கட்டுரைக்குப் பரிசு கிடைக்கவில்லையென்றால் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது" என்று யாழினி அவர்களுக்குப் பதிலளித்தாள்.

நீங்கள் யாழினியாக இருந்தால் என்ன செய்வீர்கள்? சிந்தனை செய்க.

## மதிப்புக்கல்வி

### மனிதநேயம்

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியில் இருந்த அவர், நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் முதல் இருபது மணி நேரம் வரை கடுமையாக உழைப்பார். சில நாள் வீடு திரும்ப அவருக்கு நள்ளிரவுக்குமேல் ஆகிவிடும்.

ஒருநாள் அவர், நள்ளிரவுக்குமேல் வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் வீடு திரும்பினார். –நெடுங்காலமாக அவரிடம் வேலை பார்த்துவரும் காவலர், அன்று களைப்பு மிகுதியால் உறங்கிக்கொண்டிருந்தார்.

அவருடன் வந்த மற்றவர்கள், அக் காவலரை எழுப்பச் சென்றார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தி, பாவம், வயதானவர்; அவரை எழுப்பாதீர்கள்; அவர் தூங்கட்டும் என்று கூறியவாறே தாமே அறையின் திறவுகோலை எடுத்துச்சென்று அறையைத் திறந்தார்.

அவரோடு வந்த வெளிநாட்டு நண்பர் தமது கட்டுரை ஒன்றில், அவரின் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டாய் இந்நிகழ்வைக் குறிப்பிடுகிறார்.

அவர்தாம் இந்தியாவின் முதன்மையமைச்சராக இருந்த நேரு.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

பூங்காவில்...

"டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே . பட், நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி ? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்."

"சண்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்குதே, டோண்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே."

தந்தைக்கும் மகளுக்கும் நடந்த உரையாடலைப் படித்தீர்களா ?

இப்படிப் பேசினால் தமிழுக்கும் பெருமையில்லை; ஆங்கிலத்திற்கும் சிறப்பில்லை. தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம். மேற்காணும் உரையாடலில் பயன்படுத்தியுள்ள ஆங்கிலச் சொற்களை நீக்கி. அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பேசிப் பழகுக.

## மொழியாக்கம்

அ) தமிழாக்கம் செய்க.

Maps serve better than the printed pages for giving many kinds of information. In fact, people made and used maps before they learned how to read and write. Explorers have found maps that had been made by their ancestors. Sometimes these maps were carved on stones.

ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

1. Health is wealth.
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
2. Too much of anything is good for nothing.
   அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
3. No pain no gain.
   உழைப்பின்றி ஊதியமில்லை.
4. Haste makes waste.
   பதறாத காரியம் சிதறாது.
5. Knowledge is power.
   அறிவே ஆற்றல்.

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது. ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருகவேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

– தந்தை பெரியார்.

# சிலப்பதிகாரம்

## மதுரைக் காண்டம்

### வழக்குரை காதை

**முன்கதைச் சுருக்கம்**

காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன். இவன், கலையுணர்வும் வறியோர்க்கு உதவும் நற்பண்பும் மிக்கவன். காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள் கண்ணகி. இவள், திருமகள் போன்ற அழகும் பெண்கள் போற்றும் பெருங்குணச் சிறப்பும் கற்புத்திறமும் மிக்கவள். இவ்விருவரும் மனையறம்பூண்டு இன்புற்று வாழ்ந்தனர்.

கோவலன், ஆடலரசி மாதவியை விரும்பிக் கண்ணகியை விட்டுப் பிரிந்தான். அவன், மாதவி இல்லத்திலேயே தங்கித் தன் செல்வத்தையெல்லாம் இழந்தான். மாதவி, இந்திரவிழாவில் கானல்வரிப் பாடலைப் பாடினாள். பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்ட கோவலன், மாதவியை விட்டுப் பிரிந்தான். பிரிந்தவன், தன்மனைவி கண்ணகியிடம் சென்றான். அவன், தான் இழந்த செல்வத்தை ஈட்ட எண்ணினான்.

வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். அவர்களுக்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள் என்னும் சமணத்துறவி சென்றார். அவர், மதுரை நகர்ப்புறத்தில் மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார். கோவலன் சிலம்பு விற்றுவர மதுரைநகரக் கடைவீதிக்குச் சென்றான். விலைமதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றனைக் கோவலன் விற்பதனைப் பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் அறிந்தான்.

பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன், பொய்யான பழியைக் கோவலன்மேல் சுமத்தினான். அதனை ஆராய்ந்து பாராத மன்னன், 'அவனைக் கொன்று, சிலம்பைக் கொணர்க' என்று ஆணையிட்டான். கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதரி மூலம் அறிந்த கண்ணகி பெருந்துயருற்றாள். அவள், 'தன் கணவன் கள்வன் அல்லன்' என்பதனை மன்னனுக்கும், உலகோர்க்கும் உணர்த்த எண்ணினாள்; பாண்டிய மன்னன் அவைக்குச் சென்று வழக்குரைத்தாள்.

வாழியெம் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் தலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்

பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்

பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என
வருக மற்றவள் தருக ஈங்கென

வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
* வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்

கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி *
கண்ணகி யென்பதென் பெயரேயெனப், பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்என ஒள்ளிழை

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் சிலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்

கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்

மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

– இளங்கோவடிகள்

பொருள் : கொற்கை என்னும் துறைமுகத்தை உடைய பாண்டிய மன்னனே வாழ்வாயாக! தெற்குப் பகுதியில் உள்ள பொதியமலைக்குத் தலைவனே வாழ்க! செழியனே வாழ்க! தமிழ்நாட்டின் தென்பகுதித் தலைவனே வாழ்க! இதுவரை பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே வாழ்க!

வெற்றிதரும் வேலினைத் தன்பெரிய கையில் ஏந்தி, 'பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை பீடத்தில் ஏறிய இளங்கொடியாகிய கொற்றவையும் அல்லள்; கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும் அல்லள்; இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும் அல்லள்; அச்சம்தரும் காட்டைத் தான் விரும்பும் இடமாகக் கொண்ட காளியும் அல்லள்; தாருகன் என்ற அசுரனின் பரந்த மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்; தன் உள்ளத்தில் கறுவு கொண்டாள் போலவும், மிக்க சினம் கொண்டாள் போலவும், விளங்குகின்றாள்; வேலைப் பாடமைந்த பொற்சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தியவளாய் இருக்கின்றாள்; கணவனை இழந்த அவள், நம் வாயிலின் முன்னே நிற்கின்றாள்', என்று வாயிற்காவலன் அறிவித்தான். அத்தகையவளை அழைத்து வருக என்று அரசன் கூறினான்.

வாயிற்காவலன் கண்ணகியைப் பாண்டிய மன்னனிடம் அழைத்துச் சென்றான். மன்னன் கண்ணகியை நோக்கி, "இளமையான கொடி போன்றவளே! நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ, யார்?" என வினவினான். கண்ணகி மன்னனை நோக்கி, "ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு" என உரைக்கத் தொடங்கினாள்.

‘புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும், தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதிச்சோழனும் வாழ்ந்த, பெரும்புகழுடைய புகார் நகரமே யான் பிறந்த ஊர். அப்புகார் நகரில் பழியில்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசாத்துவான் மகனை மணம்புரிந்தேன். வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலைசெய்யப்பட்ட கோவலன் மனைவி நான், கண்ணகி என்பது என் பெயர்’ என்று கூறினாள்.

பாண்டிய மன்னன் கண்ணகியிடம், “கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று; அதுவே அரச நீதி” என்று கூறினான். அதற்குக் கண்ணகி, “அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது” என்றாள்.

அதற்கு அரசன், “நீ கூறியது நல்லதே! எம்முடைச் சிலம்பின் பரல்கள் முத்துகளே” என்றான். கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கொண்டுவரச் செய்து, அவள் முன் வைத்தான். வைத்த அச்சிலம்பினைக் கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள். அதிலிருந்து வெளிப்பட்ட மாணிக்கப்பரல் ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது.

அம்மாணிக்கப் பரல்களைக் கண்ட பாண்டிய மன்னன் தாழ்வுற்ற குடையனாய், சோர்வுற்ற செங்கோலனாய், “பொன்தொழில் செய்யும் கொல்லனின் பொய்யுரை கேட்டு, அறநெறி தவறிய, நானோ அரசன்! நானே கள்வன்; அறந்தவறாது குடிமக்களைக் காக்கும் தொன்மையாட்சி என்முதல் தவறியது. என் வாழ்நாள் அழியட்டும்” என்றவாறே மயங்கி வீழ்ந்தான்.

மன்னனின் மனைவி கோப்பெருந்தேவி உள்ளங்கலங்கி, உடல் நடுங்கி, ‘கணவனை இழந்த மகளிர்க்கு, எவ்விதத்திலும் ஆறுதல் கூற இயலாது’ என்று கூறித், தன் கணவனின் திருவடிகளை வணங்கி நிலத்தில் வீழ்ந்து இறந்தாள்.

சொற்பொருள் : கொற்கை – பாண்டிய நாட்டின் துறைமுகம்; தென்னம் பொருப்பு – தென் பகுதியில் உள்ள பொதிகைமலை; பழியொடு படரா – மறநெறியில் செல்லாத; அடர்த்துஎழு குருதி – வெட்டுப்பட்ட இடத்தினின்றும் பீறிட்டு எழும் செந்நீர்; பசுந்துணி – பசிய துண்டம்; தடக்கை – நீண்ட கைகள்; அறுவர்க்கு இளைய நங்கை – ஏழு கன்னியருள் இளையவளாகிய பிடாரி; இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு – இறைவனை நடனமாடச் செய்த காளி; சூருடை கானகம் – அச்சம் தரும் காடு; உகந்த – விரும்பிய; தாருகன் – அரக்கன்; பேர்உரம் கிழித்த பெண் – அகன்ற மார்பினைப் பிளந்த துர்க்கை; செற்றம் – கறுவு; செயிர்த்தனள் – சினமுற்றவள்; பொற்றொழில் சிலம்பு – வேலைப்பாடுமிக்க பொற்சிலம்பு; கடையகத்தாள் – வாயிலின் முன்னிடத்தாள்; நீர்வார்கண் – நீரொழுகும் கண்கள்; தேரா – ஆராயாத; எள்ளறு – இகழ்ச்சி இல்லாத; இமையவர் – தேவர்; புள் – பறவை (புறா); புன்கண் – துன்பம்; கடைமணி – அரண்மனை வாயில்மணி; ஆழி – தேர்ச்சக்கரம்; ஏசா – பழியில்லா; கோறல் – கொல்லுதல்; கொற்றம் – அரச நீதி; நற்றிறம் – அறநெறி; படரா – செல்லாத; வாய்முதல் – (வாயின் முதலாகிய) உதடு.

இலக்கணக்குறிப்பு : மடக்கொடி – அன்மொழித்தொகை; படராப் பஞ்சவ, அடங்காப் பசுந்துணி, தேரா மன்னா, ஏசாச் சிறப்பின் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்; தடக்கை – உரிச்சொற்றொடர்; புன்கண், பெரும்பெயர், அரும்பெறல், பெருங்குடி, கடுங்கோல், செங்கோலன், நன்மொழி – பண்புத்தொகைகள்; உகுநீர், சூழ்கழல், செய்கொல்லன் – வினைத் தொகைகள்; அவ்வூர் – சேய்மைச்சுட்டு; வாழ்தல் – தொழிற்பெயர்; என்கால், என்பெயர், நின்னகர், என்பதி – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்; புகுந்து – வினையெச்சம்; தாழ்ந்த, தளர்ந்த – பெய ரெச்சங்கள்; வருக, தருக, கெடுக – வியங்கோள் வினைமுற்றுகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : வருக – வா (வரு) + க. வா – பகுதி, வா – வரு என்றானது விகாரம், க – வியங்கோள் வினைமுற்று விகுதி; வந்தோய் – வா (வ) + த் (ந்) + த் + ஓய். வா – பகுதி, வா – வ எனக் குறுகியது விகாரம், த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஓய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி; தீர்த்தோன் – தீர் + த் + த் + ஓன். தீர் – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஓன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; உரைத்தது – உரை + த் + த் + அ + து. உரை – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – சாரியை, து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி; கேட்ட – கேள் (ட்) + ட் + அ. கேள் – பகுதி, ள் – ட் ஆனது விகாரம், ட் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி; வீழ்ந்தனள் – வீழ் + த் (ந்) + த் + அன் + அள். வீழ் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, அள் – பெண்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : எள்ளறு – எள் + அறு; புள்ளுறு – புள் + உறு; அரும்பெறல் – அருமை + பெறல்; பெரும்பெயர் – பெருமை + பெயர்; அவ்வூர் – அ + ஊர்; பெருங்குடி – பெருமை + குடி; புகுந்தீங்கு – புகுந்து + ஈங்கு; பெண்ணணங்கு – பெண் + அணங்கு; நற்றிறம் – நன்மை + திறம்; காற்சிலம்பு – கால் + சிலம்பு; செங்கோல் – செம்மை + கோல்.



ஆசிரியர் குறிப்பு : இளங்கோவடிகள் சேரமரபினர். இளங்கோவடிகளின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் நற்சோணை. இவர்தம் தமையன் சேரன் செங்குட்டுவன். இளையவரான இளங்கோவே நாடாள்வார் என்று கணியன் கூறிய கருத்தைப் பொய்ப்பிக்கும்பொருட்டு, இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற்கோட்டத்தில் தங்கினார். இளங்கோவடிகள் அரசியல் வேறுபாடு கருதாதவர்; சமய வேறுபாடற்ற துறவி. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. இளங்கோவடிகளின் சிறப்புணர்ந்த பாரதியார், “யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை” எனப் புகழ்கிறார்.

நூற்குறிப்பு : சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது ஆதலின், சிலப்பதிகாரமாயிற்று. சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெருங் காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது; புகார்க்காண்டம் பத்துக் காதைகளையும்,

மதுரைக்காண்டம் பதின்மூன்று காதைகளையும், வஞ்சிக்காண்டம் ஏழு காதைகளையும் கொண்டுள்ளது. இஃது, 'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்' எனவும் வழங்கப்பெறும்.

முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரத்தைப் போற்றிப் புகழ்வர். "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" எனப் பாரதியாரால் போற்றப்பட்டது இக்காப்பியம். நம் பாடப்பகுதியாகிய வழக்குரை காதை, மதுரைக்காண்டத்தின் பத்தாவது காதையாகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்கள். இவற்றுள் முதன்மையானது சிலப்பதிகாரம். காலத்தாலும் கதைத்தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்ட சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இரட்டைக்காப்பியம் என வழங்குவர். இசை நாடகமே சிலப்பதிகாரக் கதையின் உருவம்.

நூலெழுந்த வரலாறு : சேரன் செங்குட்டுவன், சீத்தலைச்சாத்தனாரோடும் இளங்கோவடிகளோடும் மலைவளம் காணச் சென்றான். அங்கிருந்த மலைவாழ் மக்கள், "வேங்கை மரத்தின்கீழ் ஒரு பெண்தெய்வத்தைப் பார்த்தோம்" என்று கூற, உடனிருந்த பெரும்புலவர் சாத்தனார், "அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்" என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார். அதனைக் கேட்ட இளங்கோவடிகள், "இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்" என்று கூறினார். சாத்தனாரும், 'அடிகள் நீரே அருளுக' என்றார். இவ்வாறே சிலப்பதிகாரம் உருவாயிற்று.

நூற்பயன் : "அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" என்னும் முப்பெரும் உண்மைகளைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் ____________ ஆகும்.

ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை, ____________, வளையாபதி ____________ என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) இளங்கோவடிகள் ____________ நாட்டைச் சேர்ந்தவர்.

1. சோழ 2. சேர 3. பாண்டிய

ஆ) 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடியவர் ____________.

1. கவிமணி 2. பாரதிதாசன் 3. பாரதியார்

**3. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.**

அ) வா ___ தல் ( ல்/ழ் ) வே ___ டி ( ண்/ன் ) ஊழ்வினை து ___ ப்ப. (ற/ர)

ஆ) தா ___ ந்த ( ள்/ழ் ) குடையன் தளர் ___ த ( ன்/ந் ) செங்கோ ___ ன் ( ள/ல )

4. சீர் எதுகைகளை அடிக்கோடிடுக.

1. வருக மற்றவள் தருக ஈங்கென.

2. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே.

5. சீர் மோனைகளை அடிக்கோடிடுக.

1. கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று.

2. யானோ அரசன் யானே கள்வன்.

6. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. புகார்க்காண்டம் | – | பதின்மூன்று காதைகள் |
| 2. மதுரைக்காண்டம் | – | ஏழு காதைகள் |
| 3. வஞ்சிக்காண்டம் | – | பத்துக் காதைகள் |
| | – | பதினைந்து காதைகள் |

## ஆ) குறுவினாக்கள்

1. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
2. சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறது?
3. சிலம்பு உணர்த்தும் முப்பெரும் உண்மைகள் யாவை?
4. 'யாரையோ நீமடக்கொடி' – யார், யாரிடம் கூறியது?
5. 'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே' – யார், யாரிடம் கூறியது?

## இ) சிறுவினாக்கள்

1. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?
2. கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.
3. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?
4. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?

## ஈ) நெடுவினாக்கள்

1. "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?
2. கண்ணகிக்கும் பாண்டியமன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

**செயல்திட்டம் :** வழக்குரைகாதை நிகழ்ச்சியை வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

## தமிழ் வளர்ச்சி

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

* உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர். *

– பாவேந்தர் பாரதிதாசன்

பொருள் : தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல்வேண்டும். இலக்கண நூல்களைப் புதிதாகப் படைத்தல்வேண்டும். உலகின் புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி விளக்கப் படங்களுடன் நூல்களாக்கிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும். வறுமையினால் தமிழன் ஒருவன் கல்லாத நிலை ஏற்படுமானால், இங்குள்ளோர் நாணம் அடைதல்வேண்டும். பல்வேறு துறை நூல்களைப் பிறர் துணையின்றி எல்லாரும் படித்தறிந்துகொள்ளும் வகையில், தமிழில் வெளியிடல்வேண்டும். தமிழறிவை மதங்களுக்குள் அடக்காமைவேண்டும். இலவச நூல்நிலையங்கள் ஊர்தோறும் ஏற்படுத்தல்வேண்டும். தமிழின் பெருமைகளைக் கூறுவதிலேயே காலம் கழித்தோம்; குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைத்தோமில்லை; உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்ப்போம், வாரீர்.

சொற்பொருள் : தெளிவுறுத்தும் – விளக்கமாகக் காட்டும்; சுவடி – நூல்; எளிமை – வறுமை; நாணிடவும் – வெட்கப்படவும்; உலகியலின் அடங்கலுக்கும் – வாழ்வியல் முழுமைக்கும்; தகத்தகாய – ஒளிமிகுந்த (சிறப்பு மிகுந்த என்னும் பொருளில் புதிய சொல்லாக்கத்தைக் கவிஞர்

தந்துள்ளார்); சாய்க்காமை – அழிக்காமை; நூற்கழகங்கள் – நூலகங்கள்; களைந்தோம் – நீக்கினோம்; தாபிப்போம் – நிலைநிறுத்துவோம்.

**இலக்கணக்குறிப்பு :** புதிது புதிது, சொல்லிச் சொல்லி – அடுக்குத்தொடர்கள்; செந்தமிழ் – பண்புத்தொகை; சலசல – இரட்டைக்கிளவி.

**பகுபத உறுப்பிலக்கணம் :** கழித்தோம் – கழி + த் + த் + ஓம். கழி – பகுதி; த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஓம் – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி; களைந்தோம் – களை + த் (ந்) + த் + ஓம். களை – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஓம் – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

**பிரித்தறிதல் :** வெளியுலகில் – வெளி + உலகில்; செந்தமிழ் – செம்மை + தமிழ்; ஊறறியும் – ஊர் + அறியும்; எவ்விடம் – எ + இடம்.



**ஆசிரியர் குறிப்பு :** பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர், 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் 29ஆம் நாள் புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி. பாரதியின்மேல் கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். இவர் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் ஆகிய சிறப்புப்பெயரால் வழங்கப்படுகிறார். குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன இவர்தம் படைப்புகளாம். பாரதிதாசன் பரம்பரை என்றொரு கவிஞர் பரம்பரையே அவர் காலத்தில் உருவானது. தமிழக அரசு, பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியுள்ளது; ஆண்டு தோறும் சிறந்த கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருது வழங்கி வருகிறது; திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்துச் சிறப்புச் சேர்த்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) குடும்ப விளக்கு ________ படைப்புகளுள் ஒன்று.

1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. சுரதா

ஆ) பாரதிதாசனார் ________ என அழைக்கப்படுகிறார்.

1. புரட்சிக்கவிஞர் 2. தேசியக்கவிஞர் 3. உவமைக்கவிஞர்


### ஆ) குறுவினாக்கள்

1. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன ?
2. பாரதிதாசனின் படைப்புகள் நான்கனை எழுதுக.
3. தமிழர் எதற்கு நாணிடவும் வேண்டும் ?

### இ) சிறுவினாக்கள்

1. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?
2. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை ?

# பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள்



தமிழ்த்திருநாடு சான்றோர் பலரை நாட்டிற்கு வழங்கி அணி செய்திருக்கிறது. மொழிக்காக வாழ்ந்தவர் பலர். நாட்டின் விடுதலைக்காக வீழ்ந்தவர் பலர். மண்டிக் கிடந்த மூடக்கருத்துகளைச் சிதைத்தவர் சிலரே. அவருள் தமிழ்நாடு தவம் செய்து பெற்றவர் ஒருவருண்டென்றால், அவர்தாம் பெரியார்.

தொண்டு செய்து பழுத்த பழம்
  தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
  மனக்குகையில் சிறுத்தை எழும்.

இப்பாடல் வரிகள் பெரியாரைப் பற்றிய பாவேந்தரின் படப்பிடிப்பு.

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள்; புலவராய், பாடினியாய், விறலியாய்த் திகழ்ந்து மாண்புடை மன்னரால் மதிக்கப் பெற்றார்கள். கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர். மறங்கொண்ட மன்னனின் பகையை மாற்றத் தூது சென்ற பெருமையையும் அக்காலத்துப் பெண்கள் பெற்றிருந்தார்கள். அக்காலச் சூழல் பிற்காலத்தே மாறியது. வந்தவர் கூறிய கருத்தையெல்லாம் இங்கு வாழ்ந்தவர் ஏற்றனர்; பெண்களை அடிமைப்படுத்தினர்; வீட்டிற்குள் முடக்கி வைத்தனர். எனவே, நாட்டு விடுதலைக்குப் போராடிய பெரியார், பெண்களின் சமூக விடுதலைக்கும் போராடினார்.

பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகை. ஒன்று, அடிப்படைத் தேவைகள்; பிறிதொன்று, அகற்றப்படவேண்டியவை. பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியன அடிப்படைத் தேவைகள். குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியன அகற்றப்படவேண்டியவை.

## பெண்கல்வி

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை, வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே. இது நாட்டு நடப்பை அறியவிடாமல் அவர்களின் அறிவை மறைக்கச் செய்வதாகும். 'நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய,

பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. அப்படி மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதனால் பயனொன்றும் விளையாது. பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்றவேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது' என்று பெரியார் உறுதியாக எடுத்துரைத்தார்.

"ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்கவேண்டும். நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை; இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்" என்றார் பெரியார்.

## பெண்ணுரிமை

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார். அதற்காக அவர், அவர்களை ஆயத்தப்படுத்தும் முறையே தனியானது. 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்று சிந்தித்தவர் பெரியார். அவர், 'பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும்' என்று வலியுறுத்தினார்.

## சொத்துரிமை

பெரியார் பெண்ணுரிமை மறுப்புக்கான காரணங்களை நன்கு ஆராய்ந்தார். பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது என்று உணர்ந்தார். அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டுமெனக் கூறினார்.

"பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவகையான அடிமைத்தனங்களும் ஒழிந்துபோகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும்" என்று பெரியார், தம் கட்டுரைகளில் எழுதியும் மேடைகளில் பேசியும் வந்தார். இன்று அச்சிந்தனை நடைமுறைக்கு வந்ததுள்ளது.

## அரசுப்பணி

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப்போலவே பெண்களும் அரசுப்பணியைப் பெறவேண்டும். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது, நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும். "பெண்களுக்கு எல்லா வகையான

உத்தியோகமும், கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறோம்'' என்று, பெரியார் அன்று சிந்தித்ததனைத் தமிழக அரசு இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றது.

### அகற்றப்பட வேண்டியவை

சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும் களைவதில் உறுதியான உள்ளம் படைத்தவராக இருந்தார் பெரியார். பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார். விடுதலைக்கு முன்னிருந்த பெருங்கொடுமைகளுள் குழந்தை மணமும் ஒன்று. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா? இது, சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு எனக்கூறி அதனை நீக்கப் பாடுபட்டார்.

### மணக்கொடை மறுப்பும் கைம்மை ஒழிப்பும்

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகப் பணம், செலவழிப்பதனைத் தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவிமூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிடவேண்டுமென்று துடிக்கின்றனர். "சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும். தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாறவேண்டும். "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்'' என்று பெரியார் நாப்பறை ஆர்த்தார். கணவனை இழந்தோர் மறுமணம் செய்துகொள்வதில் தீங்கில்லை என்றும் தெரிவித்தார்.

### ஒழுக்கம்

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்கவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது, அவர்தம் கருத்து.

பெரியார், சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூகமாற்றத்தை விரும்பியவர்; பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர்; பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால், தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ________ ஒன்று உண்டு.
2. பெரியார் சமூக ________ எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை ________ .

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர்

   1. திரு.வி.க. 2. பெரியார் 3. பாரதிதாசன்

2. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ________ இல்லாமை.

   1. வாக்குரிமை 2. பேச்சுரிமை 3. சொத்துரிமை

**3. விடைகளுக்கு ஏற்ற வினா எழுதுக.**

1. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
2. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.

**4. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

1. அனைத்து துறைகளிலும் ஆண்களைபோலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்கவேண்டும்.
2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.

**5. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.**

1. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்.
2. பெண்கள் பெறவேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

### ஆ) குறுவினாக்கள்

1. பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகளை எவ்வாறு பகுக்கலாம்?
2. ஒழுக்கம் குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?
2. பெண்ணுரிமையை விளக்குக.
3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

### ஈ) நெடுவினாக்கள்

1. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக.
2. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.

# மெல்ல மெல்ல மற!

– இலட்சுமி

அன்று ஞாயிற்றுக்கிழமை. புறநகர்ப் பகுதியில், பள்ளிக்கூடக் கட்டடத்தில் காலை பத்து மணிக்குமேல் ஆரம்பிக்கவிருந்த மருத்துவமுகாமுக்குக் கோகிலாவும் சென்றிருந்தாள்.

வீடு திரும்புவதற்குள் உச்சிப் பொழுதாகிவிட்டிருந்தது.

“டாக்டரம்மா என்ன சொன்னாங்க ? விழுந்தடிச்சுக்கொண்டு ஓடினாயே” உல்லாசமாகச் சிரித்தான் கணவன்.

“என்னைப் பரிசோதிச்சிட்டு, உடம்பிலே கோளாறு இல்லேன்னுட்டாங்க. சாதாரணமா பெண்களுக்கு இருபத்தஞ்சு வயசுல இருந்து ஐம்பத்தஞ்சு வயசுவரை, மார்பில புத்துநோய் வரலாம்னு சொன்னாங்க.” அதை ஆரம்பத்திலியே கவனிச்சா, குணப்படுத்திடலாமாம்.

“உனக்கு ஒண்ணுமில்லேன்னு தெரிஞ்சிட்டுதில்லியா” கேலி செய்தான்.

“சாதாரண வியாதியா அது. அப்படி அசட்டையா இருக்க. அ! அவங்ககூட ஒரு புத்தகம் குடுத்தாங்க. உங்க கணவர் புகை பிடிப்பாரான்னு கேட்டுட்டுக் குடுத்தாங்க. இதோ பாருங்க” புத்தகத்தை அவன்முன் நீட்டினாள் சாமர்த்தியமாக.

“புகை – உங்களுக்குப் பகை! பேஷ்! இதை நீயே படிச்சுக் காட்டு” கமலநாதன் முகத்தில் புன்னகை மறையத் துவங்கியது.

புகை பிடிக்கிறவங்களுக்கு நூத்துக்கு இருபத்தஞ்சு பேருக்காவது சுவாசப் பையில புத்துநோய் வருதாம். புகை பிடிப்பதால் இரத்தக்குழல் சுருங்கிப் போகும். மாரடைப்பு வருவதற்கு வழியாகிறதாம். அது மட்டுமில்லை. இத்தோடு சங்கிலித் தொடராக, சளி, சுரம், வாய் ஓயாத இருமல், எரிச்சல், கைகளில் நடுக்கம், தூக்கமின்மை, பசியின்மை... இப்படிப் பல தொல்லைகள் ஏற்படுகின்றனவாம்.”

“நிறுத்து! நிறுத்து! நான்தான் பில்டர் டிப் சிகரெட் பிடிக்கறேனே. அதிலே, புத்துநோய் கொடுக்கும் விஷப்பொருள் வடிகட்டப்பட்டுவிடுதே ?” சொல்லியபடி அருகிலிருந்த சிகரெட் பெட்டியைக் கையிலெடுத்தான், அவன்.

பில்டர் டிப் சிகரெட் குடிச்சா... அவங்களுக்கும் புத்துநோய் மெல்ல வரும்னு, டாக்டரும் சொன்னாங்க.”

“இதோ பாரு கோகிலா! இந்தப் பழக்கத்தை ஆனமட்டும் நிறுத்தப் பார்த்தேன். பாக்கைத் தின்னு மாத்தனும்னு முயற்சி செஞ்சேன். பாக்குத் தின்னா வாயிலே புத்துநோய் வரும்னாங்க. சரி! காப்பியைக் குடிச்சுப் பார்க்கலாம்னு பார்த்தேன். அது இருதயத்துக்குக்

கெடுதல்னாங்க. எதில இல்லே நோய்கள்? ஏதாவது வந்து தொலையட்டும் போ. ஏதாச்சும் நீ பேச்சு எடுத்தே... நான் மகா பொல்லாதவனா ஆயிடுவேன், ஆமாம்!" உரக்கக் கத்தினான் கமலநாதன்.

கல்யாணமான புதிதில் அவள் கணவனது புகைப்பழக்கத்தைக் கண்டிக்க ஆரம்பித்தாள். அப்போதும் தர்க்கம்தான். 'எத்தனையோ எடுத்துச் சொல்லியும், கெஞ்சியும் வழிக்கு வரவில்லையே' என்று வேதனையில் உழன்று கொண்டிருந்தாள், கோகிலா.

ஒருநாள் ஆபீசிலிருந்து அவசரமாகத் திரும்பி வந்தவன், "கோகிலா! உடனே குழந்தைகளை உன் சிநேகிதி வீட்ல விட்டுவிட்டு, வீட்டைப் பூட்டிகிட்டுப் புறப்படு" என்றான். அவன் முகம் கலவரமடைந்திருந்தது. "என்னங்க?" பதறினாள் அவள்.

"நர்மதா நர்சிங் ஹோமில், என் சிநேகிதன் இராமலிங்கத்தை, உடம்புக்கு ரொம்ப முடியாம சேத்திருக்காங்களாம்."

"புறப்படு... அவனுக்கு ஆச்சு போச்சுன்னு ஆயிட்டுதாம்" பரபரப்புடன் செயல்பட்டான்.

டாக்சி பிடித்து நர்சிங் ஹோமில் அவனது அறைக்குப் போனதும் பெருத்த அதிர்ச்சி அவர்களுக்கு.

"என்ன ஆச்சுங்க" கமலநாதன் மெதுவாகக் கேட்டான். ஜாடை செய்து அவர்களிருவரையும் அறைக்கு வெளியே அழைத்து வந்தாள், இராமலிங்கத்தின் மனைவி சியாமளா.

"எத்தனையோ சொல்லிப் போராடிப் பார்த்தேங்க, பிடிவாதமா புகை பிடிக்கற பழக்கம்... எப்பிடி கொண்டுவந்து விட்டுடுச்சு பாருங்க. ஒருநாளைக்கு மூணு டப்பா சிகரெட் ஓயாம பிடிப்பாரு. ஓயாத இருமல். அதை அசட்டையா விட்டாரு. வாய் ஓயாம இரும ஆரம்பிச்சதும் டாக்டர் கிட்ட காட்டி, 'எக்ஸ்ரே' அது இதுன்னு பணம் தண்ணியா செலவாச்சு; குணம்தான் இல்லே. கடைசியிலே சுவாசப்பையில புத்துநோய் வந்ததா கண்டுபிடிச்சாங்க. எப்படியாச்சும் குணப்படுத்திடுங்கன்னு டாக்டர் கால்ல விழுந்து கெஞ்சினேன். ஆனா... ஆரம்பத்திலியே சிகிச்சைக்கு வந்திருந்தா ஏதாவது செய்திருக்க முடியும். அதுவும் பூரண குணமாக்கிடுவோம்னு சொல்ல முடியாது. சுவாசப்பையிலிருந்து புத்துநோய்க் கட்டியை அறுத்து எடுத்த பிறகு ஒரு அஞ்சு அல்லது ஆறு வருஷம்தான் நோயாளி வாழமுடியும். இவர் நல்லாவே தமது ஆரோக்கியத்தைப் பாழடிச்சுட்டார்ன்னு சொல்லிட்டாரு. என் மனசு கேக்கலே... பல டாக்டர்கள், கோவில் குளம்னு அலையறேன். பலன்...? இப்போ நீங்க பார்க்கறீங்களே" சேலைத்தலைப்பை வாயில் அடைத்தபடி குமுறினாள், அவள்.

கமலநாதன் முகத்தில் முதல்முதலாகப் பயம் நிழலாடியது. அன்று இரவே, இராமலிங்கத்தின் கதை முடிந்துவிட்டது. அதில், அவன் நடுங்கிவிட்டான். நண்பனின் இறுதிச்சடங்கு முடிந்தபிறகு, சில நாள் கழித்துச் சியாமளாவைப் பார்த்து ஆறுதல் கூறச் சென்றனர், கோகிலாவும் கமலநாதனும். சுவரில் இராமலிங்கம் போட்டோவில் இருந்தபடி எட்டிப் பார்த்தான். அவன் மனைவியோ...? வெறும் கழுத்தும், வெறிச்சோடிய நெற்றியுமாக

“வாங்க! உட்காருங்க” என்று வரவேற்றாள். கமலநாதனுக்கு மனம், ‘திக்’ கென்று ஆகிவிட்டது. சோகமே உருவாக நின்ற அவளை ஒட்டியபடி நின்ற குழந்தைகள், “அப்பா எப்பம்மா வருவாரு” என்று கேட்டபோது அவனது அடிவயிற்றில் பகீரென்ற உணர்வு.

சிறிதுநேரம் ஆறுதல் சொல்லிவிட்டு, மனைவியுடன் வீடு திரும்பிய கமலநாதன், வழியில் மறக்காமல் நாலுமுழம் மல்லிகைப்பூவை வாங்கி வந்தான். வீடு வந்ததும், முதல் வேலையாக மனைவியிடம் பூவைக் கொடுத்தவன் கண்கள் கலங்கின.

“கோகிலா! பூவைத் தலைநிறைய வைத்துக்கொள், எப்பவும் பொட்டும் பூவுமா, சந்தோஷமா நீ இருக்கணும்” என்றான். கோகிலா திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்.

“இராமலிங்கத்தின் மரணம் அவன் குடும்பத்தை எப்படிப் பாதிச்சுட்டுதுன்னு என் மனசு ரொம்ப துடிச்சுப் போயிட்டுது கோகிலா! இனிமே, இந்த சிகரெட் பழக்கத்தை விட முயற்சி செய்றேன்! ஆனா, நான் ஒரு சராசரி மனிதன். கொஞ்சம் கொஞ்சமா விட முயற்சி செய்றேன். ஏன்னா, சியாமளா போல, உன்னையும் குழந்தைகளையும் நிறுத்திட்டு, நோயில கஷ்டப்பட்டுச் சாக நான் விரும்பல” தழுதழுத்தது, அவன் குரல். அவன் வாயைப் பொத்தினாள், அவள்.

“அப்படிச் சொல்லாதீங்க. இந்தப் பழக்கத்தைத் திடீரென விடறது சிரமம்தான். ஒப்புக்கறேன். ஆனா, மெல்ல மெல்ல மறக்க முயற்சி செய்யுங்க. நானும் உதவி செய்றேன்” என்றாள், உணர்ச்சி வசப்பட்டவளாக.

“நானும் ஒத்துழைக்கிறேன். சிகரெட் பிடிக்கணும்னு தோணிச்சா, தண்ணீரை மொண்டு கபகபன்னு வயிறு நிறையக் குடிச்சிடறேன்; தேகப்பயிற்சி செய்யறேன்; காப்பி சாப்பிட்டதும் சிகரெட் பிடிக்கணும்னு தோணுதா... வேண்டாம் டீ சாப்பிடறேன்; என் கைக்குச் சதா வேறு நல்ல வேலை கொடுக்கறேன். குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தரேன்; எழுதறேன்; அவங்களோட விளையாடறேன். ஓய்வு நேரத்தில் தோட்டம் கொத்தறேன்; புத்தகம் படிக்கிறேன். ஆபீஸில், மும்முரமா வேலையில் ஈடுபடறேன், போதுமா? எப்படியாவது இந்த சிகரெட் அசுரனின் பிடிகளிலேருந்து என்னை மெல்ல விடுவிச்சுடு கோகிலா!” கெஞ்சினான், அவன்.

“ஆண்டவா! அதிர்ச்சி உருவத்திலே எங்களுக்குத் துணை புரிஞ்சியாப்பா” மனத்தினுள் நன்றி கூறியபடி கோகிலா உட்பக்கம் சென்றாள். அவர்கள் இனித் தீவிரமாக முயற்சி செய்வார்கள். கமலநாதன் புகை மூட்டத்திலிருந்து விடுபட்டு, ஓர் ஆரோக்கியமான மனிதனாக, பூவும்பொட்டுமாக விளங்கும் கோகிலாவுடன் நெடுங்காலம் வாழ்வான். பேரன், பேத்திகள் எடுத்துப் பல்லாண்டு இன்பமாக வாழ்வான். இது உறுதி!

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. ‘மெல்ல மெல்ல மற’ என்னும் சிறுகதையின் மையக்கருத்தை மாறாமல் சுருக்கி எழுதுக.
2. கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதனை விளக்குக.

# சொல்

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். பதம், மொழி, கிளவி என்பன ஒரு பொருள்தரும் பல சொற்கள்.

பதம் – பகுபதம் ( பகுக்கவியலும் பதம் ); பகாப்பதம் ( பகுக்கவியலாப் பதம் )

மொழி – தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

கிளவி – இரட்டைக்கிளவி ( இரட்டைச்சொல் )

(எ–டு) 1. பூ, கை, தா, வா – இவை ஓரெழுத்துச் சொற்கள்.

2. மண், மாந்தர், நடந்தனர் – இவை இரண்டு முதலாகப் பல எழுத்துகள் தொடர்ந்த சொற்கள்.

## மூவகை மொழிகள்

மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

### 1. தனிமொழி

ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது, தனிமொழி.

(எ–டு) வா, கண், செய்தான்.

### 2. தொடர்மொழி

இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட சொற்கள் தொடர்ந்துவந்து பொருளை உணர்த்துவது தொடர்மொழி.

(எ–டு) 1. படம் பார்த்தான்.

2. பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருக்கின்றன.

### 3. பொதுமொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்துநின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, பொதுமொழி.

(எ–டு) அந்தமான்

'அந்தமான்' என்பது ஒரு தீவையும், அச்சொல்லே அந்த + மான் எனப் பிரிந்து நின்று, அந்த மான் ( விலங்கு ) என வேறுபொருளையும் தருகின்றது.

இதேபோல், பலகை, வைகை, தாமரை, வேங்கை முதலியன தனிமொழியாகவும் பொதுமொழியாகவும் வருவதை அறிக.

ஒருமொழி ஒருபொருள னவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. – நன்னூல், 260

## வினைச்சொல்

இராமன் வந்தான். கண்ணன் நடந்தான்.

இத்தொடர்களில் இராமன், கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள். அவையே எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான், நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும், நடப்பதும் ஆகிய செயல்களைக் குறிப்பதால், இவை வினைச்சொற்கள். இவையே பயனிலைகளாகவும் ( முடிக்கும் சொற்களாகவும் ) உள்ளன. இவ்வாறு, எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

## வினைமுற்று

அருளரசு வந்தான். வளவன் நடந்தான்.

இத்தொடர்களில் வந்தான், நடந்தான் என்னும் வினைச்சொற்களின் பொருள் முற்றுப்பெற்று வந்துள்ளன. இவ்வாறு, தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்றுகள் என்பர். இது முற்றுவினை எனவும் வழங்கப்படும்.

'வந்தான், நடந்தான்' என்னும் வினைமுற்றுகள் 'ஆன்' என்னும் விகுதி பெற்றுள்ளதால், உயர்திணையையும், ஆண்பாலையும், ஒருமை என்ற எண்ணையும், படர்க்கை இடத்தையும், உணர்த்துகின்றன. 'த்' என்ற இடைநிலை வந்துள்ளதால் ( நட + த் ( ந் ) + த் + ஆன்); (வா (வ) + த் (ந்) + த் + ஆன்) இஃது இறந்த காலத்தையும் உணர்த்துகிறது.

வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும்; முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும்; திணை, பால், எண், இடங்களைக் காட்டும். இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

### தெரிநிலை வினைமுற்று

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று.

(எ–டு) உழுதான்

| | | |
|---|---|---|
| செய்பவன் | – | உழவன் |
| கருவி | – | கலப்பை |
| நிலம் | – | வயல் |
| செயல் | – | உழுதல் |
| காலம் | – | இறந்தகாலம் |
| செய்பொருள் | – | நெல் |

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே. – நன்னூல், 320

### குறிப்பு வினைமுற்று

பொருள்முதல் ஆறனையும் அடிப்படையாகக்கொண்டு, முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவன் பொன்னன் | – | பொன்னை உடையவன் | – | பொருள் |
| அவன் விழுப்புரத்தான் | – | விழுப்புரத்தில் வாழ்பவன் | – | இடம் |
| அவன் சித்திரையான் | – | சித்திரையில் பிறந்தவன் | – | காலம் |
| அவன் கண்ணன் | – | கண்களை உடையவன் | – | சினை |
| அவன் நல்லன் | – | நல்ல இயல்புகளை உடையவன் | – | குணம் |
| அவன் உழவன் | – | உழுதலைச் செய்பவன் | – | தொழில் |

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே. – நன்னூல், 321

அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த 'பொன்னன்' என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

### எச்சம்

கயல்விழி படித்தாள். கோதை சென்றாள்.

இத்தொடர்களில் படித்தாள், சென்றாள் என்பன வினைமுற்றுகள்.

இவ்வினைமுற்றுகள் சில இடங்களில் 'ஆள்' என்னும் விகுதி குறைந்து படித்த, சென்ற எனவும், படித்து, சென்று எனவும் வரும். இச்சொற்கள் பொருளில் முற்றுப்பெறாத முழுமையடையாத வினைச்சொற்கள்; ஆதலால், எச்சம் எனப்படும்; அல்லது வினைமுற்றின் (ஆள்) விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும்.

### பெயரெச்சம்

படித்த கயல்விழி. சென்ற கோதை.

படித்த, சென்ற என்னும் முற்றுப்பெறாத எச்சவினைகள் கயல்விழி, கோதை எனப் பெயரைக்கொண்டு முடிந்ததால் அவை பெயரெச்சங்கள் எனப்படும். அஃதாவது, ஓர் எச்சவினை ( வந்த, நடந்த ) பெயரைக்கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும். இப்பெயரெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகாலப் பெயரெச்சம் – படித்த கயல்விழி, சென்ற கோதை
2. நிகழ்காலப் பெயரெச்சம் – படிக்கின்ற கயல்விழி, செல்கின்ற கோதை
3. எதிர்காலப் பெயரெச்சம் – படிக்கும் கயல்விழி, செல்லும் கோதை

இது தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

### தெரிநிலைப் பெயரெச்சம்

வந்த பையனைப் பார்த்துக் கண்ணன் நின்றான்.

இத்தொடரில் வந்த என்பது பையன் என்னும் பெயரைக்கொண்டு முடிவதால், பெயரெச்சம் எனப்படும். செய்த, செய்கின்ற, செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வாய்பாடுகள். இவை முக்காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டிச் செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும். இவை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

(எ–டு) உண்ட இளங்கோவன்.

| | | |
|---|---|---|
| செய்பவன் | – | இளங்கோவன் |
| கருவி | – | கலம் |
| நிலம் | – | வீடு |
| செயல் | – | உண்ணுதல் |
| காலம் | – | இறந்த காலம் |
| செய்பொருள் | – | சோறு |

உண்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறே பொருத்திக் காணலாம்.

| | | |
|---|---|---|
| உடன்பாடு | – | எதிர்மறை |
| (எ–டு) உண்ட இளங்கோவன் | – | உண்ணாத இளங்கோவன் |

### குறிப்புப் பெயரெச்சம்

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

(எ–டு) நல்ல பையன்

இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ செயலையோ உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிந்துள்ளது. இது காலத்தைக் ( இன்று நல்ல பையன், நேற்று நல்ல பையன், நாளை நல்ல பையன் ) குறிப்பால் உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| உடன்பாடு | – | எதிர்மறை |
| (எ–டு) நல்ல மாணவன் | – | தீய மாணவன் |

### வினையெச்சம்

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும்.

(எ–டு) படித்து வந்தான், பாடக் கேட்டான், ஓடிச் சென்றான், போய்ப் பார்த்தான்.

அஃதாவது, ஓர் எச்சவினை, வினையைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகால வினையெச்சம் – படித்து வந்தான், ஓடிச் சென்றான்.

2. நிகழ்கால வினையெச்சம் – படித்து வருகின்றான், ஓடிச் செல்கின்றான்.

3. எதிர்கால வினையெச்சம் – படித்து வருவான், ஓடிச் செல்வான்.

இவ்வினையெச்சமும் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும். பெயரெச்சத்தில் எச்சங்கள் மட்டுமே செய்த, செய்கின்ற, செய்யும் எனக் காலத்துக்கேற்ப மாறும்; பெயர்கள் மாறா. வினையெச்சத்தில் எச்சங்கள் மாறா. மேலே காட்டியதுபோல அவை முக்கால வினைமுற்றுகளையும் பெற்றுவரும்.

### தெரிநிலை வினையெச்சம்

படித்துத் தேறினான் படிக்கச் செல்கின்றான்

இத்தொடர்களில் படித்து, படிக்க என்னும் சொற்கள் எச்ச வினையாய் நின்று காலத்தைக் காட்டித் தேறினான், செல்கின்றான் ஆகிய வினைமுற்றுகளைக் கொண்டு பொருள் முடிவு பெறுகின்றன. இவ்வாறு காலத்தையும், செயலையும் உணர்த்தி வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை, தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

### குறிப்பு வினையெச்சம்

மெல்லப் பேசினான். கண்ணன் நோயின்றி வாழ்ந்தான்.

இவ்விரு தொடர்களிலும் உள்ள மெல்ல, இன்றி என்னும் எச்ச வினைச்சொற்கள் காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பினை உணர்த்தி நின்று, வினைமுற்றைக்கொண்டு முடிந்துள்ளன. ஆகையால், இவை குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

### முற்றெச்சம்

மைதிலி வந்தனள் பாடினள். முருகன் படித்தனன் தேறினன்.

இத்தொடர்களில், வந்தனள், படித்தனன் என்னும் வினைமுற்றுகள் வந்து, படித்து என்னும் வினையெச்சப் பொருள்களில் நின்று, வேறு வினைமுற்றுகளைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு ஒரு வினைமுற்றுச் சொல், எச்சப்பொருளில் வந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதே முற்றெச்சம் எனப்படும்.

## மொழித்திறன் பயிற்சி

### தொகைச்சொல்

கனிகளுள் எவற்றை முக்கனி எனக் குறிப்பிடுகிறோம் ?

மா, பலா, வாழை.

முக்கனி என்பது தொகைச்சொல் எனப்படும். தொகை என்னும் சொல்லுக்குத் தொகுத்தல் என்பது பொருள். சில தொகைச்சொற்களை விரித்துக் காண்போம்.

இருவினை – நல்வினை, தீவினை; தன்வினை, பிறவினை

இருதிணை – உயர்திணை, அஃறிணை; அகத்திணை, புறத்திணை.

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | – | இயல், இசை, நாடகம் |
| முப்பால் | – | அறம், பொருள், இன்பம். |
| மூவிடம் | – | தன்மை, முன்னிலை, படர்க்கை. |
| மூவேந்தர் | – | சேரர், சோழர், பாண்டியர். |
| நாற்றிசை | – | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. |
| நானிலம் | – | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். |
| ஐந்திணை | – | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. |
| ஐம்பால் | – | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால். |
| ஐம்புலன் | – | தொடுஉணர்வு, உண்ணல், உயிர்த்தல், காணல், கேட்டல். |
| ஐம்பொறி | – | மெய், வாய், மூக்கு, கண், செவி. |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ______________.

ஆ) தொழிலைக் குறிக்கும் சொல் ______________ .

இ) வினைமுற்று ______________, ______________ என இருவகைப்படும்.

ஈ) ஓர் எச்ச வினை ______________ கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.

**2. தொகைச்சொற்களை விரித்தெழுதுக.**

1. இருவினை 2. முத்தமிழ் 3. மூவேந்தர் 4. நானிலம் 5. ஐந்திணை

### ஆ) குறுவினாக்கள்

1. சொல் என்றால் என்ன ?
2. மொழியின் வகைகள் யாவை ?
3. வினைச்சொல் என்றால் என்ன ?
4. வினைமுற்றைக்கொண்டு எவ்வெவற்றை அறியலாம் ?
5. பெயரெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
6. வினையெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
7. முற்றெச்சம் என்றால் என்ன ? சான்று தருக.

### இ) சிறுவினாக்கள்

1. பொதுமொழி என்றால் என்ன ? சான்றுடன் விளக்குக.
2. தெரிநிலை வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.
3. குறிப்பு வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.
4. தெரிநிலைப் பெயரெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
5. குறிப்புப் பெயரெச்சம் என்றால் என்ன ? சான்று தருக.
6. குறிப்பு வினையெச்சம் என்றால் என்ன ? சான்று தருக.

செயல்திட்டம் : பாடநூலிலுள்ள தொகைச்சொற்களை எடுத்தெழுதி விரித்துக்காண்க.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'பெண்கல்வி' என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

அறிஞர் அண்ணாவின் அடுக்குமொழி நடையைப் படித்துச் சுவைக்க.

மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கின்றேன்.

நான்மாடக்கூடலில் நிற்கின்றேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக்கோட்டமாய்த் திகழ்ந்தது இம்மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன். பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகிடுகின்றீர்! பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனைப் பன்மடங்கு பெருக்கிப் பார் மகிழத் தருவதற்கே, சூல்கொண்டு உலவுவது மேகம்; அறிகிறோம். தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ! ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளிலுள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு – புள்ளிக் கலாப மயில் – கார்மேகம்.

இவ்வுரைப்பகுதியிலுள்ள அடுக்குமொழித்தொடர்களை எடுத்தெழுதுக.

### இ) எழுதுதல் திறன்

கீழுள்ள சொற்றொடர்களை முறைப்படுத்திப் பத்தியமைப்பில் எழுதுக.

1. களைப்பு மிகுதியால் தள்ளாடித் தள்ளாடி நடந்த அவர், சோர்வு மேலிடச் சுற்றும் முற்றும் பார்த்தார்.
2. முரசு மட்டும் வைக்கக்கூடிய அக்கட்டிலில், யாரோ ஒருவர் படுத்திருப்பதைக் கண்டதும் உறையிலிருந்த வாளை எடுத்து அவரை வெட்டுவதற்குச் சென்றான் சேரமான்.
3. புலவரின் உறக்கம் கலையாதவாறு மெதுவாக அவருக்குக் கவரி வீசிக்கொண்டு நின்றான் சேரமான்.

4. மோசிகீரனார் என்னும் புலவர் ஒருசமயம் சேரமான் இரும்பொறையைக் காண நெடுந்தொலைவிலிருந்து வந்திருந்தார்.

5. சிறிது நேரத்தில் சேரமானும் வீரர்களும் அக்கட்டிலை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

6. முரசுக்கட்டிலுக்கு மிக நெருக்கமாகச் சென்றதும், திகைப்படைந்த சேரமான், ஓங்கிய வாளைக் கீழே தாழ்த்தினான். வீரர்களிடம் மயில் தோகையால் செய்யப்பட்ட கவரியைக்கொண்டு வருமாறு பணித்தான்.

7. அருகில் ஓர் அழகிய கட்டில் இருப்பதைப் பார்த்தார். களைப்பின் காரணமாகக் கால்களை நீட்டிப் படுத்துவிட்டார்.

ஈ) கட்டுரை

சிக்கனமும் சிறுசேமிப்பும்

உ) கடிதம்

குடிநீர்வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம்.

## தமிழெண்களை அறிவோம்

51 முதல் 100 வரை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 51 ருக | 61 | 71 | 81 | 91 |
| 52 | 62 | 72 | 82 | 92 |
| 53 | 63 | 73 | 83 | 93 |
| 54 | 64 | 74 | 84 | 94 |
| 55 | 65 | 75 | 85 | 95 |
| 56 | 66 | 76 | 86 | 96 |
| 57 | 67 | 77 | 87 | 97 |
| 58 | 68 | 78 | 88 | 98 |
| 59 | 69 | 79 | 89 | 99 |
| 60 | 70 | 80 | 90 | 100 |

## வாழ்க்கைத்திறன்

### மறுத்தல் திறன்

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளிநேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

பெற்றோர் மாறனைப்பற்றி நினைப்பது சரியா?

நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக்கொள்ளவேண்டும்?

உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் புகைபிடித்தல் முதலான செயல்களில் ஈடுபட உங்கள் நண்பர்கள் உங்களை அழைக்கிறார்கள். அப்போது நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

அ) நண்பருடனான நட்பு நீடிக்கவேண்டும். எனவே, அவர்களின் பேச்சுக்கு உடன்படுவேன்.

ஆ) நீங்கள் செய்வது தவறு, இதனை அனைவரிடமும் வெளிப்படுத்தி விடுவேன் என்று கூறுவேன்.

இ) எனக்கு இதுபோன்ற செயல்களில் விருப்பம் கிடையாது என்று மென்மையாக மறுத்து விடுவேன்.

## மதிப்புக்கல்வி

### இரக்கம்

ஒருநாள், கொல்கத்தாவில் கனமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது, சாலையோரத்தில் கொட்டும் மழையில் மூதாட்டி ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அந்நிகழ்வைக் கண்ட பெண்மணி, அம்மூதாட்டியைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்தார். கவனிப்பாரற்றுச் சாலையில் திரிபவர்களையும் முதியோர்களையும் அரவணைத்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வதில் அப்பெண்மணி நாட்டம் கொண்டார். அனாதையாக இறப்பவர்களைப் புதைக்கும் பணியினையும் அப்பெண்மணி மேற்கொண்டார். அப்பணியினை மேற்கொள்ளும் இடத்தின் அருகில் கோவில் ஒன்று இருந்தது. அக்கோவிலைப் பராமரிப்பவர்களுக்கு அப்பெண்மணியின் செயல் பிடிக்காததால் அவரை, அங்கிருந்து வெளியேற்ற முடிவு செய்தனர். இதுகுறித்து அவரிடம் பேசுவதற்கு, அவர் இருப்பிடத்தை நோக்கி ஆவேசத்துடன் வந்தோர், அப்பெண்மணி செய்து கொண்டிருந்த செயலைக் கண்டு திகைத்து நின்றனர் . அப்பொழுது அப்பெண்மணி, தொழுநோயால் பாதிப்படைந்த ஒருவரின் புண்களைக் கழுவி மருந்து போட்டுக்கொண்டிருந்தார்.

தொட்டால் ஒட்டிக்கொள்ளும் என்று பயந்து அனைவரும் வெறுக்கக்கூடிய ஒரு நோயாளியை அவர் கவனித்துக் கொண்டமுறை, அவரை எதிர்த்துப் போராட வந்தவர்களை நாணமடையச் செய்தது. அவர்கள், அப்பெண்மணியை இருகரம் கூப்பி வணங்கினார்கள். தன்னலம் கருதாது பிறர்க்கு உதவுவதையே சிறந்த தொண்டாகக் கருதி வாழ்ந்த அப்பெண்மணிதான் அன்னை தெரேசா.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. Charity begins at home. | தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும். |
| 2. Covet all lose all. | பேராசை பெருநட்டம். |
| 3. Diamonds cut diamonds. | முள்ளை முள்ளால் எடு. |
| 4. East or west, home is the best. | எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது. |
| 5. Empty vessels make the greatest sound. | குறை குடம் கூத்தாடும். |

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்

### குகப் படலம்



**முன்கதைச் சுருக்கம் :**

அயோத்தி நாட்டு மன்னன் தசரதனுக்கு மக்கள் நால்வர். தசரதன், தன் மூத்த மகன் இராமனுக்கு முடிசூட்ட விழைந்தான். தசரதன் மனைவி கைகேயி; அவள் தோழி மந்தரை, இராமன் முடிசூடுவதனை விரும்பவில்லை. எனவே, கைகேயியின் மனத்தை மந்தரை வஞ்சக உரைகளால் மாற்றினாள். மனம் மாறிய கைகேயி, தசரதனிடம் தான்பெற்ற இரு வரங்களைப் பயன்படுத்தி, இராமன் காடு செல்லவும், தன்மகன் பரதன் நாடாளவும் வேண்டுமெனக் கூறினாள்.

மணிமுடி சூடப் புறப்பட்டு வந்த இராமனிடம் கைகேயி, "நீ பதினான்கு ஆண்டுகள் காடு செல்லவேண்டும். இது மன்னன் ஆணை" என்றாள். அதனை இராமன் பணிவுடன் ஏற்றான். தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் காட்டிற்குச் சென்றான். செல்லும் வழியில் கங்கைக்கரையை அடைந்தான். அங்கே அன்பே வடிவான வேட்டுவத் தலைவன் குகன், இராமனைச் சந்தித்தான்.

#### குகனின் வருகை

1. ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு
நாய கன்போர்க் குகன்எனும் நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்
காயும் வில்லினன் கல்திரள் தோளினான்.

**பொருள் :** போர்க்குணம் மிக்க குகனானவன் ஆயிரம் படகுகளுக்குத் தலைவன்; கங்கை யாற்றுத் தோணித்துறைக்குத் தொன்றுதொட்டு உரிமையுடையவன்; பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன்; மலைபோன்ற திரண்ட தோள்களை உடையவன்.

**சொற்பொருள் :** ஆயகாலை – அந்தநேரத்தில்; அம்பி – படகு; நாயகன் – தலைவன்; நாமம் – பெயர்; துறை – தோணித்துறை; தொன்மை – தொன்றுதொட்டு; கல் – மலை; திரள் – திரட்சி; காயும் வில்லினன் – பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன்.

**இலக்கணக்குறிப்பு :** போர்க்குகன் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; கல்திரள்தோள் – உவமைத்தொகை.

## குகனின் தோற்றம்

2. துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்தபேர்
அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான்,
நெடிய தானை நெருங்கலின் நீர்முகில்
இடியி னோடெழுந் தாலன்ன ஈட்டினான்.

பொருள் : குகன் துடியென்னும் பறை உடையவன்; வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்; தோல் செருப்பணிந்த பெருங்கால்களை உடையவன்; இருள் போன்ற கரிய நிறத்தையுடையவன்; கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தாற்போன்ற மிகுதியான படைபலம் உடையவன்.

சொற்பொருள் : துடி – பறை; அல் – இருள்.

இலக்கணக்குறிப்பு : நீர்முகில் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : ஈட்டினான் – ஈட்டு + இன் + ஆன். ஈட்டு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

## குகன் இராமனைக் காண வருதல்

3. சிருங்கி பேரம் எனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகருறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீன்உப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்.

பொருள் : அலைகளையுடைய கங்கைக்கரையின் பக்கத்திலுள்ள சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழும் தலைவன் குகன். இவன், முனிவர்தம் தவச்சாலையிலுள்ள வள்ளல் இராமனைக் காணத் தேனும்மீனும் கொண்டுசென்றான். (அரசன், குரு, தெய்வம் ஆகியோரைக் காணச் செல்லும்போது வெறுங்கையோடு செல்லலாகாது என்பது தமிழ்மரபு.)

சொற்பொருள் : சிருங்கிபேரம் – கங்கைக்கரையோர நகரம்; திரை – அலை; மருங்கு – பக்கம்; உபகாரத்தன் – பயன்கருதாது உதவுபவன்.

இலக்கணக்குறிப்பு : திரைக்கங்கை ( அலைகளை உடைய கங்கை ) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; இருந்தவள்ளல் – பெயரெச்சம்; வந்துஎய்தினான் – வினையெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : எய்தினான் – எய்து + இன் + ஆன்; எய்து – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; இருந்த – இரு + த் (ந்) + த் + அ; இரு – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

4. கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
ஆவான் யார்என அன்பின் இறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாய்அடியேன் என்றான்.

பொருள் : இராமன், குகனை அழைக்கும் முன்னர், இளையவனாகிய இலக்குவன் அவனை நெருங்கி, யார் நீ? என வினவினான். குகன், இராமனை அன்போடு வணங்கி, "தேவா, கங்கையாற்றில் நாவாய்களை இயக்குகின்றவனும் நாயினும் அடியவனாகிய வேட்டுவன் யான், தங்களின் திருவடிகளை வணங்க வந்துள்ளேன்" என்று கூறினான்.

சொற்பொருள் : கூவா முன்னர் – அழைக்கும் முன்னர்; குறுகி – நெருங்கி; இறைஞ்சி – வணங்கி; சேவிக்க – வணங்க; நாவாய் – படகு.

இலக்கணக்குறிப்பு : கூவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; குறுகி, சேவிக்க – வினையெச்சங்கள்; தேவா – விளி; கழல் – தானியாகுபெயர்; வந்தனென் – தன்மை ஒருமை வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம் : இறைஞ்சினான் – இறைஞ்சு + இன் + ஆன்; இறைஞ்சு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; வந்தனென் – வா (வ) + த் (ந்) + த் + அன் + என்; வா – பகுதி, வ – எனக் குறுகியது விகாரம்; த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

## குகனைக்குறித்து இராமனிடம் இலக்குவன் கூறியது

5. நிற்றி ஈண்டு என்றுபுக்கு நெடியவன் தொழுது தம்பி
கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை;குகன் ஒருவன் என்றான்.

பொருள் : இலக்குவன் இராமனைத் தொழுது, 'வெற்றி பொருந்திய தலைவனே! தூய உள்ளம் உடையவன்; தாயினும் சிறந்த அன்பினன்; கங்கை யாற்றில் செல்லும் நாவாய்களுக்குத் தலைவன்; குகன் என்னும் பெயரினன்; தன் உறவினருடன் நின்னைக் காண வந்துள்ளான்' என்றான்.

சொற்பொருள் : நெடியவன் – உயர்ந்தவனாகிய இராமன்; குறுகினன் – வந்துள்ளான்; நாவாய் – படகு; இறை – தலைவன்.

பகுபத உறுப்பிலக்கணம் : குறுகினன் – குறுகு + இன் + அன். குறுகு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

### இராமன் இலக்குவனிடம் குகனை அழைத்துவரப் பணித்தலும், வந்த குகன் பணிதலும்

6. அண்ணலும் விரும்பி என்பால் அழைத்திநீ அவனை என்றான்
பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவில் புக்கான்
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன் இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்.

பொருள் : இராமன் விருப்பத்துடன், "அன்னவனை என்னிடம் அழைத்து வருவாய்" என்றான். இலக்குவன் குகனை, 'வருக' என்றவுடன், குகன் விரைந்து வந்து இராமனைத் தன் கண்களால் கண்டு களித்தான்; இருள்போன்ற நீண்டமுடியுடைய தலை, மண்ணில் படியக் கீழே விழுந்து வணங்கினான். பின் எழுந்து, வாயைக் கையால் பொத்தி, உடலை வளைத்து அடக்கமாக நின்றான்.

சொற்பொருள் : பண்ணவன் – நற்குணங்கள் பல உடைய இலக்குவன்; பரிவு – இரக்கம்; குஞ்சி – தலைமுடி; மேனி – உடல்.

இலக்கணக்குறிப்பு : அழைத்தி (அழைப்பாய்) – முன்னிலை ஒருமை வினைமுற்று; வருக – வியங்கோள் வினைமுற்று; பணிந்து, வளைத்து, புதைத்து – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : புக்கான் – புகு (புக்கு) + ஆன். புகு – பகுதி, புகு – புக்கு எனப் பகுதி ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

### தேனும் மீனும் விருப்பத்துடன் கொண்டு வந்ததாகக் குகன் கூறுதல்

7. இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன், எல்லை நீத்த
அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்.

பொருள் : இராமன், 'இங்கே உட்கார்' எனச் சொன்னதும், இராமனின் பெருமை கருதிய குகன் உட்காரவில்லை, அளவில்லாத பேரன்பினனாகிய குகன், தேவரீர்க்கு நல்லுணவாக அமையும்படி "தேனையும் மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டுவந்துள்ளேன். இதனை ஏற்றுக்கொள்வது குறித்துத் தங்கள் கருத்து யாதோ" என்றான். இராமன் அருகிலிருந்த முனிவர்களை நோக்கி, மெல்லப் புன்முறுவல் பூத்துச் சொல்லத் தொடங்கினான்.

சொற்பொருள் : அருத்தியன் – அன்பு உடையவன்; மாதவர் – முனிவர்; முறுவல் – புன்னகை; விளம்பல் – கூறுதல்.

இலக்கணக்குறிப்பு : இருத்தி – முன்னிலை ஒருமை வினைமுற்று, தேனும் மீனும் – எண்ணும்மை; மாதவர் (மா + தவர்) – உரிச்சொற்றொடர்.

பகுபத உறுப்பிலக்கணம் : கொணர்ந்தேன் – கொணர் + த் (ந்) + த் + ஏன்.

கொணர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்றுவிகுதி.

## இராமன் குகனைப் பாராட்டல்

8. அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான்.

பொருள் : உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பரிவின் காரணமாகக் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைத்தற்கரியன; அமுதத்தைவிடச் சிறந்தன. இவை எத்தகையனவாய் இருப்பினும், அன்பு கலந்ததெனில் தூய்மையானவையே! எம் போன்றோர்க்கும் உரியன; ஆகையால் இனிமையான இவை, நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம்.

சொற்பொருள் : சீர்த்த – சிறந்த; பவித்திரம் – தூய்மையானது; இனிதின் – இனிமையானது; உண்டனெம் – உண்டோம் என்பதற்குச் சமமானது; தழீஇய – கலந்த.

இலக்கணக்குறிப்பு : அமைந்த காதல் – பெயரெச்சம்; சீர்த்த – ஒன்றன்பால் வினைமுற்று; தழீஇய (தழுவிய) – சொல்லிசை அளபெடை.

பகுபத உறுப்பிலக்கணம் : சீர்த்த – சீர் + த் + த் + அ. சீர் – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, அ – பலவின்பால் வினைமுற்று விகுதி; உண்டனெம் – உண் + ட் + அன் + எம். உண் – பகுதி, ட் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, எம் – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

## குகன் வேண்டுகோள்

9. கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்து வான்இப்
பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன தைய செய்குவென் அடிமை என்றான்.

பொருள் : கருமுகில் வண்ணனாகிய இராமன் கூறியதைக் கேட்ட குகன், 'இவ்வுலகு அனைத்திற்கும் செல்வம் போன்றவனே! தங்களை இத்தவக் கோலத்தில் பார்த்த என்னிரு கண்களை எடுக்க முடியாத நிலையில் உள்ள கள்வன் நான்; இம் மனத்துயரோடு என்னிருப்பிடம் செல்லத் துணியேன். ஐயனே, தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன்' என்றான்.

சொற்பொருள் : கார்குலாம் – மேகக்கூட்டம்; பார்குலாம் – உலகம் முழுதும்; இன்னல் – துன்பம்; ஈர்கிலா – எடுக்க இயலாத; தீர்கிலேன் – நீங்கமாட்டேன்; அடிமைசெய்குவென் – பணிசெய்வேன்.

இலக்கணக்குறிப்பு : கார்குலாம் ( காரது குலாம் ) – ஆறாம் வேற்றுமைத்தொகை; உணர்த்துவான் – வினையாலணையும் பெயர்; பார்த்தகண்ணை – பெயரெச்சம்; தீர்கிலேன், செய்குவென் – தன்மை ஒருமை வினைமுற்றுகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : உணர்த்துவான் – உணர்த்து + வ் + ஆன். உணர்த்து – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை. ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

### குகனைத் தன்னுடன் இருக்க இராமன் அனுமதியளித்தல்

10. கோதைவில் குரிசில் அன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப இருத்திஈண்டு எம்மொ டென்றான்.

பொருள் : கோதண்டம் என்னும் வில்லேந்திய, ஆடவரில் நல்லவனாகிய இராமபிரான், குகன் கூறிய கருத்தைக் கேட்டான். சீதையின் திருமுகத்தைப் பார்த்தும், தம்பி இலக்குவன் திருமுகத்தைப் பார்த்தும், 'இவன் நம்மிடத்து நீங்காத அன்பு உடையவன்' என்றுரைத்தான். அருள் நிறைந்த பார்வையுடைய இராமன் குகனை நோக்கி, 'எல்லாவற்றினும் இனிய நண்பனே! இவ்விடத்தில் எம்மோடு இருப்பாயாக!' என்றான்.

சொற்பொருள்: குரிசில் – தலைவன்; இருத்தி – இருப்பாயாக.

இலக்கணக்குறிப்பு : தீராக் காதலன் – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; மலர்ந்த கண்ணன் – பெயரெச்சம்; இனிய நண்ப – குறிப்புப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம் : கேட்டான் – கேள் (ட்) + ட் + ஆன். கேள் – பகுதி, ள் – ட் ஆனது விகாரம், ட் – இறந்தகால இடைநிலை, ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி, நோக்கி – நோக்கு + இ. நோக்கு – பகுதி, இ – வினையெச்சவிகுதி.

### குகன் கொண்டுவந்த படகில் மூவரும் புறப்படல்

11. சிந்தனை உணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லாம் அருளுதிர் விடைஎன்னா
இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா.

பொருள் : இராமனின் மனக்குறிப்பை அறிந்த குகன் மிகவிரைவாகச் சென்றான்; பெரியதோர் படகைக் கொண்டுவந்தான். தாமரைமலர்போன்ற கண்களை உடைய இராமன் அந்தணர்களிடம் விடைபெற்று, பிறைநிலவு போன்ற நெற்றியை உடைய சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் படகில் இனிதாக ஏறினான்.

சொற்பொருள் : நயனம் – கண்கள்; இந்து – நிலவு; நுதல் – நெற்றி.

இலக்கணக்குறிப்பு : நெடுநாவாய் – பண்புத்தொகை; தாமரை நயனம் – உவமைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம்: சென்றனன் – செல்(ன்) + ற் + அன் + அன். செல் – பகுதி, ல் – ன் ஆனது விகாரம், ற் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; தந்தனன் – தா(த) + த் (ந்) + த் + அன் + அன். தா – பகுதி, தா – த எனக் குறுகியது விகாரம், த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.



## குகன் படகைச் செலுத்துதல்

12. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார். *

பொருள் : விரைந்து படகினைச் செலுத்துமாறு குகனுக்கு இராமன் கட்டளையிட்டான். உயிரின் ஏவலுக்கு மெய் செயல்படுவதுபோலக் குகனும் படகினை விரைவாகச் செலுத்தினான். மடங்கிவிழும் அலைகளையுடைய கங்கையாற்றில் இளம் அன்னம் விரைந்து செல்வதனைப் போலப் படகு சென்றது. அவர்களின் பிரிவால் அனல்பட்ட மெழுகுபோல் துன்பமுற்று அந்தணர்கள் மனமுருகி நின்றார்கள்.

சொற்பொருள் : கடிது – விரைவாக; முடுகினன் – செலுத்தினன்; முரிதிரை – மடங்கிவிழும் அலை; இடர் – துன்பம்.


இலக்கணக்குறிப்பு : நனிகடிது – உரிச்சொற்றொடர்; நெடுநாவாய், நெடுநீர் – பண்புத்தொகைகள்

பகுபத உறுப்பிலக்கணம் : முடுகினன் – முடுகு + இன் + அன். முடுகு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி; நின்றார் – நில் (ன்) + ற் + ஆர். நில் – பகுதி; ல் – ன் ஆனது விகாரம்; ற் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : நெடுநாவாய் – நெடுமை + நாவாய்; நெடுநீர் – நெடுமை + நீர்.

## குகனும் உடன்வருவதாக நவின்றபோது இராமன் கூற்று.

13. அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ, இளவல்உன் இளையான்,இந்
நன்னுத லவள்நின்கேள், நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யது,நான்உன் தொழில்உரி மையின்உள்ளேன்.



பொருள் : குகன் கூறியதைக் கேட்ட குற்றமற்றவனாகிய இராமன், என் உயிர்போன்றவன் நீ; இலக்குவன் உன்தம்பி; சீதை உன் கொழுந்தி; நீர் சூழ்ந்த இந்நிலவுலகம் முழுதும் உன்னுடையது. நான் உனது ஆளுகைக்குரியவன்.

சொற்பொருள் : அமலன் – குற்றமற்றவன்; நுதல் – நெற்றி; இளவல் – தம்பி.

இலக்கணக்குறிப்பு : என்னுயிர் – ஆறாம் வேற்றுமைத்தொகை; நன்னுதல் – பண்புத்தொகை; நின்கேள் – நான்காம் வேற்றுமைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : நேர்வான் – நேர் + வ் + ஆன். நேர் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

14. துன்புள தெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுளதென உன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம். *

பொருள் : துன்பம் உண்டாயின் அதனையடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை. இப்பிரிவு இடைக்காலத்ததே; அதனை நினைத்து வருந்த வேண்டா. முன்னர், நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராய் இருந்தோம்; விரிந்த அன்பினால் இனி உன்னொடு ஐவரானோம்.

சொற்பொருள் : துன்பு – துன்பம்; உன்னேல் – நினைக்காதே.



ஆசிரியர் குறிப்பு : கம்பர் தேரழுந்தூரில் பிறந்தார். இவ்வூர், நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது. கம்பரின் தந்தையார் ஆதித்தன். கம்பர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர். இவரைத் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் ஆதரித்தார்.

கம்பரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

இவர் செய்ந்நன்றி மறவா இயல்பினர். தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் எனப் பாடிச் சிறப்பித்துள்ளார்.



கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகியன கம்பர் இயற்றிய நூல்கள். சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோர் இவர் காலத்துப் புலவராவர்.

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன், கல்வியிற் பெரியர் கம்பர் என்னும் தொடர்களால் கம்பரின் பெருமையை அறியலாம். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்' என்று பாரதியார் கம்பரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

நூற்குறிப்பு : இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார். கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயணம் எனப்பட்டது. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.

கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது. காண்டம் என்பது பெரும்பிரிவையும் படலம் என்பது அதன் உட்பிரிவையும் குறிக்கும். தமிழிலக்கியத்தில் காப்பிய வளர்ச்சி கம்பர் படைப்பினால் உச்சநிலையை அடைந்தது. இந்நூலின் சிறப்புக் கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் தமிழுக்குக் 'கதி' என்பர் பெரியோர்.

கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது; பொருள், அணி, நடை ஆகியவற்றால் சிறந்தது; கற்போர்க்கு இனிமை தரும் கவிச்சுவை நிறைந்தது; சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப் பண்பாடும் மிளிர்ந்துள்ளது.

கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாம் காண்டமாகும். இதில் பதின்மூன்று படலங்கள் உள்ளன. நம் பாடப்பகுதியான குகப் படலம் ஏழாம் படலமாகும். இப்பகுதியைக் கங்கைப் படலம் எனவும் கூறுவர்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.**

அ) இரு – த (ன்/ந்) வ – ளலைக் (ல்/ள்) கா – வந் (ன/ண) தெய்தினா–. (ண்/ன்)

ஆ) இடரு – (ர/ற) ம – யோரும் (றை/ரை) எ– யுறு (ரி/றி) மெ – கானார். (ழு/ளு)

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) கம்பராமாயணம் ______________ காண்டங்களைக் கொண்ட நூல்.

1. ஐந்து  2. ஆறு  3. மூன்று

ஆ) சரசுவதி அந்தாதி ______________ இயற்றிய நூல்களுள் ஒன்று.

1. கம்பர்  2. ஒட்டக்கூத்தர்  3. புகழேந்தி

இ) கம்பரைப் புரந்தவர் ______________ .

1. ஔவையார்  2. புகழேந்தி  3. சடையப்ப வள்ளல்

**3. உவமையை விளக்கிப் பொருளோடு பொருத்தி எழுதுக.**

“மட அன்னக் கதியது செல”

**4. சீர்மோனையை எடுத்தெழுதுக.**

“இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா”

**5. அகரமுதலி பார்த்துப் பொருள் எழுதுக.**

இறை, நாவாய்.

**6. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | இடர் | – | நிலவு |
| 2. | நாவாய் | – | துன்பம் |
| 3. | இறை | – | படகு |
| 4. | இந்து | – | தலைவன் |

### ஆ) குறுவினாக்கள்

1. கம்பர் – சிறு குறிப்பு எழுதுக.
2. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்குக் கொண்டு சென்றான் ?
3. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ?

4. குகனின் வேண்டுகோள் யாது ?

5. "அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்" – யார், யாரிடம் கூறியது ?

### இ) சிறுவினாக்கள்

1. கம்பராமாயணம் – சிறு குறிப்பு எழுதுக.
2. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன ?
3. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

### ஈ) நெடுவினாக்கள்

1. குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.
2. கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.



## அறிந்துகொள்க

**தொல்காப்பிய நெறி நின்றவர் கம்பர்**

வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே. – தொல். எச்சவியல், 5

வடசொல்லைப் பயன்படுத்தும்போது வடஎழுத்தை நீக்கித் தமிழ்ப்படுத்தவேண்டும் என்னும் தொல்காப்பிய இலக்கணப்படி ராமன், ஹனுமன், லஷ்மணன், விபீஷணன் என்னும் பெயர்களை இராமன், அனுமன், இலக்குவன், வீடணன் என நெறிப்படுத்திய தமிழ் வேந்தர் கம்பரே! வடமொழி எழுத்தையும் பிறமொழிக் கலப்பையும் தடுத்தவர் இவரே.

உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும்; மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடலாம்.

– கால்டுவெல்

# அண்ணல் அம்பேத்கர்

நிகரென்று கொட்டு முரசே – இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே – பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்



விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் முரசு கொட்டிய பாரதியின் வரிகள் இவை. அயலவர் தளையிலிருந்து விடுபடுவது மட்டுமே விடுதலையன்று; சமூகக் கேடுகளிலிருந்தும் விடுபடுவதே உண்மையான விடுதலை. நாட்டின் வடக்கும் தெற்கும் அத்தகு சிந்தனையாளர்களைக் கொடையாகத் தந்திருக்கின்றன.

மராட்டிய கொங்கண் மாவட்டத்தில் தபோலி என்னும் சிற்றூர் உள்ளது. பனிவிலகாத காலைப் பொழுதில் வயல்வெளிகளுக்கிடையே ஒற்றையடிப் பாதையில் சிறுவன் தாவிக் குதித்து ஓடினான். பின்னாலேயே அவன் தந்தையும் ஓடினார். அன்றுதான் அந்தச் சிறுவனுக்குப் பள்ளியின் முதல்நாள். அதனாலேயே தந்தை மகன் இருவருள்ளும் அளவு கடந்த மகிழ்ச்சி வெள்ளம்.

பள்ளியில் சேர்ந்த அடுத்த நொடியிலேயே அச்சிறுவனின் மகிழ்ச்சி வகுப்பறையைவிட்டு வெளியேறியது. ஏனெனில், அவனது வருகையைப் பள்ளியில் எவரும் விரும்பவில்லை; தன்னொத்த மாணவர்களுடன் சரிசமமாக உட்காரவும் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கு, அவனுடைய சாதியைக் காரணமாக்கினர் கல்நெஞ்சினர். அதனையும் மீறி, அந்தச் சிறுவன் தொடர்ந்து படிக்க விரும்பினான். பள்ளிக்கு வரும்போது புத்தகப்பையுடன் உட்காருவதற்கு ஒரு கோணிப்பையையும் கொண்டு வரும்படி ஆணையிட்டது பள்ளி நிருவாகம்.

அதே சிறுவன் ஐம்பது ஆண்டுகளுக்குப்பின் 1947இல் மிடுக்கான உடை அணிந்த மாமனிதராக வந்து நின்றார். இந்தியாவே அவரின் வருகைக்காக நாடாளுமன்றத்தில் கூடிநின்று எதிர்பார்த்தது. அவர்தாம் அண்ணல் அம்பேத்கர். அவர் கைகளில், இந்தியாவின் எதிர்காலத்தையே உருவாக்கும் இந்திய அரசியல் சாசனச் சட்டவரைவு இருந்தது.

அவர் சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி; சமத்துவக் காவலர்; உலகச் சாதனையாளர் வரிசையில் முன்னிற்பவர்; அரசியல் சட்டமேதை; தேசியத் தலைவராகவும் திகழ்ந்தவர்; பல்வேறு மத இன மொழி சமூகப் பழக்கவழக்கங்கள் கொண்ட இந்நாட்டை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒருங்கிணைத்தவர்.

### பிறப்பு

மராட்டிய மாநிலத்தில் கொங்கண் மாவட்டத்தில் உள்ள அம்பவாடே என்னும் சிற்றூரில் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் பதினான்காம் நாள் அம்பேத்கர் பிறந்தார். அவர்தம் தந்தையார் இராம்ஜி சக்பால், தாயார் பீமாபாய். செல்வம் நிறைந்த குடும்பத்தில் பதினான்காவது பிள்ளையாகப் பிறந்தார் அவர்.

அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி. மகாபாரதப் பீமனைப்போலவே தன்மகனும் எவருமே அசைக்க முடியாத வீரனாக வருங்காலத்தில் வரவேண்டும் என்ற எண்ணத்தில் பீம் எனப் பெயர் சூட்டினார் தந்தை இராம்ஜி சக்பால்.

### கல்விக் கடல்

ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமன்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.

சாதி மதங்களைப் பாரோம் – உயர்
சென்மம் இத்தேசத்தில் எய்தினர் ஆயின்
வேதியர் ஆயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே

என்னும் உயரிய நோக்குடன் செயல்பட்டவர் பீமாராவின் ஆசிரியர் அம்பேத்கர். காலத்தினால் செய்த இவ்வுதவியை ஞாலத்தினும் பெரிதெனக் கருதினார் பீமாராவ். அவ்வாசிரியர் பெயரையே தம்பெயராகக் கொண்டார்.

அம்பேத்கர் 1908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் தம்முடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்; பின்னர், பரோடா மன்னர் பொருளுதவியுடன் 1912இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்; அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1915இல் முதுகலைப் பட்டமும் 1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்; பின்னர், மும்பையில் சிறிதுகாலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்; மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

அம்பேத்கர் இந்தியா திரும்பியபின் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்; கட்டணமின்றி ஏழைகளுக்கு வழக்காடி நீதியைப் பெற்றுத் தந்தார்.

அவர் அரசியல், சட்டம், சமூகம், பொருளாதாரம், தத்துவம், வரலாறு, வாணிகம், கல்வி, சமயம் என அனைத்துத் துறைகளிலும் நிகரற்ற அறிஞராகத் திகழ்ந்தார்; ஒரு நாளில் பதினெட்டு மணி நேரத்தைக் கல்வி கற்பதற்காகவே செலவழித்தார்;

நூலகத்தில் காலையில் முதல் ஆளாக நுழைவார்; மாலையில் இறுதி ஆளாக வெளியேறுவார். இத்துணைச் சிறப்பிற்கும் அவர் கற்ற கல்வியே காரணமாயிற்று.

### முதல் உரிமைப்போர்

மூடநம்பிக்கைகளும் தீயபழக்கங்களும் சமுதாயத்தை அரித்துக் கொண்டிருந்தபோது, சமுதாயத்தைச் சமப்படுத்துவதற்குச் சிந்தனையாளர் பலர் பெரிதும் போராட வேண்டியிருந்தது. மனித உரிமைக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். அவ்வகையில் தந்தை பெரியார் 1924ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கத்தில் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலயநுழைவு முயற்சியும், 1927ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இருபதாம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டமும் மனிதஉரிமைக்காக முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள் எனலாம்.

### விடுதலை உணர்வும் வட்டமேசை மாநாடும்

'இங்கிலாந்து சொல்வதற்கெல்லாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு; இந்தநிலை எப்போதோ மாறிவிட்டது; இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்ற வேண்டும்' என ஆங்கிலேயரிடம் அச்சமின்றி ஆணித்தரமாகக் கூறினார்; முழுமையான விடுதலையைக் கண்டிப்பாக வழங்கவேண்டும்; அதற்கு முன்னர்த் தன்னாட்சித் தகுதியை இந்தியாவிற்கு வழங்க வேண்டும் எனவும் அம்பேத்கர் முன்மொழிந்தார்.

வட்டமேசை மாநாடு 1930ஆம் ஆண்டு நடைபெற்றது. அம்மாநாட்டில் அண்ணல் அம்பேத்கர் கலந்துகொண்டார். அம்மாநாட்டில் "அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்" என்று, தனது கருத்தைத் தொடங்கினார். மாற்றார் ஆதிக்கத்தை நீக்கி, மக்களால் ஆளப்படும் மக்களாட்சியையே நாங்கள் விரும்புகிறோம்; வெறும் எஜமான மாற்றத்தை நாங்கள் விரும்பவில்லை; எங்கள் கைகளில் அரசியல் அதிகாரம் வந்தாலொழிய, எங்கள் குறைகள் நீங்கா என மொழிந்தார். ஒடுக்கப்பட்டோரின் இவ்வுரிமைக்குரல் வட்டமேசை மாநாட்டின் வழியே உலகஅரங்கில் எதிரொலித்தது.

### சட்ட மாமேதை

விடுதலைக்குப் பிறகு இந்திய அமைச்சரவையில் அண்ணல் அம்பேத்கரையும் இடம்பெறச் செய்யவேண்டுமென்று நேரு பெரிதும் விரும்பினார்; அம்பேத்கரும் அதற்கு உடன்பட்டார்; சட்டஅமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுக்க எழுவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. பலரும் செயல்படாமல் விலகினர். இறுதியில் அம்பேத்கர் ஒருவரே அந்த ஒப்பற்ற பணியைச் செய்து முடித்தார். 1950ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்தாறாம் நாள், இந்தியா முழுமையான குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.

### கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்

அறியாமைதான் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை அம்பேத்கர் நன்குணர்ந்தார். எனவே, "ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம்.

உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்" என்றார். மேலும், 'கற்பித்தல், அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல்வேண்டும்; விருப்புவெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழ்தல்வேண்டும். மாணவனுக்குள் தகவல்களைத் திணிப்பதாகக் கல்வி இருத்தல் கூடாது; அஃது, அவனது ஊக்கத்தைத் தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக் கொணர்வதாக இருத்தல்வேண்டும்' என்றும் கற்றல், கற்பித்தலின் உயர்ந்த குறிக்கோள்பற்றி அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுவார்.

அவர், 1946ஆம் ஆண்டு, மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார். மும்பையில், அவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவுவளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

### பொருளாதார வல்லுநர்

அம்பேத்கர் மேலைநாடுகளில் கல்வி பயின்றபோது புகழ்வாய்ந்த பேராசிரியர் பலருடன் நட்புக் கொண்டிருந்தார். இவர் எழுதிய 'இந்தியாவின் தேசியப் பங்குவீதம்' என்னும் நூலைப் பொருளாதாரத் துறையின் சிறந்த நூலாகக் கருதிப் பொருளியல் வல்லுநர்களும் பேராசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள். பொருளியலில் பெரும்புலமை பெற்று விளங்கியதால், பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களை அணுகியும் நுணுகியும் ஆராய்ந்து பார்க்க அவரால் இயன்றது; தொழில்துறையில் பொருளாதார வளர்ச்சிபெறப் புதுப்புதுக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

### இந்திய வரலாற்றின் புதிய பக்கங்கள்

புதியன சிந்திப்பதும் படைப்பதுமே புத்துலகம் சமைக்கும் சிற்பிகளின் நோக்கம். இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் அம்பேத்கர். சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. குறிப்பிட்ட சில சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூகவாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை என்று அவர் கருதினார்.

சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்றார் அம்பேத்கர். 'இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்குச் சாதி என்பது, நன்மை தராது; இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கின்றது; அது மக்களிடையே ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்துவிட்டது. இதனை அவர்கள் உணரும்படி செய்துவிட்டால் போதும்; அதுவே எனக்கு நிறைவு தரும்' என்றார் அம்பேத்கர்.

### அண்ணலாரின் இலட்சியச் சமூகம்

அண்ணல் அம்பேத்கர் சிறந்த இலட்சியவாதி. அவர், "ஓர் இலட்சிய சமூகம் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றார்.

"சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம்; சுதந்தரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை; உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் உரிமை அது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும்வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்" என்று, சனநாயகத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தார் அம்பேத்கர்.

சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம்; எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ, அங்கே மனிதப் பண்பு மறைந்துவிடுவதை அவர் அனைவருக்கும் உணர்த்தினார்.

### பெரியோர் போற்றிய பெருந்தகை

அம்பேத்கர் ஓர் அறிவுச் சுரங்கம். இவர், அறியாமைக்கு எதிராக ஆற்றிய மகத்தான பணி சான்றோர் நெஞ்சில் நிலைக்கச் செய்தது. "அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர்; பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி, அப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் நாம் காணமுடியாது" என்று பெரியார் புகழாரம் சூட்டினார்.

"பகுத்தறிவுத் துறையில் அவருக்கு இணை அவரே. ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்" என்று அம்பேத்கரை நேரு புகழ்ந்துரைத்தார். "அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர்; மிகவும் ஆர்வத்துடனும் விரைந்தும் தன்னந் தனியனாகச் செயல்பட்டவர். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர்" என்று இராசேந்திர பிரசாத் பாராட்டியுள்ளார். நாட்டிற்காக அயராது உழைத்த அண்ணல் அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் ஆறாம்நாள் புகழுடம்பு எய்தினார்.

இந்திய அரசு, பாரத ரத்னா (இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு 1990ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

அண்ணல் அம்பேத்கர், இந்திய நாட்டின் ஒளிமிகுந்த எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்ட இலட்சிய மனிதர். தாம் கண்ட இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர். அவர், உயரிய ஆளுமைத் திறனைக் கொண்டவர்; கூர்த்த அறிவுவன்மை உடையவர்; மனித உரிமைக்காக உழைத்தவர். சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து அவர். கல்வி அறிவின்றி நாடு முன்னேற முடியாது என்று உரைத்தவர். அவர், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.



இருபெருந் தலைவர்கள் இந்தியாவில் இருந்தார்கள்.

ஒருவர் பெரியார்; மற்றொருவர் அம்பேத்கர்.

வடக்கே இருந்து அம்பேத்கரும் தெற்கேயிருந்து பெரியாரும் இடைவிடாது உழைத்ததனால் சாதி என்னும் பாறை உடைந்து சுக்கு நூறானது.



## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) மும்பையில் அம்பேத்கர் சிறிதுகாலம் ____________ பேராசிரியராகப் பணியாற்றினார்.

1. வாணிகவியல் 2. அறிவியல் 3. பொருளியல்

ஆ) அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ____________

1. பத்மஸ்ரீ 2. பாரத ரத்னா 3. பத்மவிபூஷண்

**2. ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.

ஆ) வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.

**3. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

அ) ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்.

ஆ) ஏழைகளுக்கு பொருள்பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.

### ஆ) குறுவினாக்கள்

1. அம்பேத்கர் எங்கு எப்போது பிறந்தார்?
2. அம்பேத்கரின் பெற்றோர் யாவர்?
3. அம்பேத்கருக்குப் பீம் எனப் பெயர் வைக்கக் காரணம் என்ன?
4. பீமாராவ், தம் பெயரை அம்பேத்கர் என மாற்றிக்கொள்ளக் காரணம் யாது?
5. அம்பேத்கர் குறித்து நேரு புகழ்ந்து கூறியது யாது?

### இ) சிறுவினாக்கள்

1. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?
2. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

### ஈ) நெடுவினாக்கள்

1. அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.
2. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?


# அன்றாட வாழ்வில் சட்டம்

திருவெண்ணெய் நல்லூரில் திரளான மக்கள் கூட்டம்; பெரிய வீட்டுத் திருமணம் அது.

அழகிய மணப்பந்தல். மணமேடையில் மணமக்கள்.

மங்கல இசை ஒலித்தது. மணமகன் மணமகள் கழுத்தில் மங்கல நாண் அணிவிக்க முனைந்தார். அப்போது 'நிறுத்து' என்றது. ஒரு குரல் கம்பீரமாக....

குரல் வந்த திசையில் திரும்பினர் மக்கள்; அங்கு முதிய அந்தணர் ஒருவர்.



ஏன் ? ஏன் ? எங்கும் எழுந்தது கூச்சல்.

இவன் என் அடிமை ! அடிமையா ? மனிதனுக்கு மனிதன் அடிமையா ? இஃது அடுக்காது. ஆதாரம் கேட்டான் மணமகன். 'இதோ உன் பாட்டன் எழுதித் தந்த ஓலை. வா நீதிமன்றம்' என்றார். எழுந்தனர் யாவரும். அவர்கள் நீதிபதிகள் முன் கூடினார்கள். நீதிபதிகள் சான்றுகளைக் கேட்டார்கள்; ஆட்சியில், ஆவணத்தில், அயலவர் சாட்சியில் ஒன்று தருக என்றார்கள்.

இதோ, இவன் பாட்டன் எழுதித் தந்த பழவோலை என்றார் அம்முதியவர். நீதிபதிகள் அதனை மூலவோலை கொண்டுசோதித்தார்கள். 'அடிமைதான்' எனத் தீர்ப்பளித்தார்கள்.

பழந்தமிழ் நாட்டில் வழக்குகள் கையாளப்பட்ட முறையை இந்நிகழ்வு தெரிவிக்கிறது. இன்றைய சாட்சிச் சட்டம் அன்றே எப்படிக் கையாளப்பட்டது என்பதற்கு இந்நிகழ்வு சான்றாக அமைகிறது.

## சட்டவரையறை

மனிதன் சேர்ந்து வாழத் தலைப்பட்டபொழுதுதான் மனித சமுதாயத்திற்கிடையே அறவியல் சிந்தனைகள் தோன்றின. பழக்க வழக்கங்களினால் பல சட்டவியல் கூறுகளும் தோற்றம் பெற்றன. சட்டம் என்பதற்குச் செம்மை என்பது பொருள். செம்மை என்னும் சொல் நடுவுநிலை என்னும் பொருளிலும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது.

## வள்ளுவர்கூறும் தண்டனைச்சட்டம்

அரசன், கொலைத்தொழில் புரியும் கொடியவர்களுக்கு மரணதண்டனை அளித்தல் குற்றமன்று. அது, பயிருடன் வளர்ந்த களைகளை நீக்குதல் போன்றதாகும் என்கிறார் வள்ளுவர்.

கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். – குறள், 550

தண்டனை வழங்குவது பற்றிக் கூறிய வள்ளுவரே அச்சட்டங்கள் மனிதநேய அடிப்படையில் நெகிழ்வுத்தன்மை உடையனவாகவும் அமைதல்வேண்டும் என்கிறார்.

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். – குறள், 562

### அரசியல் அமைப்புச் சட்டம்

சட்டங்கள் பலவகைப்படும். உலக நாடுகளிடையேயுள்ள தொடர்புகளை ஒழுங்கு படுத்தும் சட்டத்தை அனைத்து நாட்டுச் சட்டம் என்கிறோம். நம் நாட்டின் முதன்மையான வாழ்வியல் அடிப்படைச் சட்டத்தை அரசியல் அமைப்புச் சட்டம் என்கின்றோம். நாட்டின் நாடாளுமன்றமும் மாநிலச் சட்டமன்றங்களும் அரசுத் துறைகளின் அலுவலகங்களும் இதன் அடிப்படையில்தான் இயங்குகின்றன. நாட்டில் உள்ள அனைத்துவகைச் சட்டங்களுக்கும் அடிப்படையானது, அரசியல் அமைப்புச் சட்டமே. மக்களின் வாழ்வியல் அடிப்படை உரிமைகளும் இச்சட்டத்தின் வாயிலாகத்தான் காக்கப்படுகின்றன.

### சமயச் சார்புச் சட்டங்கள்

இந்தியா சமயச் சார்பற்ற நாடு; எனினும், மக்கள் தாம் பின்பற்றும் சமயங்களுக்கு ஏற்ப வாழ உரிமையுடையவர் ஆவர். இந்தியாவில் அவரவர் பின்பற்றிய சமயத்திற்கேற்ற சட்டங்களும் உள்ளன. இந்துச் சமயத்தைச் சார்ந்தோருக்கு இந்துச் சட்டமும் இசுலாமியர்களுக்கான இசுலாமியர் சட்டமும், கிறித்தவர்களுக்கான சட்டமும் உள்ளன. பௌத்தர்களுக்கும் சமணர்களுக்கும் தனியான மதச் சட்டங்களென எவையுமில்லை. இந்துச்சமயச் சட்டங்களே அவர்களுக்கும் பொருந்தும்.

### மாநிலச் சட்டங்கள்

பொதுச் சட்டங்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எனத் தனித்தனிச் சட்டங்களும் உள்ளன. அவை அந்தந்த மாநிலங்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், சூழ்நிலைகளுக்கேற்ப அமைந்துள்ளன. மாநிலச் சட்டமன்றங்களே அச்சட்டங்களை இயற்றுகின்றன. அவை, அந்தந்த மாநிலத்திற்கு மட்டுமே பொருந்தும். தமிழ்நாட்டில் வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், உள்ளாட்சித் துறைச் சட்டம் முதலியன மாநிலத் தனிச் சட்டங்களுக்குச் சான்றாகும்.

### குற்றம் என்றால் என்ன ?

சட்டப்படி தண்டிக்கத்தக்க செயலையே குற்றமென்கிறோம். அது நடைமுறை ஒழுங்கிற்கு மாறானதும் எதிரானதும் ஆகும். குற்றங்கள் இரு வகைப்படும். ஒன்று, சட்டம் செய்யக்கூடாது என்று வலியுறுத்திச் சொன்னதைச் செய்தல்; மற்றொன்று, சட்டம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதைச் செய்யாமல் இருத்தல். சான்றாக, மாவட்ட நகராட்சிச் சட்டப்படி ஊர்ப் பொதுவிடத்தில் பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிக்கும்வகையில் எவரும் குப்பைகளைக் கொட்டக்கூடாது. இதனை மீறி ஒருவர் அச் செயலைச் செய்தால்,

அது சட்டப்படி குற்றமாகிறது. இது செய்யக்கூடாது என்பதை மீறிச் செய்வதால் ஏற்படும் குற்றமாகும். ஒருவர் நகராட்சி எல்லைக்குள் வீடுகட்ட விரும்பினால் முன்கூட்டியே அனுமதி பெறவேண்டும் என்பதே சட்டம். அவ்வாறு அனுமதி பெறத் தவறினால், அது குற்றமாகும். முறையாக அனுமதி பெற்று, வீடுகட்டி, அதனை நகராட்சிக்குத் தெரிவித்து, அதற்குரிய வரியையும் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு தெரிவிக்காமல் விடுதலும் வரி செலுத்தாமல் இருப்பதும் குற்றமாகும். இது, செய்யவேண்டும் என்பதைச் செய்யாமல் விடுவதால் வரும் குற்றமாகும்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். – குறள், 466

என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

### போக்குவரத்துச் சட்டங்கள்

சில இடங்களுக்குப் போகவும் வரவும் எனத் தனித்தனிப் பாதைகள் உள்ளன. அவற்றை உரிய அறிவிப்புப் பலகைகள் வாயிலாக அறிந்து முறையாக நடந்து கொள்ளுதல் வேண்டும். சிவப்பு விளக்கு எரிந்தால், உடனே வண்டியை நிறுத்துதல் வேண்டும்; பச்சைவிளக்கு எரியும்போது புறப்படுதல் வேண்டும். சாலைகளில் மஞ்சள் கோடுகள் போட்டுப் பேருந்துகள், மகிழுந்துகள், இரண்டு மற்றும் மூன்று சக்கர ஊர்திகள் செல்வதற்கான வழிகள் பிரித்துக் காட்டப்பட்டு இருப்பதனைக் காணலாம். குறித்த பாதைகளில் குறிப்பிட்ட வேகத்தில் சென்றால், துன்பம் எதுவும் நேரிடாது. இத்தகைய சாலைவிதிகளை மீறிச் செயல்படும்போது, அது குற்றமாகக் கருதப்படுகிறது.

### மாணாக்கர் வன்கொடுமைத் தடைச்சட்டம்

கல்வி நிறுவனங்களில் மாணாக்கர் சேர்ந்த புதிதில் மூத்த மாணாக்கருடன் கலந்து பழகத் தயங்குவர். இத்தயக்கத்தைப் போக்க மூத்த மாணாக்கர் வலிய வந்து புதியவர்களுடன் பேசிச் சிரித்து விளையாடுவது உண்டு. இப்பழக்கம் மேனாட்டுக் கல்வி நிறுவனங்களில் தொடங்கி, நம் கல்வி நிறுவனங்களுக்கும் வந்துள்ளது. அறிமுகத்துக்கு உதவ வேண்டிய பண்பு, அளவுக்கு மீறிப் போய்விட்டது. இதனால், சில இடங்களில் வன்கொடுமை நிகழ்கிறது. அதாவது அடித்தல், உதைத்தல் முதலியன நிகழ்கின்றன. படிப்புக்கு மூத்த மாணாக்கரின் வழிகாட்டுதல் தேவைதான். எனினும், அதனைத் தவறாகப் பயன்படுத்தாமல் மாணாக்கர் என்னும் பெயருக்கேற்ப மாண்புடையோராகத் திகழ்வது நன்று.

### குழந்தைத்தொழிலாளர் தடைச்சட்டம்

பெற்றோர் தம் வறுமையைப் போக்க, குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். குறைந்த ஊதியத்தில் அதிக உழைப்பைப் பெற விரும்பும் முதலாளிகள் இவர்களின் உழைப்பைச் சுரண்டுகிறார்கள். அந்நிலையை மாற்றவே குழந்தைத்தொழிலாளர் தடைச்சட்டங்கள் இருக்கின்றன. பொதுமக்கள், அரசு, தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இந்நிலையை அறவே போக்கிவிடலாம்.

### நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள்

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மக்களுக்குப் பல்வேறு வகைகளில் சேவைகளை வழங்குகின்றன. சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருள்களில் எத்தகைய குறைபாடுகள் இருந்தாலும், மாநில அல்லது மாவட்டக் குறைதீர் மன்றங்களையோ நுகர்வோர் பாதுகாப்புக் குழுவையோ அணுகித் தீர்வு காணலாம். இதற்கெனத் தனி நீதிமன்றங்கள் உள்ளன. நுகர்வோர் உரிமைகளைக் காக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் பல உள்ளன. பொது இடங்களில் புகைபிடித்தல், புகையிலை போட்டுத் துப்புதல் முதலிய பல தீமைகளைத் தருகின்ற நிகழ்வுகளைத் தடுக்க, இப்போது சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

### கையூட்டு

மக்களுக்குத் தொண்டாற்றும் பணியில் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ஆட்சியாளருக்குத் துணைபுரிவது அவர்களின் கடமையாகும். அவர்கள், தம் கடமையை ஆற்ற அரசிடமிருந்து ஊதியம் பெறுகிறார்கள். ஆயினும், மனச்சாட்சியைத் துறந்து அலுவலர் சிலர் செயல்படுவதும், கையூட்டுப் பெறுவதும் ஆங்காங்கே நிகழ்கின்றன. ஒருவருக்குக் கையூட்டுக் கொடுப்பதும் குற்றம்; அதனைப் பெறுவதும் குற்றம் என்பதே நமது சட்டம்.

### தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசியல் சாசனத்தின் 19 (1)ஆவது பிரிவின்படி குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முழுமையான பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு; மேலும், அதற்குரிய தகவல்களைப் பெறவும் முழு உரிமை உண்டு. காரணம், நமது நாடு சனநாயக நடைமுறையில் இயங்கும் அமைப்பாகும். சனநாயகத்தில் மக்கள்தான் எசமானர்கள். தங்கள்மீது எத்தகைய நிருவாகம் நடத்தப்படுகிறது என்பதனை அறியவும் தாங்கள் செலுத்திய வரிப்பணம் எந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது என்பதனைத் தெரிந்துகொள்ளவும் முழு உரிமை உள்ளது. இதனைத்தான் அரசியல் சாசனம் வலியுறுத்துகிறது. இதை முன்னிறுத்தித்தான் தகவல் அறியும் உரிமைச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியக் குடிமக்கள் தனியாகவோ ஓர் அமைப்பின் மூலமாகவோ தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6இன்படி தகவல் பெறலாம். தகவல் பெறுவதற்கெனத் தனி விண்ணப்பம் இல்லை. உரிய அலுவலகத்திலுள்ள பொதுத்தகவல் அலுவலரிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒரே விண்ணப்பத்தில் எத்தனை தகவல்களை வேண்டுமானாலும் பெறலாம். மாநில, மைய அரசு சார்ந்த அதிகார அமைப்பிடமிருந்து தகவல் பெறுவதற்குப் பத்து உரூபாயை விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பத்துடன் கட்டணத்தொகை பத்து உரூபாயைப் பொதுத்தகவல் அலுவலரிடம் நேரில் செலுத்தலாம். அல்லது, உரூபா பத்துக்கான நீதிமன்றக் கட்டண வில்லையை விண்ணப்பத்தில் ஒட்டலாம்.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவராக இருந்தால், தகவல் பெறுவதற்கு எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

## பொதுமக்கள் ஒத்துழைப்பு

குற்றம் நடந்தால் உடனே காவலருக்குத் தெரிவிப்பதும், குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவி செய்வதும் பொதுமக்களின் கடமையாகும். அமைதியைப் பாதுகாப்பதிலும் குற்ற ஆய்வு செய்வதிலும் காவலருக்கு நம்மாலான உதவிகளைச் செய்தல் வேண்டும். சமுதாய வளர்ச்சிக்கு அயராத உழைப்பு மட்டும் காரணமன்று; மக்கள் கடைப்பிடிக்கும் சட்ட ஒழுங்கும் காரணமாகும். 'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்' என்று திருக்குறள் கூறுவதனை எண்ணிப் பார்க்கவேண்டும். சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்க்கை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும்.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. சட்ட வகைகள் குறித்துக் கட்டுரை எழுதுக.
2. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.
3. குறிப்பு எழுதுக.

அ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்

ஆ) தகவல் அறியும் உரிமைச் சட்டம்

### கலைச்சொற்களை அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| International Law | – | அனைத்து நாட்டுச் சட்டம் |
| Constitutional Law | – | அரசியல் அமைப்புச் சட்டம் |
| Supreme court | – | உச்சநீதி மன்றம் |
| High Courts | – | உயர்நீதி மன்றங்கள் |
| Writs | – | சட்ட ஆவணங்கள் |
| Substantive Laws | – | உரிமைச் சட்டங்கள் |
| Procedureal Laws | – | செயற்பாட்டு முறைச்சட்டங்கள் |
| Indian penal code | – | இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பு |
| Criminal Procedure code | – | குற்றவியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு |
| Civil Procedure code | – | உரிமையியல் செயற்பாட்டுமுறைத் தொகுப்பு |
| Indian Evidence Act | – | இந்தியச் சான்றுச் சட்டம் |
| Transfer of Property Act | – | சொத்துமாற்றுச் சட்டம் |
| Indian Succesion Act | – | இந்திய வாரிசுரிமைச் சட்டம் |
| Court fee stamp | – | நீதிமன்றக் கட்டண வில்லை |

# பொது

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள் சொல்லப்படுவதால், இது பொது என அழைக்கப்படுகிறது.

## 1. வெளிப்படை, குறிப்பு

1. உலகிலேயே பண்பாட்டில் தமிழ்நாடுதான் தலைசிறந்து விளங்குகின்றது.
2. பூப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது.

இவ்விரு தொடர்களையும் படித்துப் பாருங்கள். இரு தொடர்களிலும் தமிழ்நாடு என்னும் சொல் வந்துள்ளதைக் கவனியுங்கள்.

முதல் தொடரில் வந்துள்ள தமிழ்நாடு என்னும் சொல் வெளிப்படையாக இடத்தைக் குறித்து வந்துள்ளது.

இரண்டாம் தொடரில், தமிழ்நாடு என்பது ஆகுபெயராய் நின்று குறிப்பால் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களைக் குறிக்கிறது.

இவ்வாறு, வெளிப்படையாகத் தன்பொருளை உணர்த்தும் சொல் வெளிப்படை எனவும், ஒரு தொடர் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பொருளைத் தருவது குறிப்பு எனவும் கூறுவர்.

## 2. குறிப்புச்சொற்கள்

ஒன்றொழி பொதுச்சொல், விகாரச்சொல், தகுதிவழக்குச்சொல், ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்புச் சொல், முதற்குறிப்புச் சொல், தொகைக்குறிப்புச் சொல் போன்றவை குறிப்பால் பொருள் தரும் சொற்களாம்.

### ஒன்றொழி பொதுச்சொல்

உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டிலும் பொதுவான சொற்கள் உண்டு. ஒரு சொல், தொடரில் முன்னும் பின்னும் வரும் சொற்களின் தொடர்பாலும், குறிப்பாலும் ஒரு பாலை நீக்கி, மற்றொருபாலைச் சுட்டும். அதற்கு, ஒன்றொழி பொதுச்சொல் என்பது பெயர்.

**உயர்திணையில்,**

(எ–டு) 1. வீட்டின்முன் ஐவர் கோலமிட்டனர்.

2. நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்.

முதல் தொடரில் வந்துள்ள ஐவர் என்னும் பொதுச்சொல் கோலமிட்டனர் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கிப் பெண்பாலை உணர்த்தி நின்றது. இரண்டாம் தொடரிலுள்ள

ஐவர் என்னும் பொதுச் சொல், போர்க்களம் என்னும் சொல்லின் குறிப்பால் பெண்பாலை விடுத்து, ஆண்பாலை மட்டும் உணர்த்தி நின்றது.

அஃறிணையில்,

(எ–டு) 1. இம்மாடு வயலில் உழுகிறது. 2. இம்மாடு பால் கறக்கிறது.

முதல் தொடரில் வந்துள்ள 'மாடு' என்னும் பொதுச் சொல் உழுகிறது என்னும் வினைக்குறிப்பால் காளைமாட்டையும், இரண்டாவது தொடரில் வரும் 'மாடு' என்னும் பொதுச்சொல் கறக்கிறது என்னும் வினைக்குறிப்பால், பசுமாட்டையும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு, ஒரு பொதுச்சொல் முன்பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது ஒன்றொழி பொதுச்சொல் எனப்படும்.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை. – நன்னூல், 269

### 3. இனங்குறித்தல்

கதிர்வேல் வெற்றிலை தின்றான்.

இத்தொடர், கதிர்வேல் வெற்றிலை மட்டுமா தின்றான். வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு முதலானவற்றையும் சேர்த்துத் தின்றான் எனப் பொருள்படுகிறது.

இவ்வாறு ஒருசொல், தன்பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும்.

ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே. – நன்னூல், 359

### 4. அடுக்குத்தொடர்

அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்குமுறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

(எ–டு)

| | | | |
|---|---|---|---|
| 1. | அன்றே அன்றே | – | அசைநிலை |
| 2. | போ போ | – | விரைவு |
| 3. | எறி எறி | – | சினம் |
| 4. | வருக வருக | – | மகிழ்ச்சி |
| 5. | தீ தீ தீ | – | அச்சம் |
| 6. | நொந்தேன் நொந்தேன் | – | துன்பம் |
| 7. | கோடி கோடி கோடி கோடியே | – | இசை நிறை |

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்று நான் கெல்லை முறை அடுக்கும். – நன்னூல், 395

## 5. இரட்டைக்கிளவி

இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டித்தே வரும்; பிரித்தால் பொருள் தராது; இதனை இரட்டைக்கிளவி என்பர். (கிளவி – சொல்) இரட்டைக் கிளவி – இரண்டு சொல்.

(எ–டு) 1. பாவை, படபடவெனப் பேசினாள்.

2. கலா, கலகலவெனச் சிரித்தாள்.

இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா – நன்னூல், 396

### அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடு

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. சொற்கள் தனித்தனியே நிற்கும். | 1. சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும். |
| 2. பிரித்தால் பொருள் தரும். | 2. பிரித்தால் பொருள் தராது. |
| 3. இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும். | 3. இரட்டித்தே வரும். |
| 4. விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி | 4. இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும். |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) இளவழகன் வந்தான். இது ________ தொடர்.

1. குறிப்பு 2. வெளிப்படை 3. எதுவுமில்லை.

ஆ) ‘மாடு’ என்னும் சொல் ________ ஆகும்.

1. உயர்திணைப் பொதுப் பெயர் 2. அஃறிணைப் பொதுப் பெயர் 3. விரவுப்பெயர்

இ) மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ________ குறிக்கும்.

1. பசு 2. காளை 3. கன்று

**2. பொருத்துக.**

1. வெளிப்படைச் சொற்கள் – சோறு உண்டான்.
2. குறிப்புச் சொல் – கல், மண்.
3. இனங்குறித்தல் – மாடு பால் கறந்தது.

### ஆ) குறுவினாக்கள்

1. வெளிப்படை என்றால் என்ன? சான்று தருக.
2. குறிப்பு என்பதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'தீண்டாமை மனித நேயமற்ற செயல்' என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

**பத்தியைப் படித்து அதன் பொருள் நயம் உணர்க.**

மாவீரன் அலெக்சாண்டரைப் பார்க்க வந்த அயல்நாட்டு விருந்தினர் ஒருவர், "பேரரசே! உங்கள் நகரிலுள்ள தோட்டங்களில் அருஞ்செயலாற்றிய வீரர்களின் சிலைகளை வைத்திருக்கிறீர்கள். தங்களின் சிலையை மட்டும் ஏன் வைக்கவில்லை?" என்று கேட்டார்.

அதற்கு அலெக்சாண்டர், "என்னுடைய உருவச் சிலையை நான் இங்கு வைத்தால் எதிர்காலத்தில் என் பெயர் மறைந்துவிடும். இது யாருடைய சிலை என்று என் சிலையைப் பார்த்துக் கேட்பார்கள். அதைவிட என் சிலை வைக்கப்படாதிருந்தால், "இவ்வளவு சிலைகள் இருக்கும்போது அலெக்சாண்டரின் சிலை மட்டும் ஏன் இல்லை? என்று கேட்கட்டும், அதைத்தான் நான் விரும்புகிறேன்," என்றார்.

இதுபோன்ற பொருள் நயமிக்க சொற்களைச் சிறுகுழுவில் கலந்துரையாடி மகிழ்க.

### இ) எழுதுதல் திறன்

**சிறுகதையை முடிக்கும் திறன்**

கதை, கவிதை, கட்டுரை, கடிதம் முதலானவை, எழுதுதல் திறனில் உயர்நிலைத் திறன்களாகும். மொழிப்பாடம் கற்ற ஒவ்வொருவரிடமும் இத்திறன்கள் அமைந்திருந்தல் வேண்டும். இப்பகுதியில் சிறுகதை ஒன்றின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, முழுமைபெற்ற ஒரு சிறுகதையை உருவாக்குதல் வேண்டும். சிறுகதையின் முடிவு உங்கள் எண்ணத்திற்கேற்ப எப்படி வேண்டுமானாலும் அமையலாம். சிறுகதைக்கேற்ற பொருத்தமான தலைப்பு ஒன்றையும் தருக.

பயிற்சி : கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையின் தொடக்கத்தைக்கொண்டு கதையை முழுமையாக எழுதுக. கதைக்குத் தலைப்பு ஒன்று தருக.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தங்கள் கூடுகளைவிட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலைவேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது. அப்போது ..............

### ஈ) கட்டுரை : சாலைவிதிகள்

### உ) கடிதம் : பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

### ஊ) விவாதித்தல் திறன்

'தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொதுமக்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது' என்பது குறித்து வகுப்பில் பேசுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.

(எ–டு) நான் மழையில் நனைவது பிடிக்கும்.

எனக்கு ( நான் + கு = எனக்கு ) மழையில் நனைவது பிடிக்கும்.

1. அண்ணன், தம்பி வீடு சென்றார்.
2. மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்க.
3. நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
4. வேல்விழி திருக்குறள் படித்தாள்.

### ஆ) இளமைப்பெயர்களைப் பொருத்துக.

1. ஆடு – கன்று
2. மான் – பிள்ளை
3. கீரி – குட்டி
4. சிங்கம் – குஞ்சு
5. கோழி – குருளை

### இ) நிறுத்தக்குறி இடுக.

சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்

### ஈ) பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
3. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
4. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
5. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.

## தமிழெண்களை அறிவோம்

பயிற்சி : 101 முதல் 150வரை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 101 கoக | 111 | 121 | 131 | 141 |
| 102 | 112 | 122 | 132 | 142 |
| 103 | 113 | 123 | 133 | 143 |
| 104 | 114 | 124 | 134 | 144 |
| 105 | 115 | 125 | 135 | 145 |
| 106 | 116 | 126 | 136 | 146 |
| 107 | 117 | 127 | 137 | 147 |
| 108 | 118 | 128 | 138 | 148 |
| 109 | 119 | 129 | 139 | 149 |
| 110 | 120 | 130 | 140 | 150 |

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

அன்பரசி, பள்ளிக்குச் செல்லும் வழியில் அந்தக் காட்சியை நாள்தோறும் காணத் தவறுவதில்லை. கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் உட்கார்ந்திருப்பார்.

அவருடைய கைகள் இரண்டும், கூடைமுடைதலில் விரைவாகச் சுழன்றுகொண்டிருக்கும். எப்படி இவரால் இவ்வளவு விரைவாகச் செயல்படமுடிகிறது என்று அன்பரசி வியப்படைவாள்.

ஒருநாள், தன் இரு கண்களையும் கட்டிக்கொண்ட அன்பரசி, வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின்மீது மோதிக்கொண்டாள். அப்போதுதான், அவர்கள் எத்தகைய துன்பத்தை அடைகிறார்கள் என்று எண்ணிப்பார்த்து மனம் வருந்தினாள்.

மாற்றுத் திறனாளரிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் ?

அன்பரசியைப்போன்று நீங்களும் சிறிதுநேரம் கண்ணைக்கட்டிக்கொண்டு, உங்கள் வீட்டினுள்ளே ஏதாவது ஒருபொருளைத் தேடி எடுங்கள்.

இப்பொழுது மாற்றுத்திறனாளரின் நிலையை எண்ணிச் சிந்தனை செய்யுங்கள்.

## படிவங்களை நிரப்புதல்

அஞ்சலகம், வங்கி, கல்வி நிறுவன விண்ணப்பங்கள் மற்றும் பேருந்து, தொடர்வண்டி ஆகியவற்றில் இருக்கை / படுக்கை முன்பதிவு செய்தல் முதலியவற்றில் படிவங்களை நிரப்புதல் தவிர்க்க இயலா. அவற்றை நிரப்ப நாம் அறிந்து கொள்ளுவது அவசியம்.

### வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம் நிரப்புதல் :

தேதி / Date ____________

____________ செலுத்தும் கிளை/Depositing Branch

Common Pay in Slip for Depositing, Loans, IB Credit Card, Taxes etc.

Type of account (Pl ✓) SB / CA / OD / OCC / RD / Term Dep / Loans / Taxes / Credit Card / Others

____________ (குறிப்பிடவும் / specify)

A/c No. / Credit Card No. [ ]

Account Name Mr./Ms./Messrs ____________

____________

ரூபாய் Rs. in words ____________

____________ மட்டும்/only.

(ரொக்கம்/காசோலை by Cash/Cheque) ரூ. Rs. ____ பை. Ps. ____

காசாளர்/ஒசாஉ Cashier/SWO ____________ அதிகாரி / Officer ____________

PLEASE GIVE DETAILS OF CASH / CHEQUES DEPOSITED OVERLEAF

Service Tax Registration No. AAAC11607GST006 PAN No. AAAC11607G

தேதி / Date ____________

Common Pay in Slip for Deposits, Loans, IB Credit Card, Taxes etc.

Please use separate slips for Cash / Cheques on IB / Cheques on Other Banks Local / Other Banks Outstation

Deposited at ____________ கிளை / Branch

SB / CA / OD / OCC / RD / Term Dep / Loans / Taxes / Credit Card / Others ____

A/c No. / Credit Card No. [ ]

A/c Maintained with ____________ Branch

For the credit of Mr./Ms./Messrs ____________

Rs. in words ____________

____________ மட்டும்/only by Cash / Cheque ரூ. Rs. ____ பை. Ps. ____

வங்கி முத்திரை பதிக்குமிடம் AFFIX BANK SEAL HERE

For Cash deposits of Rs. 10 Lakhs & above please furnish details of transaction including source of cash overleaf for RBI reporting

Signature of Remitter ____________

Name ____________

Address ____________

Phone No. ____________

PAN of Remitter ____________

* (Mandatory of Rs. 50000 and above)

Journal No. ____________

Queue No. ____________

காசாளர்/ஒசாஉ Cashier/SWO ____________ அதிகாரி / Officer ____________

Service Tax Registration No. AAAC11607GST005

PAN No. AAAC11607G

## மதிப்புக்கல்வி

### ஈகை

தமிழ்த்திரைப்பட உலகின் வழிகாட்டியாகவும் பாதுகாவலராகவும் திகழ்ந்தவர் ஏ.வி. மெய்யப்பர். அவர் இயற்கையெய்தியதும், அவர் வழக்கமாகப் பயன்படுத்திய பொருள்கள் எல்லாவற்றையும் பாதுகாப்பாக எடுத்து வைத்தனர். அத்தகைய பொருள்களில் இன்றியமையாத ஒன்று ஒலிப்பதிவு நாடாக் கருவி.

அவர், தமக்கு விருப்பமான பாடல்களை அதில் கேட்பது வழக்கமாம். அவருடைய துணைவியார், அவ்வொலிப்பதிவுக் கருவியைத் தேடியபோது, அதனைக் காணவில்லை; எல்லாரையும் கேட்டுப் பார்த்தார்; வீட்டில் தேடாத இடமில்லை. ஆனாலும் கிடைக்கவில்லை.

சில நாளுக்குப் பிறகு, அலுவலகத்திலிருந்த ஒருவரைக் கேட்டபோது, அவர் கூறிய பதில் அவ்வம்மையாரைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

ஏ.வி.எம். அவர்கள், இயற்கை எய்துவதற்கு நான்கு நாளுக்குமுன் செய்தித்தாளில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தார். யாராவது ஓர் ஒலிப்பதிவுக்கருவியை நன்கொடையாகக் கொடுத்து உதவினால், அதில் பாடங்களைப் போட்டுப் படித்துத் தேர்வு எழுத உதவியாக இருக்கும் என்று விழிமாற்றுத்திறனாளிப் பெண்ணொருத்தி விளம்பரப்படுத்தியிருந்தாள்.

அதனைப் படித்த ஏ.வி.எம். தம் ஒலிப்பதிவுக் கருவியை எடுத்து, அதனை எப்படி இயக்குவது எனத் தாமே ஒலிப்பதிவுநாடாவில் பேசிப் பதிவு செய்தார். அதனை, அந்தப் பெண்ணுக்கு உடனே அனுப்பிவைத்தார்.

தம் வாழ்நாள் இறுதிவரை ஏ.வி.எம். அவர்கள் கருணை உள்ளத்தோடு இருந்துள்ளார் என்பதை இதன்வாயிலாக அறியமுடிகிறது.

நம் வாழ்நாளில் இயன்றவரை இயலாதோருக்கு, இல்லாதோர்க்கு, மாற்றுத் திறனாளியர்க்கு உதவுவதே சிறந்த உதவி.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. Money makes many things | பணம் பத்தும் செய்யும். |
| 2. Eagles don't catch flies. | புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. |
| 3. Old is gold. | காலம் பொன் போன்றது. |
| 4. Prevention is better than cure. | வருமுன் காப்பதே சிறந்தது. |
| 5. Slow and steady wins the race. | முயற்சி திருவினையாக்கும். |

## நற்றிணை

( தோழி, தலைமகனிடம் கூறியது. )

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே.

– மிளைகிழான் நல்வேட்டனார்

**பொருள் :** உழவர், நெற்கதிர்களை அறுவடை செய்த பின்னர், அகன்ற அழகிய வயலை மறுபடியும் பயிர்செய்ய உழுதனர்; பனையோலைப் பெட்டியில் விதை கொண்டுசென்று ஈரமுள்ள அந்நிலத்தில் விதைத்தனர். பின்னர், அவர்கள் அங்குள்ள நீர்நிலைகளில் பல்வகை மீன்களைப் பிடித்து அப்பெட்டியில் கொண்டு வருகின்ற புதுவருவாயினை உடைய மருத நிலத்தலைவனே!

அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும், யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் அவ்வரசர் முன்னிலையில் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று. அஃது, அவரவர்தம் முன்வினைப் பயனே. தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வமெனச் சான்றோர் கூறுவர்.

**சொற்பொருள் :** அரி – நெற்கதிர்; செறு – வயல்; யாணர் – புதுவருவாய்; வட்டி – பனையோலைப் பெட்டி; நெடிய மொழிதல் – அரசரிடம் சிறப்புப் பெறுதல்.

**இலக்கணக்குறிப்பு :** சென்ற வட்டி – பெயரெச்சம்; செய்வினை – வினைத்தொகை; புன்கண், மென்கண் – பண்புத்தொகைகள்; ஊர (ஊரனே) – விளித்தொடர்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** சென்ற – செல் (ன்) + ற் + அ. செல் – பகுதி, ல் – ன் ஆனது விகாரம், ற் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி; சேர்ந்தோர் – சேர் + த் (ந்) + த் + ஓர். சேர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனதுவிகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஓர் – படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : அங்கண் – அம் + கண்; பற்பல – பல + பல; புன்கண் – புன்மை + கண்; மென்கண் – மென்மை + கண்.

ஆசிரியர் குறிப்பு : மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், மிளைகிழான் நல்வேட்டனார் என்னும் பெயர் பெற்றார். இவர், ஐந்திணைகளைப் பற்றியும் பாடல் இயற்றியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடலும் குறுந்தொகையில் ஒன்றுமாக ஐந்து பாடல் உள்ளன. இவர் சங்ககாலத்தவர்.

நூற்குறிப்பு : பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கநூல்கள் எனப் போற்றப்படுவன. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும், 'நல்' என்று அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதும் நற்றிணையே. இஃது அகத்திணை நூலாகும்.

நற்றிணை பல்வேறு காலங்களில், புலவர் பலரால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல். ஓரறிவு உயிர்களையும் விரும்பும் உயரிய பண்பு, விருந்தோம்பல், அறவழியில் பொருளீட்டல் முதலிய தமிழர்தம் உயர் பண்புகளைத் தெள்ளத்தெளிவாக எடுத்தியம்பும் நூலிது. இதில், ஐந்திணைக்குமான பாடல்கள் உள்ளன. இதிலுள்ள பாடல்கள், ஒன்பது அடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்டவை.

இப்பாடல்களைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி. நற்றிணைப் பாடல்கள் நானூறு; பாடினோர் இருநூற்றெழுபத்தைவர். நம் பாடப்பகுதி, நற்றிணையிலுள்ள இருநூற்றுப் பத்தாவது பாடல்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக

அ) நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ____________ பேரெல்லையும் கொண்ட நூல்.

ஆ) 'அரி' என்னும் சொல்லின் பொருள் ____________.

2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) 'நல்' என்னும் அடைமொழி பெற்ற நூல் ____________.

1. அகநானூறு
2. கலித்தொகை
3. நற்றிணை

ஆ) நற்றிணையைத் தொகுப்பித்தவர் ____________.

1. பன்னாடு தந்த மாறன் வழுதி
2. உக்கிரப் பெருவழுதி
3. இளம்பெருவழுதி

இ) நற்றிணை ________________ நூல்களைச் சார்ந்தது.

1. பத்துப்பாட்டு    3. எட்டுத்தொகை

2. பதினெண்கீழ்க்கணக்கு

3 பொருத்துக.

1. செறு – பனையோலைப்பெட்டி
2. வித்து – புதுவருவாய்
3. யாணர் – விதை
4. வட்டி – வயல்

## ஆ) சிறுவினா

தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.

## செயல் திட்டம் :

1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களை அகம், புறம், அகப்புறம் என வகைப்படுத்தி எழுதுக.
2. நற்றிணைப் பாடலின் கருத்தை மனவரைபடமாக்குக.

## புறநானூறு

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.

– கண்ணகனார்

**பொருள் :** பொன்னும் பவளமும் முத்தும் நிலைத்த பெருமலையில் பிறக்கும் மாணிக்கமும், தோன்றும் இடங்களால் ஒன்றுக்கொன்று தொலைவில் இருப்பினும், மாலையாகக் கோத்து மதிப்புமிக்க அணிகலனாக அமைக்கும்போது, தம்முள் ஒருங்கு சேரும். அதுபோல, சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர்; சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர்.

**சொற்பொருள் :** துகிர் – பவளம், மன்னிய – நிலைபெற்ற, சேய – தொலைவு, தொடை – மாலை, கலம் – அணி.

**இலக்கணக்குறிப்பு :** பொன்னும் துகிரும் முத்தும் பவளமும் மணியும் – எண்ணும்மைகள்; மாமலை – உரிச்சொற்றொடர்; அருவிலை, நன்கலம் – பண்புத்தொகைகள்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** புணர்ந்து, புணர் + த் ( ந் ) + த் + உ. புணர் – பகுதி த் – சந்தி , த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்சவிகுதி.

**பிரித்தறிதல் :** அருவிலை – அருமை + விலை, நன்கலம் – நன்மை + கலம்.

**ஆசிரியர்குறிப்பு :** இப்பாடலாசிரியர் கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவர். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபொழுது, பிசிராந்தையாரின் வருகைக்காகக் காத்திருந்தான். அப்போது, அவருடன் இருந்தவர் கண்ணகனார் ஆவார். அவன் உயிர் துறந்தபொழுது மிகவும் வருந்திய கண்ணகனார் இப்பாடலைப் பாடினார்.

**நூற்குறிப்பு :** எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. இது, புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூல் சங்ககால மக்களின் வாழ்க்கைநிலை, மன்னர்களின் வீரம், புகழ், கொடை, வெற்றிகள் பற்றிய பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது. தமிழரின் வரலாற்றை அறியவும், பண்பாட்டு உயர்வை உணரவும் பெரிதும் உதவுகிறது. நம் பாடப்பகுதியில் இருநூற்றுப் பதினெட்டாம் பாடல் இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) குறுவினாக்கள்

1. புறநானூறு – குறிப்பு எழுதுக.
2. சான்றோர் யாருடன் சேர்வர் ?

### ஆ) சிறுவினா

சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

# பேச்சுக்கலை

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக்கலையும் ஒன்று. இது, நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமையத்தக்க அரியதொரு கலை. இது, மக்களுக்கு அறிவு புகட்டி அவர்களை உயர்ந்த இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையது. மேடைப்பேச்சில் நல்ல தமிழைக்கொண்டு மக்களை ஈர்த்தோர் தமிழ்த்தென்றல் திரு.வி.க., பேரறிஞர் அண்ணா, ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடிஅடிகளார் முதலியோர் ஆவர்.



## பேச்சும் மேடைப்பேச்சும்

பேச்சு வேறு, மேடைப்பேச்சு வேறு. வெறும்பேச்சுக்கும் மேடைப்பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. பேச்சில் உணர்ந்ததை உணர்ந்தவாறு தெரிவித்தால் போதுமானது; ஆனால், மேடைப்பேச்சிலோ உணர்ந்ததனை உணர்த்தும்வகையிலும் தெரிவித்தல் வேண்டும். பேச்சில் கேட்கின்றவனைக் கேட்கின்ற வனாகவே மதிக்கலாம். ஆனால், மேடைப்பேச்சிலோ கேட்கின்றவனை மதிப்பிடுவோனாக மதித்தல் வேண்டும். பிறருக்கு எழுதி உணர்த்துவதனைக் காட்டிலும் இனியமுறையில் பேசி உணர்த்தும் மேடைப்பேச்சு, முறையான மிகுந்த பயனை நல்கும் எனலாம்.

## பேச்சுக்கலையில் மொழியும் முறையும்

மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி என்றாலும், அக்கருத்துகளை வெளியிடும் மொழியும் முறையும் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன. பேச்சுக்கலையில் வெற்றிபெற வலிமையான கருத்துகள் தேவை. ஆயினும், அவற்றைக் கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேசத் தெரிதல்வேண்டும்.

பேச்சாளரின் நெஞ்சிலே உள்ள கருத்து, கேட்பவர்கள் நெஞ்சங்களிலே பாய்தல் வேண்டும். மின்சாரம் பாயக் கம்பி கருவியாக இருப்பதுபோலக் கருத்தை விளக்க மொழி கருவியாக உள்ளது. ஆதலால், பேசும்மொழி அழகியதாகவும் தெளிவாகவும் சிக்கலற்றதாகவும் இருத்தல்வேண்டும். அழகிய செஞ்சொற்களால் இனிமையாகவும் எளிமையாகவும் நுட்பமாகவும் கருத்தினை உணர்த்தவல்லதே சிறந்தமொழி நடை.

நாம் சொல்லுகின்றமுறையில் அச்சொல்லுக்குத் தனிப்பொருளும் தனிவேகமும் பிறக்கின்றது; உயிரும் உண்டாகின்றது. எனவே, சொல்லை ஆராய்ந்து அறிந்து அளவாகப் பயன்படுத்துதல் வேண்டும். சொல் கிடைக்கிறதே என்று நம்மை அறியாமல் அவற்றைக் கொட்டிவிடுதல் கூடாது; கொட்டியதை நம்மால் அள்ள முடியாது.

நாம் சொல்லுகின்ற செய்தியை ஒருவரிடம் மிகவும் விரைவாகச் சொல்லுதல் கூடாது. சொல்லியதனையே திரும்பத் திரும்பச் சொல்லுதல் தவறு. பொய்யுரையும் மிகைப்படுத்தலும் வேண்டா. நாம் எதனைச் சொல்ல நினைக்கிறோமோ அதனைத் தெளிவாகக் காலம் அறிந்து சொல்லுதல் வேண்டும்.

### முக்கூறுகள்

பேசும்பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்தித் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப் பகுத்துப் பேசுவதனையே பேச்சுமுறை என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

மேடைப்பேச்சினைத் தொடங்கும்போதே எடுப்புடன் தொடங்குதல் வேண்டும். பின்னர்ப் பேசவேண்டிய பொருளைக் கேட்பவர்களுக்குச் சோர்வு ஏற்படாதவகையில் சுவையுடன் எடுத்து, முடிவில் சுருக்கத்தினைக் கூறி, அக்கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

### எடுத்தல்

பேச்சைத் தொடங்குவது எடுப்பு. பேச்சின் தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது. தட்டுத்தடங்கலின்றிப் பேசுவதற்குத், தொடக்கமே அடித்தளமாகும். கேட்போரை வயப்படுத்தும்முறையில் பேச்சைத் தொடங்குதல் வேண்டும். அவையோர்தம் உள்ளங்களைக் கேட்பதற்குரிய பக்குவத்தில் வைத்திருத்தல் வேண்டும். மண்ணில் ஈரப்பதம் இருந்தால்தான் விதைக்க முடியும் என்பதனைப்போலக் கேட்போரைத் தன்வயப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது.

அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேசத் தொடங்குவதே சிறப்புடையது. பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளில் பேசப்போகும் பொருளில் புகுந்துவிடுவது பாராட்டுக்குரியது; இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பத் தொடக்கவுரை அமைதல் நன்று.

### தொடுத்தல் முறை

தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும். அன்றலர்ந்த மலரை அழகுபட மாலையாகத் தொடுத்தல் இதற்கோர் எடுத்துக்காட்டாம். மலர்களின் நறுமண வேறுபாடும் நிறவேறுபாடும் உணர்ந்து, அவற்றை இடையிடையே அமைத்து மாலைகள் தொடுக்கப்படுதல் இயல்பு. அதுபோலவே, இடையிடையே சுவைமிக்க சொற்களும் குணமிக்க கருத்துகளும் பிணைத்துப் பேசுவதே தொடுத்தல் எனப்படும். தாம் பேச எடுத்துக்கொண்ட செய்தியின் நுட்பங்களையும் கருத்துகளையும் பல தலைப்புகளின்கீழ் வரிசைப்படுத்தி, ஓர் ஓவியன் பல வண்ணம் தீட்டி, இயற்கை வனப்பை உருவாக்கிக் காட்டுதல்போலப் பேசுதலே ஒரு பேச்சாளரின் கடமையாகும்.

### பேச்சின் அணிகலன்கள்

இலக்கியக்கூறுகள் என்பவை மருந்தின்மேலிட்ட இனிப்புப் போன்றவை. பேச்சாளர் சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லவேண்டிய முறையில் சொன்னால்தான் கேட்பவர்களுக்கு ஈர்ப்பு ஏற்படும். எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும். நாம் ஒரு வீடு கட்டுகிறோம்; அது வெறும் சுவராக மட்டும் அமைந்திருந்தால் அழகு இராது. எனவே, இடையிடையே அழகிய மாடங்கள், சாளரங்கள், வளைவுகள்,

தூண்கள் இவற்றையும் அமைத்து வீட்டை மேலும் அழகுபடுத்துகிறோம். அதுபோல, பேச்சுக்குக் கருத்துப்பொலிவும் குரலோசையும் மட்டுமே போதியன அல்ல; இடையிடையே கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறுவகையான நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும். பேச்சில் அணிகள் அணு ஆற்றல் போல்வன.

### உணர்த்தும் திறம்

சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும்; நிரல்படச் சொல்லுதல் வேண்டும்; திறம்படச் சொல்லுதல் வேண்டும்; தெளிவாகவும் சொல்லுதல் வேண்டும்; உணர்ச்சி ஒளி மின்னுதல் வேண்டும்; ஊக்கம் துடித்தல் வேண்டும். இவையனைத்தும் பேச்சின் இன்றியமையாப் பொருண்மைகளாம்.

உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும். அப்பேச்சே கேட்போர் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று, கேட்பவர்களுடைய உள்ளத்தைப் பிணிக்கும் ஆற்றல் வாய்ந்ததாக அமையும். பேச்சாளர், தாம் உணர்ச்சிவயப்படாது, கேட்போரின் உள்ளத்தில் தாம் விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும்வகையில் பேசுதல்வேண்டும்.

### முடித்தல்

பேச்சைத் தொடங்குவதிலும் பொருளை விரிப்பதிலும் செலுத்தும் கவனத்தை, அழகுறப் பேச்சை முடிப்பதிலும் செலுத்துதல்வேண்டும். பேச்சை முடிக்கும்போதுதான், பேச்சாளர் தமது கருத்தை வற்புறுத்தவும் கேட்போர் மனத்தில் பதியுமாறு சுருக்கிக் கூறவும் கூடும். பேச்சாளர் கருத்துக்கு அவையோர் இணங்குவதும் மாறுபடுவதும், அவர்தம் பேச்சின் முடிவுரையைப் பொருத்தே அமையும். நாடகக்கலை, திரைப்படக்கலை போன்றே பேச்சுக்கலையிலும் முடிவு தனிச்சிறப்பையும் பெருமையையும் தேடிக் கொடுக்கக்கூடியது எனலாம்.

பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும்முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக் கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அழகுறவே அமையும் எனலாம். தமிழகத்தில் பேச்சுக்கலை இன்று சிறப்புற்று விளங்குவதனையும் தங்கள் கருத்திற்கு வலிமை சேர்த்து எல்லாத் தரப்பினரும் அதனைக் கையாளுவதனையும் காணலாம்.

> விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்.
>
> – குறள், 648

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) வெறும் பேச்சுக்கும் ________________ பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.

ஆ) பேச்சு முடிவில் ________________ கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை ________.

1. ஓவியக்கலை 2. இசைக்கலை 3. பேச்சுக்கலை

ஆ) மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர் ________ .

1. பேரறிஞர் அண்ணா 2. மு. வரதராசனார் 3. திரு.வி.க.

**3. ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.**

அ) புலவர் பொங்கற் புது நாள்களின் மாண்பினை உணர்ந்துகொண்டாடினார்.

ஆ) மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது.

**4. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

அ) மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது.

ஆ) மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடைபேச்சு.

### ஆ) குறுவினாக்கள்

1. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்த நால்வர் யாவர்?
2. பேச்சின் முக்கூறுகள் யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல்வேண்டும்?
2. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
3. பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல்வேண்டும்?

### ஈ) நெடுவினாக்கள்

1. மேடைப்பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிவகைகள் யாவை?
2. மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

### செயல்திட்டம்

மொழிக்கலப்பு பெருங்குற்றமே என்னும் பொருளில் வழக்காடு மன்றம் நடத்துக.

**கீழுள்ள உரைநடையைப் பேசிப் பழகுக.**

சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ! கைத்தோல் உரிய கல்லுடைக்கும்போது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ! சிறைக் கோட்டத்தில் வேலை ஒழிந்த வேளையில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்; வள்ளுவர் குறளைப் படித்து என் உள்ளம் தழைத்தேன்.

செந்தமிழ் நடைக்கோர் எடுத்துக்காட்டு இது. இதுபோன்று எதுகை மோனை நயம் தோன்ற, நண்பருடன் பேசியும் எழுதியும் வருக.

# அண்ணாவின் கடிதம்

தம்பி!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன்பக்கம் நின்றிடவும் பரிவினைப் பெற்று மகிழ்ந்திடவும் இல்லந்தனிலே,

புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப்
பொன்னின் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி



நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்துவந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு பீடத்தில் அமர்த்திவிட்டாய்.

பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய்.

நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய்.

நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்துகொள்வதில் முற்பட்டிருக்கிறேன்.

எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்குதடையற்ற நிலையில் இருந்துவந்த நான், கட்டுண்டு கிடக்கிறேன்.

ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது.

நலிந்தோரும்கூட, இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம்

எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன். ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, முடியாது – பிறகு – விடு – அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா; அதுபோல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவான் வேண்டி, "உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!" என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடச் செய்துள்ளனர்.

"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்"


என்று முடியரசன் முழங்குகிறார். நாடு, ஆம் ஆம்! என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு கருத்து விருந்து அளித்துள்ளேன், காஞ்சி இதழ்மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய்.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

14.1.1968

அண்ணன்,



மாதிரி வினா

### நெடுவினா

அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

# வினா, விடைவகைகள், ஒருபொருட் பன்மொழி

## வினா வகை

என்ன ? எப்படி ? எங்கு ? ஏன் ? என வினாமேல் வினாவைக் கேட்டு விடையறிய விரும்புகின்றவனே சிறந்த அறிவாளியாக ஆகமுடியும் என்று சாக்கரடிசும், தந்தை பெரியாரும் கூறுவர். வினா அறுவகைப்படும். அவை: அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்பன.

### 1. அறிவினா

தான் ஒரு பொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும்பொருட்டு வினாவப்படும் வினா அறிவினா.

(எ–டு) திருக்குறளை இயற்றியவர் யார் ? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.

### 2. அறியாவினா

தான் அறியாத ஒரு பொருளை அறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது; அறியாவினா.

(எ–டு) எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை ? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

### 3. ஐயவினா

தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒருபொருள் குறித்து, ஐயத்தினைப் போக்கிக் கொள்வதற்காக வினவப்படும் வினா, ஐயவினா.

(எ–டு) அங்கே கிடப்பது பாம்போ ? கயிறோ ?

### 4. கொளல்வினா

தான் ஒரு பொருளை வாங்கிக்கொள்ளும்பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா, கொளல்வினா.

(எ–டு) பருப்பு உள்ளதா ? என வணிகரிடம் வினவும் வினா.

### 5. கொடைவினா

தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக, அப்பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரிடம் வினவுவது, கொடைவினா.

(எ–டு) மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ ?

### 6. ஏவல்வினா

ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் வினா, ஏவல் வினா.

(எ–டு) மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா ?

முருகா சாப்பிட்டாயா ?

( இவை படி, சாப்பிடு என்று ஏவல் பொருளைத் தருகின்றன )

அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை,
ஏவல் தரும் வினா, ஆறும் இழுக்கார். – நன்னூல், 385.

## விடை வகை

வினாவிற்கு ஏற்ப விடையளிப்பதுதான் மொழிநடையின் சிறப்பு.

'தேர்வு, நாளை நடைபெறுமா?' எனக் கேட்ட ஒருவனிடம், 'என் தங்கை ஏழாம் வகுப்பில் படிக்கிறாள்' எனக் கூறுவது தவறு. வினாவும் விடையும் பிழையின்றி அமைதலே முறை.

இறை, செப்பு, பதில் என்பன விடையின் வேறுபெயர்கள். விடை எண்வகைப்படும். அவை: சுட்டு, மறை, நேர், ஏவல், வினாஎதிர்வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்பன.

### 1. சுட்டுவிடை

"சென்னைக்கு வழி யாது?" என்று வினவினால்,

'இது' என்பதுபோலச் சுட்டிக் கூறும் விடை, சுட்டுவிடை.

### 2. மறைவிடை (எதிர்மறுத்துக் கூறல் விடை)

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்யேன் என்பதுபோல எதிர்மறுத்துக் கூறும் விடை, எதிர்மறைவிடை.

### 3. நேர்விடை (உடன்பட்டுக் கூறுதல்)

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்வேன் என்று உடன்பட்டுக் கூறும் விடை, நேர்விடை.

### 4. ஏவல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'நீயே செய்' என்று ஏவிக்கூறுவது ஏவல்விடை.

### 5. வினாஎதிர்வினாதல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'செய்யாமலிருப்பேனோ?' என்று வினாவையே விடையாகக் கூறுவது, வினாஎதிர்வினாதல்விடை.

### 6. உற்றதுரைத்தல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'உடம்பு நொந்தது' என்று தனக்கு உற்றதனை விடையாகக் கூறுவது, உற்றதுரைத்தல்விடை.

### 7. உறுவதுகூறல்விடை

"செய்வாயா?" என்னும் வினாவிற்குக் 'கை வலிக்கும்' எனத் தனக்கு வரப்போவதனை விடையாகக் கூறுவது, உறுவதுகூறல்விடை.

### 8. இனமொழிவிடை

"ஆடுவாயா?" என்று வினவியபோது, 'பாடுவேன்' என ஆடுவதற்கு இனமான பாடுவதனை விடையாகக் கூறுவது, இனமொழிவிடை..

சுட்டு, மறை, நேர் ஆகிய மூன்றும் வெளிப்படை. ஏவல், வினா எதிர்வினாதல், உற்றதுஉரைத்தல், உறுவதுகூறல், இனமொழி ஆகிய ஐந்தும் வினாக்களுக்கு உரிய விடையைக் குறிப்பால் உணர்த்துவன.

### ஒருபொருட்பன்மொழி

1. திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கிறது.

2. அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகின்றன.

இவ்விரு தொடர்களிலும் ஒருபொருள் குறித்துத் தொடர்ந்துவரும் இருசொற்கள் உள்ளன. அவை உயர்ந்தோங்கிய, குழிந்தாழ்ந்து என்பவை. உயர்ந்து, ஓங்கி ஆகிய இரு சொற்களும், உயர்ந்த என்னும் ஒரே பொருளிலும், குழிந்து, ஆழ்ந்து என்பவை குழிந்து என்னும் ஒரே பொருளிலும் வருகின்றன.

ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது, ஒருபொருட் பன்மொழியாகும்.

(எ–டு) 1. நடுமையம்.

2. மீமிசை ஞாயிறு.

என்னும் தொடர்களில் நடுப்பகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் என்னும் இருசொற்களும், மேற்பகுதி என்னும் பொருளைத் தரும் மீ, மிசை என்னும் இருசொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்தியுள்ளன.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

#### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே ______________ என்பர்.

ஆ) ஒருபொருட் பன்மொழிக்குச் சான்று ______________.

இ) இது செய்வாா’ என்னும் வினாவிற்கு ‘வயிறு வலிக்கும்’ எனக் கூறுவது ________ விடை.

ஈ) ஆடத்தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக் கூறுவது ________ விடை.

உ) நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது ____________ வினா.

#### 2. பொருத்துக.

1. அறிவினா – வருவாயா? எனில் ‘வாரேன்’ என்பது.
2. ஏவல் விடை – உண்டாயா? எனில், ‘வயிறு வலிக்கும்’ என்பது.
3. மறைவிடை – இதனைச் செய்வாயா? எனில், ‘நீயே செய்’ என்பது.
4. உறுவது கூறல் – “இதன் பொருள் யாது?” என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது.

### ஆ) குறுவினாக்கள்

1. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பாம்போ? கயிறோ? – எவ்வகை வினா?.
3. விடை எத்தனை வகைப்படும்? அவையாவை?
4. சுட்டுவிடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக
5. உடன்பட்டுக் கூறும் விடையின் பெயரென்ன?

## மொழித்திறன்பயிற்சி

### உவமைகளைச் சொற்றொடரில் அமைத்தல்

(எ–டு) 1. என் இளமைக்காலத்துச் செயல்கள், பசுமரத்தாணிபோல நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன.

2. அறிஞர் அண்ணாவின் புகழ், குன்றின்மேலிட்ட விளக்குப்போலப் பாரெங்கும் ஒளிவீசுகின்றது.

இவ்வாறே பின்வரும் உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.

1. அனலிடைப்பட்ட புழுவைப்போல
2. கடலில் கரைத்த பெருங்காயம்போல
3. இலவுகாத்த கிளிபோல
4. காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல
5. அடியற்ற மரம்போல
6. மடைதிறந்த வெள்ளம்போல
7. கல்மேல் எழுத்துப்போல
8. அத்தி பூத்தாற்போல
9. மழை காணாப் பயிர்போல
10. மலரும் மணமும்போல
11. வேலியே பயிரை மேய்ந்ததுபோல
12. கீரியும் பாம்பும்போல
13 உள்ளங்கை நெல்லிக்கனிபோல
14 கிணற்றுத் தவளைபோல
15. நிலவும் வானும்போல

## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல் திறன்

அண்ணாவின் அடுக்குமொழி நடை குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம்.

பசி என்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம்.

பசி என்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருணியம்.

பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம்.

பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற்போக வெட்கந் தடுக்கின்றது, வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிகின்றது, உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை; இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்? என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங்கண்ட ஊமையைப்போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம்.

நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வர்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச்சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம்.

(இப்பகுதியில் இடம்பெற்றுள்ள வடசொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களைக் கண்டறிந்து மீண்டும் படித்துப் பார்க்க.)

செயல் திட்டம் : அண்ணாவின் கடிதம் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. இதேபோன்று நேரு இந்திராவுக்கு எழுதிய கடிதம், மு.வ.வின் தம்பிக்கு, தங்கைக்கு, நண்பருக்கு என எழுதிய கடிதங்கள் முதலிய நூல்களை நும் பள்ளி நூலகத்திலிருந்து திரட்டுக. அவற்றில் அமைந்துள்ள கருத்துகளைப் படித்துக் குறிப்புகள் திரட்டுக.

## இ) எழுதுதல் திறன்

### உரைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுதல்

கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியை நன்கு படித்து, அதன் மையக்கருத்தினை மனத்தில் அமைத்துக் கொள்ளுதல்வேண்டும். உரைப்பகுதியில், பயின்று வந்துள்ள சொற்களை, சொற்றொடர்களை மீண்டும் பயன்படுத்தாமல் சொந்தநடையில் எழுதுதல் வேண்டும். அடைமொழிகள், பழமொழிகள், உவமைகள், அடுக்குத்தொடர்கள் வந்திருப்பின், அவற்றில் தேவையற்றதை நீக்கிவிட்டு எழுதுதல் வேண்டும். முதலில் திருந்தாப் படிவம் எனத் தலைப்பிட்டுச் சுருக்கி எழுதிய பின்னர், அதில் மாற்றங்கள் செய்து திருந்திய படிவம் எழுதவேண்டும். திருந்திய படிவத்திற்குத் தலைப்பு ஒன்று தருதல்வேண்டும். சுருக்கப்பட்ட பகுதி மூன்றில் ஒரு பங்காக இருத்தல் வேண்டும்.

### சுருக்கி எழுதவேண்டிய பத்தி

சிக்கனமாய் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியுமா? செலவுகளைக் குறைத்தல் வேண்டும். அப்படியானால் நல்ல உணவு, சிறந்த ஆடை மற்றும் தேவையான பொருள்கள் முதலியவற்றுக்குப் போதிய அளவு செலவு செய்யாமல் வாழ்வதா? அற்றன்று. நோய் வந்துவிட்டால் அதைத் தீர்ப்பதற்கு மருத்துவச் செலவு செய்யாமலிருப்பதா? அதுவும் அன்று, தனக்கும் தன் குடும்பத்திற்கும் தேவையான இன்றியமையாத செலவுகளைச் செய்யத்தான் வேண்டும். தேவைக்குச் செலவிட்டது போக எஞ்சிய வருவாயில் எதிர்கால வாழ்க்கைக்குச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும். எறும்பு மழைக்காலத்தில் தனக்கு வேண்டிய உணவைக் கோடைக் காலத்திலேயே தேடி வைத்துக்கொள்கிறது அன்றோ? அதுபோல நாமும், உழைக்கவும் ஊதியம்

மிகுதியாகத் தேடவும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சேர்த்துவைக்க முயலுதல் வேண்டும். எதிர்காலப் பாதுகாப்பு மிக்க வாழ்க்கையின் பொருட்டாவது சிக்கனமாக வாழும் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல், சிறுகச் சிறுகச் சேமித்தாலே பெரும்பொருள் சேமித்துவிடலாம். சிக்கனமாக வாழ்வோம், சிறப்புடன் வாழ்வோம்.

திருந்தாப் படிவம்

சிக்கனமாய் வாழ்வதற்குச் செலவுகளைக் குறைத்தல் வேண்டும். நல்ல உணவு, அழகிய ஆடைகள், தேவைப்படும் பொருள்கள், மருத்துவச் செலவு போன்றவற்றுக்கும் தனக்கும் குடும்பத்திற்கும் இன்றியமையாச் செலவுகளைச் செய்து எஞ்சிய வருவாயில் சேமிக்கும் பழக்கம் கொள்ளுதல் வேண்டும். மழைக்கால உணவைக் கோடைக்காலத்திலேயே சேமித்து வைக்கும் எறும்புபோல, நாமும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சிக்கனமாக வாழ்ந்து சேமிக்கும் பழக்கம் கொண்டால் பெரும்பொருள் சேர்க்கலாம். சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு.

திருந்திய படிவம்

சிறுதுளி பெருவெள்ளம்

உணவு, உடை, மருத்துவம் போன்றவற்றிற்கும் தனக்கும் குடும்பத்திற்கும் இன்றியமையாச் செலவுகளைச் செய்து, பின் எஞ்சியுள்ள பொருளைச் சேமித்து வைத்தல் வேண்டும். மழைக் காலத்திற்குத் தேவையான உணவைக் கோடையில் சேமிக்கும் எறும்புபோல, நாமும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே உழைத்துப் பொருள் தேடி எதிர்கால நல்வாழ்வுக்குச் சேமித்தல் வேண்டும். சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு.

பயிற்சி : கீழுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் திரண்ட கருத்தினைச் சுருக்கி வரைக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

மொழியென்பது சமூகத்தால்தான் வளர்ச்சி பெறும். மொழி இன்றேல் சமூகமாக இயங்க முடியாது. எனவே, ஒன்றுபட்ட பொதுவாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் உறவாடுவதற்கு மொழியே சிறந்த கருவியாக அமைகின்றது. பொதுமக்கள் தாய்மொழியையே சிறந்த கருவியாகக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக, நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்கு நமது தாய்மொழியையே கையாளுகின்றோம். பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், குலங்கள், நிலைகள், தொழில்கள் ஆகியவற்றால் வேற்றுமையுற்ற பல பிரிவினரும் பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதனைக் காணும்போது தாய்மொழியின் பேராற்றலை என்னவென்று கூறுவது ?

ஈ) கட்டுரை

நான் பேச்சாளரானால்....

உ) கடிதம்

பேருந்து வசதிவேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்க்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

## தமிழெண்களை அறிவோம்

1. 151 முதல் 200 வரை எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 151 | ௧௫௧ | 161 | ௧௬௧ | 171 | ௧௭௧ | 181 | ௧௮௧ | 191 | ௧௯௧ |
| 152 | | 162 | | 172 | | 182 | | 192 | |
| 153 | | 163 | | 173 | | 183 | | 193 | |
| 154 | | 164 | | 174 | | 184 | | 194 | |
| 155 | | 165 | | 175 | | 185 | | 195 | |
| 156 | | 166 | | 176 | | 186 | | 196 | |
| 157 | | 167 | | 177 | | 187 | | 197 | |
| 158 | | 168 | | 178 | | 188 | | 198 | |
| 159 | | 169 | | 179 | | 189 | | 199 | |
| 160 | | 170 | | 180 | | 190 | | 200 | ௨௦௦ |

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

பேருந்து நிலையத்தில் ....

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே ?

வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனாலதான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கட் கிடைச்சுதா?

பஸ் டென் தர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

மேற்கண்ட உரையாடலைக் கலப்பின்றித் தமிழில் எழுதுக.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுக்கும் திறன்

பதினோராம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகின்றன. தேவி, அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. ஆனால், அவள் பெற்றோர், அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.

“நான் சொன்னால் சொன்னதுதான். நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியதுதான்” என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார்.

“அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்” என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள், தேவி.

இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?

உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?

## மதிப்புக்கல்வி

### சூழ்நிலைக்கேற்ற அறிவுக்கூர்மை

நாட்டுடைமையாக்கப்பட்ட அரசுப் பேருந்துகளில் திருவள்ளுவர் படமும் திருக்குறளும் இடம்பெறச் செய்தார் முதலமைச்சர் ஒருவர். ஒருமுறை எதிர்க்கட்சியினர், அவரிடம் இதுகுறித்துக் கேள்வி எழுப்பினர். பேருந்தில்...

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

என்று குறிக்கப்பட்டுள்ள குறள் யாருக்கு? ஓட்டுநருக்கா? நடத்துநருக்கா? பயணிகளுக்கா? என்று கேள்வி எழுப்பினர்.

ஓட்டுநருக்கும் நடத்துநருக்கும் என்று கூறினால் தொழிலாளர்களின் வெறுப்புக்கு ஆளாக வேண்டும்; பயணிகளுக்கு என்றால் பொதுமக்களின் சினத்திற்கு ஆளாக நேரிடும். ஆனால், அந்த முதலமைச்சர் கூறிய நுணுக்கமான பதில் அனைவரையும் அதிர வைத்தது. மேற்கொண்டு அவரிடம் எந்தக் கேள்வியையும் எதிர்க்கட்சியினரால் எழுப்ப முடியவில்லை. அவர் கூறிய பதில் என்ன தெரியுமா?

நாக்கு உள்ளவர்கள் அனைவருக்காகவும் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்பதே அது. பொருத்தமாகவும் தெளிவாகவும் விரைவாகவும் விடை கூறும் ஆற்றல் அவரிடம் இயல்பாக அமைந்திருந்தது. அவர்தாம் பேரறிஞர் அண்ணா. தகுந்த நேரத்தில் நாமும் நம் அறிவைப் பயன்படுத்திப் பொருத்தமாக உரையாடத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Letter writing is an art. This can be perfected through constant practice. We write letters to keep in touch with friends and relatives and to carry important information. Letters are a form of conversation; because, they involve personal and direct communications between two people. So, every educated person should know how to write a clear and readable letter.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. First deserve, then desire. | முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? |
| 2. Little strokes fell great oaks. | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். |
| 3. Tit for tat. | யானைக்கும் பானைக்கும் சரி. |
| 4. Work is worship. | செய்யும் தொழிலே தெய்வம். |
| 5. Time is Gold. | காலம் பொன் போன்றது. |

# பெரியபுராணம்

## அப்பூதியடிகள் புராணம்

அப்பூதியடிகள் திங்களூரில் தோன்றியவர்; குற்றமற்றவர்; சிவபக்தி மிக்கவர்; திருநாவுக்கரசரிடம் பேரன்புடையவர். அவ்வன்புக்கு அறிகுறியாகத் தம்மக்கள், அளவை, நிறைகோல், பசு, தாம் வைத்த தண்ணீர்ப்பந்தல் ஆகிய அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே சூட்டி மகிழ்ந்தவர். திங்களூர் வந்த திருநாவுக்கரசர், அங்குக் கண்ட தண்ணீர்ப் பந்தலுக்குத் தம் பெயர் இருப்பதனைக் கண்டு வியப்புற்றார். அப்பெயர் வைத்தவரான அப்பூதியடிகளின் அன்பைக் கேட்டறிந்து, அவரது இல்லம் சென்றார். வந்தவர்க்குத் திருவமுது படைப்பதற்காக வாழைக்குருத்து அரியச் சென்ற அப்பூதியடிகளின் மூத்த மகன், பாம்பு தீண்டியதால் இறந்தான். திருநாவுக்கரசருக்குத் தெரியாதவாறு இது மறைக்கப்பட்டது. திருநாவுக்கரசு இதனையறிந்து, 'ஒன்றுகொலாம்' என்னும் திருப்பதிகம் பாடி, இறந்த பிள்ளையை எழுப்பித் திருவமுது செய்தருளினார்.

### அப்பூதியடிகள் தம் மனையிலுள்ள அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே சூட்டல்

1. களவு,பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொடு மேதி மற்றும்
உளஎலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக லாற்றார்.

**பொருள் :** அப்பூதியடிகள் களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீக்கியவர்; வளமிகு இல்லற வாழ்வினர்; தம் வீட்டிலுள்ள அளவைக் கருவிகள், துலாக்கோல், மக்கள், பசுக்கள், எருமைகள், மற்றுமுள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசு என்னும் திருப்பெயரையே சூட்டி வாழும் வழக்கமுடையவர்.

**சொற்பொருள் :** காய்ந்தார் – நீக்கினார்; மனை – வீடு; ஆ – பசு; மேதி – எருமை; நிறைகோல் – துலாக்கோல் (தராசு).

**பகுபத உறுப்பிலக்கணம் :** காய்ந்தார் – காய் + த் ( ந் ) + த் + ஆர். காய் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

## திங்களூர் வந்த திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் காணல்

2. அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனில் பரிவகற்றிக்
குளம்நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளம்மருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

பொருள் : அளவற்ற மக்கள் நடந்துசெல்லும் வழியில், கோடையின் மிகுந்த வெப்பத்தினைப் போக்கியருளும் கருணைமிக்க பெரியோர் உள்ளம் போன்றும் நீர்த்தடாகம் போன்றும் அமைக்கப் பெற்ற குளிர்ச்சி நிறைந்த தண்ணீர்ப்பந்தலைத் திருநாவுக்கரசர் வந்து சேர்ந்தார்.

சொற்பொருள் : தண்ணளித்தாய் – குளிர்ச்சி நிறைந்த; தடம் – தடாகம்.

இலக்கணக்குறிப்பு : செலவொழியா வழி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வழிக்கரை – ஆறாம் வேற்றுமைத்தொகை; உறுவேனில் – உரிச்சொற்றொடர்; நீர்த்தடம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; பந்தர் – பந்தல் என்பதன் கடைப்போலி.

பகுபத உறுப்பிலக்கணம் : நிறைந்த – நிறை + த் ( ந் ) + த் + அ. நிறை – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

பிரித்தறிதல் : செலவொழியா – செலவு + ஒழியா; வழிக்கரை – வழி + கரை.

## தண்ணீர்ப்பந்தலில் தம் பெயர் இருக்கக் கண்டு வியப்புறுதல்

3. வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாங்கண்டார்.

பொருள் : தண்ணீர்ப்பந்தலை வந்தடைந்த வாகீசர் ( திருநாவுக்கரசர் ) இளந்தென்றல் காற்று வீசும் குளிர்ச்சிமிக்க தண்ணீர்ப்பந்தலையும் அமுதமாகிய தண்ணீரையும் கண்டார். அப்பந்தலில், திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் என்னும் பெயர் அழகாக எழுதியிருப்பதனையும் பார்த்து வியந்தார்.

சொற்பொருள் : மந்தமாருதசீதம் – குளிர்ந்த இளந்தென்றல் காற்றுடன் கூடிய குளிர்ந்த நீர்; சந்தம் – அழகு.

இலக்கணக்குறிப்பு : அணைந்த வாகீசர் – பெயரெச்சம்;

பகுபத உறுப்பிலக்கணம் : வருவார் – வா (வரு) + வ் + ஆர். வா – பகுதி, வா – வரு என ஆகியது விகாரம், வ் – எதிர்கால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : வந்தணைந்த – வந்து + அணைந்த; எம்மருங்கும் – எ + மருங்கும்.

இயல் 5

### திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்த காரணம் கேட்டல்

4. ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறுமென எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார்.

பொருள் : அப்பூதியடிகளிடம், "கங்கையைச் சடைமுடியில் தாங்கிய சிவபெருமானின் அடியார்களுக்காக ஊரெல்லையில், நீவிர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் உம்பெயர் எழுதாமல், வேறு ஒருவர் பெயர் எழுதிய காரணமென்ன? சொல்வீராக" என்று, குற்றமற்றவராகிய திருநாவுக்கரசர் மொழிந்தார்.

சொற்பொருள்: ஈறு – எல்லை.

### அப்பூதியடிகளார் திருநாவுக்கரசர் பெருமையை உரைத்தல்

5. பொங்குகடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்புமென இயம்பினார்.

பொருள் : "கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலில் எறிந்தபோது, அக்கல்லினையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசரின் பெருமையினை, இவ்வுலகத்தில் அறியாதார் யாருளர்? மங்கலமாகிய திருவேடத்துடன் நின்றும், இவ்வகை மொழிந்தீர்! நீர் எங்குறைவீர்? நீர்தாம் யார்? கூறுவீர்" என்று இயம்பினார், அப்பூதியடிகள்.

சொற்பொருள் : கல்மிதப்பு – கல்லாகிய தெப்பம்; புவனம் – உலகம்.

இலக்கணக்குறிப்பு : பொங்குகடல் – வினைத்தொகை.

பிரித்தறிதல் : எங்குறைவீர் – எங்கு + உறைவீர்.

### தாமே திருநாவுக்கரசர் எனல்

6. திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார். *

பொருள் : அந்தணராகிய அப்பூதியடிகள் கூறியதைக் கேட்ட திருநாவுக்கரசர், அடியார்மீது அவர் வைத்திருந்த பெருமையினை அறிந்து, 'பிற சமய நெறியினின்று விடுபட்டு ஏற்றம் காணச் "சூலை" என்னும் பெருநோயால் ஆட்கொள்ளப்பட்டுச் சைவ சமயம் வந்தடைந்த தெளிவில்லாத உணர்வுடைய சிறியவனே யான்' எனக் கூறினார்.

சொற்பொருள் : சூலை – கொடிய வயிற்றுநோய், தெருளும் – தெளிவில்லாத.

இலக்கணக்குறிப்பு : பெருமையறிந்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை; அறிந்து, அடைந்து – வினையெச்சங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிந்து – அறி + த் ( ந் ) + த் + உ; அறி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்சவிகுதி.

## திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் வணங்குதல்

7. அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரண கமலம் பூண்டார்.

பொருள் : திருநாவுக்கரசர், தம்மை இன்னாரென்று அறியும்படி உரைத்தருள, உண்மை அறிந்துகொண்ட அப்பூதியடிகளுடைய கைம்மலர்கள் தலைமேல் குவிந்தன; கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி வழிந்தது; உரை தடுமாறியது; உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறியத் தரையில் வீழ்ந்து, திருநாவுக்கரசருடைய திருவடித் தாமரைகளைத் தலையால் வணங்கினார்.

சொற்பொருள் : கரம் – கை; கமலம் – தாமரை; மிசை – மேல்.

இலக்கணக்குறிப்பு : கரகமலம் – உருவகம்; பொழிந்திழிய – வினையெச்சம்.

பிரித்தறிதல் : கண்ணருவி – கண் + அருவி; உடம்பெல்லாம் – உடம்பு + எல்லாம்.

## திருநாவுக்கரசர் அமுதுண்ண இசைதல்

8. ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார்.

பொருள் : அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை ஓர் இருக்கையில் உட்காரச் செய்தார்; விருப்பமுடன் பூசித்து வழிபட்டார்; திருநீற்றுக் காப்பேந்தி அணிந்தார்; மனமகிழ்வுற்றவராய் நாடுய்ய வந்தவரைத் திருவமுது செய்தருள விண்ணப்பம் செய்தார். திருநாவுக்கரசரும் அதற்கு இசைந்தார்.

சொற்பொருள் : திருநீற்றுக்காப்பு – பெரியோர்களால் வாழ்த்தி வழங்கப்படும் திருநீறு; நேர்ந்தார் – இசைந்தார்.

இலக்கணக்குறிப்பு : தேசம் – இடவாகுபெயர்; வந்தவர் – வினையாலணையும் பெயர்.

பிரித்தறிதல் : திருவமுது – திரு + அமுது, மனந்தழைப்ப – மனம் + தழைப்ப.

வாழையிலை அரிந்துகொணர மூத்த திருநாவுக்கரசை அனுப்புதல்

9. தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் னமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வாஎன விரைந்து விட்டார்.

பொருள் : அப்பூதியடிகள், திருநாவுக்கரசருக்குப் படைக்கத் தூய்மையான நல்ல காய்கறிகளைக்கொண்டு, அறுசுவையுடன் இனிய அமுதாக்கிச் செய்தார். பின்னர் அவர், தங்களின் குழந்தைகளுள் மூத்த திருநாவுக்கரசை அழைத்து, மிக இளமையான வாழைக்குருத்தை விரைவாகச் சென்று அரிந்து வருமாறு கூறினார்.

சொற்பொருள் : தங்கள் சேயவர் – தங்களின் குழந்தைகள்; பொற்குருத்து – மிக இளமையான வாழைக்குருத்து.

இலக்கணக்குறிப்பு: நற்கறிகள், இன்னமுதம் – பண்புத்தொகைகள்.

பகுபத உறுப்பிலக்கணம்: ஆக்கி – ஆக்கு + இ; ஆக்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி.

பிரித்தறிதல்: நற்கறிகள் – நன்மை + கறிகள், இன்னமுது – இனிமை + அமுது.

மூத்த திருநாவுக்கரசு வாழைக்குருத்து அரியும்போது பாம்பு தீண்டல்

10. நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே. *

பொருள்: “நல்ல தாயும் தந்தையும் ஏவ, அதன்படி நான் இப்பணி செய்யும் பேறு பெற்றேன்” என்று, மூத்த திருநாவுக்கரசு மனமகிழ்ந்து விரைந்து தோட்டத்தினுள் நுழைந்தான்; பெரிய வாழையின் வளமான இளங்குருத்தினை அரியும்போது, பாம்பொன்று மிக வருந்தும் வகையில் கூரிய பற்களால், அவன் உள்ளங்கையில் தீண்டியது.

சொற்பொருள்: ஒல்லை – விரைவு; மல்லல் – வளமான; அம் – அழகிய; வாள் – கூரிய; அரா – பாம்பு; அல்லல் – துன்பம்; அழுங்கி – மிக வருந்தி; அங்கை – உள்ளங்கை.

இலக்கணக்குறிப்பு: தாய்தந்தை – உம்மைத்தொகை; மல்லலம் குருத்து - உரிச்சொற்றொடர்; தீண்டிற்று – ஒன்றன்பால் வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம்: பெற்றேன் – பெறு (பெற்று) + ஏன். பெறு – பகுதி (பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டியது), ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி; தீண்டிற்று – தீண்டு + இன் (ற்) + று; தீண்டு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ன் – ற் ஆனது விகாரம், று – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் – வாளரா – வாள் + அரா; அங்கை – அகம் + கை.

மாண்ட மகனை மறைத்துத் திருவமுது படைத்திடத் திருநாவுக்கரசை அழைத்தல்

11. தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம்பதைத்து உற்று நோக்கி உதிரம்சேர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார்.

பொருள்: மயங்கி வீழ்ந்த மூத்த மகனை, அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் உள்ளப் பதைப்புடன் உற்றுநோக்கினர்; கையினில் குருதி வழியும் வடுவையும் உடற்குறியையும் கண்டு, 'விடம் ஏறியதால், இறந்தான்' என அறிந்துகொண்டனர். அறிந்தும், மனவருத்தம் சிறிதுமின்றித் திருநாவுக்கரசர், திருவமுது செய்வதற்குரிய (உணவு உண்பதற்குரிய) சூழலை எண்ணினார்.

சொற்பொருள்: உதிரம்– குருதி, மேனி – உடல், வீந்தான் – இறந்தான்.

இலக்கணக்குறிப்பு : துளங்குதல் – தொழிற்பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : தளர்ந்து – தளர் + த் (ந்) + த் + உ. தளர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

திருநீறு அணியச் செய்ய மூத்த திருநாவுக்கரசு எங்கே என்று வாகீசர்
கேட்டலும், அப்பூதியடிகள் கூறிய விடையும்

12. ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதும்ஒன் றுரையார் இப்போது இங்கவன் உதவான் என்றார்.

பொருள்: நான்மறை கற்று வாய்மை தவறாத அப்பூதியாரை நோக்கி, "அன்புடைய உங்கள் மூத்த பிள்ளையையும் திருநீறு அணியச் செய்வதற்குக் காட்டுவீராக" என்றார். அதனைக் கேட்ட அப்பூதியடிகள், நிகழ்ந்த செயல் ஒன்றனையும் கூறாமல், "இப்போது, இங்கு அவன் உதவான்" என்றார்.

சொற்பொருள்: மறைநூல் – நான்மறை; சேய் – குழந்தை; பூதி – திருநீறு.

இலக்கணக்குறிப்பு: பூதி சாத்த – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம்: உரையார் – உரை + ய் + (ஆ) + ஆர். உரை – பகுதி, ய் – உடம்படுமெய், ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : நான்மறை – நான்கு + மறை.

நிகழ்ந்தது யாது என்று வினவுதல்

13. அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
இவ்வுரை பொறாதென் உள்ளம், என்செய்தான் இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும் என்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி.

பொருள்: அப்பூதியடிகளார் கூறியதைக் கேட்டவுடன், இறைவன் திருவருளால், செம்மை மிகுந்த திருநாவுக்கரசரின் திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. அப்பூதியடிகளை நோக்கித் தாங்கள் கூறிய கருத்தினை என்னுள்ளம் ஏற்கவில்லை. உம் மகனுக்கு நிகழ்ந்தது யாது? உண்மை விரித்து உரையும் என்று மொழிய, அப்பூதியடிகளும் நடந்த நிகழ்வை விளம்பலுற்றார்.

சொற்பொருள்: அங்கணர் – அழகிய நெற்றிக்கண்ணையுடைய சிவன்; பொறாது – ஏற்காது; மெய் – உண்மை.

இலக்கணக்குறிப்பு: அங்கணர் – அன்மொழித்தொகை; நோக்கி – வினையெச்சம்.

பிரித்தறிதல்: விதிர்ப்புற்றஞ்சி – விதிர்ப்பு + உற்று + அஞ்சி.

### திருநாவுக்கரசர் பதிகம்பாடி மூத்த திருநாவுக்கரசை உயிர்ப்பித்தல்

14. நாவினுக் கரசர் கேளா நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்வார் என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்.

பொருள்: அது கேட்ட திருநாவுக்கரசர், "நீர் செய்த வண்ணம் நன்று; இவ்வாறு செய்பவர், இவ்வுலகில் யாவர் உள்ளார்?" என்று கூறி, முன்னே எழுந்து சென்று, உயிர் நீங்கிய அப்பிள்ளையின் உடலைக் கொண்டுவரச் செய்தார். சிவபெருமானை அருளும்படி வேண்டி, 'ஒன்றுகொலாம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப், பாம்பின் விடத்தைப் போக்கியருளினார்.

சொற்பொருள்: பணிவிடம் – பாம்பின் நஞ்சு; சவம் – பிணம்; பாற்றுவித்தார் – போக்குவித்தார்.

இலக்கணக்குறிப்பு: எழுந்து, சென்று – வினையெச்சங்கள்; பணிவிடம் – ஆறாம் வேற்றுமைத் தொகை; கேளா – செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்: புரிந்த – புரி + த் (ந்) + த் + அ. புரி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

பிரித்தறிதல்: பாவிசை – பா + இசை.

ஆசிரியர் குறிப்பு: பெரியபுராணத்தை அருளியவர் சேக்கிழார். இவர், தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். இவர், அநபாயச்சோழனிடம் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவர். இவர், உத்தமசோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர். இவரைத் தெய்வச் சேக்கிழார் என்றும் தொண்டர்சீர் பரவுவார் என்றும் போற்றுவர். இவரது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

நூற்குறிப்பு: தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவர். அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் 'பெரியபுராணம்' என்னும் பெயர் பெற்றது. இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர், 'திருத்தொண்டர் புராணம்' என்பது. தில்லை நடராசப்பெருமான், 'உலகெலாம்' என்று

அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றதெனவும் கூறுவர். இவரது பாடல்கள் அனைத்தும் தெய்வ மணம் கமழும் தன்மையுடையன. எனவேதான், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார். உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான், 'பெரியபுராணம்' என்பார் திரு. வி. கலியாணசுந்தரனார்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) சேக்கிழார் பெருமான் அருளியது __________.

1. சிவபுராணம் 2. பெரியபுராணம் 3. தலபுராணம்

ஆ) தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் __________

1. அப்பூதியடிகளார் 2. மாறநாயனார் 3. திருநீலகண்டர்

இ) பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர் ________.

1. பெ. சுந்தரனார் 2. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்

3. கவிஞர் வெ. இராமலிங்கனார்

**2. கோடிட்ட எழுத்துகள் குறிக்கும் தொடை வகையை எழுதுக.**

1. அளவில்சனம் உளமனைய குளம் நிறைந்த வளமருவும்

2. கடிதணைந்த, அடிபணியா, முடிவில்தவம் வடிவுடையீர்

**3. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.**

1. வ–ம்மருவும் (ல/ள) நி–ல்தரும் (ள/ழ) தண்–ர்ப் (நீ/ணீ) பந்தர் வந்த–ந்தார் (ணை/னை)

2. சந்தமு – (ர/ற) வ– ந்ததனை (றை/ரை) எம்ம – ங்கும் (ரு/று) தாங்க – டார் (ன்/ண்)

**4. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மேதி | – | சிவன் |
| 2. சந்தம் | – | எருமை |
| 3. கோதில் | – | அழகு |
| 4. அங்கணர் | – | குற்றமில்லாத |
| | – | பசு |

### ஆ) குறுவினாக்கள்

1. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?
2. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார்?
3. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?
4. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?
5. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன?
6. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார்?
7. நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்? – யார் யாரிடம் கூறியது?
8. "இப்போது இங்கு அவன் உதவான்" – யார், யாரிடம் கூறியது?

### இ) சிறுவினாக்கள்

1. சேக்கிழார் – குறிப்பு எழுதுக.
2. பெரியபுராணம் – நூற்குறிப்பு எழுதுக.
3. தண்ணீர்ப்பந்தலைக் கண்டு நாவுக்கரசர் வியப்புறக் காரணம் என்ன? அப்பூதியடிகளாரிடம் அவர் யாது வினவினார்?
4. இப்போது இங்கு அவன் உதவான் – விளக்குக.

### ஈ) நெடுவினாக்கள்

1. அப்பூதியடிகள் திருநாவுக்கரசர்மேல் கொண்டிருந்த பற்றினை விவரிக்க.
2. திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தலைக் கண்டு வியந்த நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.
3. அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.

அன்பைப் பெருக்கிஎனது ஆருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே! – தாயுமானவர்

# திரைப்படக்கலை உருவான கதை

## திரைப்படத்தின் சிறப்பு

கலை நம் வாழ்வின் உயிர்நாடி. கலையில்லையேல் வாழ்வில் சுவையிருக்காது. திரைப்படம் ஓர் அற்புதமான கலை. உலகில் பல்வேறு மொழிகள் இருப்பினும், மக்கள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் உலகமொழி திரைப்படம். அஃது உதடுகளால் பேசும் மொழியன்று; உள்ளத்தால் பேசி, உணர்ச்சிகளால் உருவாகும் மொழி. அதனால், மக்களைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் திரைப்படத்திற்கு உண்டு.

## திரைப்படத்தின் வரலாறு




ஒளிப்படம் எடுக்கும் முறையை 1830ஆம் ஆண்டு கண்டுபிடித்த பின்னர், எட்வர்டு மைபிரிட்சு என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றிபெற்றார். ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். எடிசன், ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தார். பிரான்சிஸ் சென்கின்சு என்ற அமெரிக்கர் 1894இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும்வகையில் வடிவமைத்தார். புதிய படவீழ்த்திகள் உருவாக, இவருடைய கருத்துகளே அடிப்படையாக அமைந்தன.

இவ்வியக்கப்படத்தில் நாட்டியம், கடல் அலைகள் கரையில் மோதுதல் முதலிய காட்சிகளைக் காண முடிந்தது. இவற்றை ஆயிரக்கணக்கான இடங்களில் படம் காட்டிக் கட்டணம் வசூலிக்கத் தொடங்கினர். இவை பேசும் படங்கள் அல்ல; ஊமைப் படங்களே.

## திரைப்படம்

ஊமைப்படங்களைப் பேசும் படங்களாக மாற்றுவதற்குப் பல்வேறு அறிவியல் அறிஞர்கள் அயராது உழைத்தார்கள். அதனால், திரைப்படத்துறை மாபெரும் வளர்ச்சியை எட்டியது. திரைப்படத்துக்குரிய கதையுடன் கதை மாந்தர் தேர்வு செய்யப்பட்டனர். கதை, உரையாடல், பாடல் முதலியன முதலில் ஆயத்தம் செய்யப்பட்டன. பின்னர், அவர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்பட்டன. திரைப்பட நடிகர், நடிகையர், அவர்களுக்குத் தோழர், தோழியர், பணியாளர்கள் என நடிகர் பலர் தேர்வு செய்யப்பட்டனர்.

நடிகரின் குரல் இசைவாக இல்லாவிடில், மற்றொருவர் குரல் தரும் முறை கொண்டுவரப்பட்டது. ஒரு மொழிப்படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு,

மொழிமாற்றம் என்று பெயர். நடிப்பாற்றலை எடுத்துக்கூறிச் சில நேரங்களில் தாமே நடித்தும், காட்சிகள் அமைத்தும் படம் முடியும்வரை உழைக்கும் நுண்மாண் நுழைபுலம் உடையாரை இயக்குநர் என்பர். அவருக்கு உதவியாகத் துணை இயக்குநர் பணியாற்றுவார். படம் எடுத்தலைப் படப்பிடிப்பு என்பர். திரைப்படக்கலை இவ்வாறு காலத்திற்கேற்ப வளர்ச்சி பெற்றது.

கதைப்படங்கள் மட்டுமன்றிக் கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை அடைந்துள்ளது. செய்திப் படங்கள், உலகில் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் படமாக்கிக் காட்டும். செய்திப்படங்கள் வாயிலாக உலக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே, காணும் வாய்ப்புகள் உருவாகி உள்ளன. விளக்கப்படங்களால் ஒருநாட்டு மக்களின் வாழ்க்கைமுறைகளை உள்ளவாறு அறியலாம். படப்பதிவின்போது பலவகைத் தொல்லைகளும் அல்லல்களும் இடர்ப்பாடுகளும் துன்பங்களும் தடைகளும் ஏற்படும். உலகப்போரின்போது ஆப்பிரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் படமெடுப்போர் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### திரைப்படச்சுருள்

திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது. படம் எடுக்கப் பயன்படும் சுருள், எதிர்ச்சுருள் எனப்படும். ஒலி, ஒளிப்பதிவுகளைத் தனித்தனிப் படச்சுருள்களில் அமைப்பர்.

### படம்பிடிக்கும் கருவி

திரைப்படத்தில் ஒளிப்பதிவு செய்யப் படப்பிடிப்புக் கருவி இன்றியமையாதது. படப்பிடிப்பின்போது படப்பிடிப்புக்கருவி அசைந்தால் படம் தெளிவாக இராது. ஆகையால், உறுதியான உயரமான இடத்தில் அக்கருவியைப் பொருத்திவிடுவர். சிலர் படப்பிடிப்புக்கருவியை நகர்த்தும் வண்டியில் பொருத்துவதும் உண்டு. படப்பிடிப்புக்கருவியில் ஓரடி நீளமுள்ள படச்சுருளில் பதினாறு படங்கள் வீதம் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக எடுக்கப்படும்.

### ஒலிப்பதிவு

நடிகர்களின் நடிப்பையும், பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒலிப்பதிவு செய்வர். உரையாடலில் எழும் ஒலிஅலைகள் ஒரு நுண்ணொலிபெருக்கியைத் தாக்கும். நுண்ணொலிபெருக்கி ஒலியலைகளை மின்அதிர்வுகளாக்கும். மின்அதிர்வுகள் பெருக்கப்பட்டு ஒருவகை விளக்கினுள் செலுத்தப்படுகின்றன. அம்மின்னோட்டத்திற்குத் தக்கவாறு விளக்கின் ஒளி மாறும். இவ்வொளி, படச்சுருளின் விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து, அங்கு அஃது ஒலிப்பாதையைத் தோற்றுவிக்கும்.

### திரைப்படக்காட்சிப் பதிவு

ஒளிஒலிப்படக்கருவி என்னும் கருவி திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகிறது. இக்கருவியில் மேற்பக்கம் ஒன்றும், அடிப்பக்கம் ஒன்றுமாக வட்டமான இரு பெட்டிகள் இருக்கும். காட்டவேண்டிய படச்சுருளை மேல் பெட்டியில் பொருத்துவர். இக்கருவியில் பல பற்சக்கரங்களும், சக்கரங்களும் உண்டு. படச்சுருளைப் பற்சக்கரங்களுக்கு

இடையில் செலுத்திக் கீழே உள்ள பெட்டியில் மீண்டும் சுற்றிக் கொள்ளுமாறு செய்வர். இவ்வாறு படச்சுருள் பிரிந்து மீண்டும் சுருட்டிக்கொள்ளும். இடையில் ஒளிமிகு விளக்குகளுக்கும், உருப்பெருக்கிகளுக்கும் இடையில் படம் வரும். முன்புறம் ஒரு மூடி இருக்கும். மூடிக்கு இரண்டு கைகள் உண்டு. அந்த மூடி நொடிக்கு எட்டுமுறை சுழலும். அதன் கைகள் நொடிக்குப் பதினாறு முறை சுழலும். அதனால், அதன் கைகள் ஒளியை மறைக்கும். ஒளி மறைக்கும் போதெல்லாம் படச்சுருள் நழுவி, அடுத்த படம் வந்து நிற்கும். அதற்குள் மூடி திறந்துவிடுவதால் அப்படம் திரையில் விழும். திரைப்பட இயந்திரங்களில் நவீன தொழில்நுட்பங்களைக் கையாளுவதனால், திரைத்துறை வளர்ச்சியும் செழுமையும் பெற்றுத் திகழ்கிறது. பல காலங்களில் பல்லோரது உழைப்பினாலும், புதியன காணும் விருப்பத்தினாலும் மேன்மை பெற்றுத் திகழ்கிறது இன்றைய திரைத்துறை.

### கருத்துப்படம்

கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் 'வால்ட் டிஸ்னி' என்பவர் ஆவார். அவர் ஓவியர், ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான படங்களை வரைவார். ஒன்றுக்கொன்று சிறிது சிறிதாக மாறுவனவாக இருக்கும். இப்படங்களை வரிசைப்படி அடுக்கி வைத்துவிட்டு மிக வேகமாக ஏடுகளைப் புரட்டினால், அவை வெவ்வேறு படங்களாகத் தோன்றாமல் ஒரே நிகழ்வாகத் தோன்றும்.

ஒவ்வொரு காட்சியிலும் வரும் விவரங்களையும், பின்னணியையும் தனித்தனியாக எழுதி, ஒளிபுகும் செல்லுலாய்டு தகட்டில் தீட்டி, திரைப்படப் படப்பிடிப்புக் கருவியைக்கொண்டு, இப்படங்களைப் படமாக்குவர். கதைக்கேற்ப ஒலிப்பதிவையும் செய்வர். படங்களை எழுதுவதற்குப் பதிலாகப் பொம்மைகளைக் கொண்டும் படங்களைத் தயாரிக்கின்றனர். இந்த இயங்குரு படங்கள் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருப்பதால் குழந்தைகள் மிகவும் விரும்பும்.

### செய்திப்படம்

உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையே படமாக்கிக் காட்டுவது செய்திப்படமாகும். திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.

### விளக்கப்படம்

ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப்படமாகும். எடுத்துக்காட்டாக, உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம் விளக்கப்படம் எனப்படும்.

### கல்விப்படம்

கல்வி கற்பிப்பதற்கென உருவாக்கப்படும் படங்கள் கல்விப்படங்கள். பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை முதலியவற்றைப் படம் பிடித்துக் காட்டினால், அதனைக் காணும் மாணவர் கல்வியறிவை எளிதில் பெறுவர். வாழ்க்கையில் நேரில் காண முடியாத பல இடங்களையும் நேரில் பார்ப்பதனைப் போலவே காட்டுவதற்குக் கல்விப்படம் வழி செய்கிறது.

மக்களைத் தன்பால் ஈர்த்துக் கட்டிப்போடும் ஆற்றல் கொண்டது திரை உலகம். “கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே” எனும் வரிகள் திரைப்படத்திற்கும் பொருந்தும். மக்களிடம் மிக எளிதில் சென்று சேரும் ஆற்றல் திரைப்பட ஊடகங்களுக்கு உண்டு. அதனால், இத்துறை மக்களிடம் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கிறது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் __________ என அழைப்பர்.

ஆ) படப்பிடிப்புக் கருவியை __________ பொருத்துவதும் உண்டு.

இ) இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு __________ இருக்கும்.

**2. சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

அ) திரைபடம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.

ஆ) திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போடவல்லது.

**3. ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.**

அ) ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்.

ஆ) இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.

**4. ஏற்ற வினாத்தொடர்கள் அமைத்து எழுதுக.**

அ) செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.

ஆ) திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளிஒலிப் படக்கருவி பயன்படுகிறது.

**5. தேவையான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

கதைப்படங்கள் மட்டுமன்றிக் கருத்துப்படங்கள் செய்திப்படங்கள் விளக்கப்படங்கள் கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

**6. பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. ஈஸ்ட்மன் | – | ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி |
| 2. எடிசன் | – | படச்சுருள் |
| 3. எட்வர்டு மைபிரிட்சு | – | கருத்துப்படம் |
| 4. வால்ட் டிஸ்னி | – | இயக்கப்படம் |

## ஆ) குறுவினாக்கள்

1. மொழிமாற்றம் என்றால் என்ன ?
2. கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?
3. திரைப்படச்சுருள்பற்றி நீவிர் அறிவன யாவை ?

## இ) சிறுவினாக்கள்

1. படப்பிடிப்புக் கருவி குறித்து எழுதுக.
2. திரைப்படக்காட்சி எவ்வாறு பதிவு செய்யப்படுகிறது ?
3. கருத்துப்படம் பற்றி விளக்கி எழுதுக.

## ஈ) நெடுவினா

திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப்பணிகளைத் தொகுத்தெழுதுக.

**செயல்திட்டம் :** பள்ளியில் நடைபெறும் ஆண்டுவிழாவில் நடிப்பதற்கேற்றவாறு ஔவைக்கு நெல்லிக்கனி வழங்கிய வள்ளல் எனும் ஓரங்க நாடகம் அமைக்க.

### கலைச்சொற்களை அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| Persistence of vision | – | பார்வை நிலைப்பு |
| Dubbing | – | ஒலிச்சேர்க்கை |
| Director | – | இயக்குநர் |
| Shooting | – | படப்பிடிப்பு |
| Cartoon | – | கருத்துப் படம் |
| Negative | – | எதிர்ச்சுருள் |
| Camera | – | படப்பிடிப்புக்கருவி |
| Trolly | – | நகர்த்தும் வண்டி |
| Microphone | – | நுண்ணொலிபெருக்கி |
| Projector | – | படவீழ்த்தி |
| Lense | – | உருப்பெருக்கி |
| Motion Pictures | – | இயங்குருப் படங்கள் |

# பாரதரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்

பாரதரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் இலங்கையிலுள்ள கண்டியில் 1917ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் பிறந்தார். இவர், கோபாலமேனன் சத்யபாமா இணையருக்கு ஐந்தாவது மகனாவார். இவரது இரண்டாவது அகவையில் தந்தை காலமானார். வறுமையில் வாடிய இராமச்சந்திரனுடைய குடும்பம் தமிழ்நாட்டில் உள்ள கும்பகோணம் நகருக்குக் குடிபெயர்ந்தது. அன்னை சத்யபாமா, அங்குள்ள ஆனையடிப் பள்ளியில் தம்மக்கள் சக்கரபாணியையும் இராமச்சந்திரனையும் சேர்த்தார். எனினும், வறுமையினால் இருவரும் பள்ளிப்படிப்பைத் தொடரவில்லை.



இந்நிலையில், எதிர்பாராதவிதமாக இருவருக்கும் நாடகத்துறையில் நடிக்கும் வாய்ப்புக் கிட்டியது. தமது இளமைப்பருவத்தில், மேடை நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த இராமச்சந்திரன், திரைப்படத்துறையில் ஈடுபட்டுச் சிறுசிறு பாத்திரங்களில் நடித்துக் கதாநாயகனாக உயர்ந்தார். அவரது சுறுசுறுப்பும் உழைப்பும் படிப்படியாக அவரை உயர்நிலைக்குக் கொண்டுசென்றன.

அறிஞர் அண்ணாவின் பேச்சாற்றல், பழகும் பண்பு, உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு முதலியவற்றால் இராமச்சந்திரன் கவரப்பட்டார்.

இராமச்சந்திரன், நடிப்புக் கலையையும் அரசியலையும் தமது இருகண்களாகக் கருதினார். தாம் நடித்த திரைப்படங்கள் வாயிலாக, நல்ல பல கருத்துகள் மக்களைச் சென்றடையப் பெருமுயற்சி எடுத்தார். இத்தகைய செயல்பாடுகள் படிப்பறிவற்ற பாமர மக்கள், எளியோர்கள், உழவர்கள், தொழிலாளர்கள் முதலியோரிடையே மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. கடினஉழைப்பே ஒரு நாட்டுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும் என்று இராமச்சந்திரன் நம்பினார்.

மக்கள் அவரை, புரட்சி நடிகர் என்றும், மக்கள் திலகம் என்றும் போற்றினர். அறிஞர் அண்ணாவின் நெஞ்சம் கவர்ந்தவராக எம்.ஜி.ஆர். விளங்கியதனால், அவரை அறிஞர் அண்ணா, இதயக்கனி என்று போற்றினார்.

இராமச்சந்திரன் நடிப்புத் துறையில் மட்டுமன்றி அரசியலிலும் ஈடுபட்டார். இவர் 1963ஆம் ஆண்டு, சென்னை மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினரானார்.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது பரங்கிமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

1972 ஆம் ஆண்டில், தாமிருந்த இயக்கத்திலிருந்து விலகிப் புதிய கட்சியைத் தொடங்கினார். அவர் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்று முதல்வராகப் பதவி ஏற்றார். பதினோராண்டுகள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகம் அவரது பணிகளைப் பாராட்டி, டாக்டர் பட்டம் வழங்கியது. இந்திய அரசு, சிறந்த நடிகருக்கான பாரத் பட்டத்தை வழங்கி, அவருக்குச் சிறப்புச் செய்தது.

எம்.ஜி. இராமச்சந்திரன் வறுமை, பசிக்கொடுமை ஆகிய இரண்டனையும் இளமையிலேயே உணர்ந்தவர். அதனால் அவர், பெருந்தலைவர் காமராசர் காலத்தில் அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டத்தைத் தொடக்கப்பள்ளியில் படிக்கும் குழந்தைகள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் சத்துணவு வழங்கும் திட்டமாகச் செயல்படுத்தினார்.

புரட்சித் தலைவர் என்று மக்களால் போற்றப்பட்டஎம். ஜி. இராமச்சந்திரன் 24.12.1987 அன்று இயற்கை எய்தினார். எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களது உடல் சென்னை மெரினாக் கடற்கரையில், அண்ணா நினைவிடத்திற்கருகே நல்லடக்கம் செய்யப்பட்டு, அவருக்கான நினைவகம் எழிலுற அமைக்கப்பட்டது.



அவர்தம் பணியைப் பாராட்டி இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது (இந்திய மாமணி) 1988 ஆம் ஆண்டு அவருடைய மறைவுக்குப் பின் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டது.

“வாழ்ந்தவர் கோடி
மறைந்தவர் கோடி
மக்கள் மனதில் நிற்பவர் யார் ?”

என்னும் அவர் நடித்த திரைப்படப் பாடலுக்கு, அவரே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

## மாதிரி வினா

### நெடுவினா

எம். ஜி. இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.

# உவம உருபுகள்

தமிழ்ச்செல்வி குயில்போலப் பாடினாள்.

இத்தொடர் குரலினிமையை உணர்த்துகிறது. குரலினிமைக்குக் குயிலின் குரல் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஒருபொருளைச் சிறப்பித்துக்கூற, அதனைவிடச் சிறந்த வேறொரு பொருளோடு ஒப்பிடுவதே உவமித்துக் கூறுதல் எனப்படும். இவ்வாறு, உவமித்துக் கூறுவதனால் புரியாதன எளிதில் புரியும்; கேட்டார்க்கு இன்பம் பயக்கும். சிறப்பிக்கப்படும் பொருள் உவமேயம் எனப்படும். அதற்கு ஒப்பாகக் காட்டப்படும் பொருள் உவமை எனப்படும். இதனை உவமானம் எனவும் கூறுவர். உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் வரும் உருபு, உவம உருபு எனப்படும்.

தமிழ் தேன்போல இனிமையானது.

இத்தொடரில் போல என்பது உவம உருபு. உவம உருபுகள் பல. அவற்றையும், அவை தொடரில் அமைந்து வருவதனையும் காண்போம்.

| உவம உருபு | | தொடர் |
|---|---|---|
| 1. போல | – | கிளிபோலப் பேசினாள். |
| 2. புரைய | – | வேய்புரை தோள். |
| 3. ஒப்ப | – | தாயொப்பப் பேசும் மகள். |
| 4. உறழ | – | முழவு உறழ் தடக்கை. |
| 5. அன்ன | – | மலரன்ன சேவடி. |

மேற்கண்டவை போன்ற உவம உருபுகள் பல உள்ளன.

போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.

– நன்னூல், 367

### விரியுவமை

உவமை, உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) ஆகிய இரண்டனையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரியுவமை. இஃது, உவமைத் தொடர் எனப்படும்.

(எ–டு) தேன்போன்ற மொழி.

இத்தொடரில் தேன் – உவமை; மொழி – உவமேயம்; போன்ற – உவம உருபு. உவம உருபு, இத்தொடரில் வெளிப்பட வந்துள்ளதனால் இது, விரியுவமை எனப்படும். இஃது, உவமைத் தொடராகும்.

### தொகையுவமை

தேன்மொழி

இதில் உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இதனைத் தொகையுவமை என்பர். இதனை, உவமத்தொகை எனவும் கூறுவர்.

## உவமை உருவக மாற்றம்

பவளவாய் ( பவளம் போன்ற வாய் ) – இத்தொடரில் வாய் பவளத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

பவளம் – உவமை, வாய் – உவமேயம் (உவமையை ஏற்கும் பொருள்)

இவ்வாறு, ஒருபொருளை அதனைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும்.

வாய்ப்பவளம். இத்தொடரில் வாயே பவளம் எனப் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. உவமைத்தொகையில் முதல் பகுதி ( பவளம் ) உவமானமாகவும் அதன் அடுத்த பகுதி உவமேயமாகவும் ( வாய் ) அமையும். உருவகத்தில், உவமேயம் முதல் பகுதி; உவமை அடுத்த பகுதியாக இருக்கும். இவ்வாறு உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது, இரண்டும் ஒன்றே என ஒற்றுமைப்படுத்திக் காட்டுவதே உருவகம்.

| உவமை | – | உருவகம் |
|---|---|---|
| அமுதமொழி | – | மொழியமுது |
| கயற்கண் | – | கண்கயல் |
| தேன்தமிழ் | – | தமிழ்த்தேன் |
| பூவிரல் | – | விரல்பூ |
| மதிமுகம் | – | முகமதி |
| மலரடி | – | அடிமலர் |
| முத்துப்பல் | – | பல்முத்து |
| விற்புருவம் | – | புருவவில் |
| மலர்ப்பாதம் | – | பாதமலர் |

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. மான் ______________ மருளும் பார்வை. (உரிய உவம உருபை இணைத்து எழுதுக.)
2. தொகை உவமைகளை விரியுவமைகளாக மாற்றுக.

அ) மதிமுகம்  ஆ) பவளவாய்

3. விரியுவமைகளைத் தொகையுவமைகளாக மாற்றுக.

அ) கயல்போன்ற விழி ஆ) கிளிபோன்ற மொழி.

4. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

அ) மலர்ப்பாதம் (உருவகமாக)

ஆ) விழிக்கயல் (உவமையாக)

இ) கனிவாய் (உருவகமாக)

ஈ) பல்முத்து (உவமையாக)

5. உனக்குத் தெரிந்த இரண்டு உவமஉருபுகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### மரபுத்தொடர்

நம் முன்னோர் தொன்றுதொட்டு எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு எனப்படும். மரபுச் சொற்றொடர்க்கு நேரடிப்பொருள் கொள்ளாது, அதன் உட்பொருளை அறிந்து தொடர்களில் அமைத்துப் பழகுதல்வேண்டும்.

(எ–டு) அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று சொன்ன காலம் மலையேறிவிட்டது.

சில மரபுத்தொடர்களுக்கான பொருளறிவோம் :

| | தொடர் | | பொருள் |
|---|---|---|---|
| 1. | ஆயிரங் காலத்துப் பயிர் | – | நீண்ட காலத்திற்குரியது |
| 2. | எடுப்பார் கைப்பிள்ளை | – | தன் சிந்தனையின்றிச் சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர் |
| 3. | ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது | – | பட்டறிவில்லாத படிப்பறிவு |
| 4. | அவலை நினைத்து உரலை இடித்தல் | – | எண்ணமும் செயலும் ஒத்துவராமை |
| 5. | முதலைக்கண்ணீர் | – | பொய்யழுகை |
| 6. | அவசரக்குடுக்கை | – | எண்ணித் துணியாதார் |
| 7. | ஆகாயத்தாமரை | – | இல்லாத ஒன்று |
| 8. | கம்பி நீட்டல் | – | சொல்லிக்கொள்ளாமல் செல்லல் |
| 9. | தாளம்போடுதல் | – | எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளல் |
| 10. | கானல்நீர் | – | இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இராதது |
| 11. | பஞ்சாய்ப் பறத்தல் | – | அலைந்து திரிதல் |
| 12. | குட்டிச்சுவர் | – | பயனின்றி இருத்தல் |
| 13. | கொட்டியளத்தல் | – | மிகுதியாகப் பேசுதல் |

பயிற்சி :

அ) ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
2. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றது.
3. இன்று பேருந்துகள் ஓடாது.
4. ஓர்அணில் மரத்தில் ஏறின.
5. நான் வாங்கிய நூல் இது அல்ல.

ஆ) தொடருக்கு ஏற்ற வினா அமைக்க.

1. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
2. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி. இராமச்சந்திரன் கருதினார்.

இ) மரபுத்தொடருக்கேற்ற பொருளைத் தேர்ந்தெழுதுக.

1. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.

   அ) வாழை பயிரிடுதல் ஆ) பரம்பரை பரம்பரையாக இ) பயிர்த்தொழில்

2. எம். ஜி. இராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்.

   அ) தனிப்புகழோடு விளங்குதல் ஆ) கொடி கட்டுதல் இ) கனவு காணுதல்

ஈ) மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. சீட்டுக் கிழிந்துவிட்டது 2. முதலைக் கண்ணீர் 3. கயிறு திரித்தல்

உ) சொற்களுக்கு இருபொருள் தருக.

1. ஆறு ________________, ________________.
2. திங்கள் ________________, ________________.
3. மாலை ________________, ________________.
4. நகை ________________, ________________.
5. மெய் ________________, ________________.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

கருத்துப்பட உருவாக்கத்தில் முன்னோடியாக விளங்கிய வால்ட் டிஸ்னியின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

1. மறைமலையடிகளாரின் தனித்தமிழ் நடையைப் படித்தறிக.

ஒரு குன்றின் உச்சியில் உள்ள கற்பிளவில் உண்டான ஒரு சுனையில் பளிங்குபோல் தெளிவான நீர் நிரம்பியிருந்தது. இச்சுனையில் ஒரு புதுமை காணப்பட்டது; ஒரு நாள் மாலைக்காலம் தொடங்கி மறுநாள் விடியற்காலம் வரையில் இதில் ஓயாமல் நீர் ஊறிச் சுரந்து நிரம்பித் தளும்பிக் கீழே வழிந்து ஓடும்; காலையில் ஏழு மணிக்கு மேற்பட்டால் நீர் சுரப்பதில்லை.

இதனைப் பார்த்து வியந்து கொண்டு அதனின்றும் இறங்கிச் சிறிய கூழாங்கற்கள் சிதறிக் கிடக்கும் அம்மலையடிவாரத்திலுள்ள சுற்றுவழிப் பக்கமாய்ச் சிறிது வழி நடந்துபோனாற் காட்டுமரங்கள் தொகுப்புத் தொகுப்பாயிருக்கும், ஓரிடத்திற் கான்யாறு ஒன்று ஓடி வருகின்றது. அவ்வியாற்றில் நான் ஒரு நாள் தலைமுழுகச் சென்றபோது, வானுலகத்தினின்றும் வழுவி வீழ்ந்த மின்னல் கொடிபோல் நாலைந்து மகளிர் நீரில் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களைப் பார்ப்பதற்கு நாணித் தலை கவிழ்ந்துகொண்டு நான் அப்புறம் மறைவாய்ப் போய்விட்டேன்.

போய், கரையிற் கொடி பிணைந்து அடர்ந்திருக்கும் ஒருமரங் கோணி நீரளவுஞ் சென்று மேற்கவிந்து இருந்தமையால் நிழல் உள்ளதொரு துறையில் இறங்கித் தன்னந்தனியனாய்த் தலை முழுகினேன்; அங்ஙனம் நிழல் செறிந்திருக்கும் அவ்விடத்தில் நீரோட்டம் மிகக் குளிர்ந்திருந்தது; கரிய வரால் மீன்கள் என் பக்கத்தே மேய்ந்துகொண்டு துள்ளிப் பாய்ந்தன; கரையை அடுத்து வளர்ந்திருக்கும் மணற் புதர் அண்டையில் இரு மீன்கள் துள்ளித் துள்ளிப் பாய்ந்தன.

அப்போது நான், அரவஞ்செய்தால் அவையோடிப் போகுமென்றெண்ணி, நீரில் மெதுவாக அமுங்கி அமுங்கி எழுந்து அவற்றை வியந்து நோக்கினேன்.

இவ்வுரைப்பகுதியை வாய்விட்டுப் படிக்க. பொருளுணர்வுக்கேற்பக் குரலேற்றத் தாழ்வுடன் மீண்டும் ஒருமுறை படித்தின்புறுக.

### இ) எழுதுதல் திறன்

குறிப்புகளை விரித்து எழுதுதல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி, ஒரு பக்க அளவில் விரித்து எழுதுக. அவ்வுரைப்பகுதிக்குத் தலைப்பு ஒன்று தருக.

நீரின்றி இயங்காது உலகம் – நீர் நிலைகள் அடிப்படை – நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம் – நீரைச் சேமிக்கும் வழிகள் – மழைநீரைச் சேமித்தல் – நிலத்தடிநீரைச் சேமித்தல் வழிமுறைகள் – மரம் வளர்ப்போம் – மழை பெறுவோம்.

### ஈ) கட்டுரை:

நான் விரும்பும் தலைவர்.

### உ) கடிதம்

நீ கண்டுகளித்த இடம் குறித்து நண்பனுக்கு.

## தமிழெண்களை அறிவோம்

1. பொருத்துக.

| அரபு எண்கள் | | தமிழெண்கள் |
|---|---|---|
| 1. 100 | – | கஉ௦ |
| 2. 120 | – | கஎ௦ |
| 3. 150 | – | உ௦௦ |
| 4. 170 | – | கஉ௦ |
| 5. 200 | – | க௦௦ |

## பண்பு

### பெரியோரைப் பேணல்

குமரனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு. அவனை ஏன் உங்களுக்கு நான் அறிமுகப்படுத்தவேண்டும்? காரணம் இருக்கிறது, சொல்கிறேன். குமரன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். விடுமுறையில் அவன் வீட்டில் இருந்தபோது, ஒருநாள், அவனுடைய அம்மா ஏதோ பொருள் வாங்கக் கடைக்குப் போகச் சொன்னார். அவனோ, என்னால் முடியாது, நீங்களே கடைக்குப் போங்க என்றான். சிறிது நேரம் கழித்து அவன் தந்தை, குமரா, மிதிவண்டிக்குக் காற்றடித்து வை என்றார். அப்பா எனக்குத் தூக்கம் வருகிறது; நான் தூங்கப் போகிறேன் என்றான் குமரன்.

மாலையில் அவன் அம்மா குமரா, உன் அத்தை ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்களைப் பேருந்துநிலையத்திலிருந்து அழைத்துக்கொண்டுவாப்பா என்றார். அப்போதாவது அவர்கள் சொல்வதனைக் கேட்டானா? அதுதான் இல்லை. போங்கம்மா, எனக்கு நிறைய வேலை இருக்கிறது, அண்ணனைப் போகச் சொல்லுங்கள் என்றான். இப்போது புரிந்ததா? நான் ஏன் குமரனைப்பற்றித் தெரிந்து கொள்ளக் கூறினேன் என்று?

பெற்றோர் சொல்வதனைக் கேட்டல் வேண்டும்; பெரியோரை மதித்தல் வேண்டும். அவர் சொற்படி நடத்தல் வேண்டும். நீங்கள் எப்படி?

## வாழ்க்கைத்திறன்

### மனவெழுச்சிகளை எதிர்கொள்ளும் திறன்

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால், கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால், தன்னைக் கண்டிப்பார்கள்; திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

இந்நிலையில் கதிரவன், தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?

கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

1. நண்பர்களுடன் செல்வதில் தவறில்லை என்று நினைப்பேன்.
2. எனக்கு உடல்நலமில்லை என்று கூறி மென்மையாக மறுத்துவிடுவேன்.
3. நண்பர்களுடன் பழகுவதனை நிறுத்திவிடுவேன்.

## மதிப்புக்கல்வி

### அறிவுநுட்பம்

இந்திய அரசியலுடன் நெருங்கிய தொடர்புகொண்ட மிகப்பெருந்தலைவர் ஒருவர், தம் நண்பர்களுடன் தொடர்வண்டியில் ஒருநாள் பயணம் செய்து கொண்டிருந்தார். நண்பர்களுள் ஒருவர் ஓய்வுபெற்ற ஆசிரியர். மாணவர்கள், தங்கள் நினைவாக அவருக்குக் கைக்கடிகாரம் ஒன்றனைப் பரிசளித்திருந்தார்கள். தொடர்வண்டிப் பயணத்தின்போது, எதிர்பாராதவிதமாக அந்தக் கைக்கடிகாரம் தவறி வெளியே விழுந்துவிட்டது. நண்பர், கடிகாரம் தவறி விழுந்துவிட்டதனை அத்தலைவரிடம் வருத்தத்துடன் கூறினார். அதனைக் கேட்ட தலைவர், பதிலேதும் கூறாமல் வேடிக்கை பார்த்தபடி வந்தார். அடுத்த நிலையத்தில் வண்டி நின்றதும், நிலைய அலுவலரிடம் சென்று, கைக்கடிகாரம் ஒன்று பயணத்தின்போது வெளியே விழுந்துவிட்டது. அதைக் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு உண்டென அறிவிப்புக் கொடுங்கள் என்று கூறி, நண்பரின் வீட்டுமுகவரியையும் அந்தத் தலைவர் கொடுத்தார். மூன்று நாளுக்குப் பின், நண்பரிடம் கைக்கடிகாரம் வந்துசேர்ந்துவிட்டது.

நண்பர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். கைக்கடிகாரம் கீழே விழுந்தபோது, மற்றவர் எல்லாரும் அது குறித்துப் பேசிக்கொண்டிருக்க, அந்தத் தலைவர் மட்டும் கவலைப்படாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்ததாகத்தான் மற்றவர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர், கடிகாரம் எங்கு விழுந்தது என்று நண்பர் கூறினாரோ அந்த இடத்திலிருந்து எத்தனை தந்திக் கம்பங்கள் அடுத்த தொடர்வண்டி நிலையம்வரை உள்ளன என்று எண்ணிக்கொண்டு வந்தார். அதனால்தான், நிலைய அலுவலரிடம் கூறும்போது கடிகாரம் விழுந்த இடத்தினைச் சரியாகவும் தெளிவாகவும் கூற முடிந்தது. விழுந்த பொருளும் உடனடியாகக் கிடைத்தது. அவரின் அறிவுநுட்பம்தான் இதற்குக் காரணம். அவர் யார் தெரியுமா? இந்திய அரசியலில் சாணக்கியர் என்று போற்றப்பட்ட மூதறிஞர் இராசகோபாலாச்சாரியாரே அவர்.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

The Television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning are specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals. The Television is also used for commercial advertisements.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | | |
|---|---|---|
| 1. | Birds of the same feather flock together. | இனம் இனத்தோடு சேரும். |
| 2. | Every cock will crow upon his own dunghill. | வீட்டில் எலி வெளியில் புலி. |
| 3. | Failure is the stepping stone to success. | தோல்வியே வெற்றிக்கு அடிப்படை. |
| 4. | Art is long and life is short. | கல்வி கரையில, கற்பவர் நாள் சில. |
| 5. | Look before you leap. | ஆழம் அறியாமல் காலைவிடாதே. |

# தமிழ்விடு தூது

அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே – விரிவார்

திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மடைப் போக்கா – நிகழவே

நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி – நல்லநெறி

நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்குநாள் – மேலோரில்

பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் – சீத்தையரைக்

குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் – கட்டி

வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து – இளங்கனியாய்த்

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

பாடற்பொருள் : தமிழே! உமக்குத் தலைமைப் பேறு அளித்தால், உமக்கு ஒப்பாவர் ஒருவருமிலர். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் வயலின் வரப்புகளாகவும், துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்கள் மடைகளாகவும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்களையும் நல்ல ஏர்களாகவும் கொண்டு சொல்லேருழவர் உழவு செய்ய, வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் ஆகிய செய்யுள் நன்னெறிகளே விதைகளாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன

விளைபொருள்களாயின. இப்பயிர்களின் இடையே வளரும் களைகளாகிய போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிபுத்தூரனும் தலையை வெட்டுவதற்கு ஒட்டக்கூத்தனும் இருந்தமையால், தமிழே நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்.

தமிழே! பால், முந்திரி, வாழை, கரும்பு, இளநீர்போல் பல்வகையான சுவைகளையும் தருகின்றாய். தெளிந்த அமுதமாகவும், மேன்மையான வீடுபேற்றை அளிக்கும் கனியாகவும், அறிவினால் உண்ணப்படும் தேனாகவும் விளங்கும் தமிழே! உம்மிடத்து மகிழ்ந்து உரைக்கும் ஒரு விண்ணப்பம் உண்டு; கேட்பாயாக.

**சொற்பொருள் :** அரியாசனம் – சிங்காதனம்; பா ஒரு நான்கு – வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா; வரம்பு – வரப்பு; ஏர் – அழகு; நாற்கரணம் – மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; நெறிநாலு – வைதருப்பம் (ஆசுகவி), கௌடம் (மதுரகவி), பாஞ்சாலம் (சித்திரகவி, மாகதம் (வித்தாரகவி) ஆகிய செய்யுள் நெறிகள். இவை விதையாய் உருவகம் செய்யப்பட்டன. நாற்பொருள் – அறம், பொருள், இன்பம், வீடு; இவை வயலின் விளைவாக உருவகம் செய்யப்பட்டுள்ளன. கோட்டிகொளும் – கூட்டமாகக் கூடும்; சீத்தையர் – கீழானவர், போலிப்புலவர்; தூர்கட்டி – பயிர் அடி பருத்து வளர்தல்; நாளிகேரம் – தென்னை.

**இலக்கணக்குறிப்பு :** செவியறுத்து (செவியை அறுத்து) – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

**பிரித்தறிதல் :** நாற்கரணம் – நான்கு + கரணம்; கரணத்தேர் – கரணத்து + ஏர்; நாற்பொருள் – நான்கு + பொருள்; செவியறுத்து – செவி + அறுத்து; இளங்கனி – இளமை + கனி; விண்ணப்பமுண்டு – விண்ணப்பம் + உண்டு.

**நூற்குறிப்பு :** தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் தூதும் ஒன்று. கலிவெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அஃறிணைப்பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம். மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர்மேல் காதல்கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடு தூது. இதனை இயற்றியவர் பெயர் அறிய இயலவில்லை.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினா

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் ____________________.
2. நால்வகைப் பாக்களும் வயலுக்கு ____________________.அமைந்துள்ளன.

### ஆ) சிறுவினாக்கள்

1. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை ?
2. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை ?
3. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

### இ) நெடுவினா

தமிழ் எவ்விதம் செழித்து வளர்ந்ததாகத் தமிழ்விடு தூது கூறுகிறது ?

# தொன்மைத் தமிழகம்

தமிழ்நாடு தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. முதல் மாந்தன் தோன்றிய இலெமுரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர். தமிழகம் இன்றுபோல் இல்லாது, குமரிமுனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து, குமரிமலை, பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது. இச்செய்தியைப் பின்வரும் சிலப்பதிகாரப் பாடல் வரிகள் தெளிவாக உணர்த்தும்.

"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள."

புரட்சிக்கவிஞர்பாவேந்தர்பாரதிதாசன், தமிழின்பழஞ்சிறப்பினைப்பெருமிதம் பொங்கப்பின்வருமாறுபாடுகிறார்.

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்"

## தமிழ்மொழியின் தொன்மை

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா தனி நாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர்; உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர்; வினையை ஆடவர் உயிராகக் கருதினர்; சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்; விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்; ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

## வாணிகம்

பழந்தமிழ் நாட்டில் வாணிகம் வளர்ந்திருந்தது. தமிழர்கள், அறத்தின் வழியே வாணிகம் செய்தார்கள். பொருள் தேடுவது ஒன்றனையே குறிக்கோளாகக் கொள்ளாதவர்கள். அவர்கள் கொள்வதும் மிகைகொளாது, கொடுப்பதும் குறைபடாது வாணிகம் செய்தார்கள்; உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொருளீட்டினார்கள். நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு முதலிய தானிய வகைகளையும், உளுந்து, கடலை, அவரை, துவரை, தட்டை, பச்சை, கொள்ளு, எள்ளு முதலிய பயறு வகைகளையும் தமிழர்கள் விற்றார்கள்.

### கடல் வாணிகம்

கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர்; பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல்கடந்து வாணிகம் செய்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன. கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில்தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்குச் சாவகநாட்டுடனும் கடல் வாணிகத்தொடர்பு இருந்தது.

### மொழித் தொன்மை

வரலாற்றாசிரியர் பலரும் கிறித்துவ ஊழித் தொடக்கத்துக்கு முன்பே மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்திருக்கவேண்டும் என்று நவில்கின்றனர். தமிழ்ச்சங்கம் இருந்தது என்ற மரபுச் செய்தி இடைவிடாது இருந்து வருகிறது. இந்தியாவில் இத்தகைய மரபுச் செய்தி வேறெங்குமில்லை என்ற தனிநாயகம் அடிகளின் கூற்று, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. தமிழ்கெழு கூடல் என்று புறநானூறும் தமிழ்வேலி என்று பரிபாடலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தனையே குறிக்கின்றன. 'கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்' என்று மணிவாசகமும் பழந்தமிழ்ச் சங்கத்தனையும் சங்கமிருந்து தமிழாய்ந்ததனையும் குறிப்பிடுகிறது.

உலக நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் சிறந்த பங்களிப்பினைத் தமிழ்மொழி அளித்திருக்கிறது. உலகில் உள்ள உயரிய மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

### ஏற்றுமதியும் இறக்குமதியும்

பண்டைக் காலத்து வாணிகப் பொருள்கள் துறைமுக நகரங்களிலிருந்து ஏற்றுமதியாயின. பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் அவற்றை அழகுறக்கூறும். காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் பொருள்கள் மண்டியும் மயங்கியும் கிடந்ததனைப் பின்வரும் பட்டினப்பாலை வரிகள் விளக்கும்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
... ... ...
... மயங்கிய நனந்தலை மறுகு.

### இசைக்கலை

உலகில் மொழி உருவம் பெறுவதற்கு முன் இசை பிறந்துவிட்டதென்பர். மனிதன், தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு இசையே கருவியாயிற்று. பண்டைக்காலத் தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. பண்கள், இசைக் கருவிகள்,

இசைக்கலைஞர்கள், இசைப்பாடல்கள் என இசை பற்றிய ஏராளமான குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளன. தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன. 'நரம்பின் மறை' என்று தொல்காப்பியர் உரைப்பதன்மூலம் இசை இலக்கணநூல் உண்டெனஉணரமுடிகிறது.

மேலும் பாணன், பாடினி, கூத்தன், விறலி என்று இயலிசை நாடகக் கலைஞர்கள் இருந்தமையையும் அறிய முடிகிறது. தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்புவரைக்கும் இசையே முதன்மை பெறுகிறது. தாலாட்டு என்பது குழந்தையைத் தொட்டிலிலிட்டுப் பாடுவது. ஒப்பாரி என்பது, இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்று இறந்தவரைப்பற்றிப் பாடுவது.

இன்றைய கருநாடக இசைக்குத் தாய் நம் தமிழிசையே. 'பண்ணொடு தமிழொப்பாய்' என்னும் தேவாரம், பண்ணும் தமிழும் பிரிக்க முடியாததொன்று என்று நவிலும். தமிழர், ஐவகை நிலத்திற்கும் ஐந்திணைக்கும் ஏற்ற பண்ணிசை வகுத்தனர்; தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி எனப் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இன்புற்றனர். குழலினிது யாழினிது என்று இசைபொழியும் கருவிகளை வள்ளுவம் குறிக்கின்றது. இதன்மூலம் தமிழிசை தொன்மையும் சிறப்பும் பெற்றிருந்ததனை அறியலாம்.

### உழவுத் தொழில்

பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது திருக்குறள், தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது. உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது. மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

### பழந்தமிழர் வாழ்வு

அறத்தின் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு; அறத்தின் வழியே பொருளைக் கண்டது; அவ்வறத்தின் வழியே இன்பத்தினை எட்டியது. அக்காலத்தே அறம், பொருள், இன்ப வாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர். அறத்தினைக் கைக்கொண்டதனால் வீடு என ஒன்று வேண்டாததாயிற்று.

பழந்தமிழர் அன்பு வழியினர். அறத்துக்கே அன்பு சார்பு என்பதனை நன்கு உணர்ந்திருந்தனர். அன்பைப் போற்றியது போலவே வீரத்தினையும் ஏற்றிப் போற்றினர். 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்னும் புறப்பாடல், வீரத்தினை முதற்கடமையாக்குகிறது. வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்துகொள்ள விழையார். ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற்புலவர், பெண்களின் பெருவீரத்தினைப் பாடுகிறார். முதல்நாள் போரில் தந்தையைப் பறிகொடுத்தாள். இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள். மூன்றாம் நாளும் போர் தொடர்கிறது. மறக்குடியில் பிறந்த மாண்புடையவள் அப்பெண். நெஞ்சம் துடித்த அவள், பால்மணம் மாறாச் சிறுமகன் தன்னைச் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே, அவள் துணிவு!

பண்டைத் தமிழரின் தொன்மையை, மொழியின் பெருமையை, தொழில் வளத்தை, உழவின் சிறப்பை, நாகரிக வாழ்வை, அன்பின் திறத்தினை, வீரத்தின் மாண்பை அறிவோம்; தொன்மைத் தமிழகத்தின் பெருமையை உணர்வோம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக**

அ) இலெமூரியாவை ____________ நாகரிகத் தொட்டில் என்பர்.

ஆ) தனக்குவமையில்லா ஒரு ____________ தமிழ்இனம்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக**

'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல்.

அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) தேவாரம்

**3. சந்திப்பிழை நீக்கி எழுதுக**

மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.

**4. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக**

அ) காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகப் பொருள்கள் மண்டிக் கிடந்தது.

ஆ) தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

**5. தொடருக்கேற்ற வினாத்தொடர் அமைக்க**

தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்புகொண்டிருந்தார்கள்.

### ஆ) குறுவினாக்கள்

1. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

2. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

2. உழவுத்தொழில் குறித்து எழுதுக.

### ஈ) நெடுவினா

தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்தெழுதுக.

**செயல் திட்டம் :** இதழ்கள் வாயிலாகத் தமிழகத்தின் கல்வி, பொருளாதாரம் குறித்துக் கருத்துகளைத் திரட்டிக் கலந்துரையாடுக.

# தற்காலத் தொல்லியல் ஆய்வுகள்

## ( உரையாடல் )

( பத்தாம் வகுப்பில் பயிலும் வளவனும் கபிலனும் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தனர்.)

வளவன் : கபிலா, இன்றைய நாளிதழில் செய்தி ஒன்றைப் படித்தாயா?

கபிலன் : காலையில் நாளிதழ் படிக்கவில்லை; சிறப்புச் செய்தி ஏதேனும் உண்டா?

வளவன் : ஆம். ஒரு கல்வெட்டைப் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. அது, திருவண்ணாமலையில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு. அக்கல்வெட்டுவரிகள், சங்ககால மன்னன் நன்னனையும், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் நூலையும் குறிக்கின்றன. எத்துணை அரிய செய்தி இது, பார்த்தாயா!

"நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்தும் மேம்படத் தங்கோன்
வாகையும் குரங்கும் விசைய முந்தீட்டிய
அடல்புனை நெடுவேல் ஆட்கொண்ட தேவன்"

கபிலன் : வளவா, தொல்லியல் பற்றி எனக்கு ஏதும் தெரியாதே! அத்துறையில் உனக்குள்ள ஆர்வத்தைக் கண்டு வியக்கிறேன். தொல்லியல்பற்றி நீ அறிந்தனவற்றைச் சொல்; நானும் தெரிந்துகொள்கிறேன்.

வளவன் : நம் தமிழாசிரியர் இளங்கோ, இத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டவர். அவரிடம் சென்று, இதுபற்றிய விவரங்களை அறிந்துகொள்வோம்.

இருவரும் : வணக்கம், ஐயா!

தமிழாசிரியர் : வருக, வணக்கம்! இருவரும் இணைந்து வந்துள்ளீர்களே! என்ன செய்தி?

கபிலன் : ஐயா! தொல்லியல் பற்றி நானும் வளவனும் கலந்துரையாடிக் கொண்டிருந்தோம். அதுபற்றிய தகவல்களைத் தங்களிடம் கேட்டு அறிந்துகொள்ள வந்துள்ளோம்.

தமிழாசிரியர் : மிக்க மகிழ்ச்சி. உங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். இதுபற்றி எனக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்கிறேன்.

கபிலன் : ஐயா, தொல்லியல் என்றால் என்ன?

தமிழாசிரியர் : தொல்பழங்காலத்தைப்பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் அல்லது தொல்பொருளியல் என்கிறோம். தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, தொழில்கள், வாணிகம், வேளாண்மை,

அரசியல், நுண்கலைகள் முதலியவைபற்றி அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களான கல்வெட்டுகள், கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆய்ந்தறிதலே தொல்லியலின் முதன்மையான நோக்கம். தொல்லியலை ஆங்கிலத்தில் 'ஆர்க்கியாலஜி' எனக் குறிப்பிடுவர். தொல்லியல் ஆய்வு இன்றேல், மனிதன் கடந்துவந்த பாதையையும் அவனுடைய வரலாற்றையும் அறிய இயலாது.

**வளவன்** : ஐயா, தொன்மைக்காலம் என்பதற்கான காலவரையறை என்ன?


**தமிழாசிரியர்** : மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்து, வரலாற்றுக்கு முந்தைய காலம்வரை உள்ள காலத்தையே தொன்மைக்காலம் என்கிறோம்.

**கபிலன்** : தொன்மைக்கால நிகழ்வுகளை எவ்வாறு கண்டறிகிறார்கள், ஐயா?

**தமிழாசிரியர்** : அவ்வப்போது திட்டமிட்டுச் செய்யப்படும் ஆய்வுகளின்போதோ தற்செயலாகக் கிடைக்கும் தடயங்கள், எச்சங்களின் உதவியுடனோ தொன்மைக்கால நிகழ்வுகளைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிகிறார்கள்.

**வளவன்** : எச்சங்கள், தடயங்கள் என்றால் என்ன?

**தமிழாசிரியர்** : இக்கருத்தை உங்களுக்குப் புரியவைக்க ஓர் எடுத்துக்காட்டைக் கூறுகிறேன். மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் இடம்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் ஒரு துறைமுக நகரம். அது சோழர்களின் கடற்கரை நகரம். இந்நகரம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இந்தியத் தொல்லியல் துறையினர் 1963ஆம் ஆண்டு







**காசுகள்**

தருமபுரி, கரூர், மதுரை ஆகிய மாவட்டங்களில், கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பல்வேறு காலக்கட்டங்களைச் சார்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு உலோகங்களினால் செய்யப்பட்ட காசுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் ஒரு பக்கத்திலோ இரு பக்கங்களிலோ முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகளில் சூரியன் மலைமுகடு, ஆறு, காளை, ஸ்வஸ்திகம், கும்பம் முதலிய சின்னங்கள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

பூம்புகார் அருகில் உள்ள கீழார்வெளி என்னும் இடத்தில் மேற்கொண்ட கடல் அகழாய்வின்போது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்டன. இந்த ஆய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத் துறை, அரைவட்டவடிவ நீர்த்தேக்கம், புத்தவிஹாரம் (புத்த பிக்குகள் தங்குமிடம்), வெண்கலத்தாலான புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன. இவை பண்டைய காவிரிப்பூம்பட்டின மக்கள் பயன்படுத்திய பொருள்கள் என்பதும் காவிரிப்பூம்பட்டினம் என்றொரு நகரம் இருந்தது என்பதும் வலுவான சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. காவிரிப்பூம்பட்டினம் என்ற ஒரு நகரம் இருந்தது என்பதற்கு, அங்கே கிடைத்த தடயங்கள்தாம் காரணமாக இருந்தன என்பதனை நீங்கள்அறிந்துகொண்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன்.

கபிலன் : ஆமாம் ஐயா, தெளிவாகத் தெரிந்துகொண்டோம்.

தமிழாசிரியர் : நன்று. இப்போது உங்களின் அறிவுத்திறனுக்கோர் வினா. காவிரிப் பூம்பட்டினஅகழாய்வில் கண்டறிந்த தடயங்களிலிருந்து நீங்கள் என்னென்ன அறிந்துகொண்டீர்கள்?

வளவன் : அங்குக் கிடைத்துள்ள புத்தர்சிலை, தூண் போன்றவற்றைக்கொண்டு, அங்கு வாழ்ந்த மக்களில் சிலர் புத்தசமயத்தைப் பின்பற்றியுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது, ஐயா.

தமிழாசிரியர் : அருமையாகச் சொன்னாய். கபிலா, வேறு என்னென்ன தகவல்களைப் பெறலாம்?

கபிலன் : படகுத்துறை கட்டப்பட்டுள்ளதனை நோக்கும்போது, அவ்வூர் மக்கள் கடல் வாணிகம் மேற்கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது, ஐயா!

தமிழாசிரியர் : மிக நன்று. தொல்லியல் ஆய்வில் இருவரும் தேறிவிட்டீர்கள். இவ்வாறு அகழாய்வில் கிடைக்கும் ஒவ்வொரு தடயத்திலிருந்தும் ஆய்வாளர் பல்வேறு வரலாற்று உண்மைகளை அறிந்துகொள்கின்றனர்.

வளவன் : ஐயா, அகழாய்வு என்பது பெரிய இயந்திரங்களைக்கொண்டு மண்ணைத் தோண்டி ஆய்வு செய்வதா?

தமிழாசிரியர் : (சிரித்துவிட்டு) அகழாய்வு என்பது இயந்திரங்களைக் கொண்டு மண்ணைத் தோண்டுவதன்று. அவ்வாறு செய்தால் தடயங்கள் சிதைந்துவிடும். பல உண்மைகளையும் நாம் இழந்துவிடுவோம். ஆகவே, ஆய்வுக்குழுவினர் ஆய்விடத்திலுள்ள மண்ணை மிக நுட்பமாகவும் பொறுமையுடனும் சிறுகச் சிறுகத் தோண்டிச் சிதையாமல் தடயங்களைத் திரட்டுவர்; அகழாய்வு செய்யும்போது பூமியின் மேற்பரப்பிலிருந்து கீழாகக் குறிப்பிட்ட ஒரு பகுதியினைச் சில வழிமுறைகளைப் பின்பற்றி அகழ்ந்து ஆய்வு செய்வர். இவ்வாறு செய்யுங்கால் பல்வேறு காலத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருள்கள் வெவ்வேறு மண்ணடுக்குகளில் கிடைப்பதுண்டு. இவற்றின் அடிப்படையில்தான் ஒரு நாகரிகத்தின் கூறுகளை அறிந்துகொள்ள இயலும். ஓரிடத்தில்









தமிழர்களின்
வீரவிளையாட்டான
ஏறுதழுவுதல்
மொகஞ்சதாரோவில்...

எப்போதிருந்து மக்கள் வாழத் தொடங்கினர், எத்தகைய பண்பாட்டினைக் கொண்டு விளங்கினர் என்பன போன்ற வினாக்களுக்கு அகழாய்வின் மூலம் உரிய விடைகளைக் கூறஇயலும்.

**வளவன்** : மண்ணை நுட்பமாகத் தோண்டி ஆய்வு செய்வதுதான் அகழாய்வு இல்லையா, ஐயா ?

**தமிழாசிரியர்** : சரியாகச் சொன்னாய் வளவா! அகழாய்வினைப் பூமியின் மேற்பரப்பினில் மட்டுமன்றிக் குகைகளினுள்ளும் நீருக்கடியிலும் செய்யலாம். நீருக்கடியில் அகழாய்வு செய்வதன்மூலம் இயற்கைச் சீற்றங்களினால் முற்காலத்தில் நீரினுள் மறைந்த நகரங்களையும் துறைமுகங்களையும் பற்றிய அரிய பல செய்திகளை வெளிக்கொணர இயலும்.

**வளவன்** : ஐயா, அகழாய்வு செய்யும் இடத்தை எந்த அடிப்படையில் முடிவு செய்கிறார்கள் ? குறிப்பிட்ட ஓர் இடத்தில் தேவையான தடயங்கள் கிடைக்கும் என எவ்வாறு தீர்மானிக்கின்றனர் ?

**தமிழாசிரியர்** : ஒரு நாட்டின் பழைமையான இலக்கியங்கள் அகழாய்விற்குரிய இடங்களைத் தெரிவுசெய்வதற்கு உறுதுணையாக இருக்கின்றன. அவற்றில் அக்காலத்தின் சிற்றூர்கள், நகரங்கள், துறைமுகங்கள், கோட்டைகள், அரண்மனைகள் முதலியவற்றைப் பற்றிய குறிப்புகள் பரவலாகக் காணப்படும். அவற்றின் துணைகொண்டு அகழாய்வு செய்வதற்கான இடங்களை முடிவு செய்கின்றனர்.



பண்டைய காலத்தில் இறந்தோரை, அவர்கள் பயன்படுத்திய பொருள்களுடன் ஒரு தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கம் இருந்தது. இவ்வகைத் தாழிகளையே முதுமக்கள் தாழிகள் என்கிறோம். தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 1876, 2003 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. கி.மு.300 முதல் கி.பி. 300 வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த இத்தாழிகளில் இறந்தோரின் எலும்புகளுடன் தங்கத்தினாலான நெற்றிப் பட்டம், செம்பினாலான ஆண், பெண் தெய்வ உருவங்கள், மற்றும் இரும்பினாலான கத்திகள், விளக்குத் தாங்கிகள் முதலிய பொருள்களும் கிடைத்துள்ளன.

**கபிலன்** : ஐயா, தொல்லியல் என்னும் துறையைப்பற்றித் தோண்டத் தோண்டச் செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றனவே.

**தமிழாசிரியர்** : ஆமாம், கபிலா! தொல்லியல் குறித்துச் சில செய்திகளை மட்டுமே நாம் பகிர்ந்து கொண்டுள்ளோம். அறிவியல் முன்னேற்றங்களால் தற்காலத்தில் தொல்லியல் ஆய்வுகளைப் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களின் உதவியுடன் செய்யும்போது மிகத்துல்லியமான முடிவுகளைப் பெறலாம். இதுபற்றி மேலும் பல தகவல்களை அறிந்துகொள்ள நூலகத்தினை நாடிச்சென்று தொல்லியல் தொடர்பான நூல்களைப் படித்து அறியலாம்.

**இருவரும்** : தொல்லியல் குறித்துப் பல செய்திகளைத் தங்களிடமிருந்து அறிந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி; நன்றி, ஐயா.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. தொல்லியல் துறைபற்றி எழுதுக.
2. அகழாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
3. தொன்மைக்கால நிகழ்வுகளைக் கண்டறிவதற்குத் தடயங்கள் எவ்வாறு உதவுகின்றன?

**செயல் திட்டம் :** அருங்காட்சியகம் சென்று பார்வையிடுக. அது குறித்துக் கட்டுரை ஒன்று எழுதுக.

# புணர்ச்சி

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் சேர்வது புணர்ச்சி எனப்படும். இவ்வாறு இருசொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி, இயல்பாகச் சேர்வது இயல்புப்புணர்ச்சி.

(எ–டு) பொன் + வளையல் = பொன்வளையல்.

இருசொற்கள் சேரும்போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை விகாரப்புணர்ச்சி என்பர்.

(எ–டு)

1. வாழை + பழம் = வாழைப்பழம் – தோன்றல்
2. மரம் + வேர் = மரவேர் – கெடுதல்
3. பொன் + குடம் = பொற்குடம் – திரிதல்

இவை குறித்த விளக்கங்களை முன்வகுப்பில் பெற்றீர்கள். இப்போது திசைப்பெயர்ப் புணர்ச்சி, பண்புப்பெயர்ப் புணர்ச்சி, மகர ஈற்றுப் புணர்ச்சி ஆகியன குறித்துக் காண்போம்.

## அ) திசைப்பெயர்ப் புணர்ச்சி

முதன்மைத் திசைகள் நான்கு. அவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகியன. திசைப்பெயர்களோடு திசைப்பெயரும், பிறபெயரும் சேர்வது திசைப்பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

1. வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
   வடக்கு + மேற்கு = வடமேற்கு

வடக்கு என்னும் நிலைமொழி கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு நீங்கிப் புணர்ந்தது.

2. தெற்கு + மேற்கு = தென்மேற்கு
   தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

தெற்கு என்னும் திசைப்பெயரோடு மேற்கு, கிழக்கு என்னும் திசைப்பெயர்கள் சேரும்போது, நிலைமொழியின் இறுதியிலுள்ள கு நீங்கும்; பிறகு றகர மெய் னகரமாகிப் புணரும்.

## ஆ) திசைப்பெயரோடு பிற பெயர்களின் புணர்ச்சி

1. வடக்கு + மலை = வடமலை.

இதில் நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு ஆகியன இரண்டும் நீங்கிப் புணர்ந்தது.

2. தெற்கு + திசை = தென்திசை.

இதில் நிலைமொழியின் இறுதியாகிய கு நீங்கியது; அதன் அயல் எழுத்தான ற் – ன் ஆக மாறிப் புணர்ந்தது.

3. கிழக்கு + நாடு = கீழ்நாடு.

இங்கு நிலைமொழியின் இறுதியாகிய க்கு நீங்கி, ழ என்னும் உயிர்மெய்யில் ( ழ் + அ ) அகரம் நீங்கி, கி என்னும் முதல் எழுத்து கீ என நீண்டு, கீழ் + நாடு – கீழ்நாடு எனப் புணர்ந்தது.

4. மேற்கு + நாடு = மேல்நாடு, மேனாடு.

நிலைமொழியில் கு நீங்கியது. அதன் அயலெழுத்தான ற் – ல் ஆக மாறி மேல் + நாடு = மேல்நாடு எனவும், ற் – ன் ஆக மாறி மேல் + நாடு = மேனாடு எனவும் இருவகையில் புணர்ந்தன.

திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற. – நன்னூல், 186

### இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியன குறித்து வரும் சொற்கள் பண்புப் பெயர்களாம். செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, இளமை, புதுமை போல்வனவும் இவற்றுக்குரிய எதிர்ச்சொற்களும் இவைபோன்ற பிறவும் மையீற்றுப் பண்புப்பெயர்கள் எனப்படும்.

1. கருவிழி = கருமை + விழி – கரு + விழி = கருவிழி

ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து மை நீங்கிப் புணர்ந்தது.

2. பெரியன் = பெருமை + அன் – பெரு + அன்; பெரி + அன்;
பெரி + ய் + அன் = பெரியன்.

ஈறு போதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து, மை நீங்கிப் பின் பெரு என்பதன் இறுதி உகரம் இடைஉகரம் இஆதல் எனும் விதிப்படி பெரி யாகிப் பின் யகர உடம்படுமெய் பெற்றுப் பெரி + ய் + அன் என்பது ‘உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்னும் விதிப்படி, ய் + அ = ய என்றாகிப் பெரியன் எனப் புணர்ந்தது.

3. பாசிலை = பசுமை + இலை – பசு + இலை; பாசு + இலை;
பாச் + இலை = பாசிலை.

நிலைமொழி ஈறுகெட்டு ஆதி நீடல் என்னும் விதிப்படி, பாசு + இலை என்றாகியது. 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி, பாச் + இலை என்றாகிப் பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி பாசிலை எனப் புணர்ந்தது.

4. பைங்கூழ் = பசுமை + கூழ் – பசு + கூழ், பைசு + கூழ், பை + கூழ்; பைங் + கூழ் = பைங்கூழ்

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை நீங்கியது. (பசு + கூழ்) 'அடிஅகரம்' ஐ ஆதல் எனும் விதிப்படி ப – பை ஆனது. 'இனையவும்' என்னும் விதிப்படி உயிர்மெய் (சு) கெட்டது. 'இனமிகல்' என்னும் விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான க் எழுத்துக்கு இனமான ங் மிகுந்து பைங்கூழ் எனப் புணர்ந்தது.

5. சிற்றோடை = சிறுமை + ஓடை – சிறு + ஓடை; சிற்று + ஓடை; சிற்ற்+ ஓடை = சிற்றோடை.

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை கெட்டது. 'தன்னொற்று இரட்டல்' என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது. பின் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது. பின்னர் 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.

6. சேதாம்பல் = செம்மை + ஆம்பல் – செம் + ஆம்பல்; சேம் + ஆம்பல்; சேத் + ஆம்பல் = சேதாம்பல்

'ஈறுபோதல்' விதிப்படி, மை கெட்டு, செம் + ஆம்பல் ஆயிற்று. பின்னர் 'ஆதி நீடல்' விதிப்படி – சேம் + ஆம்பல் ஆயிற்று, பின் 'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து சேத் + ஆம்பல் என்றாகி, 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.

7. கருங்குயில் = கருமை + குயில் – கரு + குயில் = கருங்குயில்.

ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது. 'இனமிகல்' என்னும் விதிப்படி வருமொழி ககரத்திற்கு (கு) இனமான மெல்லெழுத்து ங் மிகுந்து, கருங்குயில் எனப் புணர்ந்தது.

ஈறு போதல், இடையுகரம் இய்யாதல்,
ஆதி நீடல், அடியகரம் ஐயாதல்,
தன்னொற் றிரட்டல், முன்னின்ற மெய்திரிதல்,
இனமிகல், இனையவும் பண்பிற் கியல்பே. – நன்னூல், 136

ஈ) மகரஈற்றுப் புணர்ச்சி

1. மகர ஈற்றுச் சொற்கள் வருமொழியோடு சேரும்பொழுது, இறுதி மகரம் (ம்) கெட்டு, உயிரீறுபோல நின்று, உயிர்முதல் மொழியோடு உடம்படுமெய் பெற்றுப் புணரும்.

(எ–டு) மரம் + அடி; மர + அடி; மர + வ் + அடி = மரவடி.

2. நிலைமொழியின் மகர ஈறுகெட்டு வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்து மிக்குப் புணரும்.

(எ–டு) வட்டம் + கல் = வட்டக்கல் எனப் புணரும்.

3. நிலைமொழியின் மகரஈறு வருமொழி முதலிலுள்ள வல்லினத்திற்கு இனமான மெல்லினமாகத் திரிந்து புணரும்.

(எ–டு) நிலம் + கடந்தான் = நிலங்கடந்தான்.

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாய்த் திரிபவும் ஆகும். – நன்னூல், 219

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது ________

1. நிலைமொழி ஈறு நீங்கும். 2. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்.
3. வருமொழி முதல் கெடும்.

ஆ) மேற்கு + நாடு என்பது ________ எனச் சேரும்.

1. மேற்கு நாடு 2. மேநாடு 3. மேனாடு.

இ) கருமை + குழி என்பது ________ எனும் விதிகளின்படி புணரும்.

1. ஆதிநீடல், இனமிகல் 2. தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல்
3. ஈறுபோதல், இனமிகல்

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. அடி அகரம் ஐ ஆதல் | – | வெற்றிலை |
| 2. ஆதிநீடல் | – | கரும்பலகை |
| 3. இனமிகல் | – | பைங்கூழ் |
| 4. தன்னொற்றிரட்டல் | – | மூதூர் |

### ஆ) குறுவினாக்கள்

1. வடக்கு என்னும் திசைப்பெயருடன் பிற திசைகள் சேரின் எவ்வாறு புணரும்?
2. தெற்கு என்னும் திசைப்பெயருடன் பிற பெயர்கள் சேரின் எவ்வாறு புணரும்?
3. மையீற்றுப் பண்புப்பெயர்கள் நான்கனை எழுதுக.
4. செம்மை + மொழி எவ்வாறு புணரும்?
5. வெற்றிலை – புணர்ச்சிவிதி கூறுக.

இயல் 6

6. மரவேர் – சொல்லைப் பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.
7. மகர ஈற்றுப் புணர்ச்சிக்குச் சான்று தருக.

இ) பாடப்பகுதியில் உள்ள பண்புச்சொற்களைக் கண்டறிந்து, அவற்றுள் மையீற்றுப் பண்புச் சொற்களை அடிக்கோடிட்டுக் காட்டுக.

## மொழித்திறன் பயிற்சி

### வல்லினம் மிகும், மிகா இடங்கள்

நிலைமொழிச் சொற்களுக்குப் பின், வருமொழிச் சொற்கள் வந்து புணரும்போது க், ச், த், ப், ஆகிய வல்லொற்றுகளின் வருக்க எழுத்துகள் வந்தால், அவ்வல்லொற்றுகள் சில இடங்களில் மிகுந்தும், சில இடங்களில் மிகாமலும் வரும். இவற்றையே வலிமிகுமிடங்கள், வலிமிகா இடங்கள் என்பர் (வலி – வல்லினம்).

அ) வல்லினம் மிகுமிடங்கள்

1. நிலைமொழி உயிரீற்றுச் சொல்லின்பின் வல்லினம் (க்,ச்,த்,ப்) மிகும்.

கறி + குழம்பு = கறிக்குழம்பு

பலா + சுளை = பலாச்சுளை

வழி + தடம் = வழித்தடம்

பாட்டு + போட்டி = பாட்டுப்போட்டி

2. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும், எ என்னும் வினா எழுத்தின் பின்னும் வல்லினம் மிகும்.

அ + கடை = அக்கடை

இ + சட்டை = இச்சட்டை

உ + பக்கம் = உப்பக்கம் (செய்யுள் வழக்கு)

எ + பாடம் = எப்பாடம்

3. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.

அந்த + கோவில் = அந்தக் கோவில்

இந்த + சட்டி = இந்தச் சட்டி

எந்த + தோட்டம் = எந்தத் தோட்டம்

4. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.

அப்படி + கூறினான் = அப்படிக் கூறினான்.

இப்படி + தாவினான் = இப்படித் தாவினான்.

எப்படி + சொன்னான் = எப்படிச் சொன்னான்.

5. இரண்டாம் வேற்றுமை (ஐ) விரியின்பின் வரும் வல்லினம் மிகும்.

பாரியை + கண்டான் = பாரியைக் கண்டான்.

பொருளை + சேர்த்தான் = பொருளைச் சேர்த்தான்.

அவனை + தடுத்தான் = அவனைத் தடுத்தான்.

நிலவை + பார்த்தான் = நிலவைப் பார்த்தான்.

6. நான்காம் வேற்றுமை (கு) விரியில் வரும் வல்லினம் மிகும்.

எனக்கு + கொடு = எனக்குக் கொடு.

குழந்தைக்கு + சோறு = குழந்தைக்குச் சோறு.

அவளுக்கு + தா = அவளுக்குத் தா.

பாப்பாவுக்கு + பாட்டு = பாப்பாவுக்குப் பாட்டு

7. ஓரெழுத்து ஒருமொழியில் வரும் க், ச், த், ப் மிகும்.

ஈ + கால் = ஈக் கால்

தீ + சட்டி = தீச் சட்டி

கை + தடி = கைத் தடி

தை + பொங்கல் = தைப் பொங்கல்

8. வன்றொடர்க் குற்றியலுகரத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.

கொக்கு + கால் = கொக்குக் கால்

9. இகர ஈற்றுச் 'செய்து' என்னும் எச்சத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.

ஓடி + போனான் = ஓடிப்போனான்.

10. அகரஈற்றுச் 'செய' என்னும் எச்சத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.

பாட + கேட்டேன் = பாடக் கேட்டேன்.

தேட + சென்றாள் = தேடச் சென்றாள்.

பாட + தெரியுமா ? = பாடத் தெரியுமா ?

ஓட + பார்த்தான் = ஓடப் பார்த்தான்.

11. சால, தவ என்னும் உரிச்சொற்கள்பின் வரும் வல்லினம் மிகும்.

சால + பசித்தது = சாலப் பசித்தது.

தவ + சிறிது = தவச் சிறிது.

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வல்லினம் மிகும்.

காணா + கண்கள் = காணாக் கண்கள்

கேளா + செவி = கேளாச் செவி

ஓடா + தேர் = ஓடாத் தேர்

நாறா + பூ = நாறாப் பூ

## ஆ) வல்லினம் மிகா இடங்கள்

1. வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

விடு + கணை = விடுகணை

விரி + சுடர் = விரிசுடர்

தோய் + தயிர் = தோய்தயிர்

பாய் + புலி = பாய்புலி

2. உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

காய் + கனி = காய்கனி

தாய் + தந்தை = தாய்தந்தை

முத்து + பவளம் = முத்துபவளம்

3. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

கதை + சொன்னார் = கதை சொன்னார்.

கடல் + தாவினான் = கடல் தாவினான்.

புகழ் + பெற்றார் = புகழ் பெற்றார்.

4. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.

கற்க + கசடற = கற்க கசடற

வளர்க + சிந்தனை = வளர்க சிந்தனை

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

காண்க + படம் = காண்க படம்

5. விளித்தொடரை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

முருகா + கேள் = முருகா கேள்.

கண்ணா + சொல் = கண்ணா சொல்.

கிளியே + தா = கிளியே தா.

அண்ணா + போ = அண்ணா போ.

6. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது.

கடகட, தடதட, சடசட, படபட

7. அவை, இவை என்னும் சுட்டுச்சொற்கள், எவை என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

அவை + பறவைகள் = அவை பறவைகள்

| | | | |
|---|---|---|---|
| இவை + சட்டைகள் | = | இவை சட்டைகள் |
| அவை + தடங்கள் | = | அவை தடங்கள் |
| எவை + படங்கள் | = | எவை படங்கள் |

8. அது, எது எனும் சுட்டுச்சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

| | | |
|---|---|---|
| அது + கூடை | = | அது கூடை |
| இது + சட்டி | = | இது சட்டி |
| அது + தோணி | = | அது தோணி |
| இது + பாடம் | = | இது பாடம் |

9. பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர் ( படித்து என்பதுபோல் வன்றொடர்க் குற்றியலுகரச்சொல் அல்லாதவை ) ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

| | | |
|---|---|---|
| வந்த + கயல்விழி | = | வந்த கயல்விழி |
| தைத்த + சட்டை | = | தைத்த சட்டை |
| வந்து + தந்தான் | = | வந்து தந்தான் |
| செய்து + பார்த்தான் | = | செய்து பார்த்தான் |

10. எழுவாய்த்தொடரில் வரும் வல்லினம் மிகாது.

| | | |
|---|---|---|
| கண்ணகி + பார்த்தாள் | = | கண்ணகி பார்த்தாள் |
| தங்கை + கேட்டாள் | = | தங்கை கேட்டாள் |
| பூவிழி + தந்தாள் | = | பூவிழி தந்தாள் |

## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல் திறன்

கீழுள்ள தலைப்புகளுள் ஒன்றனைக் குறித்துப் பிறமொழிச் சொற்கள் கலவாமல் ஐந்து மணித்துளிகள் பேசுக.

1. தமிழின் தொன்மை 2. தண்டமிழ்ச் சான்றோர் திரு.வி.கலியாணசுந்தரனார்

### ஆ) படித்தல் திறன்

திரு.வி.கலியாணசுந்தரனாரின் வினா–விடை நடையைப் படித்தறிக.

தமிழில் அக்கலை இல்லையே; இக்கலை இல்லையே; சிறப்பாக விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலை இல்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். ஆங்கிலத்தில் முதல் நூல்களாகவா எல்லாக் கலைகளும் பிறந்தன என்பதனை அந்த அன்பர்கள் நினைப்பார்களாக. வேறு மொழிகளிலிருந்தும் ஆங்கில அறிஞர் தம் மொழியில் பல கலைகளைப் பெயர்த்தெழுதியுள்ளனர். இதுகாறும் உலகில் காணப்பட்டுள்ள புதுமைகள் எல்லாவற்றையும் ஆங்கிலேயர் மட்டுமா கண்டனர்? இல்லை இல்லை. சில பிரெஞ்சுக்காரர்களால் காணப்பட்டன; சில ஜெர்மானியரால் காணப்பட்டன; மற்றுஞ்சில வெவ்வேறு நாட்டினரால் காணப்பட்டன. அவ்வம் மொழிகளுக்கே சிறப்பாக விளங்கும் நூல்களும் உண்டு. அவற்றை மொழி பெயர்ப்பதனால் பயன் விளையாது. அவை யாவை? அவையே காவியங்கள் என்பன. காவியங்கள் போக, மற்றக் கலைகளெல்லாம் உலகிலுள்ள அனைவருக்கும் பொது உடைமை.

### இ) எழுதுதல் திறன்

**குறிப்புகளைக் கொண்டு விளம்பரம் எழுதுதல்**

நாம் நாள்தோறும் செய்தித்தாளில் வரும் விளம்பரங்களைப் பார்க்கிறோம்; படிக்கிறோம். நாமே செய்தித்தாளுக்கு விளம்பரம் கொடுக்கவேண்டிய ஒரு நிலை ஏற்படின் எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

(எ–டு) சென்னை – சர்வோதய சங்கம் காதி கிராமமுத்யோக் பவன் – கொலு பொம்மைக்கண்காட்சி – கொல்கத்தாப் பொம்மைகள், கோலாப்பூர்ப் பொம்மைகள் விற்பனை – காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை– இடம்– 33, அரங்கநாதன் தெரு, தியாகராயர் நகர், சென்னை–17, போன்: 2434 7426. அனுமதி இலவசம்!

### ஈ) கட்டுரை

தேசிய ஒருமைப்பாடு.

### உ) கடிதம்

சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்கு (அ) மாற்றுச்சான்றிதழ் கோரித் தலைமை ஆசிரியருக்கு.

## வாழ்க்கைத்திறன்

### சிறப்பாகத் தொடர்புகொள்ளும் திறன்

மதியழகன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும்போது, தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும், தந்தை அவன்மீது சினம் கொள்கிறார். ஏனெனில், அவன் மிகச் சிறந்த பொறியாளராக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன், தந்தையிடம் எப்படிச் சொல்லிப் புரியவைப்பது என்று தடுமாறுகிறான்.

மதியழகன் தன் பெற்றோரை எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?

## படிவங்கள் நிரப்புதல்

### வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம் நிரப்புதல்

நாள்..............
பேரேடு
பதித்தவர்

சேமிப்பு வங்கிக் கணக்கு எண்............

இந்த ஆணைப்படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்படவேண்டும்.

சேமிப்புக் கணக்கு

..............................20

................................... வங்கி .................................. எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு

ரூபாய் ........................................................................................ வழங்குக.

ரூ.

இப்பணம் எடுக்கும் சீட்டு மூலமாக கணக்கு வைத்திருப்பவரைத் தவிர
மற்றவருக்கு ஆயிரம் ரூபாய் வரம்புவரை பணம் கொடுக்கப்படும்

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்

## மதிப்புக்கல்வி

### தன்னம்பிக்கை

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள்தாம். மாற்றுத்திறனாளியிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், கெலன் கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத்திறனாளியரே.

தன்னம்பிக்கை ஒன்றனையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள்; வெற்றியும் கண்டார்கள். வின்சென்ட் வான்கோக் என்பவர் கேட்புத்திறனற்ற மாற்றுத் திறனாளி. அவர் நன்றாக ஓவியம் வரைவார். ஆனால், அவரை உதவியாளராகச் சேர்த்துக்கொள்ள மற்ற ஓவியர் மறுத்துவிட்டனர். அதற்காக, அவர் மனம் வருந்தவில்லை. தாமே தூரிகை எடுத்து வரையத் தொடங்கினார். வாழ்வில் ஏற்றம்பெற்று மிகச் சிறந்த ஓவியர் என்ற பெயரும் பெற்றுவிட்டார்.

ஓவியர் பிக்காசோவின் ஓவியம் பெரும்புகழ் பெற்றதுபோல் இவருடைய ஓவியங்களும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இவருடைய ஓவியங்கள் ஏலம் விடப்பட்டுக் கோடிக்கணக்கான வருவாயை ஈட்டித் தந்துள்ளன.

நம்பிக்கைதான் வாழ்வின் உயிர்நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக்கூட மாற்றிச் சாதனை படைக்கலாம் என்பதற்கு இவர்கள் வாழ்க்கை மிகச் சிறந்த சான்று.

உங்களின் எதிர்காலக் குறிக்கோள் என்ன?

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Food is essential for all living beings. Without food man cannot live long. Everyman has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and he will fall ill. So, everyman has to eat enough food to live.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1.Man proposes; God disposes. | நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும். |
| 2.Strike the rod while it is hot. | காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். |
| 3.Familiarity breeds contempt. | பழகப் பழகப் பாலும் புளிக்கும். |
| 4.The mills of god grind slow but sure. | அரசன் அன்றுகொல்வான், தெய்வம் நின்று கொல்லும் |
| 5.The face is the index of the mind. | அகத்தின் அழகு முகத்தில் தெரியும். |

# திருக்குறள்

## பெரியாரைத் துணைக்கோடல்

( நன்னெறியில் செலுத்தும் பேரறிவுடையாரைத் துணையாகக் கொள்ளுதல் )

1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை,
திறனறிந்து தேர்ந்து கொளல். *

**பொருள் :** அறநெறியை அறிந்து அறிவில் தெளிந்த முதிர்ச்சியுடையோர் நட்பினை ஆராய்ந்தறிந்து ஏற்றுக் கொள்வீராக.

**சொற்பொருள் :** மூத்த – முதிர்ந்த; கேண்மை – நட்பு; தேர்ந்து – ஆராய்ந்து.

**இலக்கணக்குறிப்பு :** அறனறிந்து (அறத்தை+அறிந்து); திறனறிந்து (திறனை+அறிந்து) இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்; தேர்ந்து கொளல் – வினையெச்சம்; கொளல் – அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று.

2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

**பொருள் :** தமக்கு வந்துள்ள துன்பத்தைப் போக்கி இனி, மேலும் துன்பம் வராதவாறு முன்னதாகவே காக்கும் தன்மையுடையாரைப் போற்றி நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**சொற்பொருள் :** நோய் – துன்பம்; உறாஅமை – துன்பம் வராமல்; பெற்றியார் – பெருமையுடையார்.

**இலக்கணக்குறிப்பு :** உற்றநோய் – பெயரெச்சம்; உறாஅமை – செய்யுளிசை அளபெடை; பெற்றியார் – வினையாலணையும் பெயர்.

(இவ்விரு பாடலும் பெரியாரது இலக்கணத்தையும் அவரைத் துணையாகக் கொள்ளுதலின் தேவையையும் கூறுகின்றன.)

3. அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். *

**பொருள் :** அறிவறிந்த பெரியோரைப் போற்றி உறவாகக் கொள்ளுதலே, ஒருவர் பெறவேண்டிய அரிய பேறுகளுள் எல்லாம் அரிய பேறாகும்.

**சொற்பொருள் :** பேணி – போற்றி; தமர் – உறவினர்.

**இலக்கணக்குறிப்பு :** கொளல் – தொழிற்பெயர்.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

பொருள் : தம்மைக் காட்டிலும் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தலே வலிமைகளுளெல்லாம் சிறந்ததாம்.

சொற்பொருள் : வன்மை – வலிமை; ஒழுகுதல் – ஏற்று நடத்தல்; தலை – சிறப்பு.

இலக்கணக்குறிப்பு : வன்மை – பண்புப்பெயர்; ஒழுகுதல் – தொழிற்பெயர்.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

பொருள் : தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞர்களையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னனும் அத்தகையோரை ஆராய்ந்து நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

சொற்பொருள் : சூழ்வார் – அறிவுடையார் ; சூழ்ந்துகொளல் – நட்பாக்கிக் கொள்ளுதல்.

இலக்கணக்குறிப்பு : சூழ்வார் – வினையாலணையும் பெயர்.

( இம்மூன்று பாடலும் பெரியாரைத் துணைகொள்வதன் சிறப்பைக் கூறுகின்றன.)

6. தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

பொருள் : அறிவிற் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடக்க வல்லாருக்குப் பகைவர் செய்யக்கூடிய தீங்கு யாதொன்றும் இல்லை.

சொற்பொருள் : தக்கார் – தகுதியுடைய பெரியோர்; செற்றார் – பகைவர்; இல் – இல்லை.

இலக்கணக்குறிப்பு : தக்கார், செற்றார் – வினையாலணையும் பெயர்கள்.

7. இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

பொருள் : தீயனவற்றைக் கண்டால் இடித்துத் திருத்தும் பெரியோரைத் துணையாகக் கொண்டு வாழ்பவரைக் கெடுக்கும் வலிமையுடையவர் எவருமிலர்.

சொற்பொருள் : இடிக்கும் – கடிந்துரைக்கும்; தகைமை – தன்மை.

இலக்கணக்குறிப்பு : துணையார், ஆள்வார் – வினையாலணையும் பெயர்கள்.

(இவ்விரு பாடலும் பெரியாரைத் துணைக்கோடலின் பயனைக் கூறுகின்றன.)

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்,
கெடுப்பார் இலானுங் கெடும். *

பொருள் : குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் இல்லை எனினும், தானே கெட்டழிவான்.

சொற்பொருள் : இடிப்பார் – கடிந்து அறிவுரை கூறும் பெரியார்; ஏமரா – பாதுகாவல் இல்லாத.

9. முதலிலார்க்(கு) ஊதிய மில்லை, மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை. *

பொருள் : முதலீடு இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் ஒன்றுமில்லை. அதுபோல், தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் பெரியோர் துணையில்லாதவர்க்கு நிலைத்த தன்மை இல்லை.

சொற்பொருள் : மதலை – துணை.

இலக்கணக்குறிப்பு : இல்லை – குறிப்பு வினைமுற்று.

அணி : எடுத்துக்காட்டு உவமைஅணி.

10. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே,
நல்லார் தொடர்கை விடல். *

பொருள் : நல்லவர் ஒருவரின் நட்பைக் கைவிடுவது, பலரைப் பகைத்துக் கொள்வதனை விடப் பன்மடங்கு தீமை உடையதாகும்.

சொற்பொருள் : பத்தடுத்த – பத்து மடங்கு.

இலக்கணக்குறிப்பு : பகைகொளல் ( பகையைக் கொளல் ) – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

(இம்மூன்று பாடலும் பெரியாரைத் துணைகொள்ளாததனால்
ஏற்படும் குற்றங்களைக் கூறுகின்றன.)

## பொருள் செயல்வகை

( பொருளை ஆக்குவதற்கும் காப்பதற்குமான செயல்முறைகள் )

1. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்,
பொருளல்ல தில்லை பொருள். *

பொருள் : ஒருபொருட்டாக மதிக்கத்தகாதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வதில் பொருளுக்கு இணையானது வேறொன்றுமில்லை.

சொற்பொருள் : பொருளல்லவர் – தகுதியற்றவர்; பொருள் – செல்வம்.

அணி : சொல் பின்வருநிலையணி.

2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

பொருள் : செல்வம் அற்றவரை எல்லாரும் இகழ்வர்; செல்வரை எல்லாரும் சிறப்பிப்பர்.

சொற்பொருள் : எள்ளுவர் – இகழ்வர்.

3. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

பொருள் : செல்வம் என்னும் அணையா விளக்கு, அதனை உடையவர் நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று பகைமை என்னும் இருளைப் போக்கும்.

சொற்பொருள் : பொய்யா விளக்கம் – அணையா விளக்கு; இருள் – பகை.

இலக்கணக்குறிப்பு : பொய்யா விளக்கம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இருளறுக்கும் (இருளை அறுக்கும்) – இரண்டாம் வேற்றுமைத்தொகை.

(இம்மூன்று பாடலும் பொருளின் சிறப்பைக் கூறுகின்றன.)

4. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். *

பொருள் : பிறருக்குத் தீங்கின்றி நல்வழியில் ஈட்டியபொருள், அறத்தினையும் கொடுக்கும், இன்பத்தினையும் தரும்.

சொற்பொருள் : ஈனும் – தரும்; தீதின்றி – தீங்கின்றி.

இலக்கணக்குறிப்பு : அறனீனும்; திறனறிந்து – இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்; வந்த பொருள் – பெயரெச்சம்; அறன், திறன் – கடைப்போலிகள்.

5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்,
புல்லார் புரள விடல். *

பொருள் : அருளும் அன்பும் பொருந்தாமல் பிறவழியில் வரும் செல்வத்தினைப் பற்றாமல் நீக்குதல் வேண்டும்.

சொற்பொருள் : புல்லார் – பற்றார்.

இலக்கணக்குறிப்பு : வாராப் பொருளாக்கம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; விடல் – அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று.

6. உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

பொருள் : அரசுரிமையால் வந்த பொருளும், மக்கள் வரியாகத் தரும் பொருளும், பகைவரை வென்றுகொண்ட திறைப்பொருளும் அரசனுக்குரிய பொருள்களாம்.

சொற்பொருள் : உறுபொருள் – அரசு உரிமையால் வரும்பொருள்; உல்குபொருள் – வரியாக வரும்பொருள்; தெறு – பகை.

இலக்கணக்குறிப்பு : தன்ஒன்னார், வேந்தன் பொருள் – ஆறாம் வேற்றுமைத்தொகைகள்.

( இம்மூன்று பாடலும் பொருளீட்டும் நெறியைக் கூறுகின்றன. )

7. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியால் உண்டு.

பொருள் : அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும்.

சொற்பொருள் : குழவி – குழந்தை; செவிலி – வளர்ப்புத்தாய்.

இலக்கணக்குறிப்பு : ஈன்குழவி – வினைத்தொகை; செல்வச்செவிலி – உருவகம்.

அணி : உருவக அணி. அன்பைத் தாயாகவும் அருளைக் குழந்தையாகவும் பொருளை வளர்ப்புத் தாயாகவும் உருவகம் செய்துள்ளதால், இப்பாடல் உருவக அணியாகும்.

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால், தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. *

பொருள் : தன் கைப்பொருள்கொண்டு ஒருவன் செய்யும் செயலானது குன்றின்மேல் இருந்துகொண்டு யானைப்போரைக் காண்பதற்கு ஒப்பானது.

சொற்பொருள் : குன்று – மலை; கைத்தொன்று – கைப்பொருள்.

இலக்கணக்குறிப்பு : குன்றேறி – ஏழாம் வேற்றுமைத்தொகை.

அணி : உவமை அணி.

9. செய்க பொருளைச், செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். *

பொருள் : பொருளைத் தேடிச் சேர்த்தல் வேண்டும். அது பகைவரின்செருக்கை அறுக்கும் உறுதியான படைக்கலம். அதனைவிடக் கூர்மையான கருவி வேறொன்றுமில்லை.

சொற்பொருள் : செருக்கு – இறுமாப்பு; எஃகு – உறுதியான படைக்கலம்.

இலக்கணக்குறிப்பு : செய்க – வியங்கோள் வினைமுற்று; செறுநர் செருக்கு – ஆறாம் வேற்றுமைத்தொகை.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு.

பொருள் : சிறந்த பொருளை நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்றைய அறனும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒருசேரக் கைகூடும் எளிய பொருள்களே.

சொற்பொருள் : ஒண்பொருள் – சிறந்த பொருள்; எண்பொருள் – இயல்பாய்க் கிடைக்கும் பொருள்; இரண்டும் – அறனும் இன்பமும்.

இலக்கணக்குறிப்பு : ஒண்பொருள், எண்பொருள் – பண்புத்தொகைகள்; காழ்ப்ப இயற்றியார் – பெயரெச்சம்.

(இந்நான்கு பாடலும் பொருளின் பயனைக் கூறுகின்றன.)

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) இல்லாரை ____________ எள்ளுவர்.

ஆ) அறனீனும் இன்பமும் ஈனும் ____________ தீதின்றி வந்த பொருள்.

2. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.

அ) அரு–டும் (ளொ/லொ) அ–பொடும் (ண்/ன்) வா – ப் (ரா/றா) பொரு–க்கம் (லா/ளா)

ஆ) உ ___ பொருளும் (று/ரு) உ ___ கு (ள்/ல்) பொருளு ___ (ன்/ந்) தன் ஒ ___ னார் (ண்/ன்)

3. விடுபட்ட சீர்களை நிரப்புக.

அ) அறனறிந்து ____________ அறிவுடையார் ____________
திறனறிந்து ____________ கொளல்.

ஆ) பொருளென்னும் ____________ ____________ இருளறுக்கும்
எண்ணிய ____________ ____________

4.. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் ____________.

1. அன்புள்ள பெற்றோர் 2. ஆர்வமுள்ள நண்பர் 3. மூத்த அறிவுடையார்

ஆ) அரியவற்றுள் எல்லாம் அரிது ____________ பேணித் தமராக் கொளல்.

1. சிறியவர் 2. பெரியார் 3. உறவினர்

இ) முதலிலார்க்கு ____________ இல்லை.

1. ஊதியம் 2. நட்பு 3. பகை

### ஆ) குறுவினாக்கள்

1. வன்மையுள் எல்லாந் தலையாயது எது ?
2. யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது ?
3. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ?
4. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மைத்து ?
5. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?
6. பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார் ?
7. வேந்தற்குரிய பொருள்கள் எவை ?

### இ) சிறுவினாக்கள்

1. பெரியாரது இலக்கணம் யாது ?
2. பெரியாரைத் துணையாகக்கொள்வதன் சிறப்பு யாது ?
3. பெரியாரைத் துணையாகக்கொள்ளாமையால் வருங்குற்றம் யாது ?
4. பொருளினது சிறப்பாக வள்ளுவர் கூறுவது யாது ?
5. பொருளீட்டும் நெறியினைத் திருவள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார் ?
6. பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் யாவை ?

### ஈ) நெடுவினாக்கள்

1. பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. பொருள்செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று. அது மன்பதைக்கு – உலகுக்குப் பொது.

– திரு. வி. கலியாணசுந்தரனார்

திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிராவிட்டால், தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது.

– கி.ஆ.பெ.விசுவநாதம்

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே.

– திருநாவுக்கரசர்

**பொருள் :** எவர்க்கும் ஆட்படாத் தன்மையன் சங்கரன்; அழகிய வெண்மையான சங்கினைக் காதிற்குழையாகக் கொண்டவன்; அத்தகு தலைவனுக்கே மீளா அடிமைகொண்டோம். அன்றலர்ந்த மலருக்கு ஒப்பான சிவந்த திருவடிகளை அடைந்தோம். ஆதலால், நாம் எவர்க்கும் அடிமையில்லை; நமனுக்கும் அஞ்சமாட்டோம்; நரகத்தினுள் செல்லோம்; என்றும் துயர்ப்படமாட்டோம்; இறைவனின் பாதுகாப்பில் உள்ளோம். பிணி இதுவென அறியோம்; யாரிடத்தும் சென்று பணிந்து நில்லோம்; எந்நாளும் இன்பமே அன்றித் துன்பம் இல்லை.

**சொற்பொருள் :** இடர் – துன்பம்; ஏமாப்பு – பாதுகாப்பு; பிணி – நோய்; நடலை – துன்பம்; சேவடி – இறைவனின் செம்மையான திருவடிகள்; நமன் – எமன்.

**இலக்கணக்குறிப்பு :** நற்சங்கு, வெண்குழை – பண்புத்தொகைகள்; மலர்ச்சேவடி – உவமைத்தொகை; மீளா ஆள் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

**பிரித்தறிதல் :** பிணியறியோம் – பிணி + அறியோம்; எந்நாளும் – எ + நாளும்; நாமென்றும் – நாம் + என்றும்.

**ஆசிரியர் குறிப்பு :** திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தவர். பெற்றோர் புகழனார், மாதினியார். இவரது தமக்கையார் திலகவதியார். திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்டபெயர் மருணீக்கியார். இவருக்குத் தருமசேனர், அப்பர், வாகீசர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவரது நெறி தொண்டு நெறி.

சைவ அடியார்களை நாயன்மார்கள் என்று வழங்குவர். இவர்கள் அறுபத்து மூவர். சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர் திருநாவுக்கரசர். இவர்தம் பாடல்கள் தேவாரம் எனப் போற்றப்படுகின்றது. இவர் தாண்டகம் பாடுவதில் வல்லவர் ஆதலால், இவர் தாண்டகவேந்தர் எனவும் வழங்கப்படுகிறார்.

இவரது காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு. திருவாமூர், கடலூர் மாவட்டம் பண்ணுருட்டியை அடுத்துள்ளது.

நூற்குறிப்பு : தேவாரம் என்னும் சொல்லைத் தே + வாரம் எனப் பிரித்துத் தெய்வத்தன்மையை உடைய இசைப்பாடல்கள் என்றும், தே + ஆரம் எனப் பிரித்துத் தெய்வத்திற்குச் சூட்டப்பெற்ற பாமாலை என்றும் கூறுவர்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழும் மூவர் தேவாரம். திருநாவுக்கரசர் பாடி அருளிய பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள். நமக்குப் பாடமாக அமைந்துள்ள பாடல் திருநாவுக்கரசர் அருளிய ஆறாந்திருமுறையில் உள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) திருநாவுக்கரசரின் தமக்கையார் ________ ஆவார்.

ஆ) திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் ________ என வழங்கப்படுகிறது.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) திருநாவுக்கரசர் காலம் ________ ஆம் நூற்றாண்டு.

1. கி.பி. 12 2. கி.பி. 7 3. கி.பி. 9

ஆ) ‘நாமார்க்கும் குடியல்லோம்’ என்னும் பாடல் ________ ‘அச்சமில்லை அச்சமில்லை’ எனப் பாடத் தூண்டியது.

1. பாரதிதாசனை 2. சுரதாவை 3. பாரதியாரை

### ஆ) குறுவினாக்கள்

1. தேவாரம் – பொருள் எழுதுக.
2. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார் ?

### இ) சிறுவினாக்கள்

1. திருநாவுக்கரசர் – சிறு குறிப்பு எழுதுக.
2. இறைவன் திருவடியை வணங்குகின்றவருக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை ?

தமிழகத்தில் விடுதலை வேட்கைக் கனலைத் தம் வீறுகொண்ட பாக்களால் மக்களைத் தட்டியெழுப்பிய மகாகவி பாரதியின் “அச்சமில்லை ! அச்சமில்லை !” எனும் பாடலுக்கு முன்னோடி இத்திருத்தாண்டகப் பாடலே.

# தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்

நம் தாய்மொழி உயிரினும் இனியது; முன்னைப் பழைமைக்குப் பழைமையும், பின்னைப் புதுமைக்குப் புதுமையும் கொண்டது. தமிழ் இலக்கியங்கள் தமிழர் தம் வாழ்வை எதிரொலிப்பன. இயற்கையோடு இயைந்த வாழ்வினர் தமிழர். அவர்தம் மொழியும் அவ்வாறே.

'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்றார் திருவள்ளுவர். அறிவின் நுண்ணிலை வளர்ச்சியே அறிவியல். அறிவியல், வாழ்வை வளப்படுத்துகிறது; மொழியைப் பண்படுத்துகிறது என்பர் அறிஞர். தமிழ்மொழிக்கு அது முற்றிலும் பொருந்தும்.

தமிழ்மொழி சிந்தனைக் கருவூலமாய்த் திகழ்வது; அறிவுச் சுரங்கமாய் இலங்குவது. தமிழ் இலக்கியங்களை நுண்ணிதின் ஆய்கின்றபோது எத்துணையோ அறிவியல் கருத்துகள் ஆழப் புதைந்து கிடப்பதனை அறியலாம். அறிவியல் வளர்ச்சி மிகுந்த காலம் ஒன்று இருந்திருக்கக்கூடும் என்பதனை, அதனை ஆராய்வோரே அறிவர்.

## விண்ணியலறிவு

பேரண்டத்தின் தோற்றம் குறித்துப் பல்வேறு கருத்துகள் எழுந்துள்ளன. மேலைநாட்டறிஞர் இது குறித்து விரிவாக ஆய்ந்துள்ளனர்; ஆய்ந்தும் வருகின்றனர். ஆனால், உலகம் உருண்டை என்பதனைப் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகே மேலை நாட்டினர் உறுதி செய்தனர்; இவ்வுலகம் பேரண்டத்தின் ஒரு கோள் என்பதனையும், இவ்வண்டப் பரப்பையும் அதன்மீது அமைந்துள்ள கோள்களையும் தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. ஆன்மஇயல் பேசும் திருவாசகம் விண்ணியலையும் பேசுகிறது.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன."

இத்திருவாசக வரிகள் தெளிந்த வானியல் அறிவை வெளிப்படுத்துகின்றன. பெருவெடிப்புக் கொள்கையின்படி இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதை இப்பாடல் ஆழமாக விளக்குகிறது.

உலகம் என்னும் தமிழ்ச்சொல் உலவு என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது. உலவு என்பது சுற்றுதல் என்ற பொருளைத் தரும். உலகம் தன்னையும் ஞாயிற்றையும் சுற்றி வருகிறது என்னும் அறிவியல் கருத்து, இதில் வெளிப்படுவதனைக் காணலாம்.

ஞாலம் என்னும் தமிழ்ச் சொல் 'ஞால்' என்னும் சொல்லடியாகத் தோன்றியது என்பர். 'ஞால்' என்பதற்குத் 'தொங்குதல்' என்பது பொருள். எவ்விதப் பற்றுக்கோடுமின்றி அண்ட வெளியில் உலகம் தொங்கிக் கொண்டிருப்பதனை, இஃது உணர்த்துகிறது.

வானத்தில் காற்றில்லாப் பகுதியும் உண்டு. இதனையும் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். இதனை, 'வறிது நிலைஇய காயமும்' (புறம். 30) என்னும் பாடல் வரி உணர்த்தும்.

'வலவன் ஏவா வானூர்தி' (புறம்.27) என்னும் தொடர் வலவனால் ஏவப்படாத வானூர்தியைப் பழந்தமிழர்கள் விண்ணில் செலுத்தி இருக்கலாம் என உணர்த்துகிறது. இது தற்போதைய செயற்கைக் கோளைப் போன்றது எனக் கருத இடமுண்டு.

### பொறியியல் அறிவு

இன்றைய வாழ்வில் பொறியியல் பெரும்பங்கு வகிக்கிறது. பல்வேறு எந்திரங்கள் பொறியியல் மூலம் உருவாக்கப்படுகின்றன. பண்டைத் தமிழகத்தில் எந்திரவியல் பற்றிய அறிவு ஆழமாக இருந்திருக்கிறது. கரும்பைப் பிழிவதற்கும் எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இதனைத் 'தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த' எனப் பதிற்றுப்பத்து குறிப்பிடும்.

நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இறைக்கும் ஆழ்துளைக் கிணறு, அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்பதனை, 'அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்' என்னும் பெருங்கதை வரியின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும், பெருங்கதையில் வரும் எந்திரயானை கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் 'டிராய்' போருடன் இணைத்துப் பேசப்படும் எந்திரக்குதிரையுடன் ஒத்தது.

### கனிமவியல் அறிவு

சிலப்பதிகாரம் பல்வகை மணிகளையும், அதன் தன்மைகளையும் விளக்குகிறது. ஊர்காண் காதையில்,

"ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்
இலங்குகதிர் விடூஉம் நலங்கெழு மணிகளும்"

என்னும் இவ்வடிகள் ஆழ்ந்த பொருளுடையன. ஐவகை மணிகளும் ஒளிவிடும் திறத்தினால் வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளன. ஆனால், அவற்றின் மூலப்பொருள் ஒன்றே. இவ்வறிவியல் சிந்தனை, தற்போதைய வேதியியல் கூறுகளுடன் ஒப்புநோக்கத்தக்கது.

### மண்ணியல் அறிவு

தமிழர், தம் வாழிடங்களை நிலத்தின் தன்மைக்கேற்பப் பாகுபடுத்தியுள்ளனர். அவையே ஐவகை நிலங்கள். மேலும் செம்மண், களர்நிலம், உவர்நிலம் எனவும் பகுத்துள்ளனர். நிறத்தின் அடிப்படையில் செம்மண் நிலம் எனவும், சுவையின் அடிப்படையில் உவர்நிலம் எனவும், தன்மையின் அடிப்படையில் களர் நிலம் எனவும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர்.

தமிழர், செம்மண் நிலத்தை அதன் பயன் கருதிப் போற்றினர். இதனைச் 'செம்புலப் பெயல் நீர்போல' என்னும் குறுந்தொகை வரி உணர்த்தும். உவர்நிலம், மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன்தருவதில்லை. இதனை, 'அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம்' என்னும் புறநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன. எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம். இதனைப் 'பயவாக் களரனையர் கல்லாதவர்' என்பார் திருவள்ளுவர்.

ஐவகை நிலங்களுக்கும் உரிய உணவு, விலங்கு, பறவை போன்றவற்றையும் தமிழர் பகுத்தும் வகுத்தும் வைத்துள்ளனர்.

## அணுவியல் அறிவு

இன்றைய அறிவியல், அணுவைப் பிளக்கவும் சேர்க்கவும் முடியும் என ஆய்ந்திருக்கிறது. ஔவை, 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி' என்று சொல்கிறார். 'ஓர்அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்' எனக் கம்பரும் கூறுவார். இதன் மூலம் அணுச்சேர்ப்பும் அணுப் பிரிப்பும் பற்றிய கருத்துகள் அன்றே அரும்பியுள்ளதனை அறியலாம்.

## நீரியல் அறிவு

நீர் மழையாக மண்ணிற்கு வருவதும் ஆவியாகி விண்ணிற்குச் செல்வதுமான சுழற்சி எக்காலத்தும் நிகழ்ந்துகொண்டிருப்பது. இவ்வியக்கமே உலகை வளப்படுத்துகிறது. இந் நீர்சுழற்சி இயக்கம் இயற்கையாக நிகழக் கூடிய ஒன்றே. இவ்வியக்கம் இல்லை எனில் மழைவளம் குன்றும்; வெப்பநிலை மிகும்; புவியின் தட்பவெப்பநிலை மாறும். இச்சுழற்சி முறைதான் உயிர்கள் தழைத்திருப்பதற்கோர் காரணம். இவ்விளைவு நிகழவில்லையெனில் கடலும் வற்றும். இதனை,

"நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்." – குறள், 17

எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

மழைவளம் குறைந்தால் இச்சமநிலை பிறழும்; எனவேதான், மழையை அமிழ்தம் என்றார் திருவள்ளுவர். உணவு தருவதாலும் மழை அமிழ்தாகிறது; உயிரைக் காப்பதாலும் அமிழ்தாகிறது; உலகை அழிவினின்றும் தடுப்பதாலும் அமிழ்தாகிறது. இஃது, எத்துணை அறிவியல் கூர்த்த சிந்தனை!

## மருத்துவ அறிவு

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். உடலை ஓம்பவேண்டியதன் இன்றியமையாமையைத் தமிழர் அறிந்திருந்தனர்.

திருவள்ளுவர், 'மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையே காரணமாகும். அவற்றின் சமநிலை தவறும்போது நோய்மிகும்.

அவற்றைச் சமப்படுத்த இயற்கை தரும் காய்கனிகளிலிருந்தே மருந்து கண்டு உண்டனர். 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' என்னும் திருக்குறள் வரி, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும். பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.

அகத்தியர், தேரையர், போகர், புலிப்பாணி முதலிய சித்தர்களின் மருத்துவ நூல்கள் இன்றும் தமிழர்களின் உடற்பிணியைப் போக்குகின்றன. உலகில் பின்விளைவுகளற்ற மருத்துவங்களுள் சித்த மருத்துவமும் ஒன்று. இன்று பரவலாகப் பயின்று வரும் இயற்கை மருத்துவம் என்னும் மருந்தில்லா மருத்துவ முறையை, அன்றே நம் தமிழர் கண்டறிந்துள்ளனர்.

> "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
> அற்றது போற்றி உணின்." – குறள், 942

என்னும் திருக்குறள் இக்கருத்திற்கு அரண் சேர்க்கிறது.

## அறுவை மருத்துவம்

"கண்ணிடந் தப்பிய கண்ணப்பன் வரலாறு ஊனுக்கு ஊன்" என்னும் செய்தியும்,

> "உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி
> அடல்உறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்"

என்னும் கம்பர் வாக்கும் அறுவை மருத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.

மணிமேகலையின் தோழி சுதமதியின் தந்தையை மாடுமுட்டியதால், அவரின் குடல் சரிந்தது. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

திருவாசகத்தில் பல்வகை அறிவியல் செய்திகள், உயிரியல் செய்திகள், மருத்துவச் செய்திகள் விரவிக்கிடக்கின்றன. 'புல்லாகிப் பூடாய்' எனத் தொடங்கும் திருவாசக வரிகள் பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சியை விரிவாய்க் கூறுகின்றன. 'மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும்' எனத் தொடரும் பாடலடிகள் கருவியல் அறிவை நன்கு தெரிவிக்கின்றன.

தமிழர்கள் பரந்துபட்ட அறிவியல் சிந்தனை உடையவர்கள். விண்ணியல், மண்ணியல், விலங்கியல், நீரியல், மருத்துவஇயல் முதலிய அறிவியல் கூறுகளையும் நன்கு உணர்ந்தவர்கள். அறிவியல் அறிஞர்கள் இலக்கிய அறிவுடன் இவற்றை ஆராய்ந்தால், மேலும் அரிய பல செய்திகளைத் தமிழுலகம் பெற ஏதுவாகும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) ‘உலகம்’ என்னும் தமிழ்ச் சொல் ____________ என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.

1. உலகு 2. உலவு 3. உளது

ஆ) தமிழர்கள் நிலத்தை ____________வகையாகப் பிரித்துக்காட்டியிருக்கிறார்கள்.

1. மூன்று 2. ஆறு 3. ஐந்து

**2. சந்திப்பிழை நீக்கி எழுதுக**

தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்.

**3. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைப்பகுதியை எச்சமாக்குக.**

அ) நன்றாகப் ________ (பசி) பின்னர் அளவுடன் உண்ணுதல் வேண்டும்.

ஆ) தமிழர் நிலத்தினை ஐவகையாகப் ________ (பிரி) வாழ்ந்திருக்கிறார்கள்.

### ஆ) குறுவினாக்கள்

1. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.
2. மருந்தில்லா மருத்துவம்பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?

### இ) சிறுவினாக்கள்

1. விண்ணியல் குறித்துத் திருவாசகம் உரைப்பது யாது?
2. கனிமவியல் அறிவு பற்றி எழுதுக.
3. மண்ணியல் அறிவு – குறிப்பு எழுதுக.
4. சித்தமருத்துவம் குறித்த செய்திகளை எழுதுக.
5. அணுபற்றிய கம்பரின் கருத்து யாது?

### ஈ) நெடுவினாக்கள்

1. தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.
2. தமிழரின் மருத்துவ அறிவுகுறித்துக் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**செயல் திட்டம் :** அறிவியல் வளர்ச்சி குறித்துக் கவிதை படைக்க.

# குறட்டை ஒலி

- மு. வரதராசனார்

நாங்கள் மேல் மாடியில் குடியிருந்தோம். கீழே வடபகுதியில் ஒரு குடும்பமும் தென்பகுதியில் ஒரு குடும்பமும் இருந்தன. தென் பகுதியார் வறுமையால் வாடி இளைத்தவர்கள். கணவன், மனைவி, ஆறு குழந்தைகள், ஒரு பாட்டி, ஒரு நாய் என்று பெருகிய குடும்பம் அது.

வடபகுதியார் செல்வம் செழித்துக் கொழுத்தவர்கள். திருமணமாகி இருபது ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாமல் ஏங்குகின்றவர்கள். அவர்களின் கூடத்திலும் அறைகளிலும் நிறைய படங்கள் உண்டு. ஓர் அலமாரி நிறைய குழந்தைப் பொம்மைகளும் நாய்ப் பொம்மைகளும் உண்டு. உயிருடன் இயங்கியவர்கள், எலி, எறும்பு முதலியவை தவிர, அந்தக் கணவன் மனைவி இருவர்தாம். ஆனால், அவர்கள் இருந்த பகுதி தூய்மையாக, ஒழுங்காக இருந்தது. பொருள்கள் வைத்தவை வைத்தபடியே இருந்தன. அவர்களின் தும்மல், இருமல், ஏப்பம், கொட்டாவி தவிர வேறு எந்த ஒலியும் கேட்பதில்லை.

தென்பகுதிக் குடும்பமோ ஆரவாரம் மிகுந்தது. குழந்தைகள் எந்நேரமும் ஒன்றை ஒன்று அடித்துக்கொண்டு அமர்க்களம் செய்யும். தாய்க்கும் தந்தைக்கும் குழந்தைகளின் வழக்கைக் கேட்டுத் தண்டிக்கும் வேலை நிறைய இருந்தது. காவல் நிலையம், நீதிமன்றம், சிறைக்கூடம் எல்லாம் அங்கு இருந்தன. இருமல் ஓய்ந்த நேரத்தில், பாக்கு உலக்கையால் வெற்றிலைப் பாக்கை நறுக்கி 'லொட் லொட்' என்று குற்றிக் கொண்டிருந்தாள் பாட்டி. அதுவும் ஓய்ந்த நேரத்தில் வருவார் போவார் இடத்தில் மருமகளைப் பற்றி வசை பாடிக் கொண்டிருந்தாள். இடையிடையே கிழவியின் வாழ்க்கைக்கு அமைந்த தாளம்போல், அவர்கள் வளர்க்கும் நாய் தெருவழியே போவாரைப் பார்த்து, உறுமிக் கொண்டும் குரைத்துக்கொண்டும் இருக்கும். சில வேளைகளில் மேலே இருந்து நான் எட்டிப் பார்ப்பது உண்டு. அவர்களின் கூடத்தில் கண்டபொருள்கள் கண்டபடி சிதறிக் கிடக்கும். வடபகுதியாரின் கூடத்தை எட்டிப் பார்க்கலாம் என்றால் பார்ப்பதற்கு அங்கே ஒன்றும் இருக்காது.

இவர்களின் அமர்க்களமும் அலங்கோலமும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. எந்தக் குடும்பமாவது வேறு வீட்டில் இடம் பார்த்துக்கொண்டு அகல்வார்களா என்றால், அதுவும் இல்லை. இரு பகுதியினரும் மனப் பொருத்தம் இல்லாமல் தனித்தனியே வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அவர்களால் எங்களுக்கு எந்தக்குறையும் இல்லை. தனியே மேல் மாடியில் இருந்தபடியால் நாடகம் பார்ப்பதுபோல் கீழே நடப்பவற்றை வேடிக்கையாகக் கவனித்துக் கொண்டு வந்தோம்.

ஏழையின் மனைவி, நிறைந்த கர்ப்பவதியாக இருந்தாள். அவர் வீட்டு நாயும் அப்படித்தான் இருந்தது. ஒருநாள் இரவு, அவள் ஏழாவது குழந்தையை ஈன்றெடுத்தாள். அந்தக் குழந்தையின் புத்தம் புதிய குரலை மேலே இருந்தபடியே கேட்டபோது, எனக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டானது.

சில நாளில், அந்த நாய் ஐந்து குட்டிகளை ஈன்றது. மேலே இருந்து ஆவலோடு எட்டிப் பார்த்தேன். இரண்டு குட்டிகள் வெண்ணிறமாய்ச் சின்னக் கரும்பட்டைகளோடு இருந்தன. மற்ற மூன்றும் தாய் போலவே செந்நிறமாய் இருந்தன. அந்த வெள்ளைக்குட்டிகளில் ஒன்றை எடுத்து வளர்க்கலாமா என்ற ஆசை தோன்றியது. இன்னும் கொஞ்சம் வளரட்டும், பிறகு எடுத்து வளர்க்கலாம் என்று அமைதியானேன்.

அடுத்த மூன்றாம் நாள் காலையில் வெளியே சென்ற அந்தத் தாய்நாய் நெடுநேரம் ஆகியும் திரும்பி வரவில்லை. அந்த ஐந்து குட்டிகளும் "க்ய்ங் க்ய்ங்" என்று ஓயாமல் கத்திக் கொண்டிருந்தன.

என்னடியம்மா, இந்தக் குட்டியெல்லாம் இப்படிக் கத்துதே. கவனிக்கக் கூடாதா, பாவம் என்றாள் கிழவி.

அந்த நாய் காலையிலே போனது, இன்னும் வரவில்லை, அத்தை. பால் இல்லாமல், குட்டி எல்லாம் கத்துது என்றாள் மருமகள்.

ஏதாவது பாலாவது கஞ்சியாவது வார்க்கக் கூடாதா ? என்றாள் கிழவி.

பாலுக்கு நாம் எங்கே போவது ? கஞ்சி வார்த்தால் செத்துப் போகுமே என்றாள் மருமகள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த என் மனம், இப்படியும் உலகம் இருக்க வேண்டுமா ? என்று வருந்தியது.

பிற்பகலில் குட்டிகளின் 'க்ய்ங்' ஒலி வரவரப் பெருகியது. பெரிய பிள்ளைகள் இருவருக்கும் சொல்லி நாயைத் தேடிக்கொண்டு வரும்படி அனுப்பினாள் மருமகள். அவர்கள் இங்கும் அங்கும் தேடிவிட்டு இல்லை என்று திரும்பினார்கள்.

மாலையில் கணவர் வந்தவுடன், "பெரிய கண்ணறாவியாக இருக்கிறது. எங்கேயாவது பார்த்துப் பிடித்துக் கொண்டு வாங்க. இளங்குட்டிகள் இரவெல்லாம் கத்துமே" என்றாள் மனைவி. கணவர் தம் சட்டையைக் கழற்றாதபடியே குட்டிகளைப் பார்த்துக்கொண்டு வாசலில் நின்றார்.

"தாய்க்கு இல்லாத அன்பா ? எங்கேயாவது இருந்தால் எப்போதோ வந்திருக்குமே, முனிசிபாலிட்டியார் பிடித்துக்கொண்டு போயிருப்பார்கள். பொழுதும் போச்சே" என்று சொல்லிக்கொண்டே வெளியே நடந்தார்.

விளக்குவைக்கும் நேரத்தில் செல்வர் மனைவி மேலே வந்தாள், என் மனைவியோடு ஏதோ குறை சொல்லத் தொடங்கினாள்.

நான் பக்கத்து அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

லைசென்சு பணம் கட்ட முடியாதவர்கள் நாய் ஏன் வளர்க்க வேண்டும்? நாங்கள் அவர்களோடு பேசுவதே இல்லை. நீங்களாவது கொஞ்சம் சொல்லுங்கள். இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் போய்விடுமே. எடுத்துத் தொலைவில் கொண்டுபோய் விட்டுவிட்டால் வழியில் போகிறவர்கள் ஆளுக்கு ஒன்று எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். நீங்கள் வந்து சொல்லிப்பாருங்கள் என்றாள்.

அவள் கீழே இறங்கிய சிறிது நேரத்தில், என் மனைவி தென்பகுதியாரிடம் சென்று பேசிக்கொண்டிருந்தாள், திரும்பி வந்ததும், “என்ன செய்தி?” என்று கேட்டேன்.

“ஐந்தும் பச்சைக் குட்டிகள்; வெளியே விட்டால் செத்துப்போகும்; யாராவது எடுத்துக்கொண்டு போனாலும் வளர்க்க முடியாது. இராப்பொழுது எப்படியாவது கழிந்துவிட்டால், நாளை முனிசிபாலிட்டிக்குப் பணம் கட்டி, நாயை மீட்டுக்கொண்டு வந்து காப்பாற்றலாம்” என்றார்கள்.

“இதை வடபகுதியாரிடம் சொன்னாயா?” என்றேன்.

“சொன்னேன், கதவு சன்னல் எல்லாவற்றையும் சாத்திவிட்டுக் குட்டிகளின் ஒலி கேட்காதபடி செய்துவிட்டுத் தூங்குங்கள் என்று சொன்னேன்” என்றாள்.

இரவு ஒன்பது மணிக்குமேல் ஆயிற்று. வீட்டுச் சிறுவர்களின் ஒலியெல்லாம் அடங்கினபடியால் குட்டிகளின் ஒலி, தொடர்ந்து பாட்டுப்போல் கேட்டது.

வடபகுதியார் குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்து சுண்டக் காய்ச்சின பாலை வயிறாரப் பருகிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார்கள். தென்பகுதித் தலைவி, குட்டிகளின் அருகே உட்கார்ந்து இரக்கத்தோடு பார்த்து, அவற்றை மெல்லத் தடவிக் கொண்டிருந்தாள். அவளுடைய கணவர், இளங்குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு, இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார்.

இளங்குழந்தை அழத் தொடங்கியது. “குழந்தைக்குப் பால் கொடு” என்று மனைவியை வற்புறுத்தினார். அவள் அரைமனத்துடன் எழுந்து குழந்தையுடன் உள்ளே சென்றாள். பகல் முழுவதும் உழைத்த ஏழைத்தொழிலாளி ஆகையால், அவருக்கு மேன்மேலும் கொட்டாவி வந்தது. சிறிது நேரம் நின்று குட்டிகளைப் பார்த்துவிட்டு, அவரும் உள்ளே சென்றார்.

இனி, எல்லாரும் உறங்கிவிடுவார்கள் என்று எண்ணி நானும் படுக்கச் சென்றேன். ஆனால், உறக்கம் வரவில்லை. உலகெல்லாம் நாய்க்குட்டி மயமாக இருப்பதாகத் தோன்றியது. அந்தக் ‘க்யங், க்யங்’ ஒலி தவிர, வேறு ஒன்றும் கேட்கவில்லை.

ஒரே முறை மட்டும் வடபகுதியார் ஏப்பம்விட்ட ஒலி கேட்டது. காற்றுவேண்டும் என்று ஒரிரு சன்னல் திறந்து வைத்திருப்பார்கள் என்று எண்ணினேன்.

குட்டிகளின் ஒலி பொறுக்க முடியாத எல்லைக்குச் சென்றது.

திடீரென்று ஒவ்வொரு சுரமாகக் குறைந்து வருவதை உணர்ந்தேன். என்ன காரணமோ,

குட்டிகளும் ஒவ்வொன்றாகத் தூங்கத் தொடங்குகின்றனவோ என்று எண்ணினேன். சிறிது நேரத்தில் அவற்றின் ஒலி பாதி அளவிற்குக் குறைந்துவிட்டது. ஏதோ காரணம் இருக்கவேண்டும் என்று எண்ணிப் பார்க்கலாம் என்று எழுந்தேன். மேற்கு நடையில் நின்று சாய்ந்து பார்த்தேன்.

கீழே கிழக்கு நடைப்புறத்தில் சின்ன மண்ணெண்ணெய் விளக்கின் ஒளி தெரிந்தது. அந்த ஏழையின் மனைவி குட்டிகளின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். என்ன செய்கிறாள், பார்க்கலாம் என்று அமைதியாக நின்றேன். நான் நிற்பது தெரியாதபடி, ஒரு தூணின் பக்கமாக மறைந்து நின்றேன்.

அவள் இடக்கையில் ஒரு கொட்டாங்குச்சி இருந்தது. அதில் கொஞ்சம் பால்போல் இருந்தது. வலக்கையில் பஞ்சுபோல் ஏதோ வைத்திருந்தாள். அதைக் கொட்டாங்குச்சியில் தோய்த்துத் தோய்த்து ஒவ்வொரு குட்டியின் வாயிலும் வைத்தாள். குட்டிகள் அதைச் சுவைத்து அமைதியாவதைக் கண்டேன்.

சிறிது நேரத்தில் முக்கால் பகுதி ஒலி அடங்கிவிட்டது. ஒரு குட்டி மட்டும் கத்திக்கொண்டே இருந்தது. அவள் கொட்டாங்குச்சியைக் கீழே வைத்துவிட்டாள். வலக்கையில் இருந்த பஞ்சு போன்ற துணியைத் தன் மார்பு அருகே கொண்டுபோய், இடக்கையால் அழுத்தித் தன் பாலால் நனைத்து, அந்த ஒரு குட்டியின் வாயில் வைத்தாள். மூன்றுமுறை அவ்வாறு செய்த பிறகு, அதன் ஒலியும் அடங்கியது. குட்டிகள் மூலைக்கு ஒன்றாகப் படுத்துக் கிடந்தன. அந்த இளங்குழந்தையின் தாய், சிறு விளக்கை எடுத்துக்கொண்டு எழுந்து நடந்தாள். விளக்கொளியில் அவளுடைய முகம், மலர்ந்த செந்தாமரையைப்போல் மகிழ்ச்சியோடு விளங்கியதைக் கண்டேன்.

என் படுக்கைக்கு வந்து படுத்தேன். ஏதோ சுமை இறங்கியது போன்ற உணர்ச்சி என் மனத்தில் இருந்தது. பெருமூச்சுவிட்டுக் கை கால்களை நீட்டினேன்.

ஏப்ப ஒலி வந்த அதே திசையிலிருந்து, குறட்டைஒலி வந்து கொண்டிருந்தது.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினாக்கள்

1. குறட்டை ஒலி கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.
2. ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.
3. இக்கதையில் வரும் இருவேறு குடும்பங்களின் இயல்பினை விளக்குக.

# பொருள் இலக்கணம்

## அகப்பொருள்

பொருள் என்பது ஒழுக்கமுறை. அறவழியில் பொருளீட்டிப் பல்லாரோடு பகுத்துண்டு வாழும் வாழ்வியல் நெறிமுறைகளைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போற்றிக் காத்தவர், தமிழர். வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தவர் தமிழரே!

பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகைப்படும்.

### அகப்பொருள்

அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என அகத்திணைகள் எழுவகைப்படும்.

அவற்றுள் முதலைந்தும் அன்பின் ஐந்திணை என்று வழங்கப்படும்.

அகப்பொருளுக்குரிய பொருள்கள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன.

### முதற்பொருள்

அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

நிலம் ஐவகைப்படும்.

#### ஐவகை நிலங்கள்

1. குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்
2. முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்
3. மருதம் – வயலும் வயல்சார்ந்த இடமும்
4. நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடமும்
5. பாலை – மணலும் மணல்சார்ந்த இடமும்.

பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்.

### பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | கார்காலம் | – | ஆவணி, புரட்டாசி |
| 2. | குளிர்காலம் | – | ஐப்பசி, கார்த்திகை |
| 3. | முன்பனிக்காலம் | – | மார்கழி, தை |
| 4. | பின்பனிக்காலம் | – | மாசி, பங்குனி |
| 5. | இளவேனிற்காலம் | – | சித்திரை, வைகாசி |
| 6. | முதுவேனிற்காலம் | – | ஆனி, ஆடி. |

### சிறுபொழுது (ஒருநாளின் ஆறு கூறுகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | காலை | – | காலை 6 மணிமுதல் 10 மணிவரை |
| 2. | நண்பகல் | – | காலை 10 மணிமுதல் 2 மணிவரை |
| 3. | எற்பாடு | – | பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை |
| 4. | மாலை | – | மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை |
| 5. | யாமம் | – | இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை |
| 6. | வைகறை | – | இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை. |

( எற்பாடு – எல் + பாடு. எல் – ஞாயிறு, பாடு – மறையும் நேரம்.)

### திணையும் பொழுதும்

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

### கருப்பொருள்

அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு முதலியன பொருள்கள் கருப்பொருள் எனப்படும்.

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன்கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) அகம், புறம் ஆகிய இரண்டும் ____________ இலக்கணம் ஆகும்.

ஆ) குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் ____________ எனப்படும்.

இ) நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி ____________ பகுதியாகும்.

ஈ) யாமம் என்பது இரவு 10 மணிமுதல் ____________ வரை ஆகும்.

உ) மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும் ____________ பெரும்பொழுதுகளும் வரும்.

ஊ) திருமால் ____________ நிலத்திற்குரிய தெய்வம்.

எ) மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் ____________ திணைக்குரிய பறைகள்.

ஏ) நெய்தல் திணைக்குரிய தொழில் ____________ ஆகும்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) பொருளிலக்கணம் ____________ வகைப்படும்.

1. இரண்டு 2. மூன்று 3. ஐந்து

ஆ) அகத்திணைகள் ____________ வகைப்படும்.

1. மூன்று 2. ஐந்து 3. ஏழு

இ) மார்கழி, தை ஆகிய இரண்டும் ____________ காலத்திற்குரியன.

1. முன்பனி 2. பின்பனி 3. இளவேனில்

ஈ) மருதநிலத்திற்குரிய தெய்வம் ____________

1. முருகன் 2. திருமால் 3. இந்திரன்

உ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் ____________

1. கிளி, மயில் 2. நாரை, அன்னம் 3. புறா, பருந்து.

**3. பொருத்துக.**

1. குறிஞ்சி – முயல், மான்
2. முல்லை – புலி, கரடி
3. மருதம் – முதலை, சுறா
4. நெய்தல் – எருமை, நீர்நாய்

### ஆ) குறு வினாக்கள்

1. பொருளாவது யாது ?
2. முதற்பொருள் என்பது யாது ?
3. கருப்பொருள் என்பது யாது ?
4. வயலும் வயல்சார்ந்த இடமும் எத்திணைக்குரியது ?

5. ஐப்பசி, கார்த்திகை ஆகிய இருதிங்களும் எக்காலத்திற்குரியன ?

6. வைகறைக்குரிய காலஅளவு யாது ?

7. முருகன் எந்நிலத்திற்குரிய தெய்வம் ?

8. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

## மொழித்திறன்பயிற்சி

### பழமொழிகள்

தொடரில் மரபுத்தொடர்கள், உவமைத்தொடர்களை அமைத்து எழுதுதல்போலவே, பழமொழிகளையும் அமைத்து எழுதுவர். இதனால், சொல்லப்புகும் கருத்து எளிதில் விளங்கும்.

(எ–டு) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி, சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பதற்கேற்பத் தன் பெற்றோரும் ஆசிரியர்களும் கொடுத்த ஊக்கத்தால் நன்கு படித்து முதல் மதிப்பெண் பெறமுடிந்தது என்றாள்.

கீழ்க்காணும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. விளையும் பயிர் முளையிலே தெரியும்.
3. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
4. சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
5. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
6. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
7. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'நான் ஓர் அறிவியல் அறிஞரானால்......' எனும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) எழுதுதல் திறன்

தன்விவரக்குறிப்பு எழுதுதல்: பத்தாம் வகுப்பு முடித்ததும் சிலர் பதினோராம் வகுப்பு அல்லது தொழிற்கல்வி முதலான படிப்புகளில் சேர விரும்புவர். வேறு சிலர், குடும்பச்சூழல் காரணமாகப் படித்துக்கொண்டும் ஏதேனும் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டும் இருப்பர். குறித்த சில வேலைகளுக்குப் பத்தாம் வகுப்புத் தேர்ச்சி தேவைப்படுவதனால், வேலைவாய்ப்பிற்கான விண்ணப்பங்களை நிரப்பத் தன்விவரக்குறிப்பு எழுதத் தெரிந்திருத்தல் வேண்டும்.

பயிற்சி : அலுவலக உதவியாளராகப் பணிபுரிய பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதி வாய்ந்தவர்கள் தன் விவரக்குறிப்பைக் கீழ்க்காணும் முகவரிக்குப் பத்து நாளுக்குள் அனுப்புக.

கலைவாணி கல்வி நிலையம், தல்லாகுளம், மதுரை மாவட்டம் – 625 002.

தன்விவரக் குறிப்பு

| | |
|---|---|
| பெயர் | – |
| பிறந்த நாள் மற்றும் வயது | – |
| பாலினம் | – |
| தந்தையின் பெயர் | – |
| முகவரி | – |
| பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | – |
| தாய்மொழி | – |
| பயின்ற மொழிகள் | – |
| தட்டச்சு | – |
| கணினி | – |

இ) கட்டுரை: அன்றாட வாழ்வில் அறிவியல்.

ஈ) கடிதம்: சாலை/ மின்விளக்கு வசதிவேண்டி நகராட்சி ஆணையருக்கு.

## வாழ்க்கைத்திறன்கள்

### சிக்கலுக்குத் தீர்வு காணல்

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவான். ஆனால், அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்யவேண்டு மென்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார். தனிப்படிப்புச் சொல்லித்தருபவரின் பழகுந்தன்மை, அவனுக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

1. பாண்டியன், தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான் ?
2. நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

அ) தந்தைக்குப் பயந்து அங்கேயே படிப்பேன்.

ஆ) நீங்கள் செய்வது பிடிக்கவில்லை என்று நேரடியாகவே அவரிடம் கூறிவிட்டு, நடந்தவற்றை வீட்டிலும் சொல்லிவிடுவேன்.

## மதிப்புக்கல்வி

### பகைவரையும் மன்னிக்கும் மாண்பு

விருதுநகரில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில், தந்தை பெரியார் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது, கூட்டத்திலிருந்து ஒருவர் கத்தியுடன் பெரியார்மீது பாய்ந்தார். பெரியார் சிறிதும் பதற்றமின்றி, அவர் கையை எட்டிப்பிடித்தார். அவரை நோக்கிப் பாய்ந்த தொண்டர்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். தன்னைத் தாக்குவதற்காகக் கத்தியோடு பாய்ந்த அவரை, மேடையில் தன் அருகிலேயே உட்கார வைத்துக்கொண்டு, தொடர்ந்து உரையாற்றினார்.

கூட்டம் முடிந்தபிறகு, அவரை ஒன்றும் செய்யாமல் பாதுகாப்பாக அவருடைய வீட்டில் கொண்டுபோய் விடும்படி கட்டளையிட்டார். காரணம், அவரைத் தனியாகவிட்டால் தன்மீது பற்றுக்கொண்ட தோழர்கள்

யாராவது, அவரைத் தாக்கித் துன்புறுத்துவார்கள் என்று பெரியார் நினைத்தார்.

தன்மேல் கொல்லப் பாய்ந்தவரைக்கூட மன்னித்து விட்டுவிடும்படி அனுப்பியதனால், பெரியார் பெரியார்தாம் என்று மெய்ப்பித்தார்.

பெரியாரின் வாழ்வில் நடந்த இந்நிகழ்ச்சி பகைவரிடமும் அன்பு செலுத்தவேண்டும் என்னும் உயரிய பண்பினை உணர்த்துகிறது.

குற்றம்புரிந்தோரையும் சிறையிலுள்ளோரையும் கேட்டுப்பாருங்கள். நொடிநேர உணர்ச்சிக்கு வயப்பட்டதனால், எத்துணைப் பெரிய குற்றத்தைப் புரிந்தார்கள் என்பதும், அதனால், அவர்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் சொல்லிமாளாது.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

வீட்டில். . . . . .

பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப்போட்டு விட்டு, "மம்மி வாட்டர்" என்று குரல் கொடுத்தான்.

"பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய் ? கை கால்களை வாஷ் செய்துகொண்டு வா, சூடாக உனக்குப் பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன்; போய் யூனிபார்ம் மாற்றிக்கொண்டு வா" என்றாள், அவன் தாய்.

"போம்மா" என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் போட்டான்.

"ஸ்கூல்விட்டு வந்தவுடனே எதற்கு டிவி ? ஹோம் ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம்" என்றாள், அவன் தாய்.

மேற்கண்ட பகுதியைப் பிறமொழிக் கலப்பின்றித் தமிழ்ப்படுத்துக.

## மொழியாக்கம்

This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firm, industrials concerns and government departments, lot of information processing is required. The computer is the superfast information processing unit.

### ஆ) இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. All that glitter is not gold. | மின்னுவதெல்லாம் பொன்னல்ல. |
| 2. Art is long but life is short. | கல்வி கரையில, கற்பவர் நாள் சில. |
| 3. Barking dog seldom bite. | குரைக்கின்ற நாய் கடிக்காது. |
| 4. Even a pin is good for something. | சிறுதுரும்பும் பல் குத்த உதவும். |
| 5. Take time by the forelock. | காலத்தே கடமையைச் செய். |

# சீறாப்புராணம்

## விலாதத்துக் காண்டம்

## புலி வசனித்த படலம்

### முன்கதைச் சுருக்கம்

அடர்ந்த காட்டில் வாழும் புலியொன்று, அங்கு வாழும் சிங்கம் தவிர்த்த மற்ற விலங்குகளுக்கும் அவ்வழியே வரும் மக்களுக்கும் பெருந்தொல்லை கொடுத்து வந்தது. அப்புலியைக் கண்டு மக்களும் அஞ்சினர்; விலங்குகளும் அஞ்சின. இச்செய்தியை முகம்மதுநபி கேட்டறிந்தார். புலியிருக்கும் இடமறிந்து, அங்கே சென்று புலியைக் கண்டு இறையருள் புரிந்தார். முகம்மது நபியைப் புலி வணங்கி, அவர் கூறியபடி வேறு வனத்திற்குச் சென்றுவிட்டது.

### ஒருவன் முகம்மதுநபியை வணங்கிக் கூறிய செய்தி

1. படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறிநதிப் பரப்பைக்
கடந்து கான்பல கடந்தரு நெறிசெலுங் காலை
கொடுந்த டக்கரித் திரளெனும் குழுவினுள் ஒருவன்
அடைந்து சீரகு மதினடி தொழுதறை குவனால்

**பொருள் :** பரவிய தெளிந்த அலைகள் பெருக்கெடுத்து ஓடும் ஆறு. அவ்வாற்றினது பரப்பையும், கொடுமை வாய்ந்த பெரிய யானைக் கூட்டங்கள் செல்கின்ற பல காடுகளையும் கடந்துவந்த மனிதன் ஒருவன், சிறப்பினையுடைய அகமது என்னும் திருப்பெயர் பெற்ற நபிமுகம்மதுவின் திருவடிகளை வணங்கிச் சிலவற்றைச் சொல்லத் தொடங்கினான்.

**சொற்பொருள் :** தெண்டிரை – தெளிந்த அலைகள்; கான் – காடு; தடக்கரி – பெரிய யானை; திரள் – கூட்டம்; அறைகுவன் – சொல்லுவான்.

**இலக்கணக்குறிப்பு :** படர்ந்த தெண்டிரை – பெயரெச்சம்; நதிப்பரப்பு – ஆறாம் வேற்றுமைத்தொகை; தொழுது அறைகுவன் – வினையெச்சம்; தடக்கரி – உரிச்சொற்றொடர்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** படர்ந்த – படர் + த் ( ந் ) + த் + அ, படர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி; அறைகுவன் – அறை + கு + வ் + அன், அறை – பகுதி, கு – சாரியை, வ் – எதிர்கால இடைநிலை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**பிரித்தறிதல் :** தெண்டிரை – தெண்மை + திரை; பெருக்கெடுத்து – பெருக்கு + எடுத்து.

## புலி இருக்குமிடம் தெரிவித்தல்

2. நிகழுந் தாரையில் காவதத் துள்ளுறை நெடுநீர்
அகழி போன்றவோர் ஓடையுண் டதனினுக் கணித்தாய்ப்
புகலு தற்கரி தடவியுண் டவ்வழிப் பொருந்தி
உகளு மாங்கொரு பாதகக் கொடுவரி உழுவை

பொருள் : நாங்கள் நடக்கின்ற இப்பாதையினிடத்து, ஒருகாதவழித் தொலைவில் நெடிய அகழி போன்ற ஓடையொன்று உண்டு. அதனருகே அடர்ந்த மரங்களையுடைய காட்டில் கொடிய வரிகளையுடைய பாய்கின்ற புலியொன்று உண்டு.

சொற்பொருள் : தாரை – வழி; அணித்தாய் – அண்மையில்; அடவி – காடு; உழுவை – புலி.

இலக்கணக்குறிப்பு : நெடுநீர் – பண்புத்தொகை, பொருந்தி – வினையெச்சம்; வரி உழுவை ( வரிகளைக்கொண்ட புலி ) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : பொருந்தி – பொருந்து + இ, பொருந்து – பகுதி, இ – வினையெச்ச விகுதி.

பிரித்தறிதல் : உள்ளுறை – உள் + உறை; நெடுநீர் – நெடுமை + நீர்; அவ்வழி – அ + வழி.

## புலியின் தோற்றம்

3. நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துடல் நிமிர்ந்து
கூண்ட கால்மடித் திருவிழி கனல்கள் கொப்பளிப்பப்
பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ
வீண்டு முட்செறி வனத்திடை சினத்தொடும் இருக்கும்

பொருள் : தனது நீண்ட வாலினால் தரையில் அடித்து, உடல் நிமிர்ந்து, நான்கு கால்களையும் மடித்துத் தரையின்மேல் படுத்து, இரண்டு கண்களும் நெருப்புப் பொறிகளைக் கக்க, வெண்பற்கள் ஒளிவிட, வாயில் புலால் நாற்றம் வீச, முள் நெருங்கிய காட்டில் சினத்தோடு அப்புலி இருக்கும்.

சொற்பொருள் : கூண்ட – சேர்ந்த; கனல் – நெருப்பு; வெள்ளெயிறு – வெண்ணிறப் பற்கள்; புலால் – இறைச்சி; வனம் – காடு.

இலக்கணக்குறிப்பு : புடைத்து, நிமிர்ந்து, கிடந்து, மடித்து – வினையெச்சங்கள்; கால் மடித்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை, வெள்ளெயிறு – பண்புத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : நிமிர்ந்து – நிமிர் + த் (ந்) + த் + உ. நிமிர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி; பூண்ட – பூண் + ட் + அ. பூண் – பகுதி, ட் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

பிரித்தறிதல் : இருவிழி – இரண்டு + விழி; வெள்ளெயிறு – வெண்மை + எயிறு.

## புலியின் வெறிச்செயல்

4\. நிரம்பும் வள்ளுகிர் மடங்கலின் இனங்களில் நிணமுண்
டிரும்ப னைக்கையும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட்
டுரம்பி ளந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா
தரும்பெ ருங்கிரி பிதிர்ந்திட வுருமினும் அலறும்

**பொருள் :** அப்புலியானது, கூர்மையான நகங்களையுடைய சிங்கக் கூட்டங்களன்றி, மற்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணும். பெரிய பனைபோலும் தும்பிக்கையினையும் மூன்று மதங்களையுமுடைய யானைகளின் கொம்புகளைப் பிடித்து இழுத்து, அவற்றின் மார்பினைக் கீறிக் குருதியினைக் குடித்து உறங்காது நின்று, பெரிய அரிய மலைகளும் அதிருமாறு இடியைக் காட்டிலும் அதிகமாக முழங்கும்.

**சொற்பொருள் :** வள்ளுகிர் – கூர்மையான நகம், மடங்கல் – சிங்கம்; நிணம் – கொழுப்பு (இறைச்சி); மதகரி – மதம் பொருந்திய யானை; கோடு – தந்தம்; கிரி – மலை; இரும்பனை – பெரிய பனை; உரும் – இடி; அலறும் – முழங்கும்.

**இலக்கணக்குறிப்பு :** பெருங்கிரி – பண்புத்தொகை

**பிரித்தறிதல் :** கரிக்கோடு – கரி + கோடு; பெருங்கிரி – பெருமை + கிரி.

5\. அதிர்ந்தி டுந்தொனி செவியுற அடவியில் அடைந்த
முதிர்ந்த மேதியும் கவையடிக் கேழலும் முழுதும்
பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்
பதிந்த கால்தடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும்

**பொருள் :** புலி முழங்கிடும் ஓசையினைக் கேட்ட அளவில் பெரிய காட்டெருமைகளும், பிளந்த பாதங்களையுடைய பன்றிகளும், அடர்ந்த முடிகள் நிரம்பிய கரடிகளும், கலைமான்களும், நிலத்தில் பதியப்பெற்ற தங்கள் கால்கள் தடுமாற்றமுற்று விழுந்து உடல் நடுக்கமடையும்.

**சொற்பொருள் :** தொனி – ஓசை; மேதி – எருமை; கவை – பிளந்த; கேழல் – பன்றி; எண்கு – கரடி; மரை – மான்.

**இலக்கணக்குறிப்பு :** முதிர்ந்தமேதி, பொதிந்தமெய் – பெயரெச்சங்கள்; கவையடிக்கேழல் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

**பகுபத உறுப்பிலக்கணம் :** அடைந்த – அடை + த் ( ந் ) + த் + அ. அடை – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

**பிரித்தறிதல் :** எண்கினங்கள் – எண்கு + இனங்கள்; வீழ்ந்துடல் – வீழ்ந்து + உடல்.

### முகம்மதுநபி புலியிருக்குமிடம் கேட்டல்

6. என்ற வாசகம் செவிபுக எழிலிரு புயமும்
குன்று போலுற வீங்கின முறுவல்கொண் டிடராய்
நின்ற வேங்கையெவ் வழியென நிகழ்த்தினர் அவனும்
வென்றி வாளர சேயணித் தெனவிளம் பினனே.

**பொருள் :** காட்டில் உயிரினம் புலிக்கு அஞ்சி வாழும் செய்திகள் அனைத்தையும் முகம்மது நபிகள் கேட்டறிந்தவுடன், அவரது அழகிய இருதோள்களும் மலைகளைப்போலப் பருத்தன. அவ்வாறு கூறிய மனிதனைப் புன்சிரிப்புடன் பார்த்துத் தொல்லை தரும் அப்புலியானது, இருக்குமிடம் எவ்விடம் என்று கேட்டார். அதற்கு, அம்மனிதன் வெற்றியைத் தரும் வாள்படை தாங்கிய வேந்தரே! அருகில்தான் இருக்கின்றது என்று சொன்னான்.

**சொற்பொருள் :** எழில் – அழகு; புயம் – தோள்; முறுவல் – புன்சிரிப்பு; இடர் – துன்பம்; வேங்கை – புலி; வென்றி – வெற்றி; அணித்து – அருகில்; விளம்பினான் – சொன்னான்.

**இலக்கணக்குறிப்பு :** செவிபுக – ஏழாம் வேற்றுமைத்தொகை; நின்ற வேங்கை – பெயரெச்சம்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** நிகழ்த்தினர் – நிகழ்த்து + இன் + அர்; நிகழ்த்து – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி; விளம்பினன் – விளம்பு + இன் + அன். விளம்பு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

### முகம்மதுநபி வருவதைப் புலி பார்த்தலும் வணங்குதலும்

7. மாதி ரத்துறை கேசரி நிகர்முகம் மதுதம்
பூத ரப்புயம் அசைதரப் புளகிதத் தோடும்
காது செங்கதிர் வேல்வலக் கரத்திடை கவின
வீதி வாய்வரக் கண்டது பெருவரி வேங்கை

**பொருள் :** மலைகளில் வாழும் சிங்கத்திற்கு ஒப்பாகிய நபிமுகம்மது, தமது மலைபோன்ற தோள்கள் அசையும்படி, கூர்மையான ஒளிவிடும் வேற்படையினை வலக்கையில் அழகுடன் ஏந்தியவாறு பாதையில் மகிழ்ச்சியுடன் நடந்து வருவதை, அவ்வரிப்புலி பார்த்தது.

**சொற்பொருள் :** மாதிரம் – மலை; கேசரி – சிங்கம்; புளகிதம் – மகிழ்ச்சி; காது – கொல்லுதல்; கவின் – அழகு; பூதரம் – மலை; வீதிவாய்வர – பாதையில் வர.

**இலக்கணக்குறிப்பு :** செங்கதிர், பெருவரி – பண்புத்தொகைகள்; பூதரப்புயம் – உவமைத்தொகை.

**பகுபத உறுப்பிலக்கணம் :** கண்டது – காண் (கண்) + ட் + அ + து. காண் – பகுதி, கண் எனக் குறுகியது விகாரம், ட் – இறந்தகால இடைநிலை, அ – சாரியை, து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : மாதிரத்துறை – மாதிரத்து + உறை; செங்கதிர் – செம்மை + கதிர்; பெருவரி – பெருமை + வரி.

8. கண்ட போதினில் வால்குழைத் தரியமெய் கலங்கிக்
கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரங் குனித்துத்
தண்ட ளிர்ப்பதத் தெரிசனைக் கெனச்சலாம் உரைத்துத்
தெண்டன் இட்டது வள்ளுகிர் திண்டிறல் புலியே.

பொருள் : நபிமுகம்மது வருவதனைப் பார்த்தபொழுது, கூர்மை பொருந்திய நகத்தினையும் திண்ணிய வலிமையினையும் உ–டைய அப்புலியானது, தனது வாலை வளைத்து அரிய உடல் நடுக்கமுற்றுப் பையப் பைய நடந்து வந்து, குளிர்ச்சி தங்கிய தளிர்போலும் திருவடிக் காட்சி கிடைத்ததென்று, தன் தலையைத் தாழ்த்திப் பணிந்து வணங்கியது.

சொற்பொருள் : பெருஞ்சிரம் – பெரியதலை; தெண்டனிட்டது – வணங்கியது; வள்ளுகிர் – கூர்மையான நகம்; தெரிசனம் – காட்சி; சலாம் – வணக்கம்; திண்திறல் – உறுதியான வலிமை.

இலக்கணக்குறிப்பு : வால்குழைத்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை; பெருஞ்சிரம், தண்டளி, திண்டிறல் – பண்புத்தொகைகள்.

பிரித்தறிதல் : பெருஞ்சிரம் – பெருமை + சிரம்; தண்டளிர்ப்பதம் – தண்மை + தளிர் + பதம்; திண்டிறல் – திண்மை + திறல்.

### முகம்மதுநபி, தன் கரத்தினால் புலியைத் தடவுதல்

9. வந்து தெண்டனிட் டெழுந்துவாய் புதைத்துற வணங்கிப்
புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை
மந்த ராசல முகம்மது நனிமனம் மகிழ்ந்து
சந்த மென்மணிக் கரத்தினால் சிரமுகம் தடவி

பொருள் : தம்முன்னால் வந்து தெண்டனிட்டு, வாய்பொத்தி மிகத்தாழ்ந்து, அறிவுமிகும்படி துதித்த, கூர்மையான நகத்தினையுடைய அப்புலியை, மந்திரமலைக்கு ஒப்பாகிய முகம்மதுநபி மிகுந்த மனம் மகிழ்ந்து அழகிய மணிக்கரத்தினால் தலையையும் முகத்தையும் தடவியருளினார்.

சொற்பொருள் : புந்தி – அறிவு; மந்தராசலம் – மந்தரமலை; சந்தம் – அழகிய; சிரம் – தலை.

இலக்கணக்குறிப்பு : எழுந்து, புதைத்து, வணங்கி – வினையெச்சங்கள்; வள்ளுகிர்ப்புலி ( கூர்மையான நகத்தை உடைய புலி ) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; நனிமனம் – உரிச்சொல்தொடர்; சிரமுகம் ( சிரமும் முகமும் ) – உம்மைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : எழுந்து – எழு + த் ( ந் ) + த் + உ . எழு – பகுதி,

த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி; வணங்கி – வணங்கு + இ. வணங்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி.

பிரித்தறிதல் : சிரமுகம் – சிரம் + முகம்.

### முகம்மதுநபியைப் புலி வணங்கிப் புறப்படுதல்

10. இன்று தொட்டிவண் நெறியினில் உயிர்செகுத் திடுவ
தன்று வேறொரு காட்டினிற் புகுகவென் றறைந்த
மன்றல் உன்றிய முகம்மதின் மலரடி வணங்கி
நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை. *

பொருள்: முகம்மதுநபி, புலியை நோக்கி, “நீ, இன்றுமுதல் உயிர்வதை செய்வதனை விடுத்து, இவ்விடத்திலிருந்து அகன்று வேறொரு காட்டிற்குப் புகுவாயாக” என்று அருளினார். அப்புலியானது, முகம்மதுநபியின் மணம் பொருந்திய தாமரைப் பூப்போன்ற அடிகளை வணங்கி, நல்லது நல்லது என்று சொல்லிப் புகழ்ந்தவாறே அவ்விடத்தினைவிட்டு நடந்து சென்றது.

சொற்பொருள் : இவண்நெறியில் – இவ்வழியில்; செகுத்திடுவது – உயிர்வதை செய்வது; அறைந்த – சொன்ன.

இலக்கணக்குறிப்பு : உயிர்செகுத்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை; புகுக – வியங்கோள் வினைமுற்று, மலரடி – உவமைத்தொகை; நன்று நன்று – அடுக்குத்தொடர்.

பகுபத உறுப்பிலக்கணம் : புகுக – புகு + க. புகு – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி; நடந்தது – நட + த் ( ந் ) + த் + அ + து. நட – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, அ – சாரியை, து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

### முகம்மதுநபியின் செயலைக்கண்டோர் வியந்துபோற்றுதல்

11. படுகொ லைப்புலி மெய்யுறப் பணிந்திவர் பாதத்து
அடிவ ணங்கிய காரண வதிசயம் அதனால்
உடைய வன்திருத் தூதரே உண்மையென் றுன்னித்
தினமு டைத்தநெஞ் சாயினர் அறிவினில் தெளிந்தோர்.

பொருள் : மிகுந்த கொலைத்தொழிலையுடைய அப்புலியானது, உடல் மண்ணில் பொருந்தும்படி முகம்மதுநபியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய அற்புதத்தினால் அவர் ‘இறைத்தூதர்’ என்ற உண்மையை உணர்ந்து உறுதிகொண்ட உள்ளம் உடையவர்களாயினர் அறிவில் தெளிந்தோர்.

சொற்பொருள் : அதிசயம் – வியப்பு, உன்னி – நினைத்து; தெளிந்தார் – தெளிவு பெற்றார்.

இலக்கணக்குறிப்பு : கொலைப்புலி (கொலையை விரும்பும் புலி) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : தெளிந்தோர் – தெளி + த் ( ந் ) + த் + ஓர். தெளி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : பணிந்திவர் – பணிந்து + இவர்.

ஆசிரியர் குறிப்பு : சீறாப்புராணத்தினை இயற்றியவர் உமறுப்புலவர். இவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர். அப்துல்காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதத் தொடங்கினார். நூல் முற்றும் முன்னமே சீதக்காதி மறைந்தார். அவருக்குப்பின், அபுல்காசிம் என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது. உமறுப்புலவர் வள்ளல் பெருமக்களை நூலின் பலவிடங்களில் நினைவுகூர்ந்து போற்றுகிறார். இவர் எண்பது பாக்களால் ஆகிய முதுமொழிமாலை என்னும் நூலையும் படைத்தளித்துள்ளார். இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு.

நூற்குறிப்பு : இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய நூல் சீறாப்புராணம். சீறா – வாழ்க்கை, புராணம் – வரலாறு எனப் பொருள்படும். இந்நூல் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது; ஐயாயிரத்து இருபத்தேழு விருத்தப்பாக்களால் ஆனது. பாடப்பகுதி விலாதத்துக் காண்டத்தில் உள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) சீறாப்புராணத்தை இயற்றியவர் ______________.

ஆ) உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் ______________.

2. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.

அ) சீறாப்புராணம் ______________ காண்டங்களையுடையது.

1. மூன்று 2. ஐந்து 3. ஏழு

ஆ) ‘கேழல்’ என்பதன் பொருள் ______________.

1. எருமை 2. புலி 3. பன்றி

3. யார், யாரிடம் கூறிய தொடர் இது?

அ) வென்றி வாளரசே

ஆ) வேறொரு காட்டினிற் புகுக

4. உவமையைப் பொருளுடன் பொருத்தி எழுதுக.

எழிலிரு புயமும் குன்று போலுற வீங்கின

5. சீர்மோனையை எழுதுக.

மன்ற லுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி

6. அடி எதுகையை எழுதுக.

நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துடல் நிமிர்ந்து
கூண்ட கால்மடித் திருவிழி கனல்கள் கொப்பளிப்ப

7. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. கான் | – | கரடி |
| 2. உழுவை | – | சிங்கம் |
| 3. மடங்கல் | – | புலி |
| 4. எண்கு | – | காடு |

## ஆ) குறுவினாக்கள்

1. முகம்மதுநபியை வணங்கியவன் கூறிய செய்தி யாது?
2. புலியின் தோற்றத்தினைப்பற்றி எழுதுக.
3. வனத்தில் வாழும் விலங்குகளாகச் சீறாப்புராணம் குறிப்பிடுவன யாவை?
4. தம்முன் வந்த புலியை நபிகள் நாயகம் என்ன செய்தார்?
5. நபிகள் நாயகம் புலியிடம் கூறியது என்ன?
6. நபிகள் நாயகத்திடம் புலி கூறியது என்ன?
7. புலி வசனித்த படலத்தின்மூலம் நீயறியும் அறம் யாது?

## இ) சிறுவினாக்கள்

1. சீறாப்புராணம் குறிப்பு எழுதுக.
2. புலியின் கொடுஞ்செயல்கள்பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?
3. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.


## ஈ) நெடுவினா

புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

# காந்தியம்

இசுரேல்–எகிப்து நாடுகளுக்கிடையே கடும்போர் நடந்த நேரம். அமெரிக்க இதழ் இபான் ஆசிரியர் இசுரேலுக்குச் சென்றார். விடியற்காலை மணி இரண்டு. கட்டடங்களின்மேல் போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. தாம் தங்கியிருந்த இல்லத்தில், அந்நிலையிலும் ஓர் இளம்பெண் ஒரு நூலை விரும்பிப் படித்துக்கொண்டிருந்தார். அதனைக் கண்டு வியப்புற்ற இபான் ஆசிரியர், அந்நூலை வாங்கிப் பார்த்தார். அது, காந்தியடிகளின் சத்திய சோதனை. "இந்த நேரத்தில் குண்டுகளுக்கிடையே இந்நூலை ஏன் படிக்கின்றாய்?" என்றபோது, அந்தப் பெண்ணின் மறுமொழி, "இதில்தான் உலகம் உய்ய உற்றவழி இருக்கின்றது" என்றார். உலகில், இன்று காந்தியடிகள் இல்லை. ஆனால், அவர் விட்டுச்சென்ற காந்தியக் கொள்கைகள் இன்றும் உலகை வழிநடத்திச் செல்கின்றன.

## விளையும் பயிர்



காந்தியடிகள் சிறுவனாக இருந்தபோது, குஜராத்திப் பாடல் ஒன்றனைக் கேட்டார். தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை; தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு என்ற அப்பாடல் இன்னா செய்யாமை (அகிம்சை) என்னும் கருத்தினை அவருள் விதைத்தது. அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது சிரவண பிதுர்பத்தி என்ற ஒரு நாடக நூலைப் படித்தார். அதில் சிரவணன் என்ற இளைஞன் பார்வையற்ற தன் தாய் தந்தையரைக் காவடியில் தூக்கிச் செல்லும் ஒரு காட்சிப்படம் இருந்தது. அதனைப் பார்த்தது முதல், தாமும் பெற்றோரிடம் அன்பு செலுத்த விரும்பினார்.

அரிச்சந்திரன் நாடகத்தைக் காந்தி ஒருமுறை பார்த்தார். உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரனை ஒரு பொய் பேசவைக்கவேண்டும் என்பதற்காகவே பல இன்னல்களுக்கு உள்ளாக்குகிறார் முனிவர் விசுவாமித்திரர். அதனால், அரிச்சந்திரன் நாட்டையும் மனைவியையும் ஒரே மகனையும் இழக்கிறான்; சுடுகாட்டில் பணிபுரிகிறான். முனிவர் பல்வேறு இன்னல்களை இழைத்தும், "பொய் சொல்லேன்" என்று மறுமொழி கூறினான். அவனது வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தி, தாம் ஒரு சத்தியவானாக இருக்கவேண்டும் என்று உறுதிகொண்டார்.

ஒருமுறை இயேசுநாதரின் மலைச்சொற்பொழிவைப் பற்றிய நூலைப் படித்தார். தீயவனை எதிர்க்காதே; அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில்; பகைவனிடமும் அன்பு பாராட்டு என்னும் கருத்துகள், அவரிடம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தின. பகவத்கீதையைப் படித்ததன்மூலம் மனவுறுதியைப் பெற்றார். உருசிய அறிஞர் தால்சுதாய் எழுதிய, உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு என்னும் நூல் அவருள் தாக்கத்தினை ஏற்படுத்தியது. தால்சுதாய், தம் நூலில் "இன்னா செய்தார்க்கும்" என்னும் திருக்குறளையே மொழிபெயர்த்து எழுதியிருந்தார். அதனைப்படித்த காந்தியடிகள் திருக்குறள்மீதும், தமிழ்மீதும் பற்றுக்கொண்டார். அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை ஆகிய உயர் பண்புகள் அவருக்கு இளம்பருவத்திலேயே இயல்பாய் அமைந்தன.

## அறவழி விடுதலைப்போர்

போராட்ட முறைகள் இருவகைப்படும். ஒன்று, போர்முறையில் உரிமையை நிலைநாட்டுவது; மற்றொன்று, அறவழியில் உரிமைப்போர் செய்து வெற்றி பெறுவது. இவற்றுள் அறப்போர் முறையினைக் காந்தியடிகள் தேர்ந்தெடுத்தார். "மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதாது. அதனை அடையும் வழிமுறைகளும் தூய்மையானதாகப் பிறருக்குத் துன்பம் தராததாக இருக்கவேண்டும்" என்றார் அவர்.

ஆங்கிலேயரைத் துன்புறுத்தி விடுதலை பெறுவதனைவிட, அமைதியான முறையில் அவர்களை எதிர்த்து, மனம் மாறச்செய்து விடுதலை பெறுவதே சிறந்தது என்றார். நேதாஜி போன்றோர் போர்முறையைக் கையாண்டுதான் விடுதலை பெறமுடியும் என்றபோது காந்தி, "வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயைத் தீயால் அணைக்க முற்படுவது போன்றது" என்று கூறினார். நெருப்பை நீரால்தான் அணைக்கமுடியும். வன்முறையை அன்பு, அருள் ஆகிய அறவழிகளில்தான் தடுக்க முடியும். அறவழியைப் பின்பற்றிப் பெறுகிற விடுதலையே நிலைக்கும் என்று, அவர் எடுத்துக் கூறினார்.

வலிய போரில் சாகின்றவர்களின் எண்ணிக்கையைவிட, அறவழிப்போரில் இறப்போரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும் என்றும், மற்ற உலக நாடுகள் இதனை ஏற்காவிடினும் இந்தியா அதனை ஏற்றுநடத்தி, ஏனைய நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழவேண்டும் என்றும் விரும்பினார். இந்த வழியை உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டியது இந்தியரின் கடமை என்றார் அவர். காந்தியடிகளின் அறவழிப் போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு பெருகியது; கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகிய இயக்கங்கள் பரவின.

## எளிமை ஓர் அறம்

மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த சான்றோர் காந்தியடிகள் என்பது உலகறிந்த செய்தி. ஒருமுறை தம் மனைவி கஸ்தூரிபாய் காந்தி, ஆசிரமத்திற்கு வாங்கிய காய்கறிகளில், வழக்கத்திற்கு அதிகமாக ஓர் அணா செலவு செய்ததற்குக் காந்தியடிகள்

கடிந்துகொண்டார். ஆசிரமத்தில் தாமே சமையல் செய்து அனைவருக்கும் கொடுத்தார். கழிப்பறை கழுவுதல் ஒரு கலை என்றார். தம் கழிவுகளை வேறு ஒருவர் அகற்றவிடாமல் தாமே அகற்றினார்; எழுதித் தேய்ந்த ஒரு பென்சிலாக இருந்தாலும், அதனை இழக்க மனம் வராமல் தேடுவார்; சிறு காகிதத்தையும் வீணாக்காமல் அதில் கடிதங்களுக்கு மறுமடல் எழுதுவார். அவர் விரும்பியிருந்தால், அரச வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால், எளிமையை ஓர் அறமாகப் போற்றிய அவருடைய மனம், அதற்கு இடம் தரவில்லை; பகட்டான வாழ்க்கையைப் பாவம் என்று கருதினார் அண்ணல் காந்தியடிகள்.

காந்தியடிகள் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதைக் கண்டார். தாமும் அன்றுமுதல் மேலாடை அணிவதனை நிறுத்திக்கொண்டார். அரையாடையுடன் இங்கிலாந்தில் நடந்த வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோது, அப்போதைய இங்கிலாந்து முதன்மையமைச்சர் சர்ச்சில், அரை நிருவாணப் பக்கிரி என்று ஏளனம் செய்தபோதும், காந்தியடிகளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

காந்தி, காசி இந்துப் பல்கலைக்கழகத்தின் திறப்புவிழாவிற்கு வந்திருந்த மன்னர்களையும் செல்வர்களையும் பார்த்துக், "கோடானு கோடி மக்கள் உண்ணக் கஞ்சியும் உடுக்கக் கந்தையும் இல்லாமல் தவிக்கும் இந்த நாட்டில், இன்னும் உங்களில் பலர் கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள அணிகலன்களை அணிந்துகொண்டு பகட்டாக வாழ்வது பாவமல்லவா? ஏழைமக்களின் காவலர்களாக இருக்கவேண்டிய நீங்கள் இப்படிச் செய்வது ஏய்த்துப் பிழைக்கும்செயல் அல்லவா?" என்றும் கேட்டார். ஏழையரின்பால் அவர் காட்டிய பரிவும் போற்றற்குரியதாகும்.

### மனிதநேயம்

மனிதரோடு மனிதராக வாழ்ந்து, மனிதருக்காக வாழ்ந்து, 'மகாத்மா'வாக உயரமுடியும் என்பதனை மெய்ப்பித்தவர் உலக உத்தமர் காந்தியடிகள். மனிதனின், பெருமையை மனிதனுக்கு உணர்த்தி, எளியவர்களிடம் மறைந்திருக்கும் அருமையை உணர்த்தி அவர்களை வரலாற்று நாயகர்களாக மாற்றியவர் காந்தி.

"என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றுதான். நான் ஒரு தேசபக்தன். அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும், அதற்குமேல் மனிதாபிமானியாக இருப்பதும்தான்" என்று அவரே கூறுகிறார். அவர் இராமனைப் போற்றியதற்குக் காரணம், அவன் மனிதனாகப் பிறந்து, மனிதப் பண்புகளால் உயர்ந்து, மானுடரோடு மற்ற உயிரினங்களையும் உடன்பிறந்தவர்களாக ஏற்று, உலகம் உய்ய வழி காட்டியதனால்தான்.

மனிதர் மொழியாலும் நாட்டாலும் உணர்த்தப்படுவதனைக் காட்டிலும், மனிதத்தன்மையால் பிறருக்கு உணர்த்தப் பெறுவது சிறப்பு. சான்றாக, "நான் மொழியால் குஜராத்தியன்; நாட்டால் இந்தியன்; உலக நிலையில் உலகன்; ஆனால், மனிதனாக இருத்தல்

வேண்டும். குஜராத்தியனாக இருப்பதனைக் காட்டிலும், இந்தியனாக இருப்பதனைக் காட்டிலும், மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது என்று எண்ணவேண்டும்'' என்று விழைந்தார் காந்தியடிகள். அவ்வாறு, "உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால், உலகமே ஒரு நல்ல சமுதாயமாக உருவாகும்'' என்றார் அவர்.

## இன்னா செய்யாமை

தென்ஆப்பிரிக்காவில் இந்தியர்க்கு எதிரான கறுப்புச் சட்டங்களைக் காந்தியடிகள் கொளுத்தியதால், சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் அவர் செருப்புத் தைத்தார். முதல் இணைச்செருப்பே சிறப்பாக அமைந்தது. அதனை யாருக்காவது அன்பளிப்பாக அளிக்க விரும்பினார். அவர் நினைவிற்கு வந்த முதல் மனிதர் ஸ்மட்ஸ். அவர் காந்தியடிகளைச் சிறையிலடைத்த ஆளுநர். சிறையிலிருந்து விடுதலையானதும் ஸ்மட்ஸை சந்தித்துத் தாம் தைத்த காலணிகளை வழங்கினார். அதற்கு ஈடாக ஸ்மட்ஸ், காந்திக்கு விவிலியம் சார்ந்த இரு நூல்களைப் பரிசாகக் கொடுத்தார். அவற்றைப் பொன்னேபோல் போற்றித் தம்முடனே வைத்துக்கொண்டார் காந்தியடிகள்.

1948 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முப்பதாம் நாள் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார். உலகமே இரங்கல் செய்தி விடுத்தது. ஸ்மட்ஸ் தம்முடைய இரங்கல் செய்தியில், "காந்தி சிறையில் தாமே தயாரித்த காலணியை, எனக்கு அன்பளிப்பாக அளித்தார். அதனை ஆர்வத்தோடு வாங்கி அணிந்தேன்; என் கால்கள் நடுங்கின; நிற்க முடியவில்லை. உடனே, அதனை எடுத்துச்சென்று என் பூசை அறையில் வைத்து வணங்கி வருகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

## இளைஞர்களின் கடமை

நாட்டில் வளர்ந்து வரும் அனைத்து வறுமை நிலைகளையும் ஆராய்தல் வேண்டும். இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்று, தெய்வப்பற்று, மொழிப்பற்று வளரும்வகையில் கல்வி அமைதல்வேண்டும்.

நமது நாட்டிற்கே உரிய கிராமத் தொழில்களையும் நாட்டுப்புறக் கலைகளையும் வளர்க்க இளைஞர்கள் முன்வருதல் வேண்டும். இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வுதான்; அந்தக் கிராமங்களின் வாழ்வு, அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் ஆகியோர் கைகளில்தான் உள்ளது என்றார் காந்தியடிகள்.

"தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது'' என்று கூறினார். வளர்ந்து வரும் வெளிநாட்டவர் பொருள் வரவேற்கத் தக்கதன்று என்று கண்டித்தார்.

ஆங்கிலேயரது மேலாண்மை மூலம் நாம் அடைந்த அடிமைத்தனம் மிகமிக இழிவானது. இதனை நம்நாட்டு இளைஞர்கள் விளங்கிக்கொள்ளும்வகையில் எடுத்துக் கூறுதல் வேண்டும் என்றார். தீண்டாமைக் கொடுமையை வலுவுடன் எதிர்த்து நிற்குமாறு இளைஞர்களைக் கேட்டுக்கொண்டார். கொள்கை இல்லாத அரசியல், உழைப்பில்லாத ஊதியம், நாணயம் இல்லாத இன்பம், மனிதநேயமில்லாத அறிவியல், அறமில்லாத வழிபாடு ஆகியவற்றால் பயனில்லை என்றார்.

ஈகத்தின் (தியாகம்) உச்சியில் நின்றவர் காந்தியடிகள். அவருடைய வாழ்வு முழுவதும் ஈகந்தான் மிகவும் நிறைந்திருந்தது. உப்புக்காக, உரிமைக்காக, ஒற்றுமைக்காக, சமத்துவத்திற்காக, வன்முறைக்கும் தீண்டாமைக்கும் எதிராகத் தொடர்ந்து போராடியவர் காந்தியடிகள்.

வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த பெண்களையும் சமூகநீதிக்கான போராளிகளாக ஆக்கியவர் அவர். இறுதியில் தம்முயிரையே நாட்டுக்காக ஈந்து அமரவாழ்வு பெற்றுவிட்டார். உலக உத்தமர் காந்தியடிகள், உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார் உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்கின்றார்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) காந்தியடிகள் ______________என்னும் நாடகநூலைப் படித்தார்.

ஆ) திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் ______________.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) காந்தியடிகள் ______________ நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.

1. சிரவணபிதுர்பத்தி  2. அரிச்சந்திரன்  3. பக்தப்பிரகலாதன்

ஆ) பகைவனிடமும் அன்புகாட்டு எனக் கூறிய நூல் ______________.

1. பகவத்கீதை  2. நன்னூல்  3. பைபிள்

இ) அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை ______________.

1. ஆடம்பரம், வீண்செலவு  2. எளிமை, சிக்கனம்  3. அன்பு, அருள்

**3. வினாத் தொடர்கள் அமைக்க.**

அ) காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.

ஆ) இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல்வேண்டும்.

4. தொடர்களின் வகையைக் குறிப்பிடுக.

அ) காந்தியடிகள் அரிச்சந்திர நாடகத்தை ஒருமுறை பார்த்தார்.

ஆ) இப்படிச் செய்வது ஏய்த்துப் பிழைக்கும் செயலல்லவா?

5. ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆ) மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.

6. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. சத்திய சோதனை | – | திருவள்ளுவர் |
| 2. பகவத்கீதை | – | கிறித்துவ சமயநூல் |
| 3. திருக்குறள் | – | காந்தியடிகள் |
| 4. பைபிள் | – | இந்து சமயநூல் |

## இ) குறுவினாக்கள்

1. அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறியது யாது?
2. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?
3. இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்துக் காந்தியடிகள் உணர்ந்தது என்ன?
4. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை?
5. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?
6. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?
7. எவற்றை அறநெறியாகப் போற்றவேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்?
8. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?

## ஈ) சிறுவினாக்கள்

1. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.
2. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?
3. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

## உ) நெடுவினாக்கள்

1. காந்தியடிகள் பின்பற்றிய கொள்கைகளைத் தொகுத்து எழுதுக.
2. அறவழி விடுதலைப்போர் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

"சோவியத்து அறிஞர் தால்சுதாய் வழிகாட்டுதலால், திருக்குறள் மூலத்தை நேரடியாகப் படிக்க விரும்பியே தமிழ் பயிலத் தொடங்கினேன்."

– காந்தியடிகள்

# அடித்தளம்

இலிண்ட்கிரென் என்ற அந்த முதியவருக்குச் சூம்பிப்போன கால்கள்; சாலைகளிலும் பூங்காக்களிலும் கைகளால் தவழ்ந்து செல்வார். தோலினால் ஆன கையுறைகளையும் காலுறைகளையும் அணிந்திருப்பார். குட்டையான தாடியுடன் அவர் முகத்தில் வெளிப்படுத்த இயலாமல் ஒரு துயரம் இருக்கும்; பணிவான சிறிய கண்கள். அவரை நாம் எல்லாருமே பார்த்திருக்கிறோம். அவரைக் கடந்து செல்லும்போது, அவரது நீட்டிய கரத்தில் ஒரு நாணயத்தைப் போட்டுவிட்டுச் செல்கிறோம். அவரும் வாழவேண்டுமல்லவா......

"நீ இந்நேரம் வீட்டிற்குப் போயிருக்க வேண்டாமா இலிண்ட்கிரென்? தாமதமாகிவிட்டதே" என்றேன்.

"ஆம், போகவேண்டும்" என்றார். நாங்கள் சாலையைக் கடந்தோம்.

"சாலையைக் கடப்பது உனக்கு அபாயகரமாக இல்லையா இலிண்ட்கிரென்?"

"ஓ, அப்படி ஒன்றுமில்லை. எல்லாரும் என்னிடம் கவனமாக இருக்கிறார்கள். நேற்று ஒரு காவலர் மொத்தப் போக்குவரத்தையுமே எனக்காக நிறுத்தி, என்னைக் கடக்க வைத்தார்."

"இவ்வளவு சிரமங்களை நீ தாங்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறதே, இது மிகவும் அநியாயம் என்று உனக்குத் தோன்றுவதில்லையா? இலிண்ட்கிரென்."

"இல்லை", அவர் குரல் திடமாக ஒலித்தது. "எல்லாரும் நினைக்கிற அளவிற்கு இது அவ்வளவு மோசமில்லை, எல்லாமே பழகிவிடுகிறது. நான் இப்படியேதான் பிறந்தேன்.

குறைசொல்வதற்கு எதுவும் எனக்கு இல்லை. சொல்லப்போனால், என்னைவிட மோசமான நிலையில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் படுகிற கஷ்டமெல்லாம் எனக்கு நேர்வதில்லை. என் வாழ்க்கை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறது. இந்த உலகம் என்மேல் கருணையுடன் இருக்கிறது. நான் சந்திப்பதெல்லாம் நல்ல, அன்பான மனிதர்களை மட்டுமே" என்றார்.

"இலிண்ட்கிரென், உனக்கு அனைத்திலும் நல்லவற்றை மட்டுமே பார்க்கத் தெரிந்திருக்கிறது" புன்னகையுடன் பதிலளித்தேன்.

உண்மைதான். அவர் சொன்னதனைத் தீவிரமாக யோசித்துப் பார்த்தேன். அவர் சொல்வது எத்துணை உன்னதமான செய்தி என்று உணர்ந்தேன். வாழ்க்கையில் நல்லவற்றை மட்டுமே அறிந்து வைத்திருப்பது எவ்வளவு ஆசிர்வதிக்கப்பட்ட குணம்.

நாங்கள் நடந்தோம். கடைசியில் அவரது தெருவிற்குள் திரும்பினோம். அவர் தங்கியிருந்த வீடு பெரிதாகவும் அழகாகவும் இருந்தது. “கீழே வந்து என் அறையைப் பார்ப்பீர்களா?” என்றார் இலிண்ட்கிரென்.

நான் இதனை எதிர்பார்க்கவில்லை ஏன் அங்கே செல்லவேண்டும்? அந்த அளவிற்கு நெருங்கிய நண்பர்கள் ஒன்றும் கிடையாது. என் வீட்டிற்குப் போகும் வழியில் அவருடைய இடமும் இருந்ததால், கூடவே வந்தேன். என் மௌனத்தைக் கண்டு அவர், “என் வீட்டிற்கு உங்களை அழைத்ததில் ஆட்சேபணை ஏதுமில்லையே” என்று கேட்டார்.

“இல்லை” என்றேன்.

அவர் கீழே அமர்ந்துகொண்டு, சாவியைத் தடவிப் பூட்டில் நுழைத்தார். அவருக்காகப் பூட்டு கீழே இறக்கிப் பொருத்தப்பட்டிருப்பதனைக் கவனித்தேன். என் வீட்டுக்காரர்தாம் இப்படி அமைத்தார். அவர் எல்லாவற்றையும் கவனித்துச் செய்பவர். கதவைத் திறந்து உள்ளே சென்றோம். விளக்கைப்போட்டதும் அந்த அறையைச் சுற்றிக் கவனித்தேன். சிறிய, வெற்று அறை அது. குள்ளமான இரு நாற்காலிகள். ஒரு மூலையில் சமைப்பதற்கான அடுப்பு ஒன்று. பக்கத்தில் ஓர் அலமாரி. அதில் டப்பாக்கள் உயரவாரியாக, லேபிள் ஒட்டி அடுக்கப்பட்டிருந்தன. தரையிலிருந்து எழுப்பப்பட்ட சிறிய மேட்டில் படுக்கை சுத்தமாக அமைக்கப்பட்டு, படுக்கை விரிப்பும் தூய்மையாக இருந்தது. இத்தனை ஏழைமையிலும் இவ்வறையின் ஒவ்வொரு மூலையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கின்ற இந்த ஒழுங்கு, எனக்குள் விளங்க முடியாத வேதனையைத் தந்தது. இவருடைய நிலையில் நான் இருந்திருந்தால் ஒரு பொந்திற்குள் அழுக்காக, அசிங்கமாக ஒரு விலங்கைப்போல ஒளிந்திருந்திருப்பேன். என் மனம் நெகிழ்ச்சியில் கலங்கிக் கனமானதை உணர்ந்தேன்.

“சோதனைகள் நிறைந்ததாக இருக்கிறபட்சத்தில் இவ்வுலகத்தை மீறிய ஏதோ ஒன்று தமக்கு நிகழ்கிற அனைத்திற்கும் ஏதோ காரணம் வைத்திருக்கிறதோ?” என்றேன். அந்த வயதான ஊனமுற்ற முதியவர் ஒருகணம் யோசித்தார்.

பிறகு மெதுவாக “இல்லை” என்றார்.

“இது குறித்து எங்கள் வீட்டுக்காரரிடம் அடிக்கடி பேசியிருக்கிறேன். பலவற்றையும் அவர் கற்றுத் தந்திருக்கிறார். நீங்கள் அவரைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். வியத்தகு மனிதர் அவர். நீங்கள் அவசியம் அவரைச் சந்தித்தல் வேண்டும்.”

சந்திக்கத்தான் வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். இவர் சொல்கிற வீட்டுக்காரர் மற்றவரிடமிருந்து வேறுபட்டவராகத்தான் இருத்தல் வேண்டும். நான் இங்கு வந்து, அவரிடம் எனக்கு ஏதாவது வீடு தரமுடியுமா? என்று கேட்டபோது “உன்னை அடித்தளத்தில்தான் குடிவைக்க முடியும். மாடியில் இருக்க உன்னால் முடியாதே” என்றார்.

“ஆம். உண்மைதான்” என்றேன்.

“இந்த அடித்தளம் உனக்குப் பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன், சரியா? என்ன நினைக்கிறாய்?” என்றார் வீட்டுக்காரர்.

“இங்கு எனக்கு வசதியாகவே இருக்கும்” என்றேன்.

“அடித்தளத்தில் நல்ல, நம்பகமானவர்களை, நான் நன்கு அறிந்த, எனக்குப் பிடித்தமானவர்களை மட்டுமே குடிவைப்பேன். நல்லது, ஆனால் உன்னால் வாடகை தரமுடியுமா?” என்று கேட்டார். இதில் அவர் மிகவும் கண்டிப்பானவர். “நீ எவ்வளவு ஏழையாக இருந்தாலும் உன்னால் அதிகம் வாடகை தரமுடியாது என்பதனால், குறைவாகத்தான் சொல்லியிருக்கிறேன். ஆனால், தவறாமல் தந்துவிடவேண்டும். உன்னால் முடியுமா?” என்றார். “நான் உலகில் உள்ள நல்லவர்களை நம்பித்தான் இருக்கிறேன்” என்றேன். அவர் என்னைக் கூர்மையாகப் பார்த்தபடி, அப்படி யாராவது இருக்கிறார்களா?” என்றார்.

“நிச்சயம் நிறைய பேர் இருக்கவேண்டும்” என்றேன்.

“நீ சொல்வது சரிதான். உண்மையிலேயே அப்படி நம்புகிறவர்களுக்கு அது எளிதானதுதான். நீ புத்திசாலி. நீ என்னுடன் தங்கலாம்” என்றார். மிகவும் எளிமையானவராகவும், இயல்பானவராகவும் இருந்தால்கூட, அவர் அற்புதமான மனிதர். அவ்வப்போது என்னைப் பார்த்துக் கொஞ்சநேரம் பேசிவிட்டுச் செல்வார். அஃது, எனக்கு எவ்வளவு தேவையாக இருக்கிறது தெரியுமா? நாம் பாராட்டப்படுவது மிகவும் பரவசமூட்டும் செயல். நீ ஒரு பயனுள்ள மனிதன் இலிண்ட்கிரென்” என்பார்; கேட்பதற்கு மிகவும் நிறைவாக இருக்கும். அவர் என்னை நிறைவோடு பார்த்தார்.

“இலிண்ட்கிரென், உனக்கு வாழ்க்கை முழுமையானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறதா?”

“ஆம்” என்று நிதானமாக என்னை உற்று நோக்கினார்.

நான் மௌனமாக எழுந்து அவரிடம் நன்றி தெரிவித்துவிட்டு, இரவு வணக்கம் சொன்னேன். நான் திரும்பவும் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதுவே என் விருப்பமும் என்று சொன்னேன். பிறகு, வாசல் வரை என்னுடன் ஊர்ந்து வந்து வழி அனுப்பினார். தெருவில் இறங்கி நின்றேன். அந்தக் குடியிருப்பு முழுவதும் இருட்டில் மூழ்கியிருந்தது. இந்த வயதானவரின் வீட்டு விளக்கு மட்டுமே எரிந்துகொண்டிருந்தது. அநேகமாக, என் வீடு வரைக்கும் செல்ல அதுவே போதுமானதாக இருக்குமென்று தோன்றியது.

மூலநூல் : பேர் லாகர்க்விஸ்ட் சிறுகதைகள் (சுவீடன்)
தமிழில்: ஜி. குப்புசாமி.

## மாதிரி வினாக்கள்

### நெடுவினா

இலிண்ட்கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

**செயல்திட்டம் :** மாற்றுத்திறனாளியரின் திறனைக் கண்டறிந்து ஒரு கட்டுரை எழுதுக.

# புறப்பொருள்

புறப்பொருள் எனப்படுவது, வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுவது. அகப்பொருள் வாழ்வியல் எனில், புறப்பொருள் உலகியல் ஆகும். புறம்பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள் வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்.

1. **வெட்சித்திணை** : பகைநாட்டின்மீது போர் தொடங்குமுன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக்கூடாது எனக் கருதும் மன்னன், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச்செய்வது வெட்சித்திணை. அவ்வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வார்கள்.

2. **கரந்தைத் திணை** : வெட்சி வீரர்களால் கவர்ந்துசெல்லப்பட்ட தம் ஆநிரைகளைக் கரந்தைப் பூவைச் சூடிச்சென்று மீட்பது, கரந்தைத்திணை.

3. **வஞ்சித்திணை** : மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது, வஞ்சித்திணை.

4. **காஞ்சித்திணை** : தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.

5. **நொச்சித்திணை** : பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது நொச்சித்திணை.

6. **உழிஞைத்திணை** : உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.

7. **தும்பைத் திணை** : பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வீரர்களுடன் போரிடுவது தும்பைத் திணை. இவ்வீரர்கள் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவர்.

8. **வாகைத்திணை** : வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை.

9. **பாடாண்திணை** : பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை. (பாடு + ஆண் + திணை = பாடாண்திணை)

10. **பொதுவியல் திணை** : வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணை.

**11. கைக்கிளைத்திணை :** கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைப்படும்.

**12. பெருந்திணை :** பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.

வெட்சி நிரைகவர்தல், மீட்டல் கரந்தையாம்,
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் – உட்கா(து)
எதிரூன்றல் காஞ்சி, எயில்காத்தல் நொச்சி,
அதுவளைத்த லாகும் உழிஞை, –அதிரப்
பொருவது தும்பையாம், போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம். – புறப்பொருள் வெண்பாமாலை

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) புறத்திணைகள் ________ வகைப்படும்.

1. ஐந்து 2. ஏழு 3. பன்னிரண்டு

ஆ) நிரைகவர்தல் என்பது ________.

1. கரந்தை 2. வெட்சி 3. உழிஞை

இ) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ________

1. வஞ்சித்திணை 2. காஞ்சித்திணை 3. வாகைத்திணை

ஈ) பாடாண்திணை என்பது ________ கூறுவது.

1. ஆண்மகனின் ஒழுகலாறுகள் 3. பெண்மகளின் ஒழுகலாறுகள்
2. போரின் தன்மைகள்.

உ) ஒருதலைக் காமம் என்பது ________ .

1. அன்பின் ஐந்திணை 2. கைக்கிளை 3. பெருந்திணை.

ஊ) தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது ______ ஆகும்.

1. நொச்சி 2. தும்பை 3. காஞ்சி

### ஆ) குறுவினாக்கள்

1. புறத்திணை என்பது யாது?
2. புறத்திணைகள் நான்கனை எழுதுக.
3. மதில்போர் பற்றிய புறத்திணைகள் யாவை?
4. வாகைத்திணை என்பது யாது?
5. பொருந்தாக் காமம் பற்றிய திணை யாது?

## மொழித்திறன் பயிற்சி

### நிறுத்தக்குறிகள்

இன்றுமுதல், தோசைக்குத் துவையல் இல்லை.

இன்று, முதல்தோசைக்குத் துவையல் இல்லை.

இத்தொடர்களைப் பொருள்விளங்குமாறு படித்துப் பார்க்க.

இருதொடர்களுக்கும் வேறுபாடு அறியமுடிகிறதல்லவா ?

முதல் தொடர் இன்றுதொடங்கித் தோசைக்குத் துவையல் இல்லை எனவும், அடுத்ததொடர் முதல் தோசைக்கு மட்டும் துவையல் இல்லை எனவும் வெவ்வேறு பொருள் தருகிறதன்றோ? இரண்டு தொடரும் ஒன்றே ஆயினும், இருவேறு பொருள்கள் தரக் காரணம் நிறுத்தக் குறியீடு தானே! அக்குறியீடுகள் குறித்து இங்குக் காண்போம்.

### காற்புள்ளி ( , )

பொருள்களை எண்ணும் நிலை, விளி, வினையெச்சம், மேற்கோள் குறிகளுக்குமுன், ஆதலால், ஆகவே முதலிய சொற்களின்பின், முகவரியில் இறுதிவரி தவிர்த்த பிற இடங்களில் காற்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள்.

2. மகனே, நான் சொல்வதைக் கேள்.

### அரைப்புள்ளி ( ; )

ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம்; மூவேந்தரையும் பாடும் காப்பியம்.

2. இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு; பொறுமை இல்லை.

### முக்காற் புள்ளி ( : )

ஒருவர் கூற்றை விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலியன விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்காற்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. முப்பால் என்பன வருமாறு: அறம், பொருள், இன்பம்.

2. மத்தேயு, 8 : 6

3. பெயர் : மணிமேகலை

### முற்றுப்புள்ளி ( . )

சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி, நாள் இறுதி, சொற் குறுக்கம், பெயர்த் தலைப்பெழுத்து முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி இடப்படும்.

(எ–டு) 1. உருவு கண்டு எள்ளாமை வேண்டும்.

2. மைதிலி, த/பெ. எ. முத்துகிருட்டினன், கறுப்பனார்கோவில் அருகில், பெரியகொல்லப்பட்டி, மல்லசமுத்திரம் – 637 503, நாமக்கல் மாவட்டம். (மாதிரி முகவரி)

3. 20.10.2003.

4. தொல். சொல். 25.

5. எ. நாகம்மாள்.

### வினாக்குறி (? )

ஒரு வினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. அங்கே படிப்பவர் யார்?

2. நீ வருவாயா?

### உணர்ச்சிக்குறி ( ! )

வியப்பு, அவலம், வாழ்த்து, வரவேற்றல், வைதல் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்களின்பின் (!) இக்குறி இடுதல் வேண்டும்.

(எ–டு) என்னே, இதன் பெருமை!

பாம்பு பாம்பு!

வருக வருக!

வாழ்க வாழ்க!

( !!, !!! இவ்வாறு ஒன்றுக்குமேற்பட்ட குறிகளை இடுதல் கூடாது. )

### ஒற்றை மேற்கோள்குறி (‘ ’)

இக்குறி, தற்சுட்டின்கண்ணும் ( ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறித்தல்), பிறர் கூற்றாக வரும் இடத்தும், கட்டுரைப் பெயரும், நூற்பெயர் வருமிடத்தும் ஒற்றை மேற்கோள்குறி வரும்.

1. ‘ஏ’ என்று சொன்னான்.
2. ‘செய்யும்’ என்பது பெயரெச்ச வாய்பாடுகளுள் ஒன்று.
3. ‘இணரெரி தோய்வன்ன’ இன்னா செய்பவர்.
4. கம்பர், ‘கம்பராமாயணம்’ என்னும் காவியம் படைத்தார்.

### இரட்டை மேற்கோள்குறி ( “ ” )

நேர்கூற்றுத் தொடர்களிலும் மேற்கோள் தொடர்களிலும் இரட்டைமேற்கோள் குறி இடப்படும்.

(எ–டு) 1. இராமன், “நாளை வருகிறேன்” என்றான்.

2. “ஒழுக்கமுடைமை குடிமை” என்றார் திருவள்ளுவர்.

### விண்ணப்பம் வரைதல்

குடிநீர், சாலை, தெருவிளக்கு, நூலகம், மருத்துவமனை, பேருந்து முதலியன நாம் வாழும் பகுதிக்கு வேண்டிய வசதிகளாம். இவற்றைப் பெறவேண்டிப் பகுதிவாழ் மக்களின் சார்பாக உயர் அலுவலர்களுக்கும் உள்ளாட்சித்துறை அலுவலர்களுக்கும் விண்ணப்பம் வரைதலே கூட்டு விண்ணப்பம் எனப்படும்.

கூட்டுவிண்ணப்பம் நடைமுறைக்குரிய விண்ணப்பம்; ஆதலின், அதற்குரிய வடிவத்தில் அமைந்திருத்தல்வேண்டும். விடுநர், பெறுநர், விளித்தல், பொருள், உள்ளடக்கப்பகுதி, முடித்தல், கையொப்பம் ஆகியவை விண்ணப்பத்தில் அமைந்திருத்தல்வேண்டும்.

### கடிதம்

பண்டைக் காலத்தில் புறா, கிளி, நாய் முதலியவற்றின் மூலமாகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. இதனைத் தூது' என்பர். பாடல்கள் மூலமாகக் கடிதம் எழுதியதும் உண்டு. இதனைச் சீட்டுக்கவி' என்பர். பாரதியார் எழுதிய சீட்டுக்கவி இதற்குச் சான்றாகும்.

தற்போது தொலைபேசி, செல்பேசி முதலான தகவல் தொடர்புச் சாதனங்களால் கடிதம் எழுதும் முறை குறைந்து வருகிறது. உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தவும், கண்டுமகிழ்ந்த காட்சிகளை நேரில் கண்டதுபோல் தெரிவிக்கவும், அறிவுரை கூறும் பகுதியாகவும் கடிதங்கள் பல வகையில் அமையும்.

அறிஞர் அண்ணா முதலானோர் எழுதிய கடிதங்கள், மு.வ. அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு என எழுதிய கடிதங்கள், நேரு தம்மகள் இந்திராபிரியதர்சினிக்கு எழுதிய கடிதங்கள் இன்றைக்கும் படித்துப் போற்றத்தக்கவை.

### கட்டுரைப் பயிற்சி

தலைப்புக்கேற்ற கருத்துகளைத் தொகுத்தல்.

கருத்துச் சிதையாமல் பத்திப் பத்தியாக அமைத்து எழுதுதல்.

மேற்கோள், உவமைத்தொடர், பழமொழி முதலானவற்றைத் தகுந்த இடத்தில் கையாளுதல், பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுதல், இலக்கணப்பிழை, சந்திப்பிழை, மயங்கொலிப்பிழை ஏற்படாதவாறு எழுதப் பழகுதல், குறித்த எல்லை கடவாமல் எழுதுதல் முதலிய நெறிமுறைகளைப் பின்பற்றிக் கட்டுரை எழுதப் பழகுதல்வேண்டும்.

### கட்டுரை வகைகள்

செய்தி விளக்கக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, தன் வரலாற்றுக் கட்டுரை, பயணக் கட்டுரை, வரலாற்றுக் கட்டுரை முதலியன கட்டுரையின் வகைகள் ஆகும்.

## நூலக வசதி வேண்டி விண்ணப்பித்தல் (மாதிரி)

விடுநர்

ஊர்ப் பொதுமக்கள்,
கன்னேரிமந்தணை, தங்காடு ஓரநள்ளி,
நீலகிரி மாவட்டம் – 643 003.

பெறுநர்

இயக்குநர்,
பொது நூலகத்துறை,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் : நூலகம் அமைத்துத் தர வேண்டுதல் சார்பு.

எங்கள் ஊர் கன்னேரிமந்தணை. இவ்வூரில் மூவாயிரம் பேர் வாழ்கிறோம். ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட படித்த இளைஞர்கள் உள்ளோம். அன்றாடம் செய்திகளை அறிந்துகொள்ளவும், பொது அறிவைப் பெருக்கிக்கொள்ளவும், பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கவும், நூலகம் ஒன்றை எங்கள் ஊரில் அமைத்துத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கன்னேரிமந்தணை,
17. 01. 2011

தங்கள் உண்மையுள்ள,
கன்னேரிமந்தணை
ஊர்ப் பொதுமக்கள்.

உறைமேல் முகவரி

பெறுநர்

இயக்குநர்,
பொது நூலகத்துறை,
சென்னை – 600 002.

## கண்டு களித்த இடம் குறித்து, நண்பனுக்குக் கடிதம்

15, குங்குமப்பூத் தெரு,
திருவள்ளூர்,
21.06.2011.

அன்புள்ள எழில்,

நலம், நலமறிய ஆவல். உன் வீட்டில் அம்மா, அப்பா, தங்கை ஆகியோர் நலமறிய ஆவல். நாங்கள் 20.05.2011 அன்று கூடியம் மலைக்குகையைக் காணச் சென்றோம்.

கூடியம் என்பது திருவள்ளூர்க்கு மேற்கே முப்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிற்றூர். காலை ஆறு மணிக்கே திருவள்ளூரைவிட்டுப் புறப்பட்டோம். சீத்தஞ்சேரி என்னும் ஊரைக் கடந்து எங்கள் மகிழுந்து புறப்பட்டது. வழிநெடுகிலும் சிற்சில பகுதிகளில் பசுமைநிறக் குறுங்காடுகள்; தைலமரத் தோப்புகள், மாங்கனிகள் தாழத்தொங்குகின்ற மாந்தோப்புகள் ஆகியனவற்றைக் கண்டு மகிழ்ந்தோம். கூடியம் ஊரை நெருங்கினோம். அப்பொழுது மணி காலை 8.30 ஆயிற்று. நாங்கள் சிற்றுண்டி உண்டோம். பிறகு, அங்கிருந்து குறுங்காட்டுவழியாக நடந்தோம். ஒரு கிலோமீட்டர் நடந்ததும் எம் கண்முன்னே குகையிருக்கும் மலை தென்பட்டது. சிறிது தொலைவு நடந்தோம். அடேயப்பா… எவ்வளவு பெரிய மலை! முட்டையைப் பாதி உடைத்தாற்போல மலையைக் குடைந்து வைத்துள்ளான் ஆதிகால மனிதன். உள்ளே சுமார் ஈராயிரம் பேர் தங்கும் அளவிற்கு மலை குடையப்பட்டுள்ளது.

குளிர்ந்த காற்று, சுற்றிலும் பசுமை மாறாக் காட்டுச் சூழல், ஆரவாரமில்லாத அமைதி நிறைந்த சூழல் கண்டோம்; களித்தோம்; அனைவரும் மெய்ம்மறந்து உட்கார்ந்தோம்! வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே, உலகின் முதல் மாந்தரினம் வாழ்ந்த பகுதி இதுவெனத் தொல்லியலார் கூறுகின்றனர். அங்கு வாழ்ந்த மனிதன் கற்களைக் கூராக்கிக்கொண்டு, அவற்றையே தற்காப்புக் கருவியாகக் கொண்டு வாழ்ந்துள்ளான். அக்குகையைச் சுற்றித் தேனடைகள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றுக்கு ஊறு செய்தால், உருப்படியாக ஊர்போய்ச் சேர முடியாது.

அக்குகைக்குள் மனத்தச்சம்மன் என்னும் தெய்வச்சிலை உள்ளது. அவ்வம்மனை வழிபடுவதால் தங்கள் வேண்டுதல் நிறைவேறுவதாக அப்பகுதியினர் நம்புகின்றனர். சிவராத்திரி அன்று, அப்பகுதிவாழ் மக்கள் அக்குகைக்குச் சென்று, அன்றிரவு முழுவதும் அங்கேயே தங்கிவிட்டுத் திரும்புவதாகக் கூறுகின்றனர். குகைக்காட்சிகளை எல்லாம் கண்ட நாங்கள், மனநிறைவோடு மாலை வீடு வந்து சேர்ந்தோம். கூடியம் குகையையும் வழியிடைக் காட்சிகளையும் கோடைவிடுமுறையில் கண்டுகளிக்க எம்மில்லம் வருமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மறவாமல் மடல் எழுதுக.

இன்னணம்,
மோ. அன்பரசு.

உறைமேல் முகவரி

க. எழில்,
த/பெ. வ.கண்ணன்,
27, வ.உ.சி. தெரு,
அடையாறு,
சென்னை – 600 020.

## நான் விரும்பும் கவிஞர்

### பாரதியார்

**முன்னுரை**

நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றனையும் இழந்த செம்மல்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள், கவிஞர்கள், எனப் பலர் இருக்கிறார்கள். அவர்களுள் நான் விரும்பிப் போற்றும் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார். அவர் கவிதைகள் மூலம் தேசியத்தை வளர்த்துத் தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டினார்.

**பிறப்பும் இளமையும்**

சின்னசாமி இலக்குமி அம்மையார் ஆகியோர்க்கு 11.12.1882இல் பாரதியார் பிறந்தார். பிறந்த ஊர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையபுரம். அவர் இளமையிலேயே ஆங்கிலக் கல்வியை அறவே வெறுத்தார். பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து பாரதி என்னும் பட்டம் பெற்றார். அவர், சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர், மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; சென்னையில் இதழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

**விடுதலை வேட்கை**

பாரதியார் வாழ்ந்த காலம், பாரத நாடு ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்த காலம். நாடு விரைவில் விடுதலை அடையவேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். தம் பாட்டுத்திறத்தால், தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி விடுதலைக் கனலை மூட்டினார். சாதிசமயப் பாகுபாடின்றி அனைவரையும் விடுதலை வேள்வியில் ஈடுபடச் செய்தார்.

"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி" என வீர முழக்கமிட்டார்.

"பாருக்குள்ளே நல்ல நாடு"
"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்" – என்றெல்லாம் பாடி, மக்களுக்கு நாட்டுப்பற்றையும் விடுதலை உணர்வையும் ஊட்டினார்.

**தேசியக் கவிஞர் பாரதியார்**

இந்தியத் திருநாட்டின் இணையற்ற கவிஞராகப் பாரதியார் விளங்கினார். இதனால் அவர், அனைவராலும் 'தேசியக் கவிஞர்' எனப் பாராட்டப் பெற்றார். 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டினார்.

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்."

என்னும் பாடலின்மூலமாக, "முப்பதுகோடி மக்களும் இந்தியரே, அவர்கள் பேசும் மொழி பலவாய் இருப்பினும் சிந்தனை ஒன்றே!" என்ற உயரிய தேசிய உணர்வை ஊட்டியவர் பாரதி.

**முன்னறி புலவர் பாரதி**

விடுதலை அடைதற்கு முன்பாகவே, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளைத் தாம் வாழும் காலத்திலேயே பாடி மகிழ்ந்த முன்னறி புலவர் பாரதியாவார்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே,
ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட் டோமென்று" எனவும்,

"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்" எனவும்,

"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" எனவும்,

பாடினார் பாரதியார்.

### சமுதாயத் தொண்டு

சாதிவேரை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பியவர் பாரதி. அதனால்தான், 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' எனக் குழந்தை மனத்தில் ஆழப்பதித்தார் பாரதி.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்பதன்மூலம் பெண்கள் நலன் பேண விரும்பியவர் பாரதி.

"தனியொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

"வாழிய செந்தமிழ்; வாழ்கநற் றமிழர்"

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று பாடிய பாடல்களே, பாரதியாரின் சமுதாயத் தொண்டுள்ளத்திற்கும், மொழிப்பற்றுக்கும் தக்க சான்றுகளாம்.

### முடிவுரை

'பாரதநாடு பார்க்கெலாம் திலகம்' எனப் பாடிய பைந்தமிழ்ப் பாவலன் 11.09.1921 அன்று மண்ணுலகைவிட்டு விண்ணுலகு அடைந்தார். அவர் வழி நாமும் நடந்து, நாடும் வீடும் போற்ற வாழ முயல்வோமாக!

## வரவேற்பு மடல்

கூனிப்பாளையம்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
இலக்கியமன்ற ஆண்டு விழாவிற்கு
வருகைதந்த
தொல்காப்பியச் செம்மல் உயர்திரு புலவர் தமிழன்பன் அவர்களுக்கு
அன்புடன் வாசித்தளித்த வரவேற்பு மடல்.

### தமிழன்னை ஈன்ற தவப்புதல்வரே!

வருக வருக எனத் தங்களை வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறோம். தமிழின் பெருமையையும் சங்கத்தமிழன் வாழ்வியல் கோட்பாடுகளையும் தாங்கள் கூறக் கேட்கும்பேறு, இன்று யாம் பெற்றோம்.

நயம்பட உரைக்கும் நாவலரே!

'இலக்கணப்' பாடப்பகுதியை, எளிதாக யாவரும் புரிந்துகொள்ளும்வகையில் சுவைபட உரைக்கும் திறங்கண்டு வியந்தோம். திங்கள்தோறும் தாங்கள் நடத்திவரும் தொல்காப்பியத் தொடர்வகுப்பும், நன்னூல் வகுப்பும், திருக்குறள் வகுப்பும் கேட்போர்க்கு நல்விருந்தாக அமைவதை உணர்ந்து மகிழ்கிறோம்.

வறுமையிலும் செழுமையாய் வாழும் பெருந்தகையே!

வள்ளுவத்தை வையகமெல்லாம் வாழ்வியலாக்கப் புறப்பட்ட தெள்ளுதமிழ்ச் சான்றோன் நீ! நடத்துபவனல்லன் நீ! நடந்து காட்டும் நற்றமிழறிஞன் நீ! வருகை புரியும் தங்களை வருக வருக என அன்புடன் வரவேற்கின்றோம்.

கூனிப்பாளையம், இன்னணம்,

28.06.2011 இலக்கிய மன்றத்தார்.

பயிற்சி :

வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல்திறன்

காந்தியடிகளின் வாழ்வில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளுள் ஒன்றனைக் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல்திறன்

ரா. பி. சேதுப்பிள்ளையின் செந்தமிழ் நடையைப் படித்தறிக.

மலையிலே மழை பொழிந்து வெள்ளம் பொங்கி எழுகின்றது; அருவியாய் விழுகின்றது; ஆறாகப் பாய்கின்றது. ஆற்றுநீர், கால்களிலும் ஏரிகளிலும் நிறைந்து பயிர்பச்சைகளையும், செடிகளையும் வளர்க்கின்றது. இளங்குழந்தையைப் பாலூட்டி வளர்க்கும் தாய்போல் பசும் பயிர்களை நீரூட்டி வளர்ப்பது நதியாகும். ஆதலால், நதியைத் தாயாகவும், நிலத்தைக் குழந்தையாகவும் புலவர்கள் புனைந்துரைப்பாராயினர். சோழநாட்டை ஊட்டி வளர்ப்பது காவிரியாறு. அந்நதியின் பெருமையாலேயே சோழவள நாடு சோறுடைத்து என்று கவிகள் புகழ்வாராயினர். செழுஞ்சோலைகளின் இடையே அழகுற நடந்து செல்லும் காவிரியாற்றைச் சிலப்பதிகாரம் இசைப்பாட்டால் வாழ்த்துகின்றது. பாண்டிநாட்டின் சிறந்த நதியாகிய வையையைப் புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி என்றும் பொய்யாக் குலக்கொடி என்றும் இளங்கோவடிகள் புகழ்ந்துரைத்தார். ஆற்றுப் பெருக்கற்ற காலத்தும் ஊற்றுப்பெருக்கால் உலகூட்டும் வையையின் கருணை வாழ்த்துதற்குரியதன்றோ?

## இ) எழுதுதல்திறன்

### கவிதை எழுதும் திறன்பெறுதல்

எழுதுதல் திறனில், கவிதை எழுதுதல் ஓர் உயர்நிலைத் திறனாகும். இக்காலக் கவிஞர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைத் தொகுப்புகளைப் பள்ளி நூலகத்திலிருந்து திரட்டலாம். அக்கவிதைகளில் அமைந்துள்ள பொருள்நயம், சொல் நயம், சந்த நயம் முதலியவற்றைப் படித்துச் சுவைக்கலாம். உங்களில் பலர் கவிதை எழுதக்கூடிய திறன் படைத்தவர்களாய் இருப்பீர்கள். சிலர் கவிதை எழுத ஆர்வத்துடன் இருப்பீர்கள். உங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்த கவிதை எழுதப் பழகுங்கள். எளிய சொற்களைக்கொண்டு எழுதத் தொடங்குங்கள். நான்கு வரிகளில் கூட, அக்கவிதை அமையலாம்.

(எ–டு) **பள்ளி**

பள்ளி என்னும் கூடம் – நம்
பண்பை உயர்த்தும் அன்றாடம்
சிலையாய் நம்மைச் செதுக்கும் – நல்ல
கலையாய் நம்மைப் புதுக்கும்
வினா கேட்கும் ஞானம் – அங்கு
விடையைக் கொடுக்கத் தோணும்
வேற்றுமை அகற்றும் பந்தம் – நம்
ஒற்றுமை ஒன்றே சொந்தம்.

**கவிதை எழுதுக.**

அ) மழை ஆ) முயற்சி இ) கடல் ஈ) குழந்தை உ) நட்பு

## வாழ்க்கைத்திறன்

### மனஅழுத்தங்களை எதிர்கொள்ளும் திறன்

இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் எல்லாரும் அவளுக்கென்ன கவலை ?

அவள் அம்மா ஓர் ஆசிரியர்; அவளுக்குப் பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்துவிடுவார். எனவே, அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை என்று கூறுவர். அதனைக் கேட்கும்போது, இலக்கியாவிற்கு அம்மாவை நினைத்தால் மிகவும் பெருமையாக இருக்கும்.

பள்ளியில் ஆண்டுத்தேர்வுக்குப் படிப்பதற்காக ஒருவாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம்போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள்.

அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்து விட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணி யாற்றும் ஆசிரியர் கூறினார்.

அம்மாவுக்கு எதிர்பாராமல் ஏற்பட்ட நிலையைக் கேட்டு, இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள். இலக்கியா தனக்கேற்பட்ட மன அழுத்தத்தை எவ்வாறு எதிர்கொள்வாள் ?

இலக்கியாவாக, நீங்கள் ஒரு நிமிடம் கற்பனை செய்யுங்கள்.

## மதிப்புக்கல்வி

### எளிமை

மகாத்மா காந்தியின் நினைவாக, காந்தி என்னும் பெயரில் திரைப்படம் எடுக்கப்பட்டபோது நடந்த நிகழ்ச்சி. காந்தியாக நடிக்க பென் கிங்ஸ்லி என்னும் நடிகர் தேர்வு செய்யப்பட்டார். அவர் தங்குவதற்காகப் புதுதில்லியில் ஆடம்பரமான நட்சத்திர விடுதி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பென்கிங்ஸ்லி அவ்விடுதிக்கு வந்தார். அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பதனைக் கண்டார்.

அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார் என மற்றவர் எதிர்பார்த்திருக்க, பென் கிங்ஸ்லியோ அந்த அறையில் இருக்கும் அனைத்துப் பொருள்களையும் அகற்றச் சொல்லித், தமக்கு ஒரு பாயும் தலையணையும் மட்டும் போதும் என்றார். அதனைக் கேட்டு அங்கிருந்தவர்கள் வியப்படைந்தார்கள்.

இந்த வசதி போதவில்லையா ? என்று கேட்டனர்.

அதற்கு அவர், “காந்தி மிகவும் எளிமையாக வாழ்ந்தார். நான், அவருடைய பாத்திரம் ஏற்று நடிக்கிறேன். இந்தப்படம் எடுக்கும் வரையிலாவது, நானும் அவரைப்போன்று எளிமையாக இருக்க விரும்புகின்றேன். அதனை, நான் மிகவும் பெருமையாகக் கருதுகின்றேன்” என்றார்.

காந்தியடிகளின் எளிய வாழ்க்கை, மற்றவர்களுடைய வாழ்வில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது.

எளிமை என்றும் துணைவரும்; பகட்டு, ஆணவத்தைத் தூண்டும்; பொறாமைகொள்ளச் செய்யும்; ஏளனத்திற்கு ஆளாக்கும்; என்றும் துன்பம் தரும்; துணை நிற்காது.

முடிவு உங்கள் கையில்....

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Gandhiji loved and respected truth more than anything else. He fought his whole life to uphold the value of truth. From his experiment with truth, he came to know that there could not be a God other than truth. He taught us that our thought, word and deed should on truth. He preached what he practised.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | | |
|---|---|---|
| 1. | A friend in need is a friend indeed. | உயிர் கொடுப்பான் தோழன். |
| 2. | Self help is the best help. | தன் கையே தனக்கு உதவி. |
| 3. | Efforts never fail. | முயற்சி திருவினையாக்கும். |
| 4. | Live and let live. | வாழு, வாழவிடு. |
| 5. | Think everybody alike. | உன்னைப்போல் பிறரையும் நேசி. |

## கலித்தொகை

ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்.

– நல்லந்துவனார்

**பொருள் :** இல்வாழ்வென்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல். பாதுகாப்பதென்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல். பண்பெனப்படுவது சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல். அன்பெனப்படுவது சுற்றம் தழுவி வாழ்தல். அறிவெனப்படுவது அறிவிலார் சொல் பொறுத்தல். நெருக்கம் எனப்படுவது கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல். நிறைவு எனப்படுவது பிறர்அறியாது மறைபொருள் காத்தல். நீதிமுறைமை எனப்படுவது ஒருபால் கோடாது ஒறுத்தல். பொறுமை எனப்படுவது இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளல்.

**சொற்பொருள் :** கிளை – சுற்றம்; நோன்றல் – பொறுத்தல்.

**இலக்கணக்குறிப்பு :** ஒழுகுதல், நோன்றல், பொறுத்தல் – தொழிற்பெயர்கள்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** ஆற்றுதல் – ஆற்று + தல், ஆற்று – பகுதி, தல் – தொழிற்பெயர் விகுதி; புணர்ந்தார் – புணர் + த் ( ந் ) + த் + ஆர், புணர் – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி; பிரியாமை – பிரி + ய் + ஆ + மை, பிரி – பகுதி, ய் – சந்தி, ஆ – எதிர்மறை இடைநிலை, மை – தொழிற்பெயர் விகுதி; அறிந்து – அறி + த் ( ந் ) + த் + உ , அறி – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி; ஒழுகுதல் – ஒழுகு + தல், ஒழுகு – பகுதி, தல் – தொழிற் பெயர் விகுதி; அறியாமை – அறி + ய் + ஆ + மை, அறி – பகுதி, ய் – சந்தி, ஆ – எதிர்மறை இடைநிலை, மை – விகுதி.

**பிரித்தறிதல் :** அன்பெனப்படுவது – அன்பு + எனப்படுவது; பண்பெனப்படுவது – பண்பு + எனப்படுவது.

**ஆசிரியர் குறிப்பு :** நல்லந்துவனார் சங்க காலத்தவர். இவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. இவர், நெய்தல் கலியில் முப்பத்துமூன்று பாடல்களைப் பாடியுள்ளார். கலித்தொகையைத் தொகுத்தவரும் இவரே என்பர்.

**நூற்குறிப்பு :** எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள். எட்டுத்தொகையுள் ஒன்றான கலித்தொகை, கலிப்பாக்களால் அமைந்தது; இது, நாடகப் பாங்கில் அமைந்துள்ளது; இசையோடு பாடுவதற்கேற்றது. கலித்தொகையில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்து நூற்றைம்பது பாடல்கள் உள்ளன. கலித்தொகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐம்பெரும்பிரிவுகளை உடையது. கலிப்பா துள்ளல் ஓசையைக் கொண்டது. நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி, நெய்தற்கலியாகும். இதனை இயற்றியவர் நல்லந்துவனார். இப்பாடல்களைப் படிக்கும்பொழுது, கருத்தாழமும் ஓசையின்பமும் நம் உள்ளத்தினைக் கொள்ளை கொள்ளும். எனவே, இதனைத் தமிழ்ச்சான்றோர் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' எனச் சிறப்பித்துக் கூறுவர்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) கலித்தொகை ________ நூல்களில் ஒன்று.

1. பத்துப்பாட்டு 2. எட்டுத்தொகை 3. பதினெண்கீழ்க்கணக்கு

ஆ) நெய்தல்கலியைப் பாடியவர் ________.

1. ஓரம்போகியார் 2. கபிலர் 3. நல்லந்துவனார்

இ) 'போற்றாரைப் பொறுத்தல்' என்பது ________ எனப்படும்.

1. பொறை 2. முறை 3. நிறை

**2. பொருத்துக.**

1. பண்பு – கூறியது மறாஅமை
2. அன்பு – பேதையார் சொல் நோன்றல்
3. அறிவு – தன்கிளை செறாஅமை
4. செறிவு – பாடறிந்து ஒழுகல்.

### ஆ) குறுவினாக்கள்

1. ஆற்றுதல் என்பது யாது ?
2. பண்பு எனப்படுவது யாது ?
3. அறிவு எனப்படுவது யாது ?

### இ) சிறுவினா

கலித்தொகை – குறிப்பு எழுதுக.

### ஈ) நெடுவினா

வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

# நந்திக் கலம்பகம்

## நந்திமன்னன் வீரம்

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே.

**பொருள் :** ஊர்தோறும் மேகங்கள் சொரிகின்ற மணிகளையும், மூங்கில்கள் தந்த பெரிய முத்துகளையும் கொடுத்து, அவ்வூர்களில் உள்ள நெற்கதிரைத் தொகுத்துக்கொண்டு வருகின்ற நீர், கரையோடு மோதி வழியும் காவிரியின் வளம் பொருந்திய நாட்டையுடையவனே! செல்வத்தைத் தருகின்ற குடையும், நிலமகள் உரிமையும் ஆகிய இவற்றையுடைய நந்திமன்னனே! அறிவில்லாதவரான அரசர், உன்னுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்காதவராகித் தேவர் உலகத்தை ஆள்பவராவர்.

**சொற்பொருள் :** புயல் – மேகம்; பணை – மூங்கில்; பகரா – கொடுத்து; பொருது – மோதி; நிதி – செல்வம்; புனல் – நீர்; கவிகை – குடை; வானகம் – தேவருலகம்.

**இலக்கணக்குறிப்பு :** பொழிதருமணி, பணைதருபருமணி, வருபுனல், நிதிதருகவிகை – வினைத் தொகைகள்; இவை இவை – அடுக்குத்தொடர்.

**திணை :** இப்பாடல், நந்திவர்மனின் வீரச்செயலைப் புகழ்ந்து கூறுவதால் பாடாண் திணையாகும்.

**ஆசிரியர்குறிப்பு :** தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு இந்நூலை வழங்கியவரின் பெயரும் ஊரும் அறியப்பெறவில்லை.

**நூற்குறிப்பு :** நந்திவர்மனின் பெருமையைப் போற்றும் நூலாக, இது திகழ்கிறது. பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு பாடப்பெற்ற கலம்பகம் ஆதலின், நந்திக்கலம்பகம் எனப் பெயர் பெற்றது. இந்நூலின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. கலம்பக நூல்களில் இதுவே முதல் நூல் என்பர்.

கலம்பகம் என்பது, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைக் கலந்து இயற்றப்பெறும் நூல் கலம்பகம் எனப்படும். கலம் + பகம் = கலம்பகம். கலம் – பன்னிரண்டு; பகம் – ஆறு. பதினெட்டு உறுப்புகளைக் கொண்டதால் ( புயவகுப்பு, அம்மானை, கார், ஊசல், இரங்கல், மறம், தழை, தவம், சித்து, பாண், கைக்கிளை, தூது, வண்டு, குறம், காலம், மாதங்கி, களி, சம்பிரதம் ) கலம்பகம் என்னும் பெயர் வந்தது எனவும் கூறுவர்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினா

கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) கலம்பகம் ______________ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

1. தெண்ணூற்றாறு 2. பதினெட்டு 3. பத்து

ஆ) பணை என்னும் சொல்லின் பொருள் ______________

1. அரசு 2. ஆல் 3. மூங்கில்

### ஆ) குறுவினாக்கள்

1. கலம்பக நூல்களுள் முதல்நூல் எது ?
2. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.
3. நந்திக்கலம்பகம் யார்மீது பாடப்பெற்றது ?
4. நந்திவர்மன் வீரம் எத்தகையது ?

### இ) சிறுவினாக்கள்

1. கலம்பகம் – குறிப்பு எழுதுக.
2. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக்கலம்பகம் கூறுவன யாவை ?

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே. *

– குலசேகர ஆழ்வார்

**பொருள் :** மீன்கள் நீந்துகின்ற வயல்கள் சூழ்ந்த வித்துவக்கோட்டில் உள்ள பெருமானே! நீ எனக்குத் திருவருள் புரியவில்லை என்றாலும், உன்னையே அடைக்கலமாகப் புகுவேனே யன்றி, எனக்கு வேறு ஒரு பற்றில்லை. மன்னவன் ஒருவன் செங்கோல் முறை தவறித் துன்புறுத்தினாலும், அவனுடைய ஆட்சியையே எதிர்நோக்கி வாழ்கின்ற குடிமக்களைப் போல, நான் உன் திருவடிகளையே எண்ணிக்கொண்டிருக்கிறேன்!

**சொற்பொருள் :** மீன்நோக்கும் – மீன்கள் வாழும்; என்பால் – என்னிடம்; தார்வேந்தன் – மாலையணிந்த அரசன்; கோல்நோக்கி – செங்கோல் செய்யும் அரசனைநோக்கி.

**இலக்கணக்குறிப்பு :** நோக்காய் – முன்னிலை ஒருமை வினைமுற்று; கோல்நோக்கி – இரண்டாம் வேற்றுமைத்தொகை; தார்வேந்தன் ( தாரை அணிந்த அரசன் ) – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; வாழும்குடி – பெயரெச்சம்.

**பகுபத உறுப்பிலக்கணம் :** பற்றில்லேன் – பற்று + இல் + ஏன். பற்று – பகுதி, இல் – எதிர்மறை இடைநிலை, ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**பிரித்தறிதல் :** பற்றில்லேன் – பற்று + இல்லேன்; போன்றிருந்தேன் – போன்று + இருந்தேன்.

**ஆசிரியர் குறிப்பு :** கேரள மாநிலத்திலுள்ள திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர் குலசேகர ஆழ்வார். இராமபிரானிடம் பத்தி மிகுதியாக வாய்க்கப்பெற்ற காரணத்தால், இவர், குலசேகரப் பெருமாள் எனவும் அழைக்கப்பட்டார். இவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் அருளிய பெருமாள் திருமொழி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஒன்று. இதில் நூற்றைந்து பாசுரங்கள் உள்ளன. இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர். குலசேகரர் தமிழில் பெருமாள் திருமொழியையும், வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலையும் இயற்றியுள்ளார். குலசேகரர், திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால், அதற்குக் குலசேகரன் வீதி என்னும் பெயர் இன்றும் வழங்கி வருகிறது. இவரது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

**நூற்குறிப்பு :** தமிழகத்தின் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம். வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாய்க்கொண்டு போற்றும். பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். நம் பாடப்பகுதி குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திருமொழியின் முதலாயிரத்தில் உள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ______________ போன்றிருந்தேனே.

ஆ) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ______________ குலசேகரர் பாடியதாகும்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) பெருமாள் திருமொழியில் ______________ பாசுரங்கள் உள்ளன.

1. இருநூற்றைந்து 2. நூற்றைந்து 3. நூறு

ஆ) குலசேகராழ்வார் பாடல் ______________ தொகுப்பில் உள்ளது.

1. திருவியற்பா 2. முதலாயிரம் 3. பெரிய திருமொழி

### ஆ) குறுவினாக்கள்

1. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன ?
2. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர் ?

### இ) சிறுவினாக்கள்

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் – குறிப்பு எழுதுக.
2. குலசேகர ஆழ்வார் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. குலசேகர ஆழ்வார் திருவித்துவக்கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது ?

# திருவருட் பிரகாச வள்ளலார்

முன்னிரவு நேரம், சென்னை நகரத்து இலிங்கிச் செட்டித்தெருவில் புராணத்தொடர் சொற்பொழிவைக் கேட்க மக்கள் கூட்டம் ஆர்வத்துடன் கூடியிருந்தது. அன்று வரவேண்டிய சொற்பொழிவாளர் வரவில்லை. ஆனால், வந்தவரோ வெள்ளாடை அணிந்து அழகொழுகும் திருமுகத்துடன்கூடிய ஒன்பது வயது சிறுவர்; அச்சிறுவர், அனைவரையும் வணங்கித் தம் அண்ணன் வர இயலாமையைக் கூறி, 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்னும் பெரியபுராணப்பாடலைப் பாடினார்; அனைவரது மனத்தையும் கவரும்வண்ணம் நெடுநேரம் அதற்குப் பொருள் கூறினார்.



கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் அமைந்த அச்சொற் பொழிவை மெய்ம்மறந்து கேட்டனர் பெரியோர்; அடுத்து வரும் நாளெல்லாம் அவரையே சொற்பொழிவாற்றுமாறு அன்புக் கட்டளை இட்டனர்.

யாவரும் வியக்கும் வண்ணம் அன்று உரை நிகழ்த்தியவர்தாம் பிற்காலத்தில் சாதிகளிலும் மதங்களிலும் சமயச் சடங்குகளிலும் உழன்று கொண்டிருந்த மக்களை அவற்றிலிருந்து மீண்டுவரச் சமரச சுத்த சன்மார்க்கப்பாதை அமைத்த, வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள். பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என அறிஞர் போற்றுவர். அக்காலத்தே புலவர் பெருமக்களாலும் சமூகச் சீர்திருத்தச் செம்மல்களாலும் போற்றப்படும் பெருஞ்சிறப்பினைப் பெற்றவர் வள்ளலார்.

## வருவிக்க உற்றவர்

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் 05.10.1823இல் இராமையா, சின்னம்மை இணையர்க்கு ஐந்தாவது மகவாக இராமலிங்கர் பிறந்தார். தில்லையில், இறைவழிபாட்டின்போது விழியசைக்காமல் இறைவனைப் பார்த்துச் சிரித்ததைக் கண்ட ஆலய அந்தணர், இக்குழந்தை இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டினார்.

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த"

இறைவன் தம்மை வருவிக்க உற்றதாகக் கூறுவார் வள்ளலார்.

இராமலிங்கர் பிறந்த ஆறாவது திங்களில் தந்தையார் மறைந்தார்; குடும்பத்தினர் சென்னைக்குக் குடிபெயர்ந்தனர். இராமலிங்கத்தின் தமையனார் புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதன்மூலம் கிடைத்த வருவாயே குடும்ப வருமானமாயிற்று. இராமலிங்கருக்கு ஐந்து வயதானவுடன், கல்வி கற்க அவரைத் தம் ஆசிரியர் சபாபதியிடம் அண்ணன் அனுப்பி வைத்தார். இராமலிங்கருக்கோ படிப்பில் நாட்டமில்லை; ஆயினும், ஒன்பது வயதிலேயே பாடல் புனையும் திறன் பெற்றிருந்தார்.

### உத்தம மனிதர்

திருவொற்றியூர்ச் சன்னதி வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த திகம்பர சாமியார், அவ்வழியில் செல்லும் மனிதர்களைக் கண்டு, "அதோ மாடு போகிறது; ஆடு போகிறது; நாய் போகிறது; நரி போகிறது" என்று, அவரவர்களின் குணத் தன்மைகளுக்கேற்ப விலங்குகளின் பெயர்களால் கூறுவார். ஆனால், இராமலிங்கர் அவ்வழியே சென்றபோது, 'இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்' என்று கூறினார்.

### ஒருமையுணர்வு

தருமமிகு சென்னையிலுள்ள கந்தகோட்டத்து இறைவனை இராமலிங்கர் வணங்கி மனமுருகப் பாடி மகிழ்வார். இப்பாடல்களின் தொகுப்பே தெய்வமணிமாலை.

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்"

என்பன போன்ற அற்புதமான பாடல்கள் கற்போரை மனமுருகச் செய்யும். இராமலிங்கர், வடிவுடை மாணிக்கமாலை என்னும் நூலையும் திருவொற்றியூர்ச் சிவபெருமான்மீது, எழுத்தறியும் பெருமான் மாலை என்னும் நூலையும் பாடினார். இவர் பொதுமை உணர்வுடன் பிற தெய்வங்களின்மீதும் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் எளிய, இனிய பாடல்கள்; கல்லார்க்கும் கற்றவர்க்கும் எளிதில் பொருள் விளங்கும் கருத்துநிறை பாடல்கள்.

### புரட்சித் துறவி

மூடநம்பிக்கைகளாலும் சாதி மத வேறுபாடுகளாலும் மக்கள் துன்புறுவதனைக் கண்டு மனம் பதைத்த வள்ளற்பெருமான்,

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" எனப் பாடினார்.

ஒருமைவாழ்வு, ஒருமையரசு, ஒருமையுலகம் காண விரும்பிய வள்ளற்பெருமான்,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்" என வற்புறுத்தினார்.

"சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன்" என்றார்.

இவையெல்லாம் சிறுபிள்ளை விளையாட்டு என்றும் இகழ்ந்தார்.

"பெண்ணினுள் ஆணும், ஆணினுள் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி"

என ஆணும் பெண்ணும் சமமென்று அன்றே உரைத்தார்.

## பசிப்பிணி மருத்துவர் வள்ளலார்



சங்ககாலத்தில் ஒரு முல்லைக்கொடியின் துயர் நீக்க, பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரி வள்ளலைப்போல வள்ளலார், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர்வாடத் தாம் வாடினார். வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், நீடியபிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான். இவ்வருத்தம் நீங்கவே, வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவிச் சாதி,மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு, அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.

## வள்ளலார் காட்டும் உயர்நெறி

ஆணும் பெண்ணும் சமம் என்பதனையும், மக்கள் அனைவரும் சாதி, சமயம், கோத்திரம், குலம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடற்றுச் சமரச மனப்பான்மைகொண்டு, மனிதநேயத்துடன் வாழவேண்டுமென்றும் மன்பதைக்கு உணர்த்தினார் வள்ளலார்.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்குஏவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ."

இப்பாடல், எல்லா உயிர்களையும் தம்முயிராய்க் கருதித் தொண்டு செய்பவர் உள்ளத்தில்தான், இறைவன் அன்புருவாய் நடம் புரிவான் என்பதனை விளக்குகிறது.

### பேரின்ப வீட்டின் திறவுகோல்

'உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்' என்றார் வள்ளலார். அவர், கடவுளின் பெயரால் உயிர்க்கொலை செய்வதனை அறவே வெறுத்தார்; பலிகொள்ளும் சிறுதெய்வக் கோவிலைக் கண்டு நடுங்கினார்; போரினால் உண்டாகும் கொடுமைகளை அறிந்து வருந்தினார்; போரில்லா உலகைப் படைக்க விழைந்தார். இதனை,

"... ... ... ... ... உலகரசு ஆள்வோர்
உறைமுடி வாள்கொண்டு ஒருவரை ஒருவர்
உயிர்அறச் செய்தனர் எனவே
தறையுறச் சிறியேன் கேட்டபோ தெல்லாம்
தளர்ந்துஉளம் நடுங்கிநின்று அயர்ந்தேன்"

என்னும் அவர்தம் பாடல் உணர்த்தும்.

வள்ளலார் அன்பின் ஊற்று; அன்பே அவர் உயிர்; அன்பே அவர் வடிவம்; மண்ணுலகத்திலே உயிர்கள்படும் வருத்தத்தைக் கண்டும் கேட்டும் அவர் பொறுத்திட மாட்டாமல்,

"அப்பாநான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கு எல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்"

என்று உளமுருக வேண்டினார்; அவ்வுயிர்களின் வருத்தத்தை நீக்கிடவே துடித்தார்.

### பொதுமை நெறி

வள்ளலார், இறைவன் ஒருவனே; அவன் ஒளி வடிவினன் என்பதனையும் அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப்பெருங்கருணையே கருவி என்பதனையும் உலகோர்க்கு உணர்த்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை வடலூரில் நிறுவினார். சாதி, மத, சமய, இன வேறுபாடு கூடாது; எவ்வுயிரையும் கொல்லலாகாது; புலால் புசித்தல் கூடாது; எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணுதல் வேண்டும்; ஏழை மக்களின் பசியைப் போக்குதல் வேண்டும்; உலக மக்கள் அனைவரையும் உடன்பிறப்புகளாய் நேசித்தல் வேண்டும் என்பன இச்சங்கத்தின் நோக்கங்களாம்.

### அருட்பா அருளிய அருளாளர்

இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார். மேலும், மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளிபெற, அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால்தான் பாரதியார் இவரைப் "புதுநெறிகண்ட புலவர்" என்று போற்றினார்.

### தமிழ்ப்பற்று

வள்ளலார் மொழிப்பற்று மிக்கவர்; தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார். "பயில்வதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும்

மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை மிகவும் எளிமையாக அறிவிப்பதாய், திருவருள் வலத்தால் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம்பற்றச் செய்து, அத்தென்மொழியால் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்'' என்று உண்மை உரைத்தார்.

### இறைநிலை அடைதல்

உலகெலாம் உய்ய உயரிய நெறிகண்ட அருட்பிரகாச வள்ளலார் 1874ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளன்று இறவாநிலை எய்தினார். அந்த அருளாளர் அருளிய வழிகளைக் கடைப்பிடித்தொழுகினால் சாதி, மத, இனவேறுபாடுகள் நீங்கும்; போரும் பூசலும் அகலும்; அமைதி உலகம் உருவாகும்; மனித நேயம் மலரும்; அன்பே நிறைந்து ஒருமையுள் உலகம் நிலைக்கும்.

**வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள்:**

- தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே.
- குருவை வணங்கக் கூசி நிற்காதே.
- வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே.
- மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்யாதே.
- நல்லோர் மனத்தை நடுங்கச் செய்யாதே.
- பொருளை இச்சித்துப் பொய் சொல்லாதே.
- ஏழைகள் வயிறு எரியச் செய்யாதே.
- பசித்தோர் முகத்தைப் பாராதிராதே.
- இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்னாதே.
- தானம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

1. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.

அ) இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் ______________.

ஆ) இராமலிங்கர் தமிழ் மொழியே ______________ தரும் என்று கருதினார்.

2. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக

அ) "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்'' எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் ______________

1. கந்தபுராணம் 2. சீறாப்புராணம் 3. பெரியபுராணம்.

ஆ) வள்ளலாரின் இயற்பெயர் ______________.

1. சம்பந்தர் 2. இராமலிங்கர் 3. தாயுமானவர்

**3. சந்திப்பிழை நீக்கி எழுதுக**

1. வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
2. அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்.

**ஆ) குறுவினாக்கள்**

1. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார்?
2. வள்ளலாரின் முழக்கம் யாது?
3. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

**இ) சிறுவினாக்கள்**

1. இராமலிங்கர் இளமையிலேயே சொற்பொழிவாற்றும் திறன் பெற்றிருந்தமையை விளக்குக.
2. இராமலிங்கரை 'உத்தம மனிதர்' என்று திகம்பர சாமியார் போற்றிய நிகழ்ச்சியை எழுதுக.
3. இராமலிங்கரின் பாட்டுப் பணி பற்றி எழுதுக.
4. சுத்த சன்மார்க்க சங்கத்தின் நோக்கங்கள் நான்கனை எழுதுக.
5. இராமலிங்கரின் உயிரிரக்கம் பற்றிய கருத்துகளை எழுதுக.

**ஈ) நெடுவினாக்கள்**

1. வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப்பற்றுக் குறித்தும் விளக்கி எழுதுக.
2. வள்ளலார் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் குறித்துக் கட்டுரை எழுதுக.

**வள்ளலாரின் பன்முக ஆற்றல்கள்**

1. சிறந்த சொற்பொழிவாளர்
2. போதகாசிரியர்
3. உரையாசிரியர்
4. சித்த மருத்துவர்
5. பசிப்பிணி போக்கிய அருளாளர்
6. பதிப்பாசிரியர்
7. நூலாசிரியர்
8. இதழாசிரியர்
9. இறையன்பர்
10. ஞானாசிரியர்
11. அருளாசிரியர்

**வள்ளலார் பதிப்பித்த நூல்கள்**

1. சின்மய தீபிகை
2. ஒழிவிலொடுக்கம்
3. தொண்டமண்டல சதகம்

**இயற்றிய உரைநடை நூல்கள்**

1. மனுமுறை கண்ட வாசகம்
2. ஜீவகாருண்ய ஒழுக்கம்

திருவருட்பா ( ஆறு திருமுறைகள் )

# அயோத்திதாசப் பண்டிதர்

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்." – குறள், 294

என்கிறது வான்மறை. எண்ணம், சொல், செயல் இம்மூன்றும் இணைந்து, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்னும் நற்சிந்தனை மலர அரும்பாடுபட்டவர்களை நாம் சமூகச் சீர்திருத்தவாதிகள் என்கிறோம்.



கூடிவாழும் இக்குவலயத்தில் எத்துணை ஏற்றத் தாழ்வுகள்! சாதியால், மொழியால், மதத்தால், இனத்தால், நிறத்தால் உலகம் மாறுபட்டுக் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டபோது, ஞான ஒளியாய் இந்நானிலத்தில் உரிமைக்குக் குரல் கொடுத்த நல்லோர்களையே நாம் சீர்திருத்தச் செம்மல்கள் எனச் சிந்தை மகிழப் பாராட்டுகிறோம். அத்தகைய வரிசையில் ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் பிறந்து, மாபெரும் மாற்றங்கள் நிகழ்வதற்கு வித்திட்டவரே காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர். இவரை மக்கள் எல்லாரும், தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்றே போற்றிப் புகழ்ந்துள்ளனர். இவரது நற்கருத்துகள் தமிழகம், மைசூர், ஆந்திரம், திருவிதாங்கூர், பர்மா, மலேசியா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, இலங்கை முதலிய நாடுகளில் பசுமரத்தாணியாய்ப் பதிந்துள்ளன.

## தோற்றம்

சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள, மக்கிமா நகரில், 1845ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள் பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கந்தசாமி. இவரின் பெற்றோர் இவருக்குக் காத்தவராயன் என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர்.

## கல்விநிலை

பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும்போது, அவர் பிஞ்சு நெஞ்சில் நஞ்சாய் இறங்கியது தீண்டாமைக் கொடுமை. ஆம்! தீண்டாமை என்பது பெருங்குற்றம் என்றும், மனிதநேயமற்ற செயல் என இன்றும் பேசப்பட்டாலும், அன்றே அவர் உள்ளத்தை அது வாட்டியது.

## குருவைப் போற்றிய குருமணி

வீ. அயோத்திதாசப்பண்டிதர் என்பாரிடம் காத்தவராயன் கல்வி கற்றார்; சித்த மருத்துவமும் பயின்றார். இவர், குருவிடம் பற்றும் பாசமும் கொண்டிருந்தார். தம்முடைய

குரு எழுதிய பாடலை, உயர் பிரிவைச் சார்ந்த ஒருவர் குற்றம் என்று சுட்டிக்காட்ட, அதனைக் கேட்டுக் கொதித்தெழுந்தார். சென்னைப் புரசைவாக்கத்தில், தம் ஆசானுக்கும் குற்றம் கூறியவருக்கும் நேரடிக் கருத்துமோதலுக்கு ஏற்பாடாகியது. குற்றம் கூறியவர் போட்டிக்கு வராமையால், இவர்தம் ஆசிரியரே வெற்றி பெற்றார். அவர் படைத்த கவிதையைப் பிற்காலத்தில், தாம் தொடங்கிய ஒருபைசாத் தமிழன் இதழில் வெளியிட்டார். தம்முடைய காத்தவராயன் என்ற இயற்பெயரை விடுத்து, ஆசிரியர் பெயரையே தம் பெயராகச் சூட்டிக்கொண்டு அயோத்திதாசப் பண்டிதர் ஆனார்.

## திருமணம்

சமூகச்சீர்திருத்தக் கருத்துகளை விதைத்துப் பயிராக்கி மகிழ்ந்தவர் பண்டிதர். இவர், நீலகிரி மலைப்பகுதியில் வாழும் தோடர் இனப்பிரிவில் கலப்புத்திருமணம் செய்துகொண்டு பத்து ஆண்டுகள் இரங்கூன் சென்று வாழ்ந்தார். அக்காலத்தில் தேயிலை பறிப்போர், விவசாயக் கூலிவேலை செய்வோர், மரம் அறுப்போர் ஆகியோரின் முன்னேற்றத்திற் காக அரும்பாடுபட்டார்.

## புத்தநெறி


அயோத்திதாசர் இந்துமதக் கருத்துகளை ஆழ்ந்து கற்றவர்; புத்தநெறியால் கவரப் பெற்றார். அதனால், புத்தமதக் கருத்துகளை எல்லாருக்கும் எடுத்துரைத்தார். தமக்குப் பிறந்த மகன்களுக்குப் பட்டாபிராமன், மாதவராம், சானகிராமன், இராசாராம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். புத்தரை விரும்பிச் சார்ந்த இவர், தம் மகள்களுக்கு அம்பிகாதேவி என்றும், மாயாதேவி என்றும் பெயரினைச் சூட்டினார்.

## சமூகப்பணி

இவர் மனித வாழ்க்கைக்குத் தேவையற்ற சாதி மதப் பிரச்சினைகள் தீர, மக்கள் அடிப்படை உரிமைகள் பெற, அல்லும்பகலும் அயராது உழைத்தார். சித்த மருத்துவத்தில் கைதேர்ந்ததால், மருத்துவர் என்றும் பண்டிதர் என்றும் அழைக்கப் பெற்றார். அவர் வாழ்ந்த காலத்தில், தாழ்த்தப்பட்ட மக்களைத் தரக்குறைவாய் நடத்தியதும், உரிய ஊதியம் கொடுக்காது கால்வாய் வெட்டச் செய்ததும் அவர் உள்ளத்தைத் தீயாய்ச் சுட்டெரித்தது.

அயோத்திதாசர் தாமே முன்னின்று, தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமைக்கு அரும்பாடுபட்டார். எவரையும் சாதிப்பெயரைச் சொல்லி அழைப்பது தவறு என்றார். மேலும், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கல்வி வசதியோடு கல்வி உதவித்தொகை அளிக்கவும் கல்வியில் தேர்ச்சி பெற்றவருக்கு அரசுவேலையும் உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பும், பொது இடங்களில் நுழைய உரிமையும், கிராம அலுவலராய்ப் பணியமர்த்த ஆணைகளும் வேண்டுமென்று துணிவோடு வலியுறுத்தி வெற்றி கண்டார். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்ட சூழலில் பிரம்ம ஞானசபை ஆல்காட் (1832 – 1907) தொடர்பால், சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் ஆல்காட் பஞ்சமர் பள்ளிகள் எனத் தலித்துகளுக்கு இலவசப் பள்ளிகளை நிறுவினார்.

## இதழ்ப்பணி


ONE PICE TAMILIAN

அன்றைய காலணா விலையில் ஒருபைசாத் தமிழன் என்ற இதழை வெளியிட்டார். அது, 19.06.1907 முதல் சென்னை இராயப்பேட்டையில் இருந்து புதன்தோறும் நான்கு பக்கங்களுடன் வெளிவந்தது. உயர்நிலையும் இடைநிலையும் கடைநிலையும் பாகுபடுத்தி அறிய முடியாத மக்களுக்கு நீதி, சரியான பாதை, நேர்மை ஆகியவற்றைச் செய்திகளாக்கினார்.

## புதிய தீபாவளி

தீபங்களின் வரிசை தீபாவளி. கண்ணன் நரகாசுரனைக் கொன்று வெற்றி பெற்ற நாளே இத்திருநாள் என்றும், மகாவீரர் முக்தி அடைந்த நாளே தீபாவளி என்றும் இன்றுவரை பேசப்படுகிறது. ஆனால், பௌத்த சமயத்தில் ஆழ்ங்கால்பட்டவரான அயோத்திதாசப் பண்டிதர், தமது மருத்துவ ஆராய்ச்சியின்படி, எள்செடியின் விதையிலிருந்து நெய் கண்டுபிடித்த திருநாளே தீபாவளி என்று புதியதோர் விளக்கம் தந்தார். அதற்கு ஆதாரமாக சப்பான் நாட்டில் இன்றும் நுகர்பொருள் கண்டுபிடிப்புத் திருநாளாகத்தான் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள் என்று சான்று காட்டினார்.

## இயற்றிய நூல்கள்

புத்தரது ஆதிவேதம் என்னும் நூலை இருபத்தெட்டுக் காதைகள் கொண்ட பெருநூலாக எழுதினார். இதற்குச் சான்றாகப் பெருங்குறவஞ்சி, வீரசோழியம், நன்னூல் விளக்கம், நாயனார் திரிகுறள், சித்தர் பாடல்கள், வைராக்கிய சதகம், மச்சமுனிவர் ஞானம் முதலிய நூல்களைத் துணை நூல்களாகக் கொண்டார். ஆதிவேதத்தைப் பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் துணையுடன் எழுதியுள்ளார். இவரது இந்திரதேச சரித்திரம் என்னும் நூலும் பாராட்டத்தக்கது. இவை தவிர, இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறு நூல்களை வெளியிட்டார். வீரமாமுனிவரைப்போல் எழுத்துச் சீர்திருத்தமும் செய்துள்ளார். இவர், திருவாசகத்திற்கும் உரை எழுதியுள்ளார்.

நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது ஒன்றே. அதாவது, உங்களுடைய தருமமும் கருமமுமே உங்களைக் காக்கும் என்று முத்தாய்ப்பாய், நம் உள்ளத்தில் நறுந்தேனைப் பெய்வித்தார். இத்தகு நற்சான்றோர் 1914 மே மாதம் ஐந்தாம் நாள் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார். சமூக ஒருங்கிணைப்பாளராய் வாழ்ந்து மக்களுக்கு உழைத்த உத்தமரைப் போற்றுவோம்; அவர்தம் சீரிய செயல்களைத் தொடர்வோம்.

## மாதிரி வினா

### நெடுவினா

அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்துக் கட்டுரை எழுதுக.

# பா வகைகள்

வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் 'பா' நால்வகைப்படும்.

## வெண்பாவின் பொது இலக்கணம்

1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.
2. இயற்சீர், (மாச்சீர், விளச்சீர்) வெண்சீர், (காய்ச்சீர்) வரும். பிற சீர்கள் வாரா.
3. இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும், பிறதளைகள் வாரா.
4. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றுகொண்டு முடியும்.
5. செப்பலோசை பெற்று வரும்.
6. இரண்டடி முதல், பன்னிரண்டு அடிவரை வரும்.

## வெண்பாவின் வகைகள்

வெண்பாவின் வகைகள் ஆறு. அவை குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்பன.

**1. குறள் வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டு அடிகளைக் கொண்டதாய், ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது குறள்வெண்பா (குறள்– இரண்டடி).

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இக்குறட்பா ஒரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா. (க என்னும் எழுத்து எதுகையாக இரண்டு அடிகளில் ஒன்றி வந்துள்ளது)

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

இக்குறட்பா இரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா.

**2. நேரிசை வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, நான்கு அடிகளைக் கொண்டதாயும், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்றும், முதல் இரண்டடி

ஒரு விகற்பமாயும், கடைசி இரண்டடி ஒரு விகற்பமாயும், நான்கடிகளும் ஒரு விகற்பமாயும் வருவது நேரிசை வெண்பா எனப்படும்.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை.

இப்பாடலின் நான்கடியிலும், இரண்டாமடியின் இறுதிச் சீரிலும் ஒரே எதுகை பெற்று ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

உன்னுள் கலைவைத்தாய் ஊக்க மலைவைத்தாய்
கன்னல் மொழியுன்னுள் கள்வைத்தாய் – மின்வைத்தாய்
மண்ணில் புதுமை மலர்க்குள் மணம்வைத்தாய்
தண்ணீர்த் தமிழேநீ தாய்.

இஃது, இரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா

**3. இன்னிசை வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுத் தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வரும். இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத்தான் வரும். மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, இரண்டு விகற்பத்தானும் வருவதும் இன்னிசை வெண்பா எனப்படும்.

தாய்தமக்கே ஒப்பில்லை தாரணியில் எப்பொருளும்
சேய்நம்மைச் சீராட்டி செந்நீரைப் பாலாக்கி
வாய்வழியாய்த் தாமூட்டி வாழ்விக்குந் தெய்வமொன்று
தாய்போலும் உண்டாமோ தான்.

இப்பாடலில் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் இல்லை. நான்கடிகளும் ஒரு விகற்பத்தான் வந்துள்ளன. ( இரண்டாம் எழுத்து ய் எதுகையாகி ஒன்றி வந்துள்ளது)

தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமும் – தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

இப்பாடலில் இரண்டாம் அடியில் தனிச்சொல் வந்துள்ளது. ஆனால், நான்கடியிலும் மூன்று விகற்பங்கள் வந்துள்ளதால், இஃது இன்னிசை வெண்பாவாயிற்று.

**4. பஃறொடை வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது பஃறொடை வெண்பா.

முக்கனியே! முப்பாலே! மூவாத முத்தமிழே!
சொக்கனது மாநகரைச் சூழ்ந்த பெரும்பேறே!
இத்தரைச் சூரியனே! எங்கள் உயிரமுதே!
சித்திரைத் தண்ணிலவே! தேயா மொழிவெற்பே!
செம்மொழி மாக்குடும்பம் சீராட்டும் செம்மொழியே!
எம்மொழிக்கும் மூத்தவளே! என்றும் இருப்பவளே!
பண்புணர்த்தும் ஆசானே! பார்போற்றும் தேனூற்றே!
கண்ணே !நீ ஞாலக் கனி!

இப்பாடல் ஈற்றடி மூன்று சீராயும், ஏனைய அடிகள் நான்கு சீராயும் வந்த பஃறொடைவெண்பா.

**5. நேரிசைச் சிந்தியல் வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நேரிசை வெண்பாவைப் போல இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் மூன்றடிகளாய் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா.

அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்ப – சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு.

மூன்றடிகள் உடையதாய் ஒரு விகற்பமாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

**6. இன்னிசைச் சிந்தியல் வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று மூன்றடி கொண்டதாய்த் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

பார்மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர்கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார்முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து

இஃது, இரண்டாம் அடியில் தனிச்சொல் இன்றி, ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

அலகிட்டு வாய்பாடும் தளையும் கூறுதல்

ஒரு சீரைப் பிரித்து அசை பார்ப்பதே அலகிடுதல்.

அலகிடப் பின்பற்ற வேண்டிய எளிய வழிகள்

1. மெய்யெழுத்தின் பக்கத்தில் / இக்குறியிடுக.

2. நெடில் பக்கத்தில் / இக்குறியிடுக.

3. இரு குறில் அடுத்து / இக்குறியிடுக.

4. ஒற்று அல்லது ஆய்த எழுத்தை நீக்கி, ஓர் எழுத்து இருப்பின் நேர் எனக் கொள்க.

இரண்டு எழுத்தாய் இருப்பின் நிரை எனக் கொள்க.

இவ்விதியைப் பின்பற்றிக் குறட்பாக்களைப் பிரித்துக் காண்போம்.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | இல்/லா/ரை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2 | எல்/லா/ரும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3 | எள்/ளுவர் | நேர் நிரை | கூவிளம் |
| 4 | செல்/வரை | நேர் நிரை | கூவிளம் |
| 5 | எல்/லா/ருஞ் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6 | செய்/வர் | நேர் நேர் | தேமா |
| 7 | சிறப்/பு | நிரைநேர் – நிரைபு | பிறப்பு |

## ஆசிரியப்பாவின் பொதுஇலக்கணம்

1. அளவடிகளைப் (நான்கு சீர்) பெற்று வரும்.
2. இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்) பயின்று வரும். பிற சீரும் வரும். ஆனால், வஞ்சியுரிச்சீர்கள் வாரா.
3. ஆசிரியத் தளைகள் பயின்று வரும். பிற தளைகள் கலந்தும் வரும்.
4. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்றும் வரும்.
5. அகவலோசை பெற்று வரும்.
6. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

## ஆசிரியப்பாவின் வகைகள்

ஆசிரியப்பாவுக்கு அகவற்பா என்ற பெயரும் உண்டு. அவ்வாசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

### 1. நேரிசை ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும்வருவது நேரிசை ஆசிரியப்பா.

பாரி பாரி என்று பலஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே.

இப்பாடலில் ஈற்றயலடி மூச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும் வந்துள்ளன.

## 2. இணைக்குறள் ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தோடு முதலடியும் கடைசியடியும் நாற்சீர் அடிகளாகவும், இடையில் உள்ள அடிகள் இருசீர் ( குறளடி ) அடிகளாயும் முச்சீர் ( சிந்தடி ) அடிகளாயும் வருவது இணைக்குறள் ஆசிரியப்பா.

நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இப்பாடலில் முதலடியும் ஈற்றடியும் அளவடியாகவும், இடையடிகள் குறளடியாகவும், சிந்தடியாகவும் வந்துள்ளன.

## 3. நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளும் நாற்சீர் ( அளவடி ) அடிகளாய் வருவது, நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே.

இப்பாடலில் எல்லா அடிகளும் நாற்சீர்கள் கொண்ட அளவடிகளாக வந்துள்ளன.

## 4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே.

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பாடலின் ஓசையும் பொருளும் மாறாமல் வருகின்றது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) 'உலகு' என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு ________ ஆகும்.

1. நாள் 2. காசு 3. பிறப்பு

ஆ) 'நல்லவை' இச்சொல்லை அலகிட்டால் ________ எனப் பிரியும்.

1. நேர்நேர் 2. நிரைநேர் 3. நேர்நிரை

இ) நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி________வரும்.

1. நாற்சீராய் 2. முச்சீராய் 3. ஐஞ்சீராய்

ஈ) ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ________ முடிவது சிறப்பு.

1. ஆகாரத்தில் 2. ஏகாரத்தில் 3. ஓகாரத்தில்

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று ________ விகற்பத்தானும் ________விகற்பத்தானும் வரும்.

ஆ) இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தான் வருவது ________ ஆகும்.

இ) வெண்பாவின் ஓசை ________ஆகும்.

ஈ) ஆசிரியப்பாவின் வேறு பெயர் ________ஆகும்.

உ) ஆசிரியப்பாவின் ஓசை ________ ஆகும்.

**3. விடுபட்ட இடங்களை நிரப்புக.**

| வ.எண். | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கட / னென் / ப | ________ | புளிமாங்காய் |
| 2. | நல் / லவை | நேர் நிரை | ________ |
| 3. | எல் / லாம் | நேர் நேர் | ________ |
| 4. | கட / னறிந் / து | ________ | கருவிளங்காய் |

இயல் 9

## ஆ) குறுவினாக்கள்

1. நால்வகைப் பாக்கள் யாவை?
2. வெண்பாவின் வகைகள் யாவை?
3. குறள்வெண்பாவின் இலக்கணம் யாது?
4. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?
5. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?
6. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?
7. நேரிசை ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
8. அடிமறிமண்டில ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

## இ) நும் செய்யுட்பகுதியில் நேரிசை வெண்பா, ஆசிரியப்பாக்களை இனங்கண்டு எடுத்து எழுதிப் படிக்க.

# மொழித்திறன் பயிற்சி

## மரபுச்சொற்கள்

பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் அவை ஒலிக்கும் முறைகளையும் இவ்வாறு கூற வேண்டுமென, முன்னோர் கூறிய மரபினைத் தொன்றுதொட்டுப் பின்பற்றி வருகின்றனர். "நாய் கத்தியது" எனக் கூறுகிறோம். அவ்வாறு கூறுதல் கூடாது. "நாய் குரைத்தது" என்பதே உரிய மரபுத்தொடர். இவ்வாறு வரும் சில மரபுகள் குறித்து இங்குக் காண்போம்.

## ஒலிமரபு

| | |
|---|---|
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் |
| எருது எக்காளமிடும் | காகம் கரையும் |
| குதிரை கனைக்கும் | கிளி பேசும் |
| குரங்கு அலப்பும் | குயில் கூவும் |
| சிங்கம் முழங்கும் | கூகை குழறும் |
| நரி ஊளையிடும் | கோழி கொக்கரிக்கும் |
| புலி உறுமும் | சேவல் கூவும் |
| பூனை சீறும் | புறா குனுகும் |
| யானை பிளிறும் | மயில் அகவும் |
| எலி கீச்சிடும் | வண்டு முரலும் |

## வினை மரபு

| | |
|---|---|
| அம்பு எய்தார். | சோறு உண்டான். |
| ஆடை நெய்தார். | தண்ணீர் குடித்தான். |
| உமி கருக்கினாள். | பால் பருகினாள். |
| ஓவியம் புனைந்தான். | பூப் பறித்தாள். |
| கூடை முடைந்தார். | மரம் வெட்டினான். |
| சுவர் எழுப்பினான். | மாத்திரை விழுங்கினான். |
| செய்யுள் இயற்றினான். | முறுக்குத் தின்றான். |

## பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுதல்

நம் செந்தமிழ் செழுந்தமிழாய்த் திகழவேண்டுமெனில், பிறமொழிச் சொற்கலப்பின்றி எழுதிப் பழகுதல் வேண்டும். பிறமொழிச் சொற்களைக் களைந்து, அவற்றுக்கேற்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி நல்ல நடையில், இனிய தமிழில் எழுதியும் பேசியும் பழகுவோம். இங்குப் பிறமொழிச்சொற்கள் சிலவற்றையும் அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களையும் அறிவோம்.

| எண் | பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் | எண் | பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|---|---|
| 1 | அங்கத்தினர் | உறுப்பினர் | 16 | உபயோகம் | பயன் |
| 2 | அதிகாரி | அலுவலர் | 17 | கிராமம் | சிற்றூர் |
| 3 | அதிபர் | தலைவர் | 18 | குமாரன் | மகன் |
| 4 | அந்நியர் | அயலார் | 19 | சாவி | திறவுகோல் |
| 5 | அபிஷேகம் | நீராட்டு | 20 | நஷ்டம் | இழப்பு |
| 6 | அபூர்வம் | புதுமை | 21 | நாஷ்டா | சிற்றுண்டி |
| 7 | அலங்காரம் | ஒப்பனை | 22 | பாக்கி | நிலுவை |
| 8 | அனுமதி | இசைவு | 23 | கஜானா | கருவூலம் |
| 9 | ஆபத்து | இடர் | 24 | விஞ்ஞானம் | அறிவியல் |
| 10 | ஆராதனை | வழிபாடு | 25 | ஜனங்கள் | மக்கள் |
| 11 | ஆசீர்வாதம் | வாழ்த்து | 26 | நிபுணர் | வல்லுநர் |
| 12 | இலஞ்சம் | கையூட்டு | 27 | ஆஸ்பிடல் | மருத்துவமனை |
| 13 | இலாபம் | வருவாய் | 28 | டீ ஸ்டால் | தேநீர்க் கடை |
| 14 | உத்தரவு | ஆணை | 29 | பஸ் ஸ்டாண்ட் | பேருந்து நிலையம் |
| 15 | உத்தியோகம் | பணி | 30 | போஸ்ட் ஆபீஸ் | அஞ்சலகம் |

பயிற்சி :

### அ) பொருத்துக.

1. மயில் – கரையும்
2. கூகை – கத்தும்
3. யானை – குழறும்
4. காகம் – அகவும்
5. ஆடு – பிளிறும்

### ஆ) உரிய வினைமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் ________ (கட்டப்பட்டது, எழுப்பப்பட்டது)
2. பாரதியார் செய்யுளை________ (பாடினார், இயற்றினார்)
3. வேடன் ________ அம்பு யானையை வீழ்த்தியது. (எய்த, செலுத்திய)
4. மாறன் ஓவியத்தை ________ (வரைந்தான், புனைந்தான்)
5. அந்தச் சிற்பம் ஒரே கல்லில் ________ (வடிக்கப்பட்டது, செதுக்கப்பட்டது)

### இ) பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்.
2. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
3. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
4. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்.
5. அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

பெரியார் – அயோத்திதாசப் பண்டிதர் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

மு. வரதராசனாரின் எளிய நடையைப் படித்துணர்க.

(கீழுள்ள உரைப்பகுதியில் சிறுசிறு தொடர்கள் அமைந்துள்ளன. பொருள் காண வேண்டிய அருஞ்சொற்கள் இல்லை. மேல்காற்று என்பதுபோலச் சொற்கள் பிரித்து எழுதப்பட்டுள்ளன.)

என்றோ ஒருநாள் ஒருவரின் மூளை புல்லாங்குழலைக் கண்டுபிடித்து உலகத்துக்கு உதவியது. கண்டுபிடித்தவர் யார் என்பதை உலகம் மறந்துவிட்டது. எப்படிக் கண்டு பிடித்தார்

என்பதை மட்டும் ஒருவாறு எண்ணிப் பார்க்க முடிகிறது. அவர், ஒரு நாள் ஒரு மலையில் ஒரு மூங்கில் புதரை அடுத்து உட்கார்ந்திருந்து, பொழுது போக்கியிருக்கலாம். அது கோடைக்காலம்; மேற்கேயிருந்து காற்று வேகமாக வீசியது. அந்த மூங்கில் புதரிலிருந்து மெல்லிய ஓசை இனிமையாகக் கேட்டது. அவர், அந்தப் புதரை உற்று நோக்கிப் பார்த்தார்; ஓசை எப்படிப் பிறந்தது என்பது தெரியாமல் விழித்தார்; புதரை நெருங்கிச் சென்றார்; அந்த இனிய ஓசை பிறந்த இடத்தை அறிய முயன்றார்; மறுபடியும் மேல்காற்று வீசியது; இப்போது அந்த இசையின் பிறப்பிடத்தைக் கண்டுவிட்டார்; பெரிய மூங்கிலில் சில சிறுசிறு துளைகளைக் கண்டார். வண்டு துளைத்துத் துளைத்து அந்தத் துளைகள் ஏற்பட்டு இருந்தன.

அந்தத் துளைகளின் வழியாகக் காற்று உள்ளே சென்றபோது, அந்த இசை பிறந்தது என்பதை அறிந்தார்; உடனே, அந்த மூங்கிலை வெட்டினார்; அந்தப் பகுதியைத் துண்டு படுத்தினார்; வாயால் ஊதிப்பார்த்தார்; ஏறக்குறைய அந்த இசை கேட்டது; மகிழ்ச்சி கொண்டார்; துள்ளினார்; ஓடிப்போய்த் தன் கூட்டத்துக்குச் சொன்னார்; அதுபோன்ற மூங்கிலை எடுத்துத் துளைகள் செய்தால், இனிய ஓசைகள் பிறக்குமா என்று பார்த்தார்; முயற்சியில் வெற்றி பெற்றார்; அவரால், புல்லாங்குழல் உலகத்தில் பரவிவிட்டது.

## இ) எழுதுதல் திறன்

### பா நயம் பாராட்டல்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

**திரண்ட கருத்து :** இப்பாடல், இராமலிங்க அடிகளின் திருவருட்பா ஆறாம் திருமுறையில் 'சுத்த சன்மார்க்க வேண்டுகோள்' என்னும் தலைப்பில் உள்ளது.

அப்பா, நான் வேண்டுகின்றவற்றைக் கேட்டு, எனக்கு அருள்புரிவாயாக; பெறுதற்கரிய உயிர்கள் அனைத்துக்கும் அன்புகாட்டுதல் வேண்டும்; என் அருமையான தந்தையாகிய உன் அருளாகிய புகழை எங்கெங்கும் எடுத்துச் சொல்லவேண்டும்; நாங்கள், சொல்லுதற்கியலாத உயர்ந்த இடத்தில் இருக்கின்ற, உயிர் இரக்கப் பெருவழி விளங்கி மேம்பட, உன் அறிவொளியைக் கொண்டுசெல்ல வேண்டும்; நான் செய்யும் பிழைகளை எல்லாம் பொறுத்துக் கொள்ளல்வேண்டும்; என் அருமைத் தலைவனாகிய உன்னைப் பிரியாமல், நான் இருக்கவும் அருள் செய்தல் வேண்டும்.

**பொருள் நயம் :** இறைவனிடம் வேண்டுவனவற்றை இங்குப் பட்டியலிடுகிறார் வள்ளலார். உயிர்களிடத்தில் அன்பு, இறைவன் புகழைப் பிறர்க்கு எடுத்துரைத்தல், உயிர் இரக்கத்தினால் கிட்டும் அருள் ஒளியைப் பரப்புதல், பிழைகளைப் பொறுத்துக்கொள்ளுதல், பிரியாதிருத்தல் ஆகிய இவை எல்லார்க்கும் கிடைத்தால் அருளாளர்களாக விளங்கலாம் என்பதனை வள்ளல் பெருமான் எடுத்தருள்கின்றார்.

### அணிநயம்

இப்பாடலில், இயல்புநவிற்சி அணி இடம்பெற்றுள்ளது. அருள், அன்பு, புகழ் என்பவை இயற்கை விளக்கம். அவை காட்டலாகாப் பொருள் என்பார் தொல்காப்பியர். அவற்றை விளங்கிக் கொள்ளுதல் உயர்வுதரும்.

### குறிப்பு நயம்

அருள்புரிதல் இறைவன் செயல். அன்பு செய்தல், புகழை இயம்பிடுதல், அருட்சோதி செலுத்துதல், பிரியாதிருத்தல் ஆகியன உயிர்களுக்கான செயல்கள். இவற்றை இப்பாடலில் உணர்த்துகிறார் வள்ளலார். இவ்வாறு அருளைப் பெறுதல்வேண்டும் என்பதே குறிப்பு.

### எதுகை, மோனை நயம்

பாடலில் அடிதோறும் இரண்டாவது எழுத்து ஒன்றிவருவது எதுகை.
அப்பா, எப்பாரும், செப்பாத, தப்பேது.
பாடலில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை.
ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் வருவது கூழைமோனை.
எப்பாரும் எப்பதமும் எங்கணும் – கூழைமோனை.

### இயைபு நயம்

இப்பாடலில் வேண்டும் வேண்டும் என்னும் இயைபுச் சொற்கள் வந்து ஓசையின்பம் பயக்கின்றன.

**பயிற்சி :** கீழுள்ள பாடலைப் படித்துணர்ந்து, அதன் மையக் கருத்தினை எழுதுக. அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக.

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

– பாரதிதாசன்

ஈ) கட்டுரை

மாணவரும் சமுதாயத் தொண்டும்.

உ) கடிதம்

ஒய்வுபெறும் தமிழாசிரியரைப் பாராட்டுதல்.

## தமிழெண்களை அறிவோம்

1. தொடர்களில் உள்ள கோடிட்ட இடங்களை உரிய தமிழெண்களால் நிரப்புக.

அ) உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை ______

ஆ) உன் இல்லத்தின் எண் ______

இ) ஒட்டுரிமைக்காக வரையறுக்கப்பட்டுள்ள வயது ______

ஈ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீ பெற விரும்பும் மதிப்பெண் ______

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத் திறன்

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டுக்கு வருகிறார். தந்தை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதனைக் கேட்காமல், அவளிடம் பேசிக்கொண்டே இருக்கிறார்.

அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள் ?

நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

1. அருகில் வசிக்கும் தோழி அல்லது உறவினரிடம் செல்பேசி வழியாகத் தொடர்புகொண்டு உடனே வீட்டிற்கு வரச் சொல்வேன்.
2. தந்தையின் நண்பரிடம் நேரம்போவது தெரியாமல் நானும் பேசிக் கொண்டிருப்பேன்.
3. அப்பா வருவதற்கு நேரமாகும்; அவர் வந்தபிறகு செல்பேசியில் தொடர்புகொண்டு விட்டு வாருங்கள் என்பேன்.

## தொடர்வண்டி இருக்கை முன்பதிவுப் படிவம் நிரப்புதல்:

சி. எு./CM-257/T. 1106/ரி/T

தெற்கு ரயில்வே

### முன்பதிவு/ரத்து செய்யும் விண்ணப்ப படிவம்

நீங்கள் மருத்துவராயிருந்தால் தயவு செய்து பெட்டியில் (✓) செய்யவும் (நீங்கள் அவசரத்திற்கு உதவ விரும்பினால்) ☐

மூத்த குடிமக்கள் சலுகை தேவைப்பட்டால் " தேவை/இல்லை " என்று அதற்குரிய பெட்டியில் எழுதவும். இச்சலுகை பெற விரும்பினால், வயது அத்தாட்சி சான்றிதழ் ஒன்றை பயணத்தின்போது எடுதது்ச் செல்ல வேண்டும். (தவறினால் இரயில்வே விதிகளின்படி உரிய அபராதம் விதிக்கப்படும்) ☐

உங்கள் பயணம் உயர்வகுப்புக்கு மேம்படுத்தப்படலாமா ? தேவை/இல்லை என்று எழுதவும் (உங்கள் விருப்பத்தை குறிப்பிடத் தவறினால் முழுக் கட்டண பயணிகளுக்கு இச்சலுகை தன்னிச்சையாக வழங்கப்படும்). ☐

வண்டி என்/பெயர்............................................பயண தேதி..............................

வகுப்பு..........................படுக்கை/உட்காரும் எண்ணிக்கை..............................................

புறப்படும் இடம்..............................................சேரும் இடம்..............................................

ஏறும் இடம்..............................................

| வ. எண். | பெயர் (15 எழுத்துக்களுக்கு மிகாமல்) | பால் ஆ/பெண் | வயது | பயணச்சலுகை உரிமை எண் | விருப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | கீழ் படுக்கை/ நடு படுக்கை/ மேல் படுக்கை |
| 2. | | | | | |
| 3. | | | | | சைவம்/ அசைவம் (இராஜதானி/ சதாப்தி விரைவு வண்டி) |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் விபரம் (பயணச்சீட்டு வழங்கப்பட மாட்டாது)

| வ. எண். | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |

### தொடர் பயணம்/திரும்பும் பயண விவரங்கள்

வண்டி என்/பெயர்..............................................பயண தேதி..............................

வகுப்பு..................புறப்படும் இடம்..............................சேரும் இடம்..............................

விண்ணப்பதாரர் பெயர்..............................................................................................

விலாசம்..............................................................................................................

......................................................................................................................

தொலைபேசி என்......................................

கையொப்பம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

விண்ணப்ப படிவ என்..............................பயணச்சீட்டு என்..............................

இருக்கை என்..............................வசூலிக்கப்பட்ட தொகை ரூ..............................

ரயில்வே அலுவலர் கையொப்பம்..............................

குறிப்பு – (1) ஒரு படிவததில் அதிகபட்சம் 6 பயணிகள் பெயாகள் மட்டும் எழுதவும்.
(2) ஒருவா ஒரு விண்ணப்பபடிவம் மட்டும் கொடுகக வேண்டும்.
(3) கவுண்ட்டரை விட்டு போகும்போது பயணச்சீடடு மற்றும் மீதி தொகையை சரிபார்க்கவும்
(4) முறையாக நிரப்பபடாத விண்ணப்பட்டிவம ஏற்க இயலாது.
(5) விரும்பும் இருக்கை இருக்கும் இடவசதியைப் பொறுத்து அமையும்.
(6) ஒரே பயணச்சீட்டில் பதிவு செய்த பயணிகள் அனைவருக்கும் வகுப்புமேம்பாட்டின்போது. இருக்கைகள அருகருகே கிடைக்கலாம் கிடைககாமலும் போகலாம்

## மதிப்புக் கல்வி

### முயன்றால் எதுவும் முடியும்

சிலி நாட்டில் ஒரு சுரங்கம். அது பூமிக்கடியில் ஈராயிரம் அடி ஆழம் உடையது. தாமிரமும் தங்கமும் எடுப்பதற்காக வெட்டப்பட்ட சுரங்கம் அது.

அங்கு ஒருநாள் பெரிய விபத்து நேர்ந்தது. கீழே சுரங்கத்தில் வேலை செய்த முப்பத்துமூன்று தொழிலாளர்கள் மேலே வர இயலாதவாறு சுரங்கம் இடிந்து மண் மூடியது.

அறுபத்தொன்பது நாள் போராட்டம். சிலி நாட்டு அரசின் அனைத்துத் துறைகளும் அவர்களை வெளிக்கொணரப் பெரிதும் முயன்றன.

உள்ளே சிக்கிக்கொண்டவர்கள் சூரியனைக் காணாது நாளும் அல்லல்பட்டாலும் மனந்தளராது இருந்தனர். பூமியின் மேலிருந்து துளைபோட்டு அதன் வழியே உணவும் மருந்தும் அவர்களுக்கு அனுப்பப்பட்டன. உள்ளேயிருந்தவர்கள் மனம் தளராது முறையாக அவற்றைப் பங்கிட்டு உண்டு, வெளியே வரக் காத்திருந்தனர். அவர்களை மீட்கப் பெருந்துளை போட்டு அதன் வழியே மீட்புக் குழாயை மீட்புப் படையினர் அனுப்பினர். சுரங்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் துணிவுடன் – பயப்படாது – விரைவு காட்டாது – ஒருவர்பின் ஒருவராக வெளியே வந்தனர். சிலி நாட்டு அதிபரே காத்திருந்து அவர்களை வரவேற்றார்.

சிலிநாட்டுச் சுரங்கப் பணியாளர்கள் மீட்கப்பட்ட அருஞ்செயல், மண்ணில் மகத்தான மனித சாதனையாகும்.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the schools that the boys and girls form some regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they go wrong.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | | |
|---|---|---|
| 1. | Manners make the man. | ஒழுக்கம் உயர்வு தரும். |
| 2. | All is well that ends well. | நல்ல தொடக்கம் நல்ல முடிவைத் தரும். |
| 3. | Misfortunes never come single. | பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும். |
| 4. | Do well what you have to do. | செய்வன திருந்தச் செய். |
| 5. | Every tide has its ebb. | ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு. |

# நிற்க நேரமில்லை

சீக்கிரம் செல்லுக நேர்வழியில் – அதைச்
செத்தைகள் கூடியே தூர்க்கு முன்னே
நோக்கிய அத்திசை நேர்த்திசையில் – துளிச்
சோம்பலு மின்றி நடைஎடுநீ
கால்கள் இரண்டு படைத்தவன்நீ – பெருங்
கல்லும் மலையும் கடப்பதற்கே
மேலிரு கைகள் அவைகளுண்டே – அங்கு
விம்மும் புதர்கள் அறுப்பதற்கே
கண்ணிரண் டுள்ளன முன்னடக்க – இரு
காதுகள் உண்டு துணை வரவே
விண்களைக் கீறிவழி சமைக்க – உன்றன்
வீர மனமுண்டு செல்லுகவே!
* இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் – வழி
என்னென்ன வாகுமோ ஓரிரவில்
சென்றிளைப் பாறுக முற்றிடத்தே – தம்பி
தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே!
சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே – இங்கு
நல்லசெடி இளைப் பாறிடுமோ?
வேதனை யாவும் மறந்ததுபார் – செடி
வெற்றி கொண்டேந்திய பூவினிலே. *

சாலை. இளந்திரையன்

**பொருள் :** வாழ்க்கையாகிய வழித்தடம் குப்பைகூளங்களால் அடைபடுமுன் நீ நேர்வழியில் துளியும் சோர்வில்லாமல் விரைந்து செல்லுதல் வேண்டும்.

கல்லும் முள்ளும் உள்ள மலைப்பகுதியைக் கடப்பதற்கு இரண்டு கால்களை உடையவன் நீ. நடக்கும் பாதையில் வளரும் புதர்களை அழிப்பதற்கும் உனக்கு இரு கைகள் உள்ளன.

செல்லும் வழியில் முன்னேறிச் செல்வதற்குக் கண்களும் காதுகளும் துணையாக உள்ளன; இவற்றுடன் மனஉறுதியும் இருந்தால் விண்ணையும் கடந்து வெற்றி கொள்ளும் வழியைக் காணலாம். இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால் ஓர் இரவுக்குள் வழித்தடத்தில் என்னென்ன நேருமோ; பணியை முடித்து ஓய்வு பெறுக தம்பி! இனிக்கும் செய்திகள் உன் மனத்தில் வந்து குவியும்.

செடிகள் பூப்பதற்குமுன் ஓய்வெடுப்பதில்லை. செடியின் வெற்றி பூவில் உள்ளதைப்போல், உன் வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும்.

**சொற்பொருள் :** செத்தை – குப்பைகூளம், இளைப்பாறுதல் – ஓய்வெடுத்தல்.

**பிரித்தறிதல் :** கண்ணிரண்டு – கண் + இரண்டு ; ஓரிரவு – ஓர் + இரவு.



**ஆசிரியர் குறிப்பு :** சாலை. இளந்திரையனின் பெற்றோர் இராமையா, அன்னலட்சுமி. இவர் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாலைநயினார் பள்ளிவாசல். தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகித் தமிழ்த்துறைத் தலைவரானார். உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் சாலை.இளந்திரையன். 1991இல் தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றார். தம் வாழ்நாள் முழுவதும் தமிழின முன்னேற்றத்திற்கான படைப்புகளை வழங்கி எழுச்சியூட்டினார். இவர் வாழ்ந்த காலம் 06.09.1930 – 4.10.1998.

**நூற்குறிப்பு :** பாடப்பகுதியில் வந்துள்ள கவிதை, 'பூத்தது மானுடம்' என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ளது. சாலையாரின் படைப்புகளான 'புரட்சி முழக்கம்', 'உரை வீச்சு' ஆகிய நூல்கள் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசுகள் பெற்றுள்ளன.

## மாதிரி வினாக்கள்

### அ) குறுவினாக்கள்

1. எப்படி நடந்திடவேண்டுமென இளந்திரையன் கூறுகிறார் ?
2. நமது கை, கால்களின் பயன்களாக இளந்திரையன் எவற்றைக் கூறுகிறார் ?

### ஆ) சிறுவினா

'சாதனைப் பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார் ?

### இ) நெடுவினா

நிற்க நேரமில்லை – பாடல்மூலம் இளந்திரையன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

# பல்துறை வேலைவாய்ப்புகள்

'வினையே ஆடவர்க்குயிர்' என்கிறது குறுந்தொகை. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தினைப் பொறுப்புடன் நடத்தவேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாதெனவும் கூறி வந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில், இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தினைச் சிறப்பாக நடத்த இயலும்.



பள்ளிக்கல்வியை முடித்த ஒருவர், அதற்கு மேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெறுதல் வேண்டும். தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

நாள்தோறும் கல்வியில் புதுப்புதுத் துறைகள் உருவாகிக்கொண்டே வருகின்றன. குறிப்பாகப் பணிவாய்ப்புக்கு உரிய கல்வித் தகுதிகளைத் தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, கலைஅறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி எனப் பலவாகப் பகுக்கலாம்.

## தொழிற்கல்வி

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். மேனிலைக்கல்வியில் உயர்மதிப்பெண் பெற்றோர், அந்தந்தப் பாடப்பிரிவின் தகுதிக்கேற்ப விண்ணப்பிக்கலாம். இவர்கள் கலந்தாய்வுமூலம் தேர்வு செய்யப்பட்டுக் கல்லூரிகளில் சேர்ந்து உரிய காலத்தில் படித்து முடிப்பர். படித்து முடித்தவர்கள் அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு.

தற்போது உயிரித்தொழில்நுட்பத்துறை, நுண்ணியல் தொழில்நுட்பத்துறை சார்ந்த தொழிற்படிப்புகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. வேதியியல், விலங்கியல் துறைகளில் இளங்கலைப்பட்டம் பெற்றவர்களுக்கும், சுற்றுச்சூழல், வேளாண்மை, மருத்துவம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் சிறந்த வேலைவாய்ப்புத் துறையாகத் தற்போது இது விளங்கி வருகிறது.

## தொழில்நுட்பக் கல்வி

பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், தாம் பெற்ற உயர்மதிப்பெண்களுக்கேற்பப் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து பயிலலாம். பொறியியல் துறைகளில் உள்ளதுபோலப் பல்வேறு துறைகள் இதிலும் உண்டு. இதில் சேர்ந்து படிப்பவர்களுக்கும் இக்காலத்தில் வேலைவாய்ப்புகள் பெறுவதற்கு வாய்ப்புண்டு.

மேனிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், இடைநிலையாசிரியர் கல்விப் பயிற்சி இரண்டாண்டுகள் படித்துத் தேர்ச்சி பெற்றால், இடைநிலையாசிரியராகப் பணியில் சேரலாம். மேலும் செவிலியர் பயிற்சி, கூட்டுறவுப் பயிற்சி ஆகியவற்றிலும் சேர்ந்து பயிற்சி பெற்று வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

## கலை, அறிவியல் கல்வி

மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றோர் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், பொருளியல், வரலாறு, கணக்குப்பதிவியல், கணிப்பொறியியல், வணிகவியல் முதலிய பிரிவுகளில் சேர்ந்து இளங்கலைப் பட்டமும் அதன்பின்னர், முதுகலைப் பட்டமும் பெறலாம். பட்டம் பெறுவோர், கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து இளம் கல்வியியல் பட்டம் பெற்றுப் பட்டதாரி ஆசிரியர் பணியைப் பெறலாம்.

தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் இருபது விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பட்டம் பெற்றவர்கள் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், நடுவணரசுத் தேர்வாணையம், வங்கித்துறை, ஆயுள் காப்பீட்டுத்துறை, தொடர்வண்டித்துறை முதலிய துறைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்றுப் பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பெறலாம். இதற்கான தகவல்களை நாளேடு, வானொலி, தொலைக்காட்சி முதலிய ஊடகங்களின்மூலம் பெற்று முறைப்படி விண்ணப்பித்தல் வேண்டும். மாவட்ட வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தும் வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

## சிறுதொழில் கல்வி

பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், பெறாதவர்கள் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து ஓராண்டு அல்லது ஈராண்டுப் பயிற்சி பெற்றுப் பணியில் சேரலாம். இத்தொழிற்பயிற்சி நிறுவனங்களில் கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையாளர், தச்சர் முதலிய படிப்புகளும், இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன. அவரவர் விருப்பத்திற்கேற்பச் சேர்ந்து படித்து வேலை வாய்ப்புகளைப் பெறலாம். அரசுப்பணிக்காகக் காத்திராமல் அவரவர் சுயதொழில் தொடங்கிப் பலரும் வேலைவாய்ப்பைப் பெருக்குதல் வேண்டும். அப்பொழுதுதான் வேலையில்லா நிலை மாறும். சுயதொழில் தொடங்குவதற்கு வழிகாட்டுதல்கள், பயிற்சிகள், கடனுதவிகள் முதலியவற்றை அரசு அளிக்கிறது. அவற்றைப் பெற்றுச் செயல்படுவதற்கான மனத்துணிவும் முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் போதும். அத்தகையோர் நூற்றுக்கணக்கானோருக்கு வேலை அளிக்கலாம். அவர் வேலைக்காகக் காத்திருக்கவோ ஏங்கவோ தேவையில்லை.

## இராணுவம், காவல் துறைப் பணி

பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றோர் இராணுவம், காவல் முதலிய துறைகளில் சேர்வதற்கும் வாய்ப்புண்டு. இவற்றில் சேர முதலில் உடற்கூறு தேர்வு நடைபெறும். உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே என்னும் திருமூலர் வாக்குப்படி முறையாக உடற்பயிற்சி செய்தவர்கள் இத்தேர்வில் வெற்றி பெற இயலும். அதன் பிறகு எழுத்துத் தேர்வு நடைபெறும். அதில் தேர்ச்சி பெற்றவர்களே, பணியில் சேர இயலும்.

ஓட்டுநர், நடத்துநர் முதலான பணிகளுக்கும் உடற்கூறு தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும். மக்கள் நலப்பணியாளர், சத்துணவு அமைப்பாளர் போன்ற பணிகளிலும் சேரலாம். இப்பணிகள் குறித்த தகவல்கள் அவ்வப்போது அந்தந்த மாவட்ட ஆட்சியர் மூலம் ஊடகங்களில் வெளியிடப்படும்.

"வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்"

என்னும் கவிஞர் தாரா பாரதியின் பாடல் வரிகளுக்கேற்பத் தன்னம்பிக்கையுடன், வேலைவாய்ப்பினைப் பெற்று, நாட்டிற்கும் வீட்டிற்கும் பயன்தரும் வகையில் வாழ்வோமாக.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) சங்ககாலத்தில் பெண்கள் ____________ கடந்து செல்லக்கூடாது.

ஆ) நாள்தோறும் கல்வியில் ____________ உருவாகிக் கொண்டிருக்கின்றன.

இ) காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் ____________ தேர்வும் உண்டு.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி ____________.

1. பத்தாம் வகுப்பு 2. பன்னிரண்டாம் வகுப்பு 3. எட்டாம் வகுப்பு

ஆ) 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்னும் பாடலின் ஆசிரியர் ____________.

1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. தாரா பாரதி

**3. ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.**

அ) பெண்கள் எல்லாத்துறையிலும் பணிபுரிகின்றாள்.

ஆ) தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்ளது.

4. தேவையான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன

5. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

அ) கைதொழில் ஒன்றை கற்று கொள்.

ஆ) பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறி வந்தனர்.

6. கீழ்க்காணும் விடைகளுக்கேற்ற வினாத்தொடர் அமைத்து எழுதுக.

அ) இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

ஆ) தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.

7. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. வினையே ஆடவர்க்குயிர் | – | தாராபாரதி |
| 2. முந்நீர் வழக்கம் மகடூஉ வோ டில்லை | – | குறுந்தொகை |
| 3. உடம்பை வளர்த்தேன்; உயிர்வளர்த்தேனே | – | தொல்காப்பியர் |
| 4. விரல்கள் பத்தும் மூலதனம் | – | திருமூலர் |

## ஆ) குறுவினாக்கள்

1. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும்?
2. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?
3. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.
4. இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

## இ) சிறுவினாக்கள்

1. தொழில் நுட்பக்கல்வி குறித்து எழுதுக.
2. பட்டதாரி ஆசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகள் குறித்து எழுதுக.
3. சிறுதொழிற்பயிற்சி பற்றிக் குறிப்பு எழுதுக.
4. இராணுவம், காவல் முதலிய பணிகளில் சேர்வதற்கான தகுதிக் கூறுகள் யாவை?

## ஈ) நெடுவினாக்கள்

1. தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.
2. கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.

**செயல்திட்டம் :** வேலைவாய்ப்பகத்தில் கல்வித்தகுதிகளுக்கு ஏற்ற வேலைவாய்ப்புப் பற்றி அறிந்து கையேடு தயாரிக்க.

## அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| B.A., | Bachelor of Arts | இளங்கலை |
| M.A., | Master of Arts | முதுகலை |
| B.Sc., | Bachelor of Science | இளம் அறிவியல் |
| M.Sc., | Master of Science | முது அறிவியல் |
| B.Com., | Bachelor of Commerce | இளம் வணிகவியல் |
| M.Com., | Master of Commerce | முது வணிகவியல் |
| B.Lit., | Bachelor of Literature | இளங்கலை இலக்கியம் |
| B.Ed., | Bachelor of Education | இளம் கல்வியியல் |
| M.Ed., | Master of Education | முது கல்வியியல் |
| Ph.D., | Doctor of Philosophy | முனைவர் |
| I.A.S., | Indian Administrative Service | இந்திய ஆட்சிப்பணி |
| I.P.S., | Indian Police Service | இந்தியக் காவல்பணி |
| I.F.S., | Indian Forest Service | இந்திய வனப்பணி |
| I.R.S., | Indian Revenue Service | இந்திய வருவாய்ப்பணி |
| B.E., | Bachelor of Engineering | இளம் பொறியியல் |
| M.E., | Master of Engineering | முது பொறியியல் |
| B.Tech., | Bachelor of Technology | இளம் தொழில்நுட்பவியல் |
| M.Tech., | Master of Technology | முது தொழில்நுட்பவியல் |
| M.Phil., | Master of Philosophy | ஆய்வியல் நிறைஞர் |
| C.A. | Chartered Accountant | கணக்காயர் |

# நூலகம்

நூலகம் என்னும் சொல்லைக் கேட்டவுடன் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவகையான உணர்வு தோன்றும். நூலகத்தில் நிலவும் அமைதி, நூல்களின் ஒழுங்கான வரிசையமைப்பு, பழைய, புதிய நூல்களின் கலப்படமான மணம், நேரம் கடந்தது தெரியாமல் அங்குள்ள நூல்களைப் படித்துப் பரவசமடைவது என நூலகம் பற்றிப் பலவகையான எண்ணங்கள் மனத்தில் எழும்.

## நூல்களின் தோற்றம்

பழங்காலத்தில் மக்கள் தமது எண்ணங்களையும் செய்திகளையும் வெளிப்படுத்துவதற்குக் கற்பாறைகள், களிமண் பலகைகள், மரப்பட்டைகள், தோல்கள், துணிகள், பனை ஓலைகள் முதலிய பலவகைப் பொருள்களைப் பயன்படுத்தினர். தமிழகத்தைப் பொருத்தமட்டில் ஓலைகளே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன. பனை ஓலைகளைப் பதப்படுத்தி எழுதத்தக்க ஓலைச்சுவடிகளாக்கினர். சுவடிகளில் எழுதிய பின்பு, சுவடிகளின் மேலும் கீழும் துண்டுப் பலகைகளை வைத்துக் கட்டினர். அவற்றைப் பெட்டிகளில் பாதுகாப்பாக வைத்ததுடன் பூச்சிகள், கரையான்கள் முதலியன அரிக்காமல் இருப்பதற்குத் துளசி, வேப்பிலை முதலிய பொருள்களையும் இட்டு வைத்தனர். ஓலைச்சுவடிகளை மஞ்சள் நீரில் நனைத்துப் பாதுகாக்கப்படுவதும் உண்டு. உலக இலக்கியத் துறையில் நிகழ்ந்த ஒரு மாபெரும் புரட்சி, காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது. உலக நாடுகள் அனைத்திலும் கடந்த சில நூற்றாண்டுகளாக எழுதவும் அச்சிடவும் காகிதங்களையே பயன்படுத்தத் தொடங்கினர்.

## நூலகத்தின் பண்டைய நிலை

பண்டைக்காலத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. எனவே, மக்களிடையே நூல்களின் புழக்கமும் அரிதாகவே இருந்தது. அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் மடங்களிலும் கோவில்களிலும் படிக்கும் நோக்கின்றிப் பெருமை சேர்க்கும் நோக்கோடு மட்டுமே நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆனால், பிற்காலத்தில் இந்த நிலை மாறியது. நூல்கள் படிப்பதற்கே என்ற எண்ணம் தழைத்து, அதன் விரிவாக்கமாக நூலகங்கள் உருப்பெற்றன.

## நூலகத் தோற்றம்

கல்வி, மக்களைத் தத்தம் எண்ணங்களையும், அதனால் விளைந்த அறிவையும் பகிர்ந்துகொள்ளத் தூண்டியது. இதுவே புதிய இலக்கியங்களும், இலக்கண நூல்களும் தோன்றக் காரணமாயிற்று. நாடு முன்னேற மக்களைக் கல்வியறிவு பெற்றவர்களாகவும்

ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களாவது படித்தால்தான் அன்றாட உலக நடப்புகளை அறிந்த மனிதனாகக் (Informative man) கருதப்படுவான் என யுனெஸ்கோ கூறியுள்ளது.

கிரீஸ் நகர அரசுகளே முதன்முதலாக மக்களுக்கான நூல் நிலையங்களை அமைத்தன.



இந்தியாவில் உள்ள நூலகங்களில் கல்கத்தா தேசிய நூலகம் முதன்மையானது. இதில், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.

நற்சிந்தனையாளர்களாகவும் பல்வேறு துறைகளில் வல்லுநர்களாகவும் ஆக்குதல் இன்றியமையாதது. இது மெய்ப்பட்ப் பல்துறை நூல்கள் அடங்கிய பொது நூலகங்கள் நாடு முழுவதிலும் திறக்கப்படவேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றது. நூல் ஒன்று தனி ஒருவரிடம் இருந்தால், அதன் பயன் பிறருக்குக் கிடைக்காது. ஆனால், அதே நூல், பொதுநூலகத்தில் வைக்கப்பட்டால், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததைப் போன்று அது பலர்க்கும் பயன்படும். அதனால் இந்தியா உள்பட, உலகநாடுகள் அனைத்திலும் மக்களுக்கான பொதுநூலகங்கள் திறக்கப்பட்டன.

## நூலகத்தின் பல்வேறு பெயர்கள்

புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நூலகம் என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இணையாக ஆங்கிலத்தில் 'லைப்ரரி' என்னும் சொல் வழங்குகிறது. இலத்தீன் மொழியில் 'லிப்ரா' என்னும் சொல்லிற்குப் புத்தகம் என்பது பெயர்.

## நூலகமும் பொதுநூலகத் துறையும்

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது பழமொழி. அவ்வண்ணமே நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ் என்னும் புதுமொழியும் உண்மையை விளம்புகிறது என்பதனை அறிஞர் ஏற்றுக்கொள்வர். ஓர் அரசின் தலையாய கடமை மக்களை அறிவுடையோர் ஆக்குதலே. அதற்கிணங்க, ஊர்தோறும் நூலகம் அமைத்தல்வேண்டும் என்பதனை முதன்மைக் குறிக்கோளாகக்கொண்டு பொது நூலகத்துறை செயல்படுகிறது. அவ்வப்பகுதியில் வாழும் மக்கள் தொகைக்கு ஏற்பப் பலநிலைகளில் பொது நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் தனியாள் அல்லது நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள நூலகங்களை அவற்றுக்கு உரியோர் மட்டுமே பயன்படுத்த இயலும்; பொதுமக்கள் பயன்படுத்த இயலாது. ஆனால், சமுதாயத்தின் எந்நிலையைச் சார்ந்தவராயினும் சிறியோர் முதல் பெரியோர்வரை வயது வேறுபாடின்றி உறுப்பினராகவும், அங்கிருந்து நூல்களை எடுத்துப் படிக்கவும் பொதுநூலகங்கள் வழிவகுத்துள்ளன. இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழக அரசுதான் 1948ஆம் ஆண்டு சென்னைப் பொதுநூலகச் சட்டத்தை இயற்றி, நூலகப் பணிகளின் சீரான செயல்பாட்டிற்கு வித்திட்டது.

## பள்ளியும் நூலகமும்

பள்ளி என்பது பாடநூல்களைக்கொண்டு அறிவை விதைக்கும் களம். ஆனால், நூலகமோ அந்த அறிவை வளர்த்துச் செழுமைப்படுத்தும் மற்றொரு களமாகும். பள்ளியும் நூலகமும் இணைபிரியாதவை. இதனால்தான், அனைத்துப் பள்ளிகளிலும்நூலகம்இடம்பெற்றுள்ளது. பள்ளியில் மாணவர்கள் ஓரிடம், நூலகம் வேறிடம் என்ற நிலையை மாற்ற, நம் பள்ளிக்கல்வித் துறை "புத்தகப்பூங்கொத்து" என்னும் வகுப்பறை நூலகத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. வகுப்பறை நூலகத்தில் மாணவர்களின் வயதிற்கும், மனநிலைக்கும் ஏற்ப அறிவுசார் நூல்கள் இடம்பெற்றுள்ளன.




பாபிலோனியாவில் உள்ள நிப்பூர் என்ற ஊரில் கி.மு.2000 ஆண்டிற்கு முந்தைய சுமார் 2500 களிமண் பலகைகளில் எழுதப்பட்டிருந்த நூல்களின் தொகுப்பு கண்டெடுக்கப்பட்டது.

## நூலகமும் பயன்பாடும்

மாணவப் பருவம் கற்றலுக்கு ஏற்றது. இப்பருவத்தில் பலவகைத் துறைகள்பற்றி அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்குப் பெரிதும் துணைநிற்பது நூலகமே. நூலகத்தில் இலக்கியம், இலக்கணம், திறனாய்வு, தத்துவம், அறிவியல், கணிதம், வரலாறு, பொருளியல், வாணிகம், மருத்துவம், கலை, மொழிபெயர்ப்பு, பொது அறிவு முதலிய பல்வகைத் தலைப்புகளிலான நூல்கள் இடம்பெற்றிருக்கும். செய்தித்தாள்கள், வார மாத இதழ்கள், சிற்றிதழ்கள், சிறப்பிதழ்கள், வேலைவாய்ப்புச் செய்தி இதழ்கள் போன்றனவும் காணப்படும்.

நூலகப் பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கித் தந்த சீர்காழி சீ. இரா. அரங்கநாதன், இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

மாணவர் ஒவ்வொருவரும் நூலகங்களுக்குச் சென்று அங்குக் கிடைக்கும் அறிவுச் செல்வத்தினைத் தவிராமல் பெறுதல் வேண்டும். உள்ளூர்ச் செய்திகள் முதல் உலகச் செய்திகள்



கன்னிமாரா நூலகம்

தமிழகத்திலுள்ள மிகப் பழைமையான நூலகங்கள்.

சரசுவதி மகால் நூலகம், தஞ்சை. (1820)
அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.
கன்னிமாரா நூலகம், சென்னை. (1869),
சென்னைப் பல்கலைக்கழக நூலகம் (1907),
அண்ணாமலை பல்கலைக்கழக நூலகம், சிதம்பரம் (1929),
டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை (1947),
மறைமலை அடிகளார் நூலகம், சென்னை (1958),
மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம் (1966),
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன நூலகம், சென்னை (1970),
தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் (1981)

வரை பல்வேறு பொது அறிவுச் செய்திகளையும் பெற்றுப் பயனடைய வாய்ப்பு நல்குவது நூலகமே. மாணவர்களாயினும் மற்றோராயினும் அனைவரது அறிவுப்பசியையும் போக்கும் சிறப்பான இடம் நூலகமாகும்.

மின்னணுக் காலமான தற்காலத்தில் நூலகங்களில் உள்ள நூல்கள் மின்னணு மயமாக்கப்பட்டு வருகின்றன. இணையத்தள நூலகம், குறுவட்டுகள், மின்னணு ஒளிவட்டு, நுண்சுருள் முதலிய வேறுசில வடிவங்களிலும் நூல்கள் உருமாற்றம் பெற்று, நூலகப் பயன்பாட்டில் உள்ளன.

### நூலகத்தினால் விளையும் நன்மைகள்

பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களும் அதிக விலையுள்ள நூல்களைச் செலவின்றிப் படித்துப் பயன் பெறலாம். எத்துறை சார்ந்த நூலையும் அச்சில் இல்லாத பல அரிய புத்தகங்களையும் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. பலதுறை நூல்களையும் ஒரே இடத்திலும் வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்கும் வசதியும் உள்ளது. வீட்டிலிருந்தபடியே நூல்களைப் படிக்க வகைசெய்யும் மின்னணு நூலகங்களும் உள்ளன.

### நூலகமும் நாமும்

நூலகத்தில் உள்ள நூல்களைக் கிழியாமலும், சிதைவுறாமலும் பாதுகாத்தல் நமது கடமையாகும். அஃது அடுத்தவருக்குப் பயன்பட ஏதுவாக இருக்கும். வாழ்வில் வெற்றிபெற நூலகங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவோம். அறிவு வளரவும் ஆற்றல் மிளிரவும் நூல்களைப் படிப்போம். நூல்களைப் பேணிக் காக்கும் நூலகங்களைப் போற்றிக் காப்போம்.

## மாதிரி வினா

### நெடுவினா

தமிழகத்தில் நூலகத் துறையின் வளர்ச்சிபற்றிக் கட்டுரை வரைக.

### செயல்திட்டம்

உன் பள்ளி நூலகப் பயன்பாடு குறித்து ஒரு கட்டுரை வரைக.

உன் வகுப்பு மாணவருடன் ஒருங்கிணைந்து கையெழுத்து இதழ் உருவாக்குக.

# அணி

அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். இயல்பான அழகை ஆடை, அணிகலன்களால் மேலும் அழகுபடுத்திக் கொள்வதுபோல, ஒரு பாடலைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபெறச் செய்தலே அணி எனப்படும். செய்யுளில் அமையும் அணி கற்பவர்க்கு இன்பம் பயக்கும். அதில் சொல்லப் புகுந்த கருத்தும் தெளிவாகப் புலப்படும்.

## 1. தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்மீது, கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது, தற்குறிப்பேற்ற அணி. ( தன் + குறிப்பு + ஏற்றம் + அணி )

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் – வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்.

விடியற்காலையில் கோழிகள் கூவுதல் இயல்பான நிகழ்ச்சி. ஆனால் கவிஞர், காட்டில் நள்ளிரவில் கணவனைப் பிரிந்து வருத்தமுற்ற தமயந்தியின் துயரைப் போக்க, இருளை நீக்குவதற்குத் தேரேறி விரைந்து வருமாறு ஞாயிற்றைக் கோழிக் கூட்டங்கள் கூவி அழைப்பதாகத் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார். எனவே, இது தற்குறிப்பேற்ற அணி.

## 2. வஞ்சப்புகழ்ச்சி அணி

புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பதுபோலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

இப்பாடலில், தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவதுபோலக் கூறித், தீயவர்கள் தம் மனம்போன போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளது.

கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் – சொல்வீரால்

மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென் முன்.

இப்பாடலில், திருப்பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சினைச் சிவபெருமான் உண்டு தேவர்களைக் காத்தார் என்பது புராணக் கதை. இதனைக் காளமேகப் புலவர் சிறிது மாற்றி, ஒருவன் கல்லால் அடித்ததற்காகவும், இன்னொருவன் காலால் உதைத்ததற்காகவும், வேறொருவன் வில்லால் அடித்ததற்காகவும் வெட்கமடைந்து உயிர்வாழ விரும்பாமல் நஞ்சை உண்டார் எனப் பழிப்பதுபோல் சிவபெருமானைப் புகழ்ந்துள்ளார். எனவே, இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

## 3. இரட்டுறமொழிதல் அணி

ஒருசொல் இருபொருள்பட அமைந்து வருதல் இரட்டுறமொழிதல் எனப்படும். இதனைச் சிலேடை எனவும் வழங்குவர். இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும்.

### அ) செம்மொழிச்சிலேடை

ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது செம்மொழிச் சிலேடை எனப்படும்.

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் – ஓடிமண்டை
பற்றின் பரபரெனும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

இப்பாடலில் பாம்பு, எள் ஆகிய இரண்டிற்கும் சிலேடை கூறப்பட்டுள்ளது. ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும் எனும் முதலடி, படமெடுத்து ஆடியபின் குடத்துள் சென்றடையும், படமெடுத்தாடும்போது, இரைச்சலிடும் எனப் பாம்பிற்கும்,

செக்காடியபின் எடுத்த எண்ணெயைக் குடத்தில் ஊற்றுவர்; செக்காடும்போது இரைச்சல் உண்டாகும் என எள்ளிற்கும் சிலேடையாக வந்துள்ளது.

இப்பாடலில் சொற்கள் பிரிவில்லாமல் இருபொருள்கள் தந்தன. எனவே, இது செம்மொழிச்சிலேடை ஆயிற்று.

### ஆ) பிரிமொழிச்சிலேடை

ஒருசொல் தனித்து நின்று ஒருபொருளையும், அதுவே பிரிந்து நின்று வேறொரு பொருளையும் தருமாறு அமைத்துப் பாடுவது, பிரிமொழிச்சிலேடை ஆகும்.

(எ–டு) செய்யுள் கிடைமறிக்கும் சேர்பலகை யிட்டுமுட்டும்
ஐயமற மேற்றா ளடர்க்குமே – துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்
ஆடும் கதவுநிக ராம்.

பொருள்: செய் – வயல், வீடு; பலகை – பல கைகள், பலகை; தாள் – முயற்சி, தாழ்ப்பாள் துய்ய – தங்க, அழகான.

இப்பாடலில், ஆடும் கதவும் ஒன்றற்கொன்று சமம்; எங்ஙனமெனில்,

1. ஆடு: செய்யுள் கிடைமறிக்கும் – வயலில் கிடையாக மறிக்கப்படும்.
சேர் பல கை யிட்டுமுட்டும் – பொருந்திய பல கைகளைக் கொம்பினால் முட்டும்.
ஐயமற மேல் தாள் அடர்க்கும் – ஐயமின்றி முயற்சியோடு போராடும்.
துய்ய நிலை தேடும் – தங்குதற்குத் தூய்மையான இடம் தேடும்.

2. கதவு: செய் உட்கிடை மறிக்கும் – வீட்டின் உள்ளிடத்தைத் தடுத்து மூடி இருக்கும்.
சேர் பலகை இட்டுமுட்டும் – பலகைகளைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும்.
ஐயமற மேற்றாள் அடர்க்கும் – திண்ணமாகமூடப்படுவதோடன்றித் தாழ்ப்பாளிட்டும் இருக்கும்.
துய்யநிலை தேடும் – அழகான வேலைப்பாடு(நிலை) உடையதாய் இருக்கும்.

எனவே, இது பிரிமொழிச் சிலேடை.

### 4. பின்வருநிலையணி

செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ, பொருளோ, சொல்லும் பொருளோ மீண்டும் மீண்டும் வந்து அழகு சேர்க்கும். அவை, சொல் பின்வருநிலையணி, பொருள் பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணி என மூவகைப்படும்.

#### அ) சொல்பின்வரு நிலையணி

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல்பின்வருநிலை அணி.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

இக்குறள்பாவில் துப்பு என்னும் ஒரேசொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல்பின்வருநிலையணி.

#### ஆ) பொருள் பின்வருநிலையணி

செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது, பொருள் பின்வருநிலை அணி.

“அவிழ்ந்தன தோன்றி, அலர்ந்தன காயா,
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.”

இப்பாடலில் மலர்தல் என்னும் ஒரு பொருளில் அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல் ஆகிய சொற்கள் வந்துள்ளன. எனவே, இது பொருள் பின்வருநிலையணி.

### இ) சொற்பொருள் பின்வருநிலையணி

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது, சொற்பொருள் பின்வருநிலை அணி.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

இப்பாடலில், தீய என்னும் சொல் தீமை என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, இது சொற்பொருள் பின்வருநிலையணி.

## 5. பிறிதுமொழிதலணி

உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

மென்மையான மயில்தோகையே ஆயினும், அதனை அளவுக்கு விஞ்சி வண்டியிலேற்றின் அச்சு ஒடிந்துவிடும் என்பது உவமை.

பகைவர்கள் தனித்தனியே நோக்கும்போது மிக எளியோராயினும் ஒன்றுகூடின், தனிப்பட்ட பகை மன்னன் எவ்வளவு வலிமை உடையவனாயினும் அவனை எளிதில் வென்றுவிடுவர் என்பது, இதனால் பெறப்படும் பொருள். எனவே, இது பிறிதுமொழிதலணி.

## மாதிரி வினாக்கள்

### அ) அணியைச் சுட்டி விளக்குக.

1. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

2. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

3. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

### ஆ) சிறுவினாக்கள்

1. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.
2. வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.
3. இரட்டுறமொழிதலணி என்றால் என்ன ? சான்று காட்டி விளக்குக.
4. சொற்பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன ? சான்று தந்து விளக்குக.

## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல் திறன்

எதிர்காலத்தில் நீங்கள் பணிபுரிய விரும்பும் துறை எது ?அத்துறையைத் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன ? இவை குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

உரைப்பத்தியிலுள்ள நடைச்சிறப்பைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சந்தனமெடுத்துச் செய்த உருவமொன்று நடந்து வருகிறது. கையிலோர் ஊன்றுகோல். தரைக்கு வலிக்குமே என்று அஞ்சியோ என்னவோ மெதுவாக ஊன்றப்படுகிறது. அருள்பொழியும் முகம்; கனிவு ததும்பும் விழிகள்; புன்னகையைத் தேக்கியிருக்கும் பொக்கைவாய்ப் பூவிதழ்கள். அவரைச்சுற்றி நூற்றுக்கணக்கானவர் இருக்கின்றனர் என்றாலும், அவர்களெல்லாம் பகல் நேரத்து விண்மீன்களாகவும் அவர் மட்டுமே கதிரவனாகவும் நம் கண்களுக்குக் காட்சி அளிக்கின்றார். அவர் வாய்மையின் வடிவம்; அன்பின் திருவுருவம்; அவர்தாம் கருணைக்கடல் காந்தியடிகள்.

1. இப்பத்தியின் நடைச்சிறப்பை விளக்குக.
2. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகங்களை எடுத்தெழுதுக.
3. காந்தியடிகளின் முகத்தோற்றம் எவ்வாறு இருந்தது ?

### இ) எழுதுதல் திறன்

‘கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

ஈ) கட்டுரை

நூலகத்தின் பயன்கள்

உ) கடிதம்

வேலைவேண்டி விண்ணப்பம்.

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் நட்பாகப் பழகும் திறன்

எழிலனும் தமிழரசனும் நெருங்கிய நண்பர்கள். ஆனால், எழிலனுக்குத் தமிழரசன் மட்டுமே நண்பன். தமிழரசனுக்கோ வகுப்பில் மட்டுமன்றிப் பள்ளியிலும் அனைவரும் நண்பர்களே; பார்க்கும் யாவரிடத்திலும் அன்பாகவும் நட்பாகவும் பழகுவான். பெரியவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வான். தன்னால் முடிந்த உதவிகளும் செய்வான். எழிலனும் நல்ல மாணவன்தான். ஆனால், தானாகச் சென்று பழகமாட்டான். வினாவுக்கு மட்டுமே விடை சொல்வான். தமிழரசனிடம் எல்லாரும் நெருங்கிப் பழகுவது, எழிலனுக்கு வேதனை தந்தது.

1. இவர்களில் யாரைப்போல் இருப்பது நல்லது ?
2. தன்னிடம் அனைவரும் நெருங்கிப் பழகுவதற்கு எழிலன் என்ன செய்யவேண்டுமென்று நீ நினைக்கிறாய் ?
3. உங்களுக்கு நண்பர்கள் உண்டா ? எத்தனைபேர் ?

## மதிப்புக்கல்வி

### அறிவுத்தாகம்

பலர் உறக்கம் வரவில்லையே என்று நூல்களைப் படிப்பார்கள். சிலருக்கு நூல்களைப் படித்தாலே உறக்கம் வந்துவிடும். ஆனால், அந்த மாபெருந்தலைவரோ படிப்பதற்குத் தனக்கு நேரமில்லை, நேரமில்லை என்று எப்போதும் கூறிக் கொண்டிருப்பார். ஆனால், பாராளுமன்றத்தில் பேசும்போது அதிகமான மேற்கோள்களைப் பயன்படுத்திப் பேசுவார்.

படிப்பதற்கு நேரமில்லை என்று கூறும் நீங்கள் எப்படி இவ்வளவு மேற்கோள்கள் காட்டுகிறீர்கள்? என்று அவரிடம் மற்றையோர் கேட்டனர். அதற்கு அவர் திருடுகிறேன் என்றார். கேட்டவர்கள் புரியாமல் வியப்புடன் அவரை நோக்கினர்.

ஒரு நாள் உறங்குவதற்கு ஐந்து மணி நேரத்தை என் உதவியாளர் எனக்கு ஒதுக்கித் தந்தால் அதில், இரண்டு மணி நேரத்தைப் படிப்பதற்காகத் திருடுகின்றேன் என்றார் அவர்.

காலத்தைப் பொன்போன்று போற்றியவர் அவர். நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவராய்த் திகழ்ந்தார். அவர்தான் நமது முதன்மையமைச்சர் நேரு.

நாமும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் நல்ல நூல்களைத்தேடிப் படிக்கவேண்டும்.

1. நீங்கள் பாடப்புத்தகம் தவிரப் பிற நூல்களைப் படிப்பதுண்டா?
2. உண்டு என்றால் நாளொன்றுக்கு எத்தனை பக்கங்கள் படிக்கிறீர்கள்?
3. உங்களூரில் உள்ள நூலகத்தில் நீங்கள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளீர்களா?

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Library is a place for reading books. There will be a librarian in each library. He takes care of all the books in the library. It has story books in English and Tamil. It also has books on Science, Economics and Commerce. There are newspapers and magazines in Tamil and English. We can read them there silently. It is a place for silent reading. Books can be borrowed for two weeks from the library. It is useful for everyone.

### ஆ) இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

| | |
|---|---|
| 1. Small rudders guide great ships. | சிறு துரும்பும் பல் குத்த உதவும். |
| 2. You must walk before run. | சிந்தித்துச் செயல்படு. |
| 3. Distance lends enchantment to the view. | இக்கரைக்கு அக்கரை பச்சை. |
| 4. Measure is a treasure. | அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு. |
| 5. Make hay while the Sun shines. | காற்றுள்ள போதே தூற்றிக்கொள். |

| நோக்கம்/ இயல் | அறிதல் | | | | புரிதல் | | | | பயன்படுத்துதல் | | | | திறன் | | | | | மொத்தம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வினாவகை | பு. வி | கு. வி | சி வி | | பு. வி | கு. வி | சி வி | | பு. வி | கு. வி | சி வி | | பு. வி | கு. வி | சி வி | | நெ வி | பு. வி | கு. வி | சி வி | | நெ வி |
| மதிப்பெண் | 1 | 2 | 4 | 5 | 1 | 2 | 4 | 5 | 1 | 2 | 4 | 5 | 1 | 2 | 4 | 5 | 8 | 1 | 2 | 4 | 5 | 8 |
| இ – 1 செய் | 1 | | | | | 1 + 1* | | | | | | | | | | | | 1 | 1+1* | | | |
| உரை | | | | | 1 | 1 | | | | | | | | | | | | 1 | 1 | | | 1 |
| இ – 2 செய் | 1 | | | | | | | | | | | | | | 1* | | | 1 | | 1* | | 1 |
| உரை | 1 | | | | | | | | | | 1 | | | | | | | 1 | | 1 | | |
| இ – 3 செய் | 1 | 1 | | | | | | | | | 1 | | | | | | 1+1* | 1 | 1 | 1 | | |
| உரை | 1 | | | | | | | | | | 1 | | | | | | | 1 | | 1 | | |
| இ – 4 செய் | 1 | | | | | | | | | | | | | | 1 | | | 1 | | 1 | | |
| உரை | 1 | | | | | | | | | | 1 | | | | | | | 1 | | 1 | | |
| இ – 5 செய் | 1 | | | | | 1 | | | | | | | | | | | | 1 | 1 | | | |
| உரை | 1 | 1 | | | | | | | | | | | | | | | | 1 | 1 | | | |
| இ – 6 செய் | 1 | 1* | | | | | | | | | | | | | | | | 1 | 1* | | 1 | |
| உரை | | | | | 1 | 1* | | | | | 1* | | | | | | | 1 | 1* | 1* | | |
| இ – 7 செய் | 1 | | | | | | | | | | | | | 1 | | | | 1 | 1 | | | 1* |
| உரை | 1 | 1 | | | | | | | | | | | | | | | 1+1* | 1 | 1 | | | |
| இ – 8 செய் | 1 | | | | | | 1 | | | | | | | | | | | 1 | | 1 | | |
| உரை | 1 | | 1* | | | 1 | | | | | | | | | | | | 1 | 1 | 1* | | |
| இ – 9 செய் | 1 | | | | | | | | | 1 | | | | | | | | 1 | 1 | | | |
| உரை | 1 | | | | | 1 | | | | | | | | | | | | 1 | 1 | | | |
| இ – 10 செய் | 1 | | | | | | | | | | 1* | | | | | | | 1 | | 1* | | |
| உரை | | 1* | | | 1 | | | | | | | | | | | | | 1 | 1* | | 1 | 1* |
| மொத்தம் வினாவகை | 17 | 3+2* | 1* | | 3 | 5+2* | 1 | | | 1 | 4+2* | 2 | | 1 | 1+1* | | 2+2* | 20 | 10+4* | 6+4* | 2 | 2+2* |
| மதிப்பெண் | 17 | 6+4* | 4* | | 3 | 10+4* | 4 | | | 2 | 16+8* | 10 | | 2 | 4+4* | | 16+16* | 20 | 20+8* | 24+16* | 10 | 16+16 |

மொத்த வினாக்கள் 40 + 1 (மனப்பாடப்பகுதி = 10) + 10*
மொத்த மதிப்பெண்கள் = 100 + 40*

கட்டத்தில் உள்ள எண் வினாவைக் குறிக்கும்.

* உடுக்குறியிட்டவை கூடுதல் வினாக்களைக் குறிக்கும்.

குறிப்பு : நெடுவினாக்கள் இரண்டு – செய்யுள் பகுதியில் ஒன்று ; உரைநடைப் பகுதியில் ஒன்று. இவ்வினாக்கள் முதல் ஐந்து இயல்களில் இருந்து ஒன்றும் அடுத்த ஐந்து இயல்களில் இருந்து ஒன்றும் அல்லது அல்லது என்னும் முறையில் அமைதல் வேண்டும்.

வினா எண் 45 : இயல் 4, 6, 9, 10 ஆகியவற்றுள் ஒரு பாடல் கொடுத்து 5 வினாக்கள் கேட்கப்படும். வினா எண் 46 : பத்து உரைநடைப் பாடங்களுள், ஏதேனும் ஒரு பத்தி கொடுத்து, 5 வினாக்கள் கேட்கப்படும்.

மனப்பாடப்பகுதி : குறளின் தொடக்கம், குறளின் முடிவு என இரு குறள் இடம் பெறும். (2+2). பிற மனப்பாடப்பகுதிகளிலிருந்து 6 மதிப்பெண்ணிற்கான ஒரு பாடல் இடம் பெறும்.

வினாத்தாள் திட்டவரைவு | பத்தாம் வகுப்பு | தமிழ் – இரண்டாம் தாள்

| திறன் வகை | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்தல் | | | திறன்கள் | | | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வினாவகை | பு. வி | கு.வி | சி. வி | பு. வி | கு.வி | சி. வி | பு. வி | கு.வி | சி. வி | பு. வி | சி.வி | நெ. வி | பு. வி | கு.வி | சி. வி | நெ. வி |
| பாடப்பகுதி/மதிப்பெண்கள் | 1 | 2 | 5 | 1 | 2 | 5 | 1 | 2 | 5 | 1 | 5 | 10 | 1 | 2 | 5 | 10 |
| இலக்கணம் | 10 | 2 + 1* | 1 | | 3 + 1* | | | | 1 + 1* | | | | 10 | 5 + 2* | 2 + 1* | |
| துணைப்பாடம் | | | | | | 1* | | | 2 | | | | | | 2 + 1* | |
| கட்டுரை | | | | | | | | | | | | 1 + 1* | | | | 1 + 1* |
| கடிதம் | | | | | | | | | | | | 1 + 1* | | | | 1 + 1* |
| மொழிப்பயிற்சி | 1 | | | 9 | | 2 | | | | | | | 10 | | 2 | |
| பாநயம் பாராட்டல் | | | | | | 1 | | | | | | | | | 1 | |
| படிவம் நிரப்புதல் | | | | | | | | | 1 | | | | | | 1 | |
| படைப்பாற்றல் | | | | | | | | | | | 1+1* | | | | 1+1* | |
| வாழ்வியல்திறன் / மதிப்புக்கல்வி | | | | | | | | | 1 | | | | | | 1 | |
| மொத்த வினாக்கள் | 11 | 2 + 1* | 1 | 9 | 3 + 1* | 3 + 1* | | | 5 + 1* | | 1+1* | 2 + 2* | 20 | 5 + 2* | 10 + 2* | 2 + 2* |
| மொத்த மதிப்பெண்கள் | 11 | 4+2* | 5 | 9 | 6+2* | 15+5* | | | 25+5* | | 5+5* | 20+20* | 20 | 10+4* | 50+15* | 20+20* |
| | | | | | | | | | | | | | | | 100+39* | 139 |

குறிப்பு : பு.வி – புறவயவினா கு.வி – குறுவினா சி.வி – சிறுவினா நெ.வி – நெடுவினா

**தமிழ் – முதல் தாள்**

| வினாவகை | மதிப்பெண் | |
|---|---|---|
| | செய்யுள் | உரைநடை |
| புறவயவினா | 10 | 10 |
| குறுவினா | 10 | 10 |
| சிறுவினா | 17 | 17 |
| நெடுவினா | 8 | 8 |
| மனப்பாடப்பகுதி | 10 | - |
| மொத்தம் | 55 | 45 |

**தமிழ் இரண்டாம் தாள்**

| பாடப்பகுதி | மதிப்பெண் |
|---|---|
| இலக்கணம் | 30 |
| துணைப்பாடம் | 10 |
| கட்டுரை | 10 |
| கடிதம் | 10 |
| மொழிப்பயிற்சி | 20 |
| பாநயம் | 5 |
| படிவம் | 5 |
| படைப்பாற்றல் | 5 |
| வாழ்வியல் திறன் | 5 |
| மொத்தம் | 100 |